ஸ்ரீ

இளங்கோவடிகள் இயற்றின

சிலப்பதிகாரம்.

பதினொன்றாவது

காடுகாண் காதை.

அடியார்க்குநல்லாருரையும்,

அரும்பதவுரையும்.

இவை,

கும்பகோணம்கவர்ன்மெண்ட்காலேஜ்தமிழ்ப்பண்டிதர்

மகாவித்வான்

உ. வே. சாமிநாதையரவர்களது

அருமதிப்படி,

சென்னைச்சர்ச்ஆப்ஸ்காட்லண்ட்மிஷன்காலேஜ்தமிழ்ப்பிரதமபண்டிதர்

திருவல்லிக்கேணி

வை. மு. சடகோபராமாநுஜாசாரியரால்

குறிப்புரையுடன்

சென்னை:

மிமோரியல்அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1896.

பிரகடனபத்திரம்.

	ரூபா.	அணா.
புறநானூறு மூலமும் உரையும்	ங	௦
தபாற்கூலி ரிஜிஸ்திரேஷன் சார்ஜ்	௦	கூ
பத்துப்பாட்டு நச்சினார்க்கினியருரை	ரு	௦
தபாற்கூலி ரிஜிஸ்திரேஷன் சார்ஜ்	௦	சு
சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியருரை	கூ	௦
தபாற்கூலி ரிஜிஸ்திரேஷன் சார்ஜ்	௦	அ
சிலப்பதிகாரம் அடியார்க்குநல்லாருரை, அரும்பதவுரை...	ரு	அ
தபாற்கூலி ரிஜிஸ்திரேஷன் சார்ஜ்	௦	எ
புறப்பொருள்வெண்பாமாலை மூலமும் உரையும் ...	க	அ
தபாற்கூலி ரிஜிஸ்திரேஷன் சார்ஜ்	௦	ங
மதுரைக்காஞ்சி நச்சினார்க்கினியருரை	க	௦
திருப்பெருந்துறைப்புராணம்	க	௦
இவ்விரண்டிற்கும் தனித்தனி தபாற்கூலி ...	௦	உ
நெடுநல்வாடை நச்சினார்க்கினியருரை	௦	சு
கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது	௦	உ
திருமயிலைத் திரிபந்தாதி	௦	க

நெடுநல்வாடைமுதலியவற்றிற்குத் தனித்தனியே தபாற்கூலி அணா அரை.

இப்புத்தகங்களை

அடியிற்சொல்லப்படுபவர்களிடத்தும் என்னிடத்தும்

விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

சென்னபட்டணத்தைச்சார்ந்த திருவல்லிக்கேணி

புக்ஸெல்லர்

ஸ்ரீநிவாஸ, வரதாசாரியார்.

திருச்சிராப்பள்ளி ஸெண்ட்ஜோஸப் காலெஜ்

தமிழ்ப்பண்டிதர்

மு. த்திச்சிதம்பரம்பிள்ளை.

சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை உபாத்தியாயர்

அ. சிவராமசெட்டியார்.

மதுரைப் புஸ்தகக்கடை,

சண்முகம்பிள்ளை.

திருநெல்வேலி புக்ஸெல்லர்

இராமசந்திரராவு.

கோயம்புத்தூர்ப் புஸ்தகவியாபாரம்

ன்னையக்கவுண்டர்.

இங்ஙனம்,

வே. சாமிநாதையன்.

முகவுரை. *

"சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதுந் திகழ்தரற் பொருட்டே."

தமிழ்ப்பாஷையிலுள்ள பழைய காப்பியமைந்தனுள் ஒன்றாகிய சிலப்பதிகாரமென்பது, சேரமுனிவராகிய இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது; களவியற்பொருள்கண்ட கணக்காயனார்மகனார் நக்கீரனார் முதலிய உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்படும் பிரமாணநூல்களு ளொன்று; சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்துள்ளது; எவ்வெப்பொருளைச் சொல்லினும் அவ்வப்பொருளை நேரிற்கண்டாற்போல மனத்திற்குத் தோற்றும் வண்ணம் நன்குபுலப்படுத்துந் தெள்ளிய இனிய நன்னடை யுடையது; கணவனும் மனைவியு மாகிய கோவலன் கண்ணகி என்பவருடைய சரித்திரத்தை விரித்துக்கூறுவது; தமிழ்நாட்டரசர் மூவருடைய இராசதானிகளாகிய புகார் (=காவிரிப்பூம்பட்டினம்), மதுரை, வஞ்சி என்னும் மூன்றன் பெருமைகளையும் விளக்குவது; பண்டைக்காலத்திருந்த பலவகை மாந்தருடைய ஒழுக்கமுதலியவற்றை இக்காலத்தார் எளிதில் தெரிந்துகொள்ளுதற்குச் சிறந்த கருவியாக வுள்ளது; அரசர் நீதியிற் சிறிது தவறினும் அவரை அறக்கடவுள் கூற்றாய்நின்று கொல்லுமென்பதும், கற்புடைமகளிரை மக்களேயன்றித் தேவரும் முனிவருந் துதித்தல் இயல்பென்பதும், இருவினையும் செய்தமுறையே செய்தோனை நாடிவந்து தம்பயனை நுகர்விக்கு மென்பது மாகிய இம்மூன்றினையும் இவ்வுலகத்தார்க்குத் தெரிவித்தற்பொருட்டே இளங்கோவடிகளாற் செய்யப்பட்டது; மேற்கூறிய மூன்றுபகுதியையும் சிலம்புகாரணமாகத் தெரிவித்தலின், இந்நூல் சிலப்பதிகாரமென்னும் பெயர் பெற்றது.

இன்னும் இந்நூல், முத்தமிழும் விரவப்பெற்றதாதலின் இயலிசைநாடகப்பொருட்டொடர்நிலைச்செய்யு ளென்றும், நாடகவுறுப்புக்களை உடைத்தாதலின் நாடகக்காப்பிய மென்றும், உரைப்பாட்டும் இசைப்பாட்டும் இடையிடையே விரவப்பெற்றதாதலின் உரையிடையிட்டபாட்டுடைச்செய்யு ளென்றும் பெயர்பெறும்.

இக்கதைநடந்தகாலமும் இளங்கோவடிகள்காலமும் ஒன்றென்றும் இது முதலில் தமிழிலேதான் அவராற்செய்யப்பட்ட தென்றும் இந்நூற்பதிகச்செய்யுளாலும், வரந்தருகாதையாலும் விளங்குகின்றமையின், இச்சரித்திரம் வேறுபாஷையிலிருந்துவந்ததென்று சொல்வதற்கு இடமில்லை.

இச்சிலப்பதிகாரம், இளங்கோவடிகளால் தான் செய்யப்பட்டதற்குக் காரணமுங் கதைச்சுருக்கமு மமைந்துள்ள பதிகச்செய்யுளை முதலிற்பெற்று, மங்கலவாழ்த்துப்பாடல் முதலிய பத்துறுப்புக்களை யுடைய புகார்காண்டமும், காடுகாண்காதை முதலிய பதின்மூன்றுறுப்புக்களை யுடைய மதுரைக்காண்டமும், குன்றக்குரவை முதலிய ஏழுறுப்புக்களை யுடைய வஞ்சிக்காண்டமு மாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதில் இயற்றமிழின்

---

* இது, இந்நூற்பதிப்பாசிரியராகிய ஸ்ரீமத்-உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதியதிலிருந்து எடுத்தது; இதன்பின்வரும் நூலாசிரியர் உரையாசிரியர்வரலாறுகளும், கதைச்சுருக்கமும் இவ்வாறே.

பாகுபாடான வெண்பா அகவற்பா கலிப்பா என்பவைகளும், இசைத்தமிழின் பாகுபாடான ஆற்றுவரி முதலிய பாக்களும், நாடகத்தமிழின் பாகுபாடான உரைப்பாட்டுக்களும் வந்துள்ளன. இவற்றுள் மிகுதியாகவுள்ளது அகவற்பாவே.

இந்நூற்கு அரும்பதவுரையென்றும், அடியார்க்குநல்லாருரையென்றும், இரண்டுரைகளுண்டு. அவற்றுள், அடியார்க்குநல்லாருரையிலுள்ள சிலகுறிப்புக்களால் அரும்பதவுரை முந்தியதென்று தெரிகிறது. இப்படியே அரும்பதவுரையிலுள்ள சிலகுறிப்புக்களால் அவ்வுரைக்குமுன்பு இந்நூற்குப் பழையவுரையொன்றிருந்ததாகவுந் தெரிகிறது. அவ்வுரை இக்காலத்து அகப்படவில்லை. இந்நூலிற் சிலசில இடங்களில் அரும்பதவுரையாசிரியர்கொண்டபாடம் வேறாகவும், அடியார்க்குநல்லார்கொண்டபாடம் வேறாகவு முள்ளன. அவை அவ்வவ்விடத்துள்ள உரைவேறுபாடுகளால் நன்குபுலப்படும்.

அரும்பதவுரை, ஆங்காங்குள்ள திரிசொற்களின் பொருளைமட்டுமே ஒருவாறுபுலப்படுத்திச் சிற்சிலவிடத்து மேற்கோள்களையுமுடையதாய் மிகச் சுருக்கமாக இந்நூல்முழுமைக்கும் எழுதப்பட்டுள்ளது. அவ்வுரையாசிரியர்பெயரும் அவரிருந்தவிடமும் அவர்காலமுதலியனவும் ஒருவாற்றானுந் தெரிந்துகொள்ளக்கூடவில்லை.

அடியார்க்குநல்லாருரை, அவ்வரும்பதவுரையைப் பெரும்பாலுந்தழுவியும், சிறுபான்மை மறுத்தும், சிலவிடத்துப் பதவுரையாயும், சிலவிடத்துப் பொழிப்புரையாயு மெழுதப்பட்டு, ஆங்காங்குச் சொன்னயம் பொருணயங்களை இனிதுபுலப்படுத்தி உரியவிடங்களில் இயற்றமிழ்ப்பகுதியாகிய ஐந்திலக்கணங்களையும், இசைத்தமிழ் நாடகத்தமிழின் பகுதிகளையும் பல நூல்மேற்கோள்முகமாக நன்குவிளக்கும் விசேடவுரையோடு கூடி இயன்றமட்டில் ஒவ்வொன்றையும் நன்குதெரிவித்து மிகவிரிவாக அமைந்துள்ளது. இவ்வுரையாசிரியரிடமும் காலமுதலியனவும் நன்குவிளங்கவில்லை. ஆயினும் இவ்வுரையாசிரியர்க்கு நிரம்பையர்காவலரென்று ஒருபெயருண்டென்பதும், இவ்வுரை அக்காலத்திருந்த பொப்பண்ணகாங்கேயர்கோனென்ற ஒரு பிரபுவாற் செய்விக்கப்பட்டதென்பதும் பின்புள்ள பழைய இவ்வுரைச்சிறப்புப்பாயிரச்செய்யுட்களால் தெரிகின்றன.

நேரிசைவெண்பா.

க. பருந்தும் நிழலுமெனப் பாவு முரையும்
பொருந்தநெறி யெல்லாப் பொருளுந்—தெரிந்திப்
படியார்க்கு நல்லுயிர்தம் பாலித்தா னன்றா
லடியார்க்கு நல்லானென் பான்.

கட்டளைக்கலித்துறை.

உ. ஒருந் தமிழொரு மூன்று முலகின் புறவருந்திச்
சேரன் றெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொரு
ளாருந் தெரிய விரித்துரைத் தானடி யார்க்குநல்லான்
காருந் தருவுமன்னயா நிரம்பையர் காவலனே.

ங. காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்துக் கடிபெருங்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமக் காலமெனுங்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர் கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்வித்ததே.

இளங்கோவடிகள்வரலாறு.

இந்நூலாசிரியராகிய இளங்கோவடிகள், சேரநாட்டில் வஞ்சிநகரத்
திருந்து அரசுசெய்த சேரலாதனென்னும் அரசனுடைய புத்திரர் ; சேரன்
செங்குட்டுவனுடைய தம்பி : இதனால் இவர் முதலில் இளங்கோவென்று
சொல்லப்பட்டு, பின்பு துறவுபூண்டமையால் இளங்கோவடிகளென்று பெ
யர்பெற்றார்; இவர் துறவுபூண்டதற்குக் காரணம், சிலப்பதிகாரமுழுப்பதிப்
புப்புத்தகத்தின் ௧0-ம் பக்கம் ௨௬-ம் வரி முதலியவற்றாலும், இவர் இந்
நூல்செய்ததற்குக்காரணம் இந்நூற்பதிகத்தின் முதற்பாகத்தாலும் விள
ங்கவுணரப்படும் ; துறவுபூண்டபின்பே இந்நூல் இவராற்செய்யப்பட்டது.
பத்தினியைத்துதித்தலை யுட்கொண்டும் இக்கதைமுகமாகச் சில தருமங்
களை உலகத்தார்க்குத் தெரிவிக்கவேண்டு மென்பதை யெண்ணியும் இவர்
இந்நூலைச்செய்தனர்; இவர் தமதமரபிலுள்ளாருடையஉயர்ச்சியைக்கூறுத
ல்போலவே ஏனைச்சோழபாண்டியர்களுடையஉயர்வுகளையும் சிறிதும்வேறு
பாடின்றி நன்றாகச் சொல்லியிருத்தலால்,இவருடைய துறவின்தூய்மை நன்
குபுலப்படுகின்றது. இந்நூலின் இடையிடையே சொல்லப்படுபவர்களுடைய
சரித்திரநிகழ்ச்சியாற் போந்த நற்பயனையும் தீப்பயனையும் ஆங்காங்கு உல
கத்தாரைநோக்கிச் சொல்லிப்போதல் இவர்க்குஇயல்பு. பின்னும் யாரே
னும் மிக்கதுன்பமனுபவித்ததாகச் சொல்லும்பொழுது அத்துன்பத்திற்குக்
காரணமாக முற்பிறப்பில் அவர்கள்தீவினைசெய்ததைக்குறித்தும் நல்வினை
செய்யாமையைக்குறித்தும் அப்பொழுதப்பொழுது இவர்மனம் இரங்கிற்
றென்பதை ஆங்காகுள்ள பாடல்கள் புலப்படுத்தும்.இவர் மலைநாட்டினராத
லால் இந்நூலில் அந்நாட்டுச்சொற்கள் பல அவ்வவ்விடத்துக் காணப்படும்.

இவர்காலமும் சிலப்பதிகாரக்கதைநிகழ்ந்தகாலமும் ஒன்றாதலால்,கா
விரிப்பூம்பட்டினத்திலும் மதுரையிலும் நடந்த சரித்திரங்களை அறிந்தோர்
வாய்க்கேட்டும் மலைநாட்டினிகழ்ந்ததைத் தாம் நேரிற்கண்டும் இந்நூலைச்
செய்தனர். இங்ஙனஞ்செய்தாரென்பதை இந்நூற்பதிகத்தாலும்,௨௫-வது
காட்சிக்காதையாலும், ௩0-வது வரந்தருகாதையாலும் விளங்க உணர்க.

இக்கதையோடு தொடர்புள்ளதாகிய மணிமேகலையின் கதையையும்
இந்நூலினிறுதியிற்சேர்த்துப் பாடக்கருதியிருந்த இவர், அக்கதையை
மணிமேகலைப்பெயரால் ஒருகாப்பியமாக யான் செய்துமுடித்தேனென்று
மதுரைத்தமிழாசிரியர் கூலவாணிகன் சாத்தனார் சொல்லக் கேட்டு, அவ்
வாறு செய்யாதுவிடுத்தனர். இதனைச் சிலப்பதிகாரத்தின் ௧0-ம் பக்கம்
௫-ம் வரி முதலியவற்றிற் காண்க.

சமயம்.—௨௬ - வது கால்கோட்காதையில் செங்குட்டுவன் இமயஞ்
செல்லப் புறப்பட்டபொழுது [அடி ௫௪-௫௭] "நிலவுக்கதிர் முடித்த நீளி
ருஞ் சென்னி,யுலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி,மறஞ்சேர் வஞ்சி
மாலை யொடுபுனைந், திறைஞ்சாச் சென்னி யிறைஞ்சிவலங் கொண்டு"
எனவும், பின்பு [அடி ௬௨-௬௭] "ஆடக மாடத் தறிதுயி லமர்ந்தோன், சே
டங் கொண்டு சிலர்நின் றேத்தத், தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்,
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலி, னாங்கது வாங்கி யணிமணிப் புயத்து
த், தாங்கின னாகி" எனவும், செங்குட்டுவனைநோக்கி இமயத்தினின்றும்
வந்த முனிவர்கள் கூறியதாக [அடி ௯௮-௯௯] "செஞ்சடை வானவ னருளி
னில் விளங்க, வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்" எனவும், வரந்தருகா
தையில் மாடலன்கூறியதாக [அடி ௧௪௧-௧௪௨] "ஆனே றூர்ந்தோ னரு

ளித் தோன்றி, மாநிலம் விளக்கிய மன்னவ னாதலின்" எனவும் இவரே கூறியிருத்தலாலும், இவர் அவனுடைய தம்பியாதலாலும் இவரது சமயம் சைவமென்று தோற்றுகின்றது. இவருக்கு அடிகளென்று பெயர் வந்திருத்தலைக்கொண்டும், பதிகத்தில் "குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த" என்பதிற் கோட்டமென்றதற்கு 'அருகன்கோயில்' என்று அடியார்க்குநல்லார் பொருள்செய்திருத்தலைக்கொண்டும், இந்நூலிற் சிலவிடத்து ஜைன மதக்கொள்கையை இவர் மிகுத்துச்சொல்லியிருத்தலைக்கொண்டும் இவரதுசமயம் ஜைநமென்று கூறுவாருமுளர்.

காலம்.—"உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள், உரைசா லடிகள் அருள மதுரைக், கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்" என இந்நூற்பதிகத்திறுதியிலும் "இளங்கோ வேந்த னருளிக் கேட்ப, வளங்கெழு கூல வாணிகன் சாத்தன், மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற, ஆறைம் பாட்டினு ளறிய வைத்தனன்" என மணிமேகலையினுடையபதிகத்திறுதியிலுங்கூறியிருத்தலால், இளங்கோவடிகளும் சாத்தனாரும் ஒருவர்முன்னிலையி லொருவர் முறையே சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் இயற்றினாரென்று போதருதலாலும், தொல்காப்பியப்பொருளதிகாரச் செய்யுளியலில், "ஞகாரை முதலா" என்னுஞ் சூத்திரத்தின் விசேடவுரையில் "சீத்தலைச்சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலை" என உச்சிமேற்புலவர்கொள்நச்சினார்க்கினியரெழுதியிருத்தலால் மேற்கூறியசாத்தனார் கடைச்சங்கப்புலவருளொருவராகிய சீத்தலைச்சாத்தனாரென்று தெரிதலாலும், இளங்கோவடிகள் காலம் கடைச்சங்கப்புலவர்காலமென்று நிச்சயிக்கப்படுகிறது. அக்கடைச்சங்கப்புலவருட்சிறந்தவரும் மதுரைக்கணக்காயனார்மகனாருமாகிய நக்கீரனார் இறையனாரகப்பொருளுக்குத் தாம் இயற்றிய உரையில் இந்நூலிற் கானல்வரியி லுள்ள "நிணங்கொள்", "துறைமேய் வலம்புரி", "நேர்ந்தநங் காதலர்", "புணர்துணை" என்னும் பாடல்களை யெடுத்து உதாரணமாகக் காட்டியிருப்பதுங் காண்க.

இளங்கோவடிகளுக்குத் தமையனாகிய செங்குட்டுவன் பத்தினிக்கடவுளாகிய கண்ணகியார்க்குக் கோயில்சமைத்துவிழாக்கொண்டாடியகாலத்து இலங்கையரசனாகிய கயவாகுவென்பவன் உடனிருந்தானென்று வரந்தருகாதையாலும், அக்கயவாகுவும் இலங்கையிற் கண்ணகியார்க்குக் கோயில் கட்டுவித்து விழாக்கொண்டாடினானென்று இந்நூற்பதிகத்தைச்சார்ந்த உரைபெறுகட்டுரையாலுந் தெரிகின்றன. இற்றைக்குச் சற்றேறக்குறைய ௧௮௬௦ வருடங்களுக்குமுன்பு கயவாகுவென்று மரசனொருவன் இருந்தானென்று இலங்கைச்சரித்திரத்தால் (=மகாவம்சம்) புலப்படுகின்றது. பின்னும் சற்றேறக்குறைய ௭௬௦ வருடங்களுக்கு முன்பு கயவாகுவென்னும் மற்றோரரசனிருந்ததாகவும் அச்சரித்திரத்தால் தெரியவருகின்றது. ஆயினும், இந்நூலிற் கூறிய வேறு சில அரசர்களுடைய காலத்தை ஆராயும்போது இந்நூலாசிரியர்காலம் இரண்டாங்கயவாகுவின் காலத்திற்கு முந்தியதாகத் தெரிகின்றமையின், இவர்காலம், முதற்கயவாகுவின்காலமென்றே துணியப்படுகின்றது.

அடியார்க்குநல்லார்வரலாறு.

இவருடைய வருணம் சமயம் ஊர் காலம் ஆகிய இவற்றுள் ஒன்றும் புலப்படவில்லை; ஆனாலும் நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுட் சில இவருடையகொள்கையாக இருத்தல்பற்றி இவரதுகாலம் நச்சினார்க்கினியருடைய காலத்திற்கு முந்தியிருக்கலா மென்று ஊகிக்கப்படுகிறது. இவர், மற்றையுரையாசிரியர்கள்போலன்றித் தாம் எடுத்துக்காட்டும்மேற்கோள்களை இன்னஇன்ன நூலின்கண் உள்ளனவென்று பெரும்பாலும்புலப்படுத்தியிருக்கிறார். சிலசிலவிடத்துப் பதப்பிரயோசனமும் அலங்காரமும் மெய்ப்பாடுகளும் வேறு சில குறிப்பும் இவராலெழுதப்பட்டுள்ளன. ஐந்திணைக்குமுரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றின்வகை பலவற்றிற்கும் இந்தநூலிலிருந்தே உதாரணங்காட்டிவிளக்கியிருக்கின்றனர். இந்நூல்செய்யப்படும்பொழுதிருந்த இசைத்தமிழ்நாடகத்தமிழ்நூல்கள் பலவும் இவர்காலத்து இறந்துபோனமையால், இவர், அவ்விசைநாடகப்பகுதிகட்கு இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதீயம், மதிவாணர்நாடகத்தமிழ்நூல் என்னும் ஐந்து நூல்களையுமே மேற்கோளாகக்கொண்டனர். இந்நூலுள் இந்திரவிழவூரெடுத்தகாதையில் [அடி ௬௪] "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" என்றும், கட்டுரைகாதையில [அடி ௧௩௩ - ௧௩௫] "ஆடித் திங்கட் பேரிருட் பக்கத், தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று வெள்ளி வாரத்து" என்றும் சொல்லப்பட்டுள்ள காலவரையறையைக்கொண்டும் அவ்வவ்விடத்துள்ள ஒவ்வொருகுறிப்பைக்கொண்டும் ஊகித்துக் கோவலன் கண்ணகி இருவரும் இன்னகாலத்துக் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து புறப்பட்டார்களென்றும் இன்ன இன்ன காலத்து இன்னது இன்னது செய்தார்களென்றும் எழுதிக்கொண்டுபோகிறார். இவருடைய உரைநடை, சிற்சிலவிடத்து எதுகை மோனைமுதலியவற்றோடு கூடி இனியசுவை பயந்து செய்யுள்நடையாக அமைந்துள்ளது. இந்நூலுள் ஒவ்வொருபகுதிகளைத் தனித்தனியே படிப்போர்க்கு அவ்வப்பகுதிகள் ஆங்காங்குள்ளவைகளாலேயே புலப்படவேண்டுமென்பது இவர்கருத்தாதலால், முன்னெழுதியவற்றையே பின்னுமெழுதுவர். அதனை இவ்வுரையிற் பலவிடத்துங் காணலாம். இவர்கருத்து இன்னதாதலைச் சிலப்பதிகாரப்புத்தகத்தின் ௩௪௨-ம் பக்கம் ௪-வதுவரிமுதலியவற்றிற் காண்க. மூலத்தில்எவ்விடத்தேனுந்திசைச்சொற்கள்வந்திருப்பின் அவற்றைத் தனித்தனியே எடுத்துக்காட்டி இன்னசொல்இன்னநாட்டுவழக்கென்றும், அக்காலத்துவழங்கியபழமொழிகளின்கருத்து எவ்விடத்தேனும் வந்திருக்குமாயின் அவற்றைத் தனித்தனியேஎடுத்துக்காட்டி இன்னது இன்னபழமொழியென்றும் புலப்படுத்துவார். ஒருதலையாப்பொருள் கொள்ளாது பலரும் தத்தமக்குத் தோற்றியவாறே பொருள்கொள்ளக் கிடந்த போற்றியென்பதை இவர் இகரவீற்றுவியங்கோளாகக் கொண்டு போற்றுவாயாகவென்று பொருள்செய்திருக்கிறார்; [நச்சினார்க்கினியரும் காட்டியென்பதை இகரவீற்று வியங்கோளாகக் கொண்டார்; சிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், ௫௮]. இவர், 'கானல்வரியில் விரியக்கூறுதும்' என்றும், 'முன்னர்ஆய்ச்சியென்பதனுட்கூறினும்' என்றும் எழுதியிருத்தலால், இவர் கானல்வரிக்கு உரைசெய்திருந்தன ரென்பதும், 'அழற்படுகாதைக் கண்ணே விரித்துக்கூறுதும்' என்றும், 'கட்டுரைகாதையுள் விரியக்கூறுவாம்' என்றும் எழுதியிருத்தலால், கட்டுரைகாதை முதலியவற்றிற்கும் இவர் உரைசெய்யவெண்ணியிருந்தா ரென்பதும் வெளியாகின்றன; அவை இப்பொழுது அகப்படவில்லை.

சிலப்பதிகாரக்கதைச்சுருக்கம்.

[க.— * புகார்காண்டம்.]

சோழவளநாட்டிற் காவிரிநதி கடலோடுகலக்கும் சங்கமுக மென்னுந்
துறையையுடையதும் சோழர்களுடைய பழைய இராசதானியாகவுள்ள
தும் பெரியோர்களாற் சிறப்பித்துப் பாராட்டி மிகப்புகழப்படுவது மாகிய
காவிரிப்பூம்பட்டினத்தில் சோழன்கரிகாலன் அரசாட்சிசெய்துவருகையில்,
இப்பர் சவிப்பர் பெருங்குடிய ரென்னும் மூவகைவணிகருட் பெருங்குடி
யர்குலத்திலுதித்தோனாகிய மாசாத்துவானென்பான், தன்மகன் கோவல
னுக்கு அந்நகரில் அம்மரபிலுதித்த மாநாய்கன்மகள் கண்ணகியை மிக்க
சிறப்புடன் மணம்புரிவிக்க, கோவலன் கண்ணகிபால் மிகவும் அன்புவை
த்து நலம்பாராட்டி இன்புற்றுத் தருக்கி மகிழ்ந்து நடக்குநாட்களில், ஒரு
நாள், அக்கோவலன்தாயாகிய பெருமனைக்கிழத்தியென்பவள், கோவலனும்
கண்ணகியும் இல்வாழ்க்கையைச் செவ்விதாகநடத்திக் கைதேர்ந்து உயர்
ச்சிபெற்றுவிளங்குதலைக் காணவேண்டி வேறொருமாளிகையில் இல்லற
நடத்துதற்குவேண்டும்பொருள்களை நிரப்பி வேலைசெய்பவர்களையும் நியோ
கித்து அவ்விருவரையும் அதிலிருத்த, அவர்கள் மனவொருமையோடு அதி
லிருந்து அறவோர்க்களித்தல் அந்தணரோம்பல் துறவோர்க்கெதிர்தல்
முதலியவற்றைச் செய்து இல்வாழ்க்கையை ஒழுங்காக நடத்திவருவாராயி
னர்; இவ்வாறு சிலவருடங்கழிந்தன.

இப்படியிருக்கையில், கோவலன், மிக்க அழகுடையவளும் ஆடல்
பாடல் முதலியவற்றில் மிகத்தேர்ச்சிபெற்றவளு மாகிய மாதவியென்னும்
நாடகக்கணிகையை விரும்பித் தன்பாலுள்ள பலவகைப்பொருள்களையும்
நாள்தோறுங்கொடுத்து அவளோடும் இடைவிடாது மருவி மகிழ்வானாயி
னன். கண்ணகி பிரிவாற்றாதுவருந்தி அவ்வருத்தத்தைச் சற்றும் வெளிப்
படுத்தாமல் அவன்பாற் சிறிதேனும் வெறுப்பின்றி இல்லறவொழுக்கத்தை
வழுவாது நடத்திவந்தாள்; அக்காலத்து வழக்கப்படி அந்நகரத்தில் இந்தி
ரனுக்குத் திருவிழாநடத்தப்பட்டது அதன்முடிவில் அந்நகரத்தார் தத்தம்
பரிவாரங்களோடு கடலாடுதற்குச் சென்றார்கள்; கோவலனும் மாதவியுடன்
கடற்கரையையடைந்து ஓரிடத்திலிருந்து அவள்கையிலிருந்த வீணையை
வாங்கிப் பலவகைப்பட்ட வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு அவ்வீணையை
வாசித்தான்; அவன்பாடியபாட்டுக்கள் பலவகைப்பட்ட அகப்பொருட்சுவை
யைத் தழுவியிருந்தமையின், மாதவி, 'இவன் வேறுமகளிர்பால் விருப்புடை
யன்' என்றெண்ணிப் புலந்து அவன்கையிலுள்ளவீணையைவாங்கித் தான்
வேறுகுறிப்பில்லாதவளாக இருப்பினும் அவன்வேறுகுறிப்புள்ளவனாகத்
தனக்குத்தோற்றினமையின் தானும் வேறுகுறிப்புடையாள்போலவே அக
ப்பொருட்சுவையைத்தழுவிய பலவகைப்பட்ட வரிப்பாட்டுக்களைப் பாடிக்
கொண்டு அவ்வீணையை வாசித்தாள்; அதனைக்கேட்டகோவலன், வேறொரு
வர்மேல்மனம்வைத்து இவள்பாடினளென்றெண்ணி ஊழ்வினையின்முயற்சி
யால் வெறுப்புற்று அவளோடு அளவளாவாமல் தன்வீட்டையடைந்து, தே
வந்தியெனனும் பார்ப்பனத்தோழியோடு சல்லாபஞ்செய்துகொண்டிருந்த
கண்ணகியைக் கண்டு அவளுடன் பள்ளியறையிற்புகுந்து அவள்மேனிவாட்
டத்தையும் மனவருத்தத்தையுந் தெரிந்து, 'பொய்யை மெய்யாகக்காட்டி
யொழுகும் பரத்தையோடு மருவி ஒழுகிய காரணத்தால் முன்னோர்தேடி
வைத்தபொருட்குவியல்களையெல்லாம் தொலைத்து வறுமையடைந்தேன்,
அஃது எனக்கு மிகவும் நாணைத்தருகின்றது' என்றுசொன்னான். கண்ணகி,
மாதவிக்குக்கொடுத்தற்குப்பொருளில்லாமையால்தளர்ந்துசொன்னா னெ

---

* புகார் - காவிரிப்பூம்பட்டினம்.

ன்றுகருதி, 'அடியேனிடத்து இரண்டுசிலம்புகளுள்ளன; அவற்றைக் கைக்கொண்டருள்க' என்று சொன்னாள்; அவன், 'மதுரையையடைந்து இச்சிலம்பைவாணிகமுதலாகக்கொண்டு வியாபாரஞ்செய்து மிக்கபொருள்தேடுதற்கு எண்ணினேன்; நீயும் வரல்வேண்டும்' என்றான்; அவளும் சம்மதிக்க, கோவலன் அன்றிரவின் கடையாமத்திற் கண்ணகியையழைத்துக்கொண்டு ஒருவருமறியாதபடி புறப்பட்டுக் காவிரியின் வடகரைவழியாக மேற்கே சென்று ஒருபூஞ்சோலையை யடைந்து அதில் தவஞ்செய்துகொண்டிருந்த ஆருகதசமயத் தவமுதியோளாகிய கவுந்தியைக் கண்டு வணங்கி, 'மதுரையிலுள்ள பெரியோர்கள்பால் அறநூற்கேள்விகளைக் கேட்டற்கு உடன்வருவேன்' என்று சொல்லிய அவளோடும் வழிக்கொண்டு அரங்கமடைந்து அங்குவந்த சாரணர்களைத் தரிசித்து ஓடமேறிக் காவிரியின்தென்கரைசேர்ந்து ஒருபொழிலிலிருந்தான்; அப்பொழுது அங்குவந்து கண்ணகியையும் கோவலனையும் அவமதித்துப்பேசிய ஒருபரத்தையையும் ஒருதூர்த்தனையும் கவுந்தி நரிவடிவங்கொள்ளும்படி சபித்து, அவர்கள்அவ்வாறானதையறிந்துஇரங்கிய கோவலன்கண்ணகியிவர்கள்வேண்டுகோளால் அவர்களுக்கு அவ்வடிவு ஒருவருடத்தில் நீங்கும்படி சாபவிடைசெய்தாள். பின்பு மூவரும் உறையூரையடைந்தார்கள்.

[உ.—மதுரைக்காண்டம்.]

அடைந்தவர்கள் அன்று அந்நகரில்தங்கி மறுநாட்காலையிற் புறப்பட்டுச் சிறிதுதூரஞ்சென்று ஓரிடத்திருந்து இளைப்பாறி அங்குவந்த ஓரந்தணனால் வழிதெரிந்துகொண்டு அப்பாற்சென்றார்கள். செல்லும்பொழுது ஒருநாட்காலையிற் கோவலன், கவுந்தியையும் கண்ணகியையும் ஓரிடத்தில் வைத்துவிட்டுக் காலைக்கடன்கழித்தற்பொருட்டுஒருபொய்கையையடைந்துநிற்கையில், தன்பிரிவாற்றாதுவருந்திய மாதவியா லனுப்பப்பட்டு அவளோலையுடன் காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் அங்குவந்த கௌசிகனென்னும் அந்தணனைக் கண்டு தன்பிரிவால் தன் தந்தைதாய் முதலியோர்களும் மாதவியும் படுகிற வருத்தங்களை அவனால் தெரிந்து மிகவருத்தமுற்றுத் தான்புறப்பட்டதற்குக் காரணத்தையும் தன்வணக்கத்தையும் தன்னுடையதந்தைக்குச்சொல்லிப் பாதுகாத்துக்கொண்டிருக்கும்படி அவனை யனுப்பிவிட்டுக் கவுந்தியையும் கண்ணகியையு மடைந்து அவர்களுடன் புறப்பட்டு இடையிற் சந்தித்த பாணர்களுடன் அளவளாவி அவர்களால் வழியினளவு தெரிந்துகொண்டுபோய் வையையாற்றையடைந்து அதனைத்தொழுது புணையேறி அக்கரைசென்று மதுரையின் மதிற்புறத்ததாகிய முனிவரிருக்கையில் தங்கினான்.

மற்றைநாட்காலையெழுந்து கவுந்தியை வணங்கித் தங்களுக்கு முன்புநேர்ந்ததுன்பங்களைச் சொல்லி வருந்திப் பின்பு அவள்தேற்றத்தேறிக் கண்ணகியை அவள்பால்வைத்துவிட்டுத் தான் வாணிகஞ்செய்தற்குரிய இடமறிதற்பொருட்டு மதுராநகரத்தின் உள்ளேசென்று அதன்வளங்களையெல்லாங்கண்டு மீண்டு கவுந்தியையடைந்து அந்நகர்ச்சிறப்பு முதலியவற்றைச் சொல்லி, பின்பு, அங்கேவந்த தனது நட்பாளனாகிய மாடலனென்னும் அந்தணனோடு சல்லாபஞ்செய்துகொண்டிருந்தான். அப்பொழுது, கவுந்தி, அங்குவந்த இடைச்சியர் தலைவியாகிய மாதரியைக் கண்டு அவளது நல்லொழுக்கத்தை நோக்கி, 'இவளிடத்திற் கண்ணகியை அடைக்கலமாகக்கொடுக்கலாம்' என்று நிச்சயித்து அவளையழைத்துக் 'கண்ணகியின் கற்புமேம்பாட்டையும் அவள்மென்மைத்தன்மையையும் உயர்ந்தோர்களாற் கொடுக்கப்படும் அடைக்கலப்பொருளைப் பாதுகாத்தோர் அடைந்தபயனையும் அவட்கு

விளக்கிச்சொல்லிக் கண்ணகியை அவளிடம் ஒப்புவிக்க, அவள் மகிழ்ச்சியுடன் ஏற்று விடைபெற்றுக் கண்ணகியைக் கோவலனுடன் அழைத்துக்கொண்டு ஆயர்பாடியிலிருக்கும் தன் வீட்டை யடைந்து அவ்விருவரையும் புதிய மனையொன்றிலடைவித்து மிகவுபசரித்துத் தன்மகள் ஐயையென்பவளைக் கண்ணகிக்குத் துணையாகவைத்துச் சமைத்தற்குரியபொருள்கள் பலவற்றையும் கொணர்ந்துகொடுப்பக் கண்ணகி அவற்றைச் செவ்விதாகச்சமைத்து முறைப்படியுண்பிக்கக் கோவலன் இனிதாகவுண்டு கண்ணகியை அருகழைத்து அணைத்து, 'நீ இந்தப்பாலைவழியில் வந்ததையெண்ணி நம் தாய் தந்தையர் என்னதுன்பமுற்றார்களோ? மிக்க செல்வத்தை அனுபவித்துக் கொண்டிருந்த நாம் இந்தக் கொடியதுன்பத்தை யனுபவித்தது கனவோ? நனவாயின், இதற்குக்காரணமாக முன்பு செய்த தீவினை யாதோ? யான் ஒன்றுமறிந்திலேன்; வினையோடும் விடரோடுங் கூடிப் பிறரைப் புறங்கூறுங் கூட்டத்திற் புகுந்து நல்லொழுக்கத்தைத் துறந்த மகாபாவியாகிய எனக்கு இனித் தீக்கதியன்றி நற்கதியுண்டாமோ? இருமுதுகுரவர்க்கும் ஏவல் செய்தலையொழிந்தேன்; உனக்கும் துன்பஞ்செய்தேன்; இக்கூடாவொழுக்கம் தீதென்று சிறிதுமெண்ணிலேன்' என்று பலவாறிரங்கி, 'சுற்றமுதலியவற்றைநீங்கி நாணமுதலியவற்றையும் கற்பையும் பெருந்துணையாகக்கொண்டு என்னோடுவந்து எனது தனிமையைத் தீர்த்த "பொன்னே கொடியே புனைபூங்கோதாய், நாணின் பாவாய் நீணில விளக்கே, கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி" இனி, உன்னுடைய சிலம்புகளுள் ஒன்றைக் கொண்டுபோய் விலைவிற்றுவருவேன்; வருமளவும் தனிமையால்வருந்துதலை ஒழிவாயாக' என்றுசொல்லி, ஒரு சிலம்பை வாங்கிக்கொண்டு, அவள்தனியேயிருத்தலைக்கண்டு மனம்வெதும்புதலாலே பெருகிய தன் கண்ணீரை அவள் கண்டால்வருந்துவாளென்று மறைத்தவனாகி அவ்விடத்தைநீங்கிப் பிரிதற்குத் துணிவில்லாத மனமுடையவனாய்ச் சென்று, எதிர்ப்பட்ட தீநிமித்தங்களை அறியாமற் கடைத்தெருவிற்புகுந்து, எதிரே நூறுபொற்கொல்லர்பின் சேவரமுன்வந்த ஒருபொற்கொல்லனைக்கண்டு, இவன் அரசனாற் பெயர்பெற்றவனென்றெண்ணி அவனருகிற்சென்று, 'அரசன்றேவிபணிதற்குத் தகுதியான சிலம்பின் விலைமதிக்கும் வன்மை யுடையாயோ' என்று வினவி, அவன் மிக்கபணிவுடன் தான்வல்லனாதலைக் குறிப்பிக்கக் கோவலன் தான் கொணர்ந்த சிலம்பைக் காட்டினன். அவனபார்த்து, 'இதனை அரசனுக்கு யான்தெரிவித்துவருமளவும் என்வீட்டிற்கு அயலதாகிய இவ்விடத்தே நீரிரும்' என்று ஓரிடத்தைககாட்டிச் செல்லக் கோவலன் அவ்விடத்தேயிருந்தான். சென்றபொற்கொல்லன் முன்புஅரசன்மனைவியின்சிலம்புகளுள் ஒன்றைவஞ்சித்துத்திருடிக்கொண்டவனாதலால், 'யான்முன்புவஞ்சித்துக் கவர்ந்துகொண்டசிலம்பு என்னிடத்தேயுள்ளதென்று இராசாவுக்கு வெளிப்படுவதற்குமுன்னமே அதனோடொத்தசிலம்பைக்கொணர்ந்த இப்புதியவனால் என்மீதுண்டாகும்ஐயத்தைப் போக்கலாம்' என்று தன்னுள்ளே நிச்சயித்துக்கொண்டு, தனமனைவியின்ஊடல்தீர்த்தற்பொருட்டுத்தன்கோயிலைநீங்கி அவன்கோயிலைநோக்கிககாமபரவசனாய்ச்செல்லும் பாண்டியன்நெடுஞ்செழியனைக் கண்டு வணங்கித் துதித்து, 'கன்னக்கோல் முதலியன இல்லாமலே கோயிற்கணிருந்த சிலம்பைத் திருடியவன் அடியேனுடைய சிறுகுடிலில் அச்சிலம்போடு வந்திருக்கிறான்' என்றுசொல்ல, பாண்டியன் உடனே காவலாளர்களையழைத்து, 'என்மனைவியின் சிலம்பு இவன்கூறியகள்வன்கையிடத்ததாயிருப்பின், அவனைக் கொல்லுதற்கு அச்சிலம்போடு கொண்டுவருக' என்றுசொல்லக்கருதியவன், வினைவிளைக்குங் காலமாதலால் மயங்கி, 'அவனைக்கொன்று அச்சிலம்பைக் கொண்டுவாரும்' என்று கட்டளையிட்

டான். பொற்கொல்லன் தன்னெண்ணம் பலித்ததென்று தன்னுள்ளே மகிழ்ந்து அக்காவலாளருடன்சென்று கோவலனையடைந்து அவனைநோக்கி, 'இவர்கள் அரசன்கட்டளையாற் சிலம்புகாணவந்தவர்கள்' என்றுசொல்லி, கோவலனுடையமுகக்குறிமுதலியவற்றைக்கண்டு இவன்கள்வனல்லனென்றுசொல்லுங் காவலாளர்களை இகழ்ந்துரைத்து, அவனைக் கள்வனென்று வற்புறுத்துதற்குக் களவுநூலிலுள்ள ஏதிக்களையெல்லாம் அவர்களுக்கு எடுத்துக்காட்டினான்; அப்பொழுது அவர்களுள் அறிவின்மையினாற் கொலையஞ்சானொருவன் விரைந்துசென்று கோவலனைத்தன்கைவாளால்வெட்டி வீழ்த்தினான்.

இப்பால், கண்ணகியிருந்த இடைச்சேரியில் பலவகையான உற்பாதங்களுண்டாயின; அதுகண்ட மாதரிமுதலியோரால் உற்பாதசாந்தியாகத் திருமாலைக்குறித்துக் குரவைக்கூத்து ஆடப்பட்டது; அதன்முடிவில் மாதரி நீராடுதற்பொருட்டு வையையாற்றிற்குச் சென்றாள்; அப்பொழுது சிலம்பு திருடியவனென்று துணிந்து கோவலனை அரசனேவலாளர் கொன்றசெய்தியை மதுரையிலிருந்துவந்தவொருத்திசொல்லக்கேட்டுக் கண்ணகி பதைபதைத்து மூர்ச்சித்துப் பலவாறுபுலம்பித் தானும்அவனுடனிறத்தற்குத்துணிந்து இடைச்சியர்மத்தியில்நின்று சூரியனைநோக்கி, 'கதிர்ச்செல்வனே! நீயறிய என்கணவன் கள்வனோ' என்றாள்; அவன், 'நின்கணவன் கள்வனல்லன்; அவனைக் கள்வனென்ற இவ்வூரை விரைவில் தீயுண்ணும்' என்று அசரீரியாகக் கூறினன். அதைக்கேட்ட கண்ணகி மிகுந்த கோபத்தோடு தன்னிடமிருந்த மற்றொரு சிலம்புடனே புறப்பட்டுக் கண்டார்நடுங்கும்படி வீதிவழியேசென்று ஆங்குள்ளமகளிரைநோக்கிப் பலவாறு புலம்பி, 'என்கணவனை முன்போலக்கண்டு அவன்சொல்லும் நல்லுரையைக் கேட்பேன்; அங்ஙனங் கேளேனாயின், என்னை இகழுமின்' என்று சபதஞ்செய்துகொண்டு சென்று வெட்டுண்டுகிடந்த கோவலனைச் சிலர்காட்டக் கண்டு அளவில்லாத துயரத்தையடைந்து அவனை முன்னிலைப்படுத்திப் பலவிதமாகப் பிரலாபித்து அவனுடம்பைத் தழுவிக்கொள்ள, அவ்வளவில், அவன்உயிர்பெற்றெழுந்துநின்று மதிபோன்றமுகம்வாடியதேயென்றுசொல்லிக் கையாலே அவள்கண்ணீரை மாற்ற, அவள் அவனுடைய பாதங்களை இரண்டுகையாலும் பூண்டுகொண்டு பணிந்தாள்; உடனே அவன் நீ இங்கிருக்கவென்றுசொல்லி அவ்வுடம்பையொழித்துவிட்டுச் சுவர்க்கம்புகுதற்குத் தேவர்களோடுகூடிச்சென்றான்.

இங்கேஇப்படியிருக்கப் பாண்டியன்நெடுஞ்செழியன்மனைவி, தீக்கனாக்கள்பலவற்றைக்கண்டுசென்று அவற்றைத் தன்கணவனோடு சொல்லிக் கொண்டிருந்தாள்; அப்பொழுது, கண்ணகி கோபந்தணியாதவளாய் அரண்மனைவாயிலடைந்து வாயிலோனால் தன்வரவை அரசனுக்கு அறிவித்து அவனருமதிப்படி அவன்முன்சென்று, அவன்கேட்பத் தன் ஊர் பேர் முதலியவற்றையும், ஆராயாதுகோவலனைக்கொல்வித்த கொடுங்கோன்மையையும் வெகுதுணிவாகச்சொல்லிக் கோவலன்கள்வனல்லனென்று தெளிவித்தற்பொருட்டு, தன்சிலம்பினுள்ளேயுள்ளபரல் மாணிக்கமென்றாள்; அவன், தன்தேவிசிலம்பின்பரல்முத்தென்றுசொல்லி, கொல்லப்பட்டகோவலனிடமிருந்துகிடைத்தசிலம்பை வருவித்துவைப்ப, கண்ணகி அதையுடைத்தாள்; உடைக்கவே அதனினின்றும் மாணிக்கப்பரல் தெறித்தது; அதுகண்டு அரசன் நடுநடுங்கி, 'இழிந்தபொற்கொல்லன்சொல்லைக்கேட்ட கொடுங்கோன்மையையுடைய நானோ அரசன்! நானோஅரசன்!! ஐயோ! மிகப்புகழ்பெற்ற இந்தஅருமந்தகுலம் என்னாற்பழியடைந்ததே! என்ஆயுள் இன்றே அழியக்கடவது' என்றுசொல்லி மிகவுந்துக்கித்து மயங்கித் தானிருந்தஆசனத்தில் வீழ்ந்து இறந்தான்; அதனையறியாத அவன்மனைவி பாதுகாத்தருளவேண்

டுமென்று கண்ணகிபாதத்தில் வீழ்ந்தாள்; வீழவே கண்ணகி, 'நான் பத்தினியாயிருத்தல் உண்மையாயின், இவ்வூரை அழித்துவிடுவேன்பார்' என்று சபதம்செய்து தனது இடக்கொங்கையை வலக்கையால் திருகியெடுத்து அதை அந்நகரத்தின்மீது எறிந்தாள்; எறியவே, அக்கினிதேவன் பார்ப்பனக்கோலத்தோடு வந்து, 'மகாபத்தினி! உனக்குப்பிழைசெய்தநாளில் இவ்வூரை எரித்துவிடும்படி முன்னமே ஒரேவல் பெற்றுளேன்; இப்பொழுது யாரையழித்தல்வேண்டும்' என்று கேட்ப, அவள், "பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர், மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத், தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று" சொல்ல, அப்பொழுதே அந்நகரில் அவள்சொல்லியவண்ணம் தீப்பற்றிக்கொண்டது. உடனே அந்நகரைக்காக்கும் வருணப்பூதங்கள் நான்கும் பெயர்ந்து சென்றன; அந்நகரத்துள்ள இடங்கள்பலவும் எரியத்தொடங்கவே அவ்வெம்மையை ஆற்றாதவளாகி மதுரையின்அதிதேவதை கண்ணகிபால்வந்துநின்று அவளைநோக்கி, "யான் இந்நகரின்தெய்வம்; உனக்குச் சிலவற்றைச்சொல்லவந்தேன்; அவற்றை நீகேட்பாயாக; இந்நகரத்து முன்பிருந்தபாண்டியர்களுள் ஒருவரேனும் சிறிதும் கொடுங்கோன்மையுடையாரல்லர்; இந்நெடுஞ்செழியனும் அத்தன்மையனே; ஆயினும் இதுவந்த வரலாற்றைச் சொல்லுவேன்: முன்பு கலிங்கநாட்டிலுள்ள சிங்கபுரத்தரசனாகிய வசுவென்பவனும் கபிலபுரத்தரசனாகிய குமரனென்பவனும் தம்முட்பகைகொண்டு ஒருவரையொருவர்வெல்லக்கருதியிருந்தார்; அப்பொழுது சிங்கபுரத்துக்கடைவீதியிற்சென்று இயல்பாகப்பண்டம்விற்றுக்கொண்டிருந்த சங்கமனென்னும் வணிகனை அந்நகரத்தரசனிடந் தொழில்செய்துகொண்டிருக்கும் பரதனென்பவன் இவன் பகைவனுடையஒற்றனென்றுபிடித்து அரசனுக்குக்காட்டிக் கொலைசெய்துவிட்டான்; அப்பொழுது அந்தச்சங்கமன்மனைவியாகிய நீலியென்பவள் மிகுந்ததுயரமுற்றுப் பதினான்குநாள் பலவிடத்துமலைந்து பின்பு ஒருமலையின் மேலேறிக் கணவனைச்சேர்தற்பொருட்டுத்தன்னுடையஉயிரைவிடுதற்கு நினைத்தவள், 'எமக்குத் துன்பஞ்செய்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தையே அடைவார்களாக' என்று சாபமிட் டிறந்தாள்; அப்பரதன்இக்கோவலனாகப் பிறந்தான்; ஆதலால் நீங்கள் இத்துன்பமடைந்தீர்கள்; நீ இற்றைக்குப்பதினாலாவதுதினத்தின்பகல்சென்றபின்பு உன்னுடையகணவனைக் கண்டுசேர்வை" என்றுசொல்லி அவளைத்தேற்றிச்செல்ல, பின்பு கண்ணகி மதுரையை நீங்கி வையைக்கரைவழியே மேற்றிசைநோக்கிச்சென்று மலைநாடடைந்து அதிலுள்ள திருச்செங்குன்றென்னும் மலைமே லேறி ஒருவேங்கைமரத்தினிழனின்று பதினாலாவதுதினத்தின்பகல்சென்றபின்பு அங்கே தெய்வவடிவத்தோடுவந்தகோவலனைக்கண்டுகளித்து அவனுடன் விமானத்தின்மேலேறித் தேவர்கள்போற்றும்படி சுவர்க்கமடைந்தாள்.

[௩.—வஞ்சிக்காண்டம்.]

கண்ணகி இவ்வாறு கணவனோடு விமானமேறிச் சுவர்க்கம் போகக் கண்ட வேட்டுவமகளிரும் வேடர்களும் மிகுந்தஆச்சரியமடைந்து தமது குறிச்சியிற் கண்ணகிபொருட்டு ஒருகுரவைக்கூத்துச் செய்வித்தார்கள். பின்பு அவ்வேடர்கள், இந்த அதிசயத்தைத் தந்நாட்டுஅரசனாகிய செங்குட்டுவனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்றெண்ணிப் பலவகையானகாணிக்கைப் பொருள்களையுங்கைக்கொண்டுசென்று,மலைவளங்காண்டற்குத்தனதுதேவி வேண்மாளோடும் தம்பி இளங்கோவடிகளோடும் புறப்பட்டு நால்வகைத் தானையுஞ்சூழவந்தபோதாற்றங்கரையிலுள்ளமணற்குவியலிலிருக்குஞ் சேரன்செங்குட்டுவனைக் கண்டுவணங்கிச் சொன்னார்கள்; அதுகேட்டு அவ்வரசன்

அதிசயிக்க, அங்குவந்திருந்த மதுரைத்தமிழாசிரியராகிய சாத்தனார், மது
ரையிற் கோவலன்கொலையுண்டதையும் அங்கே கண்ணகியால் நடந்தவற்
றையும் மதுராநகர்த்தெய்வம் அவளுக்குமுன்வந்து சொல்லியதையும் விரித்
துச்சொன்னார்; செங்குட்டுவன், பாண்டியன்இறந்ததற்குஇரங்கித் தன்தேவி
யின் வேண்டுகோளால் கண்ணகியாகிய பத்தினிக்கடவுளைப் பிரதிஷ்டித்து
வழிபடுதற்குஎண்ணி, அவளுருவஞ்செய்தற்குச் சிலைகொணர்தற்பொருட்டு
மந்திரிகளோடும் ஆலோசித்து, முன்னம் இமயமலையினின்றுவந்த முனி
வர்கள் 'ஆரியமன்னராகிய கனகனும் விசயனும் தமிழ்நாட்டரசரை யிகழ்ந்
தார்' என்று சொல்லக் கேட்டவனாதலால், அவ்வரசர்களைவென்று அவர்கள்
முடியில் அச்சிலையையேற்றிக் கொண்டுவருவே னென்று சபதஞ்செய்து,
உடனே சேனைகளுடன் புறப்பட்டு நீலகிரியையடைந்து அங்குத்தங்கி இம
யமலையினின்றும்வந்தமுனிவர்கள்கூறியஆசியைப் பெற்று அப்பாற்சென்று
கங்காநதியை யடைந்து தனதுநட்பரசர்களாகியகன்னர்கள்கொணர்ந்து
வைத்திருந்தஓடமேறி அக்கரைசென்று அவ்விடத்தில்தங்கி அங்கே போர்
செய்தற்குவந்த கனகவிசயரையும் அவருக்குத்துணையாகவந்த உத்தரன்
முதலிய அரசர்களையும் வென்று தாபதவேடமுதலியவற்றைக் கொண்டோ
டிய அவ்வரசர்களைப் பிடித்து அகப்படுத்திக்கொண்டு தன்மந்திரியாகிய வில்
லவன்கோதையையும் சேனையையும் அனுப்பி இமயமலையினின்றுஞ் சிலைவரு
வித்து அதைக் கனகவிசயர்முடியிலேற்றி விதிப்படி கங்கையில் நீர்ப்படை
செய்து இப்பால்வந்து அதன்தென்கரையிற் சேனையோடுந்தங்கி அங்குக்
கங்கையாடிவந்த மாடலனாற் கோவலன்வரலாறுமுதலியவற்றையும் நெடு
ஞ்செழியனுக்குப்பின்பு இளங்கோவேந்தன் அரசாட்சிசெய்துவருதலையும்
அறிந்து அம்மாடலனுக்குத் தன் நிறையாகிய ஐம்பதுதுலாம்பொன் தானஞ்
செய்து தன்னால்வெல்லப்பட்ட கனகவிசயரைச் சோழனுக்கும் பாண்டிய
னுக்குங் காட்டிவரும்படி நீலன்முதலிய ஒற்றர்களை யனுப்பிவிட்டுச் சேனையு
டன்புறப்பட்டு இடையிலுள்ளவளங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு வஞ்
சிநகரமடைந்து ஆங்குள்ளவர்களோடு அளவளாவி மகிழ்வுற்றிருந்தான்;
அப்படியிருக்கையில் ஒருநாள், முன்புஅனுப்பப்பட்ட நீலன்முதலிய ஒற்றர்
கள் வந்து, 'தோல்வியடைந்து மாறுவேடம்பூண்டுசென்ற கனகவிசயர்முத
லியோரைப் பிடித்துக்கொண்டுவந்ததைச் சோழனும் பாண்டியனும் இகழ்ந்
துசொன்னார்கள்' என்றுசொல்லக் கேட்டு மிகுந்தகோபங்கொண்டு, அங்கு
வந்திருந்த மாடலன் 'நீ கோபந்தணிக; இளமை யாக்கை செல்வமுதலி
யவைகள் நிலையா; நல்லபதத்தையடைவிக்கும் யாகத்தை இனிச்செய்தல்
வேண்டும்' என்று பலஉறுதிகள்முகமாக எடுத்துச்சொல்லக் கேட்டு அக்கோ
பந்தணிந்து, அம்மாடலன்சொல்லியவண்ணம் யாகத்திற்குரியவற்றை
அமைக்கும்படி சிலரையனுப்பி, ஆரியவரசர்முதலியோரைச் சிறையினின்று
நீக்கி அவர்களுக்குவேண்டியவற்றை உபகரிக்கும்படி வில்லவன்கோதைக்
குச்சொல்லி ஆன்றோர்பலருடன்சென்று, சிறந்தகம்மியர்களாற்செய்யப்
பட்ட ஓராலயத்தில் இமயச்சிலையாலியற்றப்பட்டுள்ள வடிவத்திற் பத்தி
னிக்கடவுளாகிய கண்ணகியைப் பிரதிஷ்டைபண்ணி விதிப்படி நித்திய
பூசைமுதலியவற்றை நடத்தும்படி கட்டளையிட்டு அங்கேயிருந்தான். அப்
படியிருக்கும்பொழுது, முன்னம், கோவலன்கொலையுண்டதுமுதலியவற்
றைமாடலனாற்கேட்ட தேவந்தியும் கண்ணகியின்செவிலித்தாயும் அவ
ளடித்தோழியும் காவிரிப்பூம்பட்டினத்தினின்று நீங்கி மதுரையையடை
ந்து அங்கேகண்ணகியைக்காணாமல் மாதரிமகள் ஐயையைக் கண்டு அவ
ளையழைத்துக்கொண்டு வையைக்கரைவழியேசென்று மலைநாடுபுகுந்து
கண்ணகிகோயிலையடைந்து அங்கிருந்த செங்குட்டுவனைக் கண்டு தங்களை

இன்றென்றறிவித்துக் கண்ணகியின்பிரிவாற்றாமையால் வருந்திப் புலம்பினார்கள்; அப்பொழுது கண்ணகி தெய்வவடிவத்தோடு வெளிப்பட்டுச் செங்குட்டுவனுக்குக் காட்சிகொடுத்து வாழ்த்தினாள்; பின்பு செங்குட்டுவன் மாதவிமகளாகிய மணிமேகலையின் துறவைத் தேவந்திசொல்லக்கேட்டு, அவள்மேல் ஆவேசித்த சாத்தனென்னுந் தெய்வத்தின் கட்டளையால் மாடலன் தன்கையிலுள்ள கமண்டலநீரை அங்குவந்திருந்த மூன்று இளம்பெண்கள்மீது தெளிப்ப, உடனே கண்ணகியைக்குறித்துப்புலம்பிய அம்மூவரையும் கண்ணகிநற்றாய் கோவலன்நற்றாய் மாதரி என்னும் இம்மூவருடைய பிறப்பினராக அறிந்து, அவர்கள் அவ்வாறுபிறத்தற்குக் காரணத்தை மாடலன்சொல்லக்கேட்டுப் பத்தினிக்கடவுளுக்கு நித்தியபூசைசெய்யும்படி தேவந்திக்குச்சொல்லித் தான் அக்கடவுளை மூன்றுமுறை வலம்வந்து வணங்கி நின்றான்; அப்பொழுது ஆரியமன்னரும் மாளவவேந்தரும் இலங்காபுரத்தரசனாகிய கயவாகுவும் அங்குவந்து அக்கடவுளைநோக்கி 'இச்செங்குட்டுவனைப்போல எங்களுடையநாட்டில் யாங்கள் உனக்குச்செய்யும் பூசையில் நீ எழுந்தருளி எங்களுக்கு அருள்செய்யவேண்டும்' என்றுபிரார்த்திப்ப, நீங்கள்விரும்பியபடியே வரந்தந்தே னென்று அப்பொழுது ஒருகுரல் உண்டாயிற்று. அதனைக்கேட்ட செங்குட்டுவனும் மற்றையரசர்களும் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். பின்பு செங்குட்டுவன் மாடலனோடு யாகசாலைக்குச் சென்றான்: அப்பால், இளங்கோவடிகள் பத்தினிக்கடவுள்கோயிலுக்குச் சென்றார்; அவருக்குமுன்பு பத்தினிக்கடவுள் தேவந்திமேல்தோன்றி அவருடைய வரலாறுகளைச் சொல்லி உவப்பித்தாள்.

கோவலன்வெட்டுண்டுவிழுந்தகாலந்தொடங்கிப் பாண்டியநாட்டில் மழை இல்லாதுபோயிற்று; வறுமையும் நோயும் அதிகரித்தன; அதுதெரிந்து கொற்கைகாத்திருந்த அரசனாகிய இளஞ்செழியன் பத்தினிக்கடவுளுக்கு ஆயிரம்பொற்கொல்லரைப்பலியிட்டுக் களவேள்வியாற்சாந்திசெய்து விழாவெடுத்தலால், அந்நாட்டில் மிகவும் மழைபெய்தது; முற்கூறிய வறுமையும் நோயும் நீங்கின. அதனைக்கேள்வியுற்றுக் கொங்குமண்டிலத்தரசரும், இலங்காபுரத்தரசனாகிய கயவாகுவும், சோழநாட்டில் உறையூரிலிருந்த அரசனாகிய பெருநற்கிள்ளியும் கண்ணகிக்குக் கோயில்கட்டுவித்து நித்தியபூசை விழா முதலியவற்றைச்செய்து வழிபட அவர்நாடுகள் மிகுந்த வளமுற்றன.

நூற்சிறப்புப்பாயிரம்.

நீடருங் குன்ற நிழல்காலு மண்டிலத்துக்
கோடுகோ டாய்த்தோன்றுங் கொள்கைத்தே - கூடலார்
கொண்டாடுஞ் செஞ்சொற் குடக்கோ முனிசேரன்
தண்டா வுரைமுத் தமிழ்.

நலத்தரு நால்வரின் றோதிய நான்முகத் தோன்படைத்த
குலத்ததி கார வணிகர் குலபதி கோப்பதி
........................பூம்புகார் போறவின்ற
சிலப்பதி காரஞ்செய் தானெடுஞ் சேரர் சிகாமணியே.

இவ்விரண்டும் பழையசெய்யுட்களே. இவற்றுள் இரண்டாஞ்செய்யுளுடைய இரண்டாமடியின் இறுதிப்பாகமும் மூன்றாமடியின் முதற்பாகமும் ஒருபிரதியிலுங் காணப்படவில்லை.

சிலப்பதிகாரம்.

இரண்டாவது

மதுரைக்காண்டம்.

முதலாவது

காடுகாண்காதை.

திங்கண்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்ச்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து
கோதைதாழ் பிண்டிக் கொழுநிழ லிருந்த
வாதியி றோற்றத் தறிவனை வணங்கிக்
கந்தன் பள்ளிக் கடவுளர்க் கெல்லா
மந்தி லரங்கத் தகன்பொழி லகவயிற்
சாரணர் கூறிய தகைசா னன்மொழி
மாதவத் தாட்டியு மாண்புற மொழிந்தாங்
கன்றவ ருறைவிடத் தல்கின ரடங்கித்
தென்றிசை மருங்கிற் செலவுவிருப் புற்று
வைகறை யாமத்து வாரணங் கழிந்து
வெய்யவன் குணதிசை விளங்கித் தோன்ற
வளநீர்ப் பண்ணையும் வாவியும் பொலிந்த
விளமரக் கானத் திருக்கை புக்குழி
வாழ்க வெங்கோ மன்னவர் பெருந்தகை
யூழிதொ றூழிதொ றுலகங் காக்க
வடியிற் றன்னள *வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி
திங்கட் செல்வன் றிருக்குலம் விளங்கச்
செங்கணா யிரத்தோன் றிறல்விளங் காரம்
பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி
முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென்

---

* அரசர்க்குணர்த்தியவென்றும் பாடம்.

நீடியுடைப் பெருமழை * யெய்தா தேகப்
பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன் வாழ்கெனத்
தீதுதீர் சிறப்பிற் றென்னனை வாழ்த்தி
மாமுது மறையோன் வந்திருந் தோனை
யாது நும்மூ ரீங்கென் வரவெனக்
கோவலன் கேட்பக் குன்றாச் சிறப்பின்
மாமறை யாளன் வருபொரு ளுரைப்போ
னீல மேக நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
வாயிரம் விரித்தெழு தலையுடை யருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்
வீங்குநீ ரருவி வேங்கட மென்னு
மோங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
யிருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
† மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமுந்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ரார மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமு
மென்கண் காட்டென் றென்னுளங் கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்
றென்னவ னாட்டுச் சிறப்புஞ் செய்கையுங்
கண்மணி குளிர்ப்பக் கண்டே னாதலின்
வாழ்த்திவந் திருந்தே னிதுவென் வரவெனத்
தீத்திறம் புரிந்தோன் செப்பக் கேட்டு
மாமறை முதல்வ மதுரைச் செந்நெறி
கூறு நீயெனக் கோவலற் குரைக்குங்
கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்திய லிழந்த வியனிலம் போல
வேனிற் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
றானலந் ‡ திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து

* பெய்யாதேகவென்றும் பாடம். † இதற்குப் பொருள்செய்தலைக் கொண்டு மின்னுக்கோடி யெனவும் படித்தற்கிடமுண்டு. ‡ திருகெனவும் பாடம்.

நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளுங்
காலை யெய்தினிர் காரிகை தன்னுட
னறையும் பொறையு மாரிடை மயக்கமு
நிறைநீர் வேலியு முறைபடக் கிடந்தவிந்
நெடும்பே ரத்த நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்காற்
பிறைமுடிக் கண்ணிப் பெரியோ னேந்திய
வறைவாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும்
வலம்படக் கிடந்த வழிநீர் துணியி
னலர்தலை மராமு * மூலறுதலை யோமையும்
பொரியரை யுழிஞ்சிலும் புன்முளி மூங்கிலும்
வரிமரற் றிரங்கிய கரிபுறக் கிடக்கையு
நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்குங்
கானமு மெயினர் கடமுங் கடந்தா
லைவன வெண்ணெலு மறைக்கட் கரும்புங்
கொய்பூந் தினையுங் கொழும்புன வரகுங்
காயமு மஞ்சளு மாய்கொடிக் கவலையும்
வாழையுங் கமுகுந் தாழ்குலைத் தெங்கு
மாவும் பலாவுஞ் சூழடுத் தோங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்று
மம்மலை வலங்கொண் டகன்பதிச் செல்லுமி
னவ்வழிப் படரீ ராயி னிடத்துச்
செவ்வழிப் பண்ணிற் சிறைவண் டரற்றுந்
தடந்தாழ் வயலொடு தண்பூங் காவொடு
கடம்பல கிடந்த காடுடன் கழிந்து
திருமால் குன்றத்துச் செல்குவி ராயிற்
பெருமால் கெடுக்கும் பிலமுண் டாங்கு
விண்ணோ ரேத்தும் வியத்தகு மரபிற்
புண்ணிய சரவணம் பவகா ரணியோ
டிட்ட சித்தி யெனும்பெயர் போகி
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுள வாங்குப்
புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்
பவகா ரணிபடிந் தாடுவி ராயிற்
பவகா ரணத்திற் பழம்பிறப் பெய்துவி
ரிட்ட சித்தி யெய்துவி ராயி
னிட்ட சித்தி யெய்துவிர் நீரே
யாங்குப் பிலம்புக வேண்டுதி ராயி

---

* அலறுதலையெனவும் பாடம்.

றோங்குயர் மலையத் துயர்ந்தோற் றொழுது
சிந்தையி லவன்றன் சேவடி வைத்து
வந்தனை மும்முறை மலைவலஞ் செய்தா
னிலம்பக வீழ்ந்த சிலம்பாற் றகன்றலைப்
பொலங்கொடி மின்னிற் புயலைங் கூந்தற்
கடிமல ரவிழ்ந்த கன்னிகா ரத்துத்
தொடிவளைத் தோளி யொருத்தி தோன்றி
யிம்மைக் கின்பமு மறுமைக் கின்பமு
மிம்மையு மறுமையு மிரண்டு மின்றியோர்
செம்மையி னிற்பதுஞ் செப்புமி னீயிரிவ்
* வரைத்தாள் வாழ்வேன் வரோத்தமை யென்பே
னுரைத்தார்க் குரியே னுரைத்தி ராயிற்
றிருத்தக் கீர்க்குத் திறந்தேன் கதவெனுங்
கதவந் திறந்தவள் காட்டிய நன்னெறிப்
புதவம் பலவுள போகிடை கழியன
வொட்டுப் புதவமொன் றுண்டத னும்பர்
வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி
யிறுதியி லின்ப மெனக்கீங் குரைத்தாற்
பெறுதிர் போலுநீர் பேணிய பொருளெனு
முரையி ராயினு முறுகண் செய்யே
னெடுவழிப் புறத்து நீக்குவ னும்மெனு
முரைத்தா ளுளரெனி னுரைத்த மூன்றின்
கரைப்படுத் தாங்குக் காட்டினள் பெயரு
மருமறை மருங்கி னைந்தினு மெட்டினும்
வருமுறை யெழுத்தின் மந்திர மிரண்டு
மொருமுறை யாக வுளங்கொண் டோதி
வேண்டிய தொன்றின் விரும்பினி ராடிற்
காண்டகு மரபின வல்ல மற்றவை
மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்றா மரைத்தா ளுள்ளம் பொருந்துமி
னுள்ளம் பொருந்துவி ராயின் மற்றவன்
புள்ளணி நீள்கொடி புணர்நிலை தோன்றுந்
தோன்றிய பின்னவன் றுணைமலர்த் தாளிணை
யென்றுதுயர் கெடுக்கு மின்ப மெய்தி
மாண்புடை மரபின் மதுரைக் கேகுமின்
காண்டகு பிலத்தின் காட்சி யீதாங்
கந்நெறிப் படரீ ராயி னிடையது
செந்நெறி யாகுந் தேம்பொழி லுடுத்த
வூரிடை யிட்ட காடுபல கடந்தா
லாரிடை யுண்டோ ராரஞர்த் தெய்வ

---

* வரைத்தாழ்வனவும்பாடம்.

நடுக்கஞ் * சாலா நயத்திற் றோன்றி
யிடுக்கண் செய்யா தியங்குநர்த் தாங்கு
மடுத்துடன் கிடக்கு மதுரைப் பெருவழி
நீணிலங் கடந்த நெடுமுடி யண்ண
றாடொழு தகையேன் போகுவல் யானென
மாமறை யோன்வாய் வழித்திறங் கேட்ட
காவுந்தி யையையோர் கட்டுரை சொல்லு
நலம்புரி கொள்கை நான்மறை யாள
பிலம்புக வேண்டும் பெற்றியீங் கில்லை
கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கை விளங்கக் காணா
யிறந்த பிறப்பி னெய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணா யோநீ
வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ வெய்தா வரும்பொருள்
காமுறு தெய்வங் கண்டடி பணிய
நீபோ யாங்களு நீணெறிப் படர்குது
மென்றம் மறையோற் கிசைமொழி யுணர்த்திக்
குன்றாக் கொள்கைக் கோவலன் றன்னுட
னன்றைப் பகலோ ரரும்பதித் தங்கிப்
பின்றையு மவ்வழிப் பெயர்ந்துசெல் வழிநாட்
கருந்தடங் கண்ணியுங் கவுந்தி யடிகளும்
வருந்துசெல் வருத்தத்து வழிமருங் கிருப்ப
விடைநெறிக் கிடந்த வியவுக்கொண் மருங்கிற்
புடைநெறிப் போயோர் † பொய்கையிற் சென்று
நீர்நசை வேட்கையி னெடுந்துறை நிற்பக்
கானுறை தெய்வங் காதலிற் சென்று
நயந்த காதலி னல்குவ னிவனென
வயந்த மாலை வடிவிற் றோன்றிக்
கொடிநடுக் குற்றது போல வாங்கவ
னடிமுதல் வீழ்ந்தாங் கருங்கணீ ருகுத்து
வாச மாலையி னெழுதிய மாற்றந்
தீதிலேன் பிழைமொழி செப்பினை யாதலிற்
கோவலன் செய்தான் கொடுமையென் றென்முன்
மாதவி மயங்கி வான்றுய ருற்று
மேலோ ராயினு நூலோ ராயினும்
பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட் டொழியுங்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்மெனச்
செவ்வரி பொழுகிய செழுங்கடை மழைக்கண்

* சாராவெனவும்பாடம். † பொய்கையிற்பொருந்தியென்றும்பாடம்.

வெண்முத் துதிர்த்து வெண்ணிலாத் திகழுந்
தண்முத் தொருகாழ் தன்கையாம் பரிந்து
துணியுற் றென்னையுந் துறந்தன னாதலின்
மதுரை மூதூர் மாநகர்ப் போந்த
தெதிர்வழிப் பட்டோ னெனக்காங் குரைப்பச்
சாத்தொடு போந்து தனித்துய ருழந்தேன்
பாத்தரும் பண்பநின் பணிமொழி யாதென
மயக்குந் தெய்வமிவ் வன்காட் டுண்டென
வியத்தகு மறையோன் விளம்பின னாதலின்
வஞ்சம் பெயர்க்கு மந்திரத் தாலிவ்
வைஞ்சி லோதியை யறிகுவன் யானெனக்
கோவல னாவிற் கூறிய மந்திரம்
பாய்கலைப் பாவை மந்திர மாதலின்
வனசா ரிணியான் மயக்கஞ் செய்தேன்
புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கு
மென்றிற முரையா தேகென் றேகத்
தாமரைப் பாசடைத் தண்ணீர் கொணர்ந்தாங்
கயர்வுறு மடந்தை யருந்துயர் தீர்த்து
மீதுசெல் வெங்கதிர் வெம்மையிற் றொடங்கத்
திதியல் கானஞ் செலவரி தென்று
கோவலன் றன்னொடுங் கொடுங்குழை மாதொடு
மாதவத் தாட்டியு மயங்கத ரழுவத்துக்
குரவமு மரவமுங் கோங்கமும் வேங்கையும்
விரவிய பூம்பொழில் விளங்கிய விருக்கை
யாரிடை யத்தத் தியங்குந ரல்லது
மாரி வளம்பெறா வில்லே ருழவர்
கூற்றுறழ் * முன்பொடு கொடுவில் லேந்தி
வேற்றுப்புலம் போகிநல் வெற்றங் கொடுத்துக்
கழிபே ராண்மைக் கடன்பார்த் திருக்கும்
விழிநுதற் குமரி விண்ணோர் பாவை
மையறு சிறப்பின் வானநாடி
ஐயைதன் கோட்ட மடைந்தன ராங்கென.

---

* மொய்ம்பொடென்றும்பாடம்.

சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரமென்பது, சிலம்பினது அதிகரித்தலை யுடையது என வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையாய் நூலுக்குக்காரணப்பெயராயிற்று. அதிகாரம் - அதிகரித்தல். இராசநீதியில் தவறின அரசனை அறக்கடவுள் கூற்றாய்நின்று கொல்லு மென்பதும், பத்தினியை மக்களேயன்றித் 'தேவரும் முனிவரும் ஏத்துதல் இயல் பென்பதும், முன்செய்த இருவினையும் செய்தமுறையே செய்தோனை நாடிவந்து பயனூட்டுமென்பதும் ஆகிய இம்மூன்றும் சிலம்புகாரணமாகத்தோன்றலின், நூலாசிரியராகிய இளங்கோவடிகள் இந்நூற்குச்சிலப்பதிகாரமென்று பெயரிட்டனர்; இதனை (பதிகம், அடி - ௫௫ - ௬௰) "அரசியல் பிழைத்தோர்க் கறங் கூற் றாவது, முரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு, மூழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉஞ், சூழ்வினைச் சிலம்பு காரண மாகச், சிலப்பதிகார மென்னும் பெயரா, னாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என்பதனா லுணர்க. சிலம்புகாரணமாக இம்மூன்றுந் தோன்றுதல் கதைச்சுருக்கத்தால் உணரப்படும்.

மதுரைக்காண்டம்.

மதுரைக்காண்டமென்பதற்கு-மதுரையில்நடந்தசரித்திரத்தின்கூட்டத்தையுடையதுஎன்பதுபொருள். மதுரை-பாண்டியநாட்டு இராஜதானியாகியதொருநகரம்;மதுராஎன்னும்வடமொழி திரிந்தது.குலசேகரனென்னும் பாண்டியன் காடுகெடுத்துநகராக்கி அந்நகரத்திற்குச்சாந்திசெய்யக்கருதியபொழுது சோமசுந்தரக்கடவுள் திருவுளத்தறிந்து தமதுதிருச்சடையிலணிந்தசந்திரனிடத்தினின்றும் அமிருதத்தைஉகுக்க அவ்வமுதஞ்சென்று அந்நகர்முழுவதும்பரவிச்சாந்திசெய்து மதுரமயமாக்கியதனால் மதுரையெனப் பெயர்பெற்றதென்பர்; இதனை "மணிமலர்த் தாரோன் மாளிகை தனக்கம் மாநகர் வடகுண பாற்கண், டணிநகர் சாந்தி செய்வது குறித்தா னண்ணலா ரறிந்து செய்வார்," "பொன்மய மான சடைமதிக் கலையின் புத்தமு துகுத்தன ரதுபோய்ச், சின்மய மான தம்மடி யடைந்தார்ச் சிவமய மாக்கிய செயல்போற், றன்மய மாக்கி யந்நகர் முழுதுஞ் சாந்திசெய் ததுவது மதுர, நன்மய மான தன்மையான் மதுரா நகரென வுரைத்தனர் நாமம்" என்னுந் திருவிளையாடற்புராணத்துச்செய்யுட்களால் அறிக: இனி, மதுரமாய் [கண்ணுக்கு இனிமையாய்] இருத்தலால் மதுரையெனப்பட்டதென்றுங் கொள்ளலாம். [இது, தென்மதுரை; ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு இராஜதானியாயிருந்த வடமதுரையொன்று உண்டு: அது, மதுவென்னும் அசுரனாற் கைக்கொள்ளப்பட்டிருந்ததுபற்றி அப்பெயர்பெற்றது.] காண்டம் - கூட்டம்.

காடுகாண்காதை.

காடுகாண்காதையென்பது, (கண்ணகியும் கோவலனும்) பாலைநிலமாகிய காட்டைக் கண்ட காதை என விரியும். காதை - கதையையுடையது. இவர்கள் இங்ஙனம் காட்டைக் கண்டது, சிலம்பைவிற்று வியாபாரஞ் செய்து பொருள்தேடும்பொருட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் மதுரைக்குப் புறப்பட்டுப்போகும்பொழுது இடைவழியிலென அறிக.

அடியார்க்குநல்லாருரைப்பாயிரம்.

இவ்வியலிசைநாடகப்பொருட்டொடர்நிலைச்செய்யுளை அடிகள் செய்கின்றகாலத்து இயற்றமிழ்நூல் தொல்காப்பியமாதலானும், பிறர்கூறிய நூல்கள் நிரம்பாவிலக்கணத்தனவாதலானும், அந்நூலின்முடிபே இதற்கு முடிபு என்று உணர்க.

அந்நூலிற் செய்யுளியலின்கண்ணே ஆசிரியர் பாவும் இனமு மென நான்கி னிக்கி அப்பாவினைத் தொகைவரையறையான் இரண்டென அடக்கியும், விரிவரையறையான் ஆறெனவிரித்தும், அவற்றை அறம்பொருளின்பத் தாற்கூறுக வென்றுங் கூறிப் பின்பு அம்மைமுதலிய எட்டுவனப்புந் தொடர்நிலைச்செய்யுட்கு இலக்கணமென்று கூறியவர், "இழுமென் மொழியான் விழுமியது நுவலினும், பரந்தமொழியா னடிநிமிர்ந் தொழுகினும்" என்பதனுள் குவிந்தமெல்லென்றசொல்லானும் பரந்தவல்லென்றசொல்லானும் அறம்பொருளின்பம்பயப்ப வீடென்னும்விழுமியபொருள்பயப்ப ஓர்கதைமேற் கொச்சகத்தானும் ஆசிரியத்தானும் வெண்பாவெண்கலிப்பாவானும் மற்றும்இன்னோரன்னசெய்யுட்களானுங் கூறுக வென்றமையான், இத்தொடர்நிலைச்செய்யுள் அங்ஙனங்கூறிய தொடர்நிலை யென உணர்க.

* முந்துநூல்களிற் காப்பியமென்னும்வடமொழிப்பெயர் இன்றேனும், ஆசிரியர் "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ, யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" என்றார், 'ஆகும்மே' என்ற இலேசினுல் உய்த்துணரற் பாலதனை மாணாக்கன் ஐயந்தீர்கற்கன்றே பின்னும் "சிதைந்தன வரினு மியைந்தன வரையார்" என்றாரெனக் கொள்க; அன்றியும், பெரியதனைப் பெருங்காப்பியமென்றே கூறி மறுக்கவேண்டுதலானும், சான்றோர்செய்யுட்களினும் "கூத்திய ரிருக்கையுஞ் சுற்றிய தாகக், காப்பிய வாசனைக் கலந்த வைசொல்லி" என (இரண்டாம்ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம்புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற்பாண்டியனவைக்களத்து அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க்கருங்கோழிமோசியாரும், வெள்ளூர்க்காப்பியனாரும், சிறுபாண்டரங்கனாரும், மதுரையாசிரியன்மாறனாரும், துவரைக்கோமானும், கீரந்தையாரும் என்று இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மருள்ளிட்ட மூவாயிரத்தெழுநூற்றுவர் தம்மாற் பாடப்பட்ட கலியும், குருகும், வெண்டாளியும் முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த) உதயணன்கதையுள்ளும், "கருதவ தங்கொன் றன்றோ காப்பியக் கவிகள் காம, வெரியெழ வகுப்பித் திட்டார்" எனச் சிந்தாமணியுள்ளும், "நாடகக் காப்பிய நன்னூ னுனிப்போர்" என மணிமேகலையுள்ளும், பிறவற்றுள்ளுங் கூறினமையானும், சொற்றொடர்நிலை பொருட்டொடர்நிலையென்னுந் தொடர்நிலைச்செய்

---

* 'இச்செய்யுள் அங்ஙனங்கூறிய தோலாம் என்று உணர்க' என்பதும், 'முந்துநூல்களிற் காப்பியமென்னும் வடமொழியால் தொடர்நிலைச் செய்யுட்குப் பெயரின்மையும், இதற்குப்பின்புகூறிய நூல்கள் இதற்கு விதியன்மையும் உணர்க' என்பதும் ஆசிரியர்நச்சினார்க்கினியர்மதம்; இதனைச் சீவகசிந்தாமணியுரைப்பாயிரத்திற் காண்க: இங்ஙனம் நச்சினார்க்கினியர்கொள்கையை அடியார்க்குநல்லார் பூர்வபக்ஷமாக வைத்திருப்பது கொண்டு அடியார்க்குநல்லாருடையகாலம் நச்சினார்க்கினியர்காலத்துக்குப் பிந்தியதென்று ஊகிப்பாருமுளர்.

யுட்குங் காப்பியமென்றுபெயர்கூறுதலும் ஆசிரியர்கருத்தென உணர்க. இதனுள் முற்கூறிய வனப்பென்பது பெரும்பான்மையும் பலஉறுப்புந்திரண்டவழிப்பெறுவதோர் அழகாதலிற் பலசெய்யுளும்உறுப்பாய்த்திரண்டு பெருகியதொடர்நிலைச்செய்யுட்கு இவ்வெட்டும் அலங்காரமாயின; ஆகவே, இக்காப்பியத்திறனுந் தோலென்பது ஓர்சொல்லலங்காரமாகவே உணர்க. இனி, இதன்செய்யுள் காதையென்றுவழங்குதலின் கதையையுடையது காதையாமாகலின், ஆசிரியம்வெண்பாவெண்கலிப்பா என்னும் இவற்றோடு சிறுபான்மையான் ஒருசார் கொச்சகக்கலிமயங்கிவருதலானும் கண்டமெனக்குறிபெறுதலானும் இதனைக்கதையென்றல்வலியுடைத்தென்பார்க்கு அற்றன்று;கதையென்பது,பொய்ப்பொருள்புணர்த்துக்கூறுவது:என்னை? "கதையெனக் கருதல் செய்யான் மெய்யெனத் தானுங் கொண்டான்" என்றமையானும், வழக்கினுள்ளும் 'இஃது ஒருகதை' என்பவாகலானும். 'நாடகக்காப்பியம்' என்றலானும், கதையென்பதல்லது. இனி, அது நல்லபுலவராற் பொருளொடுபுணராப்பொய்ம்மொழியால் நாட்டப்பட்டுவருவதாகலின் இஃது அவ்வாறன்றி யோனியென்னும்நாடகவுறுப்பும் நாடகமுந்தழுவி உள்ளோன்தலைவனாக உள்ளதோர்பொருள்மேற் சித்திரிக்கப்படாது பட்டாங்குகிளந்து பலவினப்பாட்டான்வருதலின் ஈது அன்னதன்றென்பார்க்குக் காப்பியமென்றலுமாம். [காப்பியம் - காவ்யம்; வடசொற்றிரிபு.]

இனி, இசைத்தமிழ்நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவுந் தேவவிருடிநாரதன்செய்த பஞ்சபாரதீயம் முதலாயுள்ள தொன்னூல்களும் இறந்தன. நாடகத்தமிழ்நூலாகிய பரதம் அகத்தியம் முதலாயுள்ள தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒருசார்சூத்திரங்கள் நடக்கின்றவத்துணையல்லது முதல்நடுஇறுதிகாணாமையின் அவையும் இறந்தனபோலும். இறக்கவேவரும், பெருங்கலம் முதலிய பிறவுமாம். இவற்றுட் பெருங்கலமாவது, பேரியாழ்; அது-கோட்டினதுஅளவு பன்னிருசாணும் வணரளவு சாணும் பத்தரளவு பன்னிருசாணும் இப்பெற்றிக்கேற்றஆணிகளும் திவவும் உந்தியும் பெற்று ஆயிரங்கோல்தொடுத்து இயல்வது; என்னை? "ஆயிர நரம்பிற் றாதியா ழாகு, மேனை யுறுப்பு மொப்பன கொளலே, பத்தர தளவுங் கோட்டின தளவு, மொத்த வென்ப விருமுன் றிரட்டி,வணர்சா ணொழித்தென வைத்தனர் புலவர்" என நூலுள்ளும், "தலமுத லூழியிற் றானவர் தருக்கறப், புலமக ளாளர் புரிநரப் பாயிரம், வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச், செலவுமுறை யெல்லாஞ் செல்லுகையிற் றெரிந்து,மற்றை யாழுங் கற்றுமுறை பிழையான்" எனக் கதையினுள்ளுங் கூறினாராகலாற் பேரியாழ் முதலியனவும் இறந்தனவெனக் கொள்க.

இனி,தேவவிருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிருவருட் சிகண்டியென்னும் அருந்தவமுனி இடைச்சங்கத்து அனாகுலனென்னுந்தெய்வப்பாண்டியன் தேரொடுவிசும்புசெல்வோன் திலோத்தமையென்னுந்தெய்வமகளைக் கண்டு தேரிற்கூடினவிடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் 'சரியாநிற்கத்தோன்றினமையின் சாரகுமாரன்' என அப்பெயர் பெற்றகுமாரன் இசையறிதற்குச் செய்த இசைநுணுக்கமும்,பாரசைவமுனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும், அறிவனார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பரதசேனாபதீயமும், கடைச்சங்கமிரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த முதநூல்களிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத் தியன்ற மதிவாணர் நாடகத்தமிழ் நூலும் எனஐந்தும் இந்நாடகக்காப்பியக்கருத்தறிந்தநூல்க

என்றேனும் ஒருபுடையொப்புமைகொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக் கொள்க.

உலகத்துக் காப்பியஞ்செய்வோன் அறனும் பொருளும் இன்பமும் வீடுங் கூறல் வேண்டுமன்றே; இந்நாடகக்காப்பியத்தினுள் அறனும் பொருளும் இன்பமுஞ் சிறிதாயினுங்கூறி வீடுகூறிற்றிலர்: என்னையெனின், "யானறிகுவனது பட்ட தென்று" உரைத்த சாத்தனார் நாற்பொருளும்பயப்பப் பெருங்காப்பியமாகச்செய்யக் கருதியிருக்கின்றார்க்கு, அடிகள்"நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"என உளப்பாட்டுத்தன்மையாற் கூற,சாத்தனார் இவர்மூவேந்தரையும்புகழ்தலுடையார்என்பதுகருதி,'மூவேந்தர்க்கும் உரியதாகலின்,நீரே அருளுக' என்று ஏகாரவினாப்பொருண்மையான் அவர்கருத்துநிகழ்ச்சிவிளக்குவான் கூற, அவர் அதனையேதுணிந்து, தமது முத்தமிழ்க்கல்வியும் வித்தகக்கவியுங் காட்டுதற்கு, தாம்வகுத்துக்கொண்ட மூவகையுள்ளுறையின் வினைவு தோன்ற, மங்கலவாழ்த்துப்பாடல் முதல் வரந்தருகாதை இறுதி முப்பதுவகைத்தாக வரையறுத்து அதனை அதிகாரமாகப் பொதிந்து முன்வைத்து, பின்னர், அறனும் பொருளும் இன்பமுங் கூறி அடைக்கலக்காதையிறுதிக்கண்"போதி யறவோன் றனமுன், மணிமே கலையை மாதவி யளிப்பவும்" எனக் கோவலன் முன்கண்டகனவின்கண்நிகழ்ந்ததை எதிர்காலநிமித்தமாக மாடலற்குக் கூறுதலானும், நீர்ப்படையுள்"மாதவி * * * மணிமே கலையை வான்றுய ருறுக்குங், கணிகையர் கோலங் காணு தொழிகெனக், கோதைத் தாமங் குழலொடு களைந்து, போதித் தானம் புரிந்தறங் கொள்ளவும்"என்றலானும், வாழ்த்தின்கண் "மாதவி தன்றுறவுங் கேட்டாயோ தோழி, மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழி"எனத்தேவந்தி கூறுதலானும், வரந்தருகாதையில் "மணிமே கலைபார், யாதவ றுறத்தற் கேது விங்குரை" என"மையீரோதி" முதல் "போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்' என்பதிறுகப் பக்குவஞ் சொல்லி"பருவ மன்றியும் பைந்தொடி நங்கை,திருவிழை கோல நீக்கினள்" என்றமையானும் மணிமேகலைதுறந்தாளென்பது உணர்ந்து அத்துறவினைப் பின்வைத்து அதனோடு நாற்பொருளும்புரிந்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக் கருதி, அடிகள் சாத்தனார்க்கு இவ்வுரையை உரைத்துழி அவர்'மணிமேகலைபெயரான் அவள்துறவேதுறவாக அறனும்வீடும்பயப்ப ஓர்காப்பியஞ் செய்தமைத்தனன்' எனக் கேட்டு அவ்வடிகள் விரும்பி இவ்விரண்டினையும் ஒருகாப்பியமாக்கி உலகின்கண் நடாத்துவான் வேண்டவும், இருவர்செய்தலின் இரண்டாக நடந்தன வென்க.

அவையடக்கம்.

எழுந்தின் றிறனறிந்தோ ரின்சொற் பொருளின்
அழுந்துந் தனிலோன் றறிந்தோ—முழுந்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் றுறையின்
றொழுதுந் துணிவதே யான்.

க - ச. திங்கண்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்ச்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து
கோதைதாழ் பிண்டிக் கொழுநிழ லிருந்த
வாதியி றோற்றத் தறிவனை வணங்கி

(இ - ள்.) கோதைகள் தாழ்ந்த பிண்டியினது வளவிய நிழற்கண்ணே மூன்றுதிங்களையடுக்கினாற்போலும் திருமுக்குடையினதுகீழ் இளஞாயிற்றினது ஒளியினும் ஒளிசிறப்ப விருந்த அறிவனை வணங்கி யென்க.

திங்கண்முதலிய * மூன்றெனினுமாம். முக்குடையாவன : சந்திராதித்தியம், நித்தியவினோதம், சகலபாசன மென்பன. இன்னுருபு தொக்கு, அது-பொருவாம் பொருண்மை தந்தது. திகழ்தல் - விளங்குதல். சிறந்து-சிறப்ப. கோதைதாழ் பிண்டியென்றார், அவன்பிண்டி கடவுட்டன்மையான் எஞ்ஞான்றும் † மாலையாகப் பூக்குமாதலின். ஆதியி றோற்றத் தறிவ னென்பது-ஆதியின்மையைத் தோற்றமாகவுடையனென்பதாம்; எனவே, இனஞ்செப்பி, அந்தமின்மையை முடிவாகவுடையனென்பதூஉமாம்; ஆகவே, ஆதியும் அந்தமும் இல்லாதவ னென்றவாறும் ; எனவே, தனக்குப் பிறிதொருவர்முதலாதலில்லாதவ னென்பதாம். இன்னும், இதற்கு-யாவர்க்கும் தானேமுதலாயவனென்றுரைப்பினுமமையும். ஆதியிற்றோற்றம் பாடமாயின், ஆதிக்காலத்தினும் முற்றோன்றியவனென்க. என்றகருத்து-காலத்தின் முற்றோன்றும்பொருள்கள் யாவுமின்மையின், அதனினும் முற்றோன்றியவனென்பதாம். அறிவன் - உறையூரிலருகன். வணங்கி - முதலுட் புரிந்து புக்கவர் வணங்கி யென்க.

(அரும்பதவுரை.) திங்கள்மூன்றுஅடுக்கிய - மூன்றுதிங்களைஅடுக்கினாலொத்த. ஞாயிற்றைப்போலஒளிசிறந்தஅறிவன்; சிறந்தகோதையெனக் கூட்டினுமாம். அறிவன்என்பது, உறையூர்ஸ்ரீகோயில்நாயனாரை.

(குறிப்பு.) பிண்டிநிழலிலே முக்குடைக்கீழே ஒளிசிறந்து இருந்த ஆதியில்தோற்றத்து அறிவனை வணங்கி என்றுஅநுவயம். வணங்கிஎன்னும் வினைக்குக்கருத்தா,கோவலனுங்கண்ணகியும் கவுந்தியுமெனவருவிக்க. கோதைகள்தாழ்ந்தபிண்டியினது வளவியநிழற்கண்ணே - மாலையாகப்பூத்தமலர்கள்தொங்கப்பெற்ற அசோகமரத்தினது செழிப்பானநிழலிலே. மூன்றுதிங்களையடுக்கினாற்போலும் திருமுக்குடையினதுகீழ் - மூன்றுபூர்ணசந்திரமண்டலம் உலகத்திலிருந்து அவற்றைவரிசைப்படநிறுத்திவைத்தாற்போன்ற அழகியசிறந்தமூன்றுகுடைகளின்கீழ். திங்கள்மூன்றடுக்கிய - இல்பொருளுவமை. அருகக்கடவுளுக்குக்குடைமூன்றுதலையும் அவைசந்திரமண்டலம்போலுதலையும், "முச்சகநிழற்றுமுழுமதிமுக்குடை, யச்சுதனடிதொழுதறைகுவன்சொல்லே" என்னும் நன்னூற்சொல்லதிகாரக்காப்புச்சூத்திரத்தாலு மறிக. குடைக்குச்சந்திரனுவமை, வட்டவடிவு, குளிர்ச்சி, வெள்ளொளிகளுக் கென்க. இரண்டாமுரையில் திங்கள்மூன் றென்பது முச்சுடரை; அவைஒளிக்குமாத்திரம்உவமை. அவ்வுரைக்கு, முதலியவென்பதுவருவித்தல்வேண்டும். செங்கதிர்ஞாயிற்றுத்திகழொளிசிறந்த - சிவந்த கிரணங்களையுடையஇளஞ்சூரியனது ஒளியினும் விளங்குகின்றதனதுஒளி

---

* மூன்றுவன : சந்திரன், சூரியன், அக்கினி.

† அசோகு மாலையாகப் பூக்குமென்பதை, "மூழாத்திரள் மொய்ம்மலர்த் தாமந் தாழ்ந்துமேல், வழாத்திரு மலரெலா மலர்ந்து வண்டினங், குழாத்தொடு மிறைகொளக் குனிந்து கூங்குயில், விழாக்கொள விரிந்தது வீரன் பிண்டியே" என்னும் சீவகசிந்தாமணிச் செய்யுளா லுணர்க ; முத்தியிலம்பகம், சகச.

சிறப்புற்றமிர்க. ஞாயிற்றுக்குச்செங்கதிரென்பது இயற்கையடைமொழி; இனம்விலக்கவந்ததன்று. உதயகாலத்துச்சூரியன் மிகச்சிவந்ததாகக் காணப்படுதலின், செங்கதிர்ஞாயிறென்றது பாலசூரியனைக்குறித்தது. அருகக்கடவுளுக்கு இளஞ்சூரியனை உவமைகூறுதலை "வெம்புஞ்சுடரிற்சுடருந்திருமூர்த்தி" எனச்சீவகசிந்தாமணியிலுங்காண்க. ஞாயிறு - நாயிறு, முதற்போலி. இதில்தொக்குநின்றது ஐந்தாம்வேற்றுமையுருபு, உபமானஉபமேயம்பற்றிய எல்லைப்பொருளாதாதலின்உறழ்பொருவு எனப்படும்; சூரியனொளியைக்காட்டிலும் என்றுபொருள். ஞாயிறு - அதனொளிக்கு, விடாதஆகுபெயர். சிறந்து-எச்சத்திரிபு. இவ்வினையெச்சத்தைத்திரித்தது, அறுதியானஅக்கடவுள் நித்தியனாதலால்என்றும்ஒருபடிப்படவிளங்குந் தன்மையையுணர்த்துதற்கு. அரும்பதவுரையாசிரியர்க்கு, ஞாயிற்றின் என்ற ஐந்தாமுருபு உவமப்பொருவு. அவ்வுரைகாரர்க்குச் சிறந்தவென்றேபாடம். பூக்கள்நிறைந்தஅசோகமரத்தின் அழகியநிழல் அருகதேவன்எழுந்தருளியிருத்தற்கிடமாதலை "பூமலியசோகின்புனைநிழலமர்ந்த, நான்முகன்" என்னும்நன்னூலாலுமறிக. புரிந்துபுக்கவர்எனஉரையிற்கூறினது கீழ்நாடுகாண்காதையில் "புறஞ்சிறைவாரணம்புக்கனர்புரிந்தென" என்றதில் உறையூரில்விருப்பத்தோடுசென்றுசேர்ந்தனரெனப்பட்ட கவுந்தியுந்தேவியுங்கணவனுமென்றவரை. அறிவன்-எல்லாப்பொருளையுமறியும் அறிவையுடையோன். இது அருகக்கடவுள்திருநாமங்களுள்ஒன்றாதலை "அறிவ னறவோன் அறிவுவரம்பிகந்தோன்" எனக்கீழ்நாடுகாண்காதையில் வந்ததுகொண்டும்அறிக. திகழொளியென்றும் விளங்கொளியென்றும்இக்கடவுளுக்குஅங்குப்பெயர்கூறப்பட்டிருப்பதையுமறிக. தோற்றம்-முதன்மை, பிறப்பு, தோன்றுதல்; தொழிற்பெயர். ஆதி-முதல். ஆதியில்தோற்றத்தறிவன் என்பதற்கு-ஆதிமத்யாந்தரகிதனாய் நித்தியனாயுள்ள ஞானியானகடவுளென்றுகருத்து. இவனை இவர்கள் வணங்கி என்ற இதனால், கவுந்திமுதலிய மூவரும் ஜைன மதஸ்தரென்பது தெளிவாக விளங்கும். இக்கடவுள் சுயம்புவாதலின் ஆதியில்தோற்றத்து என்றார். சுயம்பு - தானேதோன்றினவர். திகழொளி - அஞ்ஞானவிருள்நீங்க விளங்கும் ஒளி.

ரு - அ. கந்தன் பள்ளிக் கடவுளர்க் கெல்லா
மந்தி லரங்கத் தகன்பொழி லகவயிற்
சாரணர் கூறிய தகைசா லன்மொழி
மாதவத் தாட்டியு மாண்புற மொழிந்து

(இ - ள்.) முற்கூறிய நிக்கந்தனுடைய பள்ளியிடத்துள்ள * கடவுளர்க்கெல்லாம் ஆற்றிடைக்குறையாகிய அவ்விடத்து அகன்றபொழிலின்கட் சாரணர்கூறியமொழியைக் கவுந்தியடிகளும் இனிமையுறமொழிந்தென்க.

† நிக்கந்தனை. கந்தனென்றார். அந்தில் - அசையுமாம். அரங்கம் - முற்கூறிய ஆற்றிடையரங்கம்; திருவரங்கமுமாம். அகன்பொழில் - அம் மாம்பயிலெக்கம். சாரணர் - பெரும்பெயரையரிட்ட சிலாதலத்துத் தருமஞ்சாற்றுஞ் சாரணர்; அவர்கூறியமொழி - ‡ "ஒளியுறி னல்லது, போதார் பிறவிப் பொதியறையோர்" என்றமொழி; அதனைக் கவுந்தியடிகளும் மொழிந்தென்க.

---

* கடவுளர் - ஈண்டு முனிவர்; "தொன்முது கடவுட் பின்னர் மேய" என மதுரைக்காஞ்சியுள்ளும், "இப்பொழுது பொழுதென் றதவாய்ப்பக் கூறிய, வெங்கடவுள்" எனக்கலித்தொகையுள்ளுங்கூறினர்.

† நிக்கந்தன் - அருகன். ‡ நாடுகாண்காதை, கக0 - ககக.

(அரு-உரை.) கந்தன்பள்ளி-உறையூர் ஸ்ரீகந்தன்பள்ளி. அந்தில்-அசைநிலை. அரங்கம் - திருவரங்கம்; ஆற்றின்துறையென்பாருமுளர்.

(கு - பு.) உருவம், வேதனை, குறிப்பு, செய்கை, விஜ்ஞானம் என அருகசமயத்திற் கூறப்படுகிற பஞ்சஸ்கந்தங்களு மில்லாதவனாதலின், அருகக்கடவுளுக்கு நிஷ்கந்தனென்றுபெயர்; அது இங்கே முதற்குறைவிகாரமாய்க் கந்தனென நின்றது: தாமரையென்பது மரையென நிற்றல்போல; ஸ்கந்தம்-வேர், அல்லதுதொகுதி. பள்ளி- அருகன்கோயில். கடவுளரென்றுந்தேவர்களதுபெயர், இங்கே சிறப்புப்பற்றி முனிவரையுணர்த்திற்று. அந்திலரங்கத்து - அரங்கத்தந்திலெனமாறுக. அந்திலென்னுமிடைச்சொல், இடப்பொருளதாயும் அசைநிலையாயும் வருதலை "அந்திலாங்கவசைநிலைக்கிளவியென், றாயிரண்டாகுமியற்கைத்தென்ப" என்னுந்தொல்காப்பியத்தா லறிக: [நன்-இடை, ௧௮]. அரங்கம் - ரங்கம்; வடசொல்: ஆற்றிடைக்குறை; நதியினடுவிலேஉயர்ந்ததிடர்: உபயகாவேரிமத்தியாகிய ஸ்ரீரங்கமென்னும் ஊரென்றுங் கொள்ளலாம். அகல் + பொழில் = அகன்பொழில்; லகரம் னகரமாத் திரிந்தது. பொழில்அகவயின் - சோலையினிடத்திலே. வயின் - ஏழனுருபு. அம் மரம்பயிலடுக்கல் - மரங்கள்நிறைந்த அடர்ந்த அந்தச்சோலை. பெரும்பெயரையரிட்ட சிலாதலத்துத் தருமஞ்சாற்றுஞ் சாரணர்- உலகநோன்பிகளெனப்படுகிற இல்லறத்தாரெல்லாருங் கூடி ஆசனமாகச் சமர்ப்பித்த வட்டவடிவமான சந்திரகாந்தக் கல்லின்மேல் வந்து இருந்தருளித் தருமவொழுக்கத்தை யாவருங்கேட்கும்படி அருளிச்செய்யுந்தன்மையுடைய ஆகாயசாரிகள். தகைசால் நன்மொழி - பெருமைமிக்க நல்லஉபதேசவார்த்தை. "ஒளியுறின்" என்ற மேற்கோளுக்குப் பொருள்-ஆகமமாகிய விளக்கொளியைப் பெற்றாற் போர்தேறினல்லது யாவரும் பிறவியாகிய சிறையினின்றும் போகமாட்டாரென்பது. சாரணர் -சமணமுனிவர்; இவர்- தலசாரணர், சலசாரணர், பலசாரணர், புட்பசாரணர், தந்துசாரணர், சதுரங்குலசாரணர், சங்கசாரணர், ஆகாயசாரணர் என எண்வகையர்; ஜினாலயத்திலே அசோகமரத்தின்கீழிலே விசேஷகாலங்களில் அம்மதத்தாரால் இடப்பட்ட சிலாவட்டத்தின்மேல் இரண்டிரண்டுபேராகச் சென்று இருந்து தருமோபதேசஞ் செய்தல் இவர்கட்குஇயல்பென்பர்: இவர்கள் கீழ்க் கவுந்தியடிகள்முதலிய மூவர்க்கும் வழியிடையிலே காவேரிதீரத்திலே மிக்கஅருளால்வந்து தரிசனங்கொடுத்துத் தத்துவோபதேசங் கூறிப்போயினார்கள்; இதனைக் கீழ்நாடுகாண்காதையில் "புலவூண்டுறந்துபொய்யாவிரதத்து, அவலநீத்தறிந்தடங்கிய கொள்கை, மெய்வகையுணர்ந்தவிழுமியோர்குழீஇய, ஐவகைநின்றவருகத்தானத்துச், சந்திஐந்துந் தம்முடன்கூடி, வந்துதலைமயங்கியவான் பெருமன்றத்துப், பொலம்பூம்பிண்டிநலங்கிளர்கொழுநிழல், நீரணிவிழாவினும்நெடுந்தேர்விழவினும், சாரணர்வருஉந் தகுதியுண்டாமென, வுலகநோன்பிகளொருங்குடனிட்ட, இலகொளிச்சிலாதலந்தொழுதுவலங்கொண்டு" எனவும், "பன்னாட்டங்கிச்சென்றொருநாள், ஆற்றுவீயரங்கத் தமர்ந்துவேறாகிக், குரங்கமையுடுத்தமரம்பயிலடுக்கத்து, வானவருறையும் பூநாறொருசிறைப், பட்டினப்பாக்கம்விட்டனர்நீங்காப், பெரும்பெயரையரொருங்குடனிட்ட, இலங்கொளிச்சிலாதலமேலிருந்தருளிப், பெருமகனதிசயம்பிறழாவாய்மைத், தருமஞ்சாற்றுஞ்சாரணர்தோன்றப், பண்டைத்தொல்வினைபாறுகவென்றே, கண்டறிகவுந்தியொடுகால்உறவீழ்ந்தோர், வந்தகாரணம்வயங்கியகொள்கை, சிந்தைவிளக்கிற்றெரிந்தோராயினும், ஆர்வமுஞ்செற்றமுமகலநீக்கிய, வீரனாகலின்விழுமங்கொள்ளான், கழிபெருஞ்சிறப்பிற்கவுந்திகாணாய், ஒழிகெனவொழியா தூட்டும்வல்வினை, யிட்டவித்தெனவெதிர்ந்துவந்தெய்தி, யொட்டுங்காலையொழிக்கவுமொண்ணா, கடுங்

கால்நெடுவெளியிடைஞ்சுடரென்ன, வொருங்குடனில்லாவுடம்பிடையுயிர்கள், அறிவனறவோனறிவுவரம்பிகந்தோன், செறியன் சினேந்திரன் சித்தன் பகவன், தருமமுதல்வன் தலைவன் தருமன், பொருளன் புனிதன் புராணன் புலவன், சினவரன் தேவன் சிவகதிநாயகன், பரமன் குணவதன் பரத்தினொளியோன், தத்துவன் சாதுவன் சாரணன் காரணன், சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி, யிறைவன் குரவ னியல்குண னெங்கோன், குறைவில்புகழோன் குணப்பெருங்கோமான், சங்கரனீசன் சயம்பு சதுமுகன், அங்கம்பயந்தோ னருக னருள்முனி, பண்ணவ னெண்குணன் பாத்தில்பழம்பொருள், விண்ணவன் வேதமுதல்வன் விளங்கொளி, யோதியவேதத்தொளியுறினல்லது, போதார்பிறவிப்பொதியறையோரெனச், சாரணர்வாய்மொழிகேட்டுத்தவமுதற், காவுந்தியுந்தன்கைதலைமேற்கொண்டு" எனவும் வந்ததனு லறிக. மாதவத்து ஆட்டி - சிறந்ததவத்தை யாளுந்தன்மையுடையவள்; ஆட்டி - ஆளன்என்பதன் பெண்பால். முன்னே உறையூருக்கு வரும்வழியிலே காவேரிதீரத்திலே ஒருசோலையிலே சாரணர்வந்து தமக்குக் கூறிப்போன ஞானோபதேசத்தை இப்பொழுது உறையூரில் அருகன்கோயிலிலுள்ள முனிவரெல்லோர்க்கும் கவுந்தியடிகள் மாட்சிமைப்படக் கூறினு ளென்க. மாதவத்தாட்டியும் என்ற உம்மை, கதைத்தொடர்ச்சி விளக்க வந்தது; உயர்வுசிறப்புமாம். மாண்பு - பண்புப்பெயர்.

அ - கூ. ஆங்கு
அன்றவ ருறைவிடத் தல்கின ரடங்கி

(இ - ள்.) அன்று *சாவகருறைவிடத்து விட்டுத் தங்கி யென்க.

என்பது, காலைப்பொழுதில் வாய்மொழிகேட்டு மாடப்புணைபோகித்தென்கரையெய்திப் பூம்பொழிலிருக்கைச் சாபவிடைசெய்து மாலைப்பொழுதின் கட்புறஞ்சிறைவாரணம்புரிந்துபுக்கன ரெனவே, அற்றைஞான்று தங்குதல் கூறவேண்டாதுமுடியும்; முடியவே, வழிநாட் சாவகருறைகின்றவிடத்தே தங்கினராய் ஒடுங்கி யென்க. அவரெனக் கடவுளரைச்சுட்டின், அவருறைவிடம் கந்தன்பள்ளியாமாகலானும், ஆண்டு இணக்காமை சொல்லவேண்டாவாகலானும், அவரென்றது சாவகரையென்க. கடவுளர்க்கெல்லாம் மாதவத்தாட்டி மாண்பறமொழிந்தெனவே, கவுந்தியடிகள் கந்தன்பள்ளியுட் புக்கமையுணர்க. இங்ஙனங்கூறியது, †"ஆறைங்காதம்" என்றமையானும், ‡"காவத மல்லது கடவா ராகிப், பன்னாட் டங்கிச் சென்றொருநாள்" என்றமையானும், ஈண்டும் "அன்றவ ருறைவிடத் தல்கின ரடங்கி" என்றமையானும், சின்னாட்சென்றவழிச் செலவொழிந்தொழிந்து ஆண்டாண்டிருந்து அறிச்சென்றமை உணர்த்தற்கெனக் கொள்க.

(அரு - உரை.) அல்கினர் அடங்கி - விட்டு அங்குத் தங்கி.

(கு - பு.) சாவகர் - கிரகஸ்தாச்சிரமத்தவர். உறைவிடம் - வசிக்குமிடம். விட்டு - வழிச்செல்லுதலை நீங்கி. அல்குதல் - ஒழிதல். வாய்மொழி - சாரணர் அருளிச்செய்த பெருமையமைந்த உண்மைமொழி. மாடப்புணைபோகி - பள்ளியோடத்து ஏறிப்போய், தென் கரை யெய்தி - காவிரியாற்றின் தெற்குக்கரையைச் சென்றடைந்து. பூம்பொழிலிருக்கை - பொலிவையுடைய சோலையிலே சென்றிருந்தபொழுதில். சாப விடை செய்து - அங்குவந்த கணிகையையுங் கோவலனையும் அவமதித்துப்பேசிய நரபாத்தையையும் ஒருதூர்த்தனையுங் கவுந்தி நரிவடிவங்கொள்ளுமபடி

* சாவகர் - சைனர்களில் இல்லறத்தார்; இவர்களை ச்ராவகரென்பர்.
† நாடுகாண்காதை, ௪௨.   ‡ நாடுகாண்காதை, ௧௬௪ - ௧௬௫.

சபித்து அவர்கள் அவ்வாறானதையறிந்து இரங்கிய கோவலன்கண்ணகி இவர்கள்வேண்டுகோளால் அவர்களுக்கு அவ்வடிவு ஒருவருடங்கழிந்தபின்னர் நீங்கி முன்னைய வடிவைப் பெறும்படி சாபவிமோசனங் கூறி. புறஞ்சிறை வாரணம் புரிந்து புக்கனர் - புறத்தே சிறையையுடைய கோழியின்பெயரைப்பெற்ற [கோழியூரெனவொருபெயர்பெற்ற] புறஞ்சேரியையுடைய உறையூரில் விருப்பத்தோடு சென்றுசேர்ந்தார்கள். இது, கீழ் நாடுகாண் காதையிற் கூறப்பட்ட விஷயம். அற்றை ஞான்று - அன்றைத்தினத்தில். தங்குதல் - உறையூரிலிருந்தமை. வழிநாள் - மறுநாள்; வழி - பின். ஆண்டு இளைப்பாறத் தகாமை - கடவுளாலயத்திற் பள்ளிகொண்டு இளைப்பாறத் தகாமை. ஆறைங்காதம் - மதுரை கோவலன்கண்ணகியிவர்கள்நகருக்கு முப்பது காவத தூரமுள்ளது. காதம் - ஏழரைநாழிகை வழி. காவதமல்லது கடவாராகி - ஒவ்வொருநாளைக்கு ஒவ்வொருகாதமென்னும் எல்லையல்லது அதற்குமேல் நடந்து கழிக்கமாட்டாதவர்களாய். பல் நாள் தங்கி - இவ்வாறு பலநாள் தாமதித்து. செல் நாள் - நடக்கின்றநாட்களில். ஒருநாள் - ஒருதினத்தில். ஈண்டும் - இங்கும். சிலநாளைக்கொருதரம் ஒருநாள் பிரயாணத்தை நிறுத்தி நிறுத்தி அவ்வவ்விடத்தில் தங்கி இளைப்பாறிக்கொண்டே போயினரென்க.

கo - கச. தென்றிசை மருங்கிற் செலவுவிருப் புற்று
வைகறை யாமத்து வாரணங் கழிந்து
வெய்யவன் குணதிசை விளங்கித் தோன்ற
வளநீர்ப் பண்ணையும் வாவியும் பொலிந்த
விளமரக் கானத் திருக்கை புக்குழி

(இ - ள்.) தென்றிசைக்கண்ணே செல்லுதலை விருப்பமுறுதலானே கோழியூரை வைகறையாமத்தே கழிந்து செல்லாநின்றுழி வெய்யோன் வந்து முன்னர்க் குணதிசையை விளக்கிப் பின்னர்த் தான் தோன்றினானாக, வளவிய நீர்நிறைந்த மருதநிலமும் வாவியுஞ் சிறந்ததோர் இளமரக் காவின் மண்டபத்தே சென்று புக்கவிடத் தென்க.

வாரணம் - கோழியூர். (சு) வணங்கி (அ) மொழிந்து (கூ) அல்கிரடங்கி (கo) விருப்புற்று (கக) வாரணங்கழிந்து (கஉ) தோன்றினவளவிலே (கச) இருக்கைபுக்குழி யென்க. விளங்கி - விளக்கி; விகாரம்.

(அரு - உரை.) (சு) அரங்கத்திற்கண்ட (எ) சாரணர் சொன்ன தருமவுரையை (ரு) கடவுளர்க்கு(அ) மொழிந்து (கக) வாரணங்கழிந்து வழிக்கொண்டு (கச) இளமரக்கானத்துப் புக்குழி யென்க. இருக்கை - இருப்பிடம். (சு) வணங்கி (அ) மொழிந்து(கச)கானத்திருக்கை புக்குழி யென்க.

(ரு - பு.) வாரணம் - கோழி: உறையூர்; முற்காலத்து ஒருகோழி நிலமுக்கியத்தால் யானையோடு பொருது அதனைப்போர்தொலைத்தல்கண்டு அந்நிலத்திற் செய்த நகராதலின், கோழியென்று உறையூருக்குப்பெயராயிற்று: இதனைக் கீழ் நாடுகாண்காதையில் "முறஞ்செவி வாரண முன்சமமுருக்கிய,புறஞ்சிறை வாரணம்" என்றதனாலறிக; இது,சோழனது இராஜதானிகளுள் ஒன்று. வைகறையாமம் - வைகறையென்னும்யாமம்: விடியப்பத்துநாழிகையுள்ள காலம்; இது -மாலை,யாமம், வைகறை. விடியல், நண்பகல், எற்பாடு என்னுஞ் சிறுபொழுது ஆறனுள் ஒன்று: இவை சூரியாத்தமனகாலமுதல் ஒவ்வொன்று பப்பத்துநாழிகையாக முறையே கொள்வர். வைகறை - தூக்கமொழிதலையுடையது எனக் காரணப்பெயர்: வைகுதல் - துயிலல், அறுதல் - நீங்குதல். 'அது கங்குல் வைகிய[கழிந்த]அறுதியாதல்நோக்கி வைகறையெனவுங்கூறுப"எனத்தொல்காப்பியப்பொருளதி

காரவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியிருப்பதையு மறிக. 'வைகறை - ஆகுபெயர்: வைகல்-தயிறல்; அறல் - அறையாயிற்று: பொறியறை போல' என்றார் திருக்கோவையில் அடியார்க்குநல்லார். யாமம் - காலமென்னுமாத்திரையாய் நின்றது. கழிந்து - நீங்கி. வெய்யோன் - சூரியன். குணதிசை - கிழக்குத்திக்கு. "கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந் தான் கனையிருளகன்றது காலையம் பொழுதாய்" என்றார் பெரியாரும். தோன்ற - உதிக்க. வளவிய - செழிப்பான. மருதநிலம்-நாடுசார்ந்த இடம். வாவி - நீர்நிலை. இளமரக்கா - இளையமரங்களையுடையசோலை. புக்குழி-புக்கவுழி: தொகுத்தல்; புக்ககம், வேட்டகம், அட்டில் என்பனபோல. வழிக்கொண்டு - பிரயாணம் புறப்பட்டு.

கரு - கசு. வாழ்க வெங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதொ றூழிதொ றுலகங் காக்க

(இ - ள்.) மன்னர்யாவரினும் மிக்க பெரியதகைமையினையுடைய எங்கோ வாழ்வானாக; ஊழிதோறும் ஊழிதோறும் இவ்வுலகை அவனே காப்பானாக வென்க.

(கு - பு.) தகை - தகுதி; நற்குணம். எங்கோ - எமதரசன்: என்றது,பாண்டியனை. ஊழி - யுகமென்பதுவது கற்பமென்பதுவது கொள்க; நெடுங்காலமென்ற பொருளாகவேண்டும்.

கஎ - உஉ. அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி

(இ - ள்.) முன்னொருகாலத்துத் தனது பெருமையினது அளவை அரசர்க்குக் காலாணியிற் றிணைத்தி வேலையெறிந்த அந்தப் பழம்பகையினைக் கடல் பொறாது பின்னொருகாலத்து அவனது தென்றிசைக்கண்ணதாகிய * பஃறுளியாற்றுடனே பலவாகிய பக்கமலைகளையுடைய குமரிக்கோட்டையும் கொண்டதனால் வடதிசைக்கண்ணதாகிய கங்கையாற்றினையும் இமயமலையினையும் கைக்கொண்டு ஆண்டு மீண்டும் தென்றிசையையாண்ட தென்னவன் வாழ்வானாக வென்க.

என்றது: அக்கணமாகிய நிலக்குறைக்குச் சோழநாட்டெல்லையிலே முத்தூர்க்கூற்றமும் சேரநாட்டுக் குண்டூர்க்கூற்றமு மென்னுமிவற்றை இழந்தநாட்டிற்காக ஆண்ட தென்னவன் வாழ்வானாக வென்றவாறு. அடியின் - அடியால். தன்னளவென்பதனைக் கடல்மேலேற்றலு மொன்று. அரசர்க்கு - உலகிலரசரெல்லார்க்கு மென்க. வான்பகை - முன்பேசெய்த பகைமை. பஃறுளியென்னும் ஆற்றின் தன்மை வேனிற்காதையிற்கூறிப் போந்தாம். கோடு - மலை. கொடுங்கடல் - இவ்வளவெல்லாந்தந்தகடல். கடல் வடபால் எதிர்ந்துகொண்ட எல்லையளவும் தனதாக்கி மீண்டும் தென்றிசையையாண்ட வென ஒப்பாகவு மொன்று. அடிபாலுணர்த்தி எறிந்த பகை பொறுது கொள்ளத் தானுங்கொண்டு ஆண்ட தென்னவனென்க.

---

* "எங்கோ வாழிய... ... ...முந்நீர் விழவி னெடியோன், நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" எனப்பஃறுளியாற்றைப்பாராட்டிக்கூறினர் புறப்பாட்டிலும்; க.

(அரு - உரை.) அடியிற்றன்னளவு - கடலினளவை அடியாலே; அர சர்க்குணர்த்தி - இன்னவளவினது இதுவென்று காட்டி: அன்றி அடியினாலே தன்பெருமையை அரசர்க்கு அறிவித்து என்பாருமுளர். வேலானுமெறிந்த பகை. பஃறுளியாறு - குமரிப்பக்கத்ததோர்யாறு. கோடு-கரை. கொடுங் கடல் கொள்ள - வளைந்தகடல் கொள்ளுகையினாலே.

(கு - பு.) பஃறுளியாறு - குமரியாற்றிற்குத் தெற்கின்கண் ஓடிய ஓராறு. பாண்டியநாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறு ளியென்னுமாற்றிற்கும் அதன் தெற்கிலுள்ள குமரியென்னும் ஆற்றிற்கும் இடையே பலநாடுகளையுள்ளிட்ட அநேககாதநிலம் சயமாகீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற்பாண்டியன்காலத்துக் கடலாற் கொள்ளப்பட்டொழிந்த தென்பது,இவ்வேனிற்காதையிற் கூறிப்போந்தபொருள்.மலயத்துவசபாண் டியன்மகளாகிய தடாதகைப்பிராட்டியைச் சுந்தரபாண்டியவடிவமாகி மண ம்புரிந்துகொண்ட சிவபெருமான் அவளிடம் தமக்குப்பிறந்த குமாரனாகிய உக்கிரபாண்டியனுக்கு முடிசூட்டி அவனுக்குப்பிற்காலத்திற்பகையாகும் கடலையும் இந்திரனையும் மேருவையும் வெல்லுமாறு வேலும் வளையும் செ ண்டும் அளித்துப் போயினர்; பின்னர் அவன் தன்நகரையழிக்குமாறு இந்திரனேவலாற் பொங்கியெழுந்த கடலை வேலெறிந்து வற்றச்செய்து வெ ன்றான்; ஒருகாலத்தில் தன்னாட்டிற் பொதியமலையில் மேய்ந்திருந்த மேகங் களைப் பிடித்து அவன் தளைசெய்து, அதுகேட்டுத் தன்னையெதிர்த்து யுத்த ஞ்செய்த தேவேந்திரன்மீது வளையையெறிந்து மகுடபங்கப்படுத்திச் செயி த்தான்; தன்னாட்டிற் பஞ்சம்நேரிட்டபொழுது மேருகிரியையடைந்து நிதி தேடி அதுஇருக்குமிடந்தெரியாமையால் அதன்மேற் செண்டைவீசி அத ற்குஆற்றாமல் அம்மலையரசன் எதிரில்வந்து கொடுத்த பொருள்களையெல் லாம் பெற்று வந்தான் என்பது திருவிளையாடற்புராணத்து வரலாறு. அடுக்கம் - கற்கள் ஒன்றன்மேலொன்று அடுக்கிநிற்றலாலாகியதென மலை க்குக் காரணப்பெயர்போலும். தென்னவன்-தென்னாட்டரசன். வாழியவெ ன்னும் வியங்கோள்வினைமுற்று, ஈறுதொக்கு வாழியென நின்றது; [நன் - உயிர்- கஅ.] இமயம்-பனிமலை; இமம் - ஹிமம்: பனி. அடியின், ஐந்தாம்வே ற்றுமை-ஏதுப்பொருள். வடிவேல்-வடிக்கப்பட்டவேல்; வடித்தல் -கூராக் குதல். தனது பெருமை - பாண்டியனது மகிமை. பஃறுளியாறு வடிவம் பலம்பநின்றபாண்டியனு லுண்டாக்கப்பட்டதென்று புறநானூறு கூறும்.

உங - உரு. திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச்
செங்கணா யிரத்தோன் திறல்விளங் காரம்
பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி

(இ - ள்.) திங்களாகிய செல்வனுடைய மரபு மேம்படுதற்கு இந்தி ரன்பூட்டிய வலிவிளங்கிய ஆரத்தை ஒளிபொங்கிய தனதுமார்பத்தேபூண்ட பாண்டியன் வாழ்வானாக வென்க.

விளங்கவென்பதனை விகாரவகையான வியங்கோ ளாக்குவாருமுளர். விளங்கப்பூண்டோனென இயைக்க. திங்கட்செல்வனென்பதற்கு வேனிற் காதையில் உரைத்தது உரைக்க.

(கு - பு.) திங்கள் - சந்திரன். செல்வன் - சிறப்புடையவன். மரபு- வம்சம். திரு - மேன்மை. இங்ஙனங்கூறினது, பாண்டியன்பிறந்துள்ளது சந்திரகுலமாதலால். செங்கணாயிரத்தோன் - சிவந்தஆயிரங்கண்களையுடை யவன். ஆரம் - ஹாரம்; வடசொல்: இரத்தினமாலை. பூண்ட - அணிந்த. விகாரவகையானவியங்கோளென்றது - 'வியங்கோள்வினைமுற்றின்முன்வலி இயல்பாம்' என்றவிதியைக்கடந்து வருமொழிமுதல்வலிமிக்குவந்த வியங்

கொண்மூஉ என்றதாம்; 'விளங்கச்செங்கண்' என இங்கே மிக்குவந்ததால். விளங்குகவென்பதன்விகாரமுமாம். வேனிற்காதையில்உரைத்ததுவருமாறு:—திங்கட்செல்வன் - "காலமுலகம்" என்னுஞ்சூத்திரத்துள் ஞாயிறு திங்கள்என்பன உயர்திணைமேலனவாய்ப்பால்பிரிந்திசையா எனவும், "நின்றாங் கிசைத்த லிவணியல் பின்றே" எனவே நின்றமுறையானே ஈறுபெற்று உயர்திணையாய்இசைத்தல் இவண்இயல்பின்று எனவுங் கூறிய ஆசிரியர், "இசைத்தலு முரிய வேறிடத் தான" எனக் காலமுதலாகியசொல் உயர்திணையாய்இசைத்தலுமுரிய ஈறுதிரிந்துவாய்பாடுவேறுபட்டவழி என்றாராகலின், இதுவும் ஈறுதிரிந்த திங்கட்செல்வனென்றதாயிற்றென்க; மேலும் இவ்வாறுவருவனவற்றிற்கும்இவ்விதிகொள்க: திங்களாகிய செல்வன்எனப் பண்பொட்டுவிரிக்க. 'இனி, சிலப்பதிகாரத்திலே "தென்றலஞ்செல்வன்யாண்டுளான்கொல்லோ," "திங்களஞ்செல்வன்யாண்டுளன்கொல்லோ" எனவும், "இன்னிளவேனில்வந்தனனாக" எனவும் பெயரானும்வினையானும் அவ்வச்சொற்களை ஆண்பாலாக்குவர்' என்பது பிரயோகவிவேகவுரை. 'தேவர்களை உயர்திணைஅஃறிணைஎன்னும்இருதிணையாகவுஞ்சொல்லலாம்'என்றநியாயத்தானும், வடமொழியில் சந்திரன்என்பது ஆண்பாற்சொல்லாதலானும், 'திங்கட்செல்வன்' என உயர்திணையாக்கூறப்பட்டதென்க. திங்கள்என்பது சொல்லால்அஃறிணையாயினும், பொருளால்இருதிணைக்கும்பொதுவாம்.

௨௧ - ௨௬. முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென்
இடியுடைப் பெருமழை யெய்தா தேகப்
பிழைபா விளையுட் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன் வாழ்கெனத்
தீத்திறஞ் சிறப்பிற் றென்னனை வாழ்த்தி
மாமுது மறையோன் வந்திருந் தோனை

(இ - ள்.) இவன் நம்முடைய முதல்வனது சென்னிமுடியிலே வளையையுடைத்தோனென்று இடியையுடையபருவமழை தனதுநாட்டிற் பெய்தன்றொழிலெய்தாது நீங்கிற்றாகத் தப்பாத விளையுளாகிய மிக்க வளஞ் சுரக்கும்படி அதனை * விலங்கிட்டாண்ட மன்னவன் வாழ்வானாகவெனக் குற்றந்தீர்ந்த சிறப்பினையுடைய தென்னவனை இவ்வனமேத்திவந்திருந்த முதுமறையோனையென்க.

(அரு - உரை.) முதல்வன்சென்னிமுடியிலேவளையுடைத்தோனென்க; முதல்வன - இந்திரன்.

(கு - ப) இவற்றின்முதலடி, மேகத்தின்கருத்து. இவன் - பாண்டியன்.நம்முடையமுதல்வன்என மேகங்கள்இந்திரனைக்கூறினது, இந்திரன் மேகவாகனனாதலின். சென்னிமுடி - தலையில்தரித்துள்ளகிரீடம். பருவமழை - தக்ககாலத்துப்பெய்யும்மழை. தனதுநாடு - பாண்டியநாடு எய்தல்- அடைதல். ஏகிற்று - அப்பாற்சென்றது. விளையுள்-பயிர்விளைவு. அதனை - மேகத்தை. ஆண்ட - அடிமையாக்கிக்கொண்ட.வாழ்கென - வியங்கோள் விகாரம். தென்னன் - பாண்டியன்; தென்னாட்டரசன். ஏத்தி - சிறப்பித்துக் கூறி. மாமுதுமறையோன் - சிறந்தவயதுமுதிர்ந்தபிராமணனொருவன். மறையோன - வேதத்திற்குரியவன். உடை - உடைய; விகாரம். சிறப்புக்குக் குற்றம் - பழிப்பு.

* வேலெறிந்து கடலை வற்றச்செய்ததும், இந்திரன்பூட்டிய ஆரத்தைப் பூண்டதும், இந்திரன்முடிமேல் வளையைச்சிதறச்செய்ததும், மேகத்தைச் சிறைப்படுத்தியதும் பாண்டியன் உக்கிரவன்மன் செய்கையென்று மதுரைப்புராணங்கூறும்.

௫௨ - ௫௩. யாது நும்மூ ரீங்கென் வரவெனக்
கோவலன் கேட்ப

(இ - ள்.) அம்மறையோனைநோக்கி, ஆண்டு, நும்மூர்யாது? ஈண்டு நும்வரவு என்னை? எனக் கோவலன் வினவ வென்க.

(கு - பு.) ஆண்டு - அப்பொழுது; அல்லது, அவ்விடத்தில். ஈண்டு - இவ்விடத்தில். என்னை - என்னகாரணத்தால்.

௫௩ - ௫௪. குன்றாச் சிறப்பின்
மாமறை யாளன் வருபொரு ளுரைப்போன்

(இ - ள்.) மிக்க சிறப்பினையுடைய அம்மறையோன் தான் வருகின்றபொருளை உரைக்கின்றவ னென்க.

வருபொருளென்ற பொதுமையான், வருதற்குக் காரணமும் ஊரின்பெயரு மென்பதாயிற்று.

(கு - பு.) குன்றா - குறையாத. மாமறையாளன் - சிறந்தவேதங்களைப்பயின்றாளுபவன். வருபொருள் - எதிர்காலவினைத்தொகை. உரைப்போனென்பது, மேல் ௫௬ - வரியில் 'என' என்பதோடுஇயையும்.

௫௫ - ௬௦. நீல மேக நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
வாயிரம் விரித்தெழு தலையுடை யருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்

(இ - ள்.) நீலமேகம் ஓங்கிய பொன்மலைமீதே பக்கங்களில் விரிந்து மிகாமல் ஒக்கப் படிந்ததுண்டாகில் அதனையொப்பத் தனது படம்விரித்தெழுந்த ஆயிரந்தலையையும் கிட்டுதற்கரிய திறலையுமுடைய பாம்பணைப்பள்ளி மீதே தேவர்கள் பலரும் தொழுதேத்தத் திரைவிரியும் காவிரியாற்றிடைக்குறையிலே திருமகள்பொருந்தியதிருமார்பையுடையோன் கிடந்த கோலமு மென்க.

மேகம்படிந்ததுபோலவென்க.

(கு - பு.) பாம்பணைப்பள்ளி - ஆதிசேஷசயனம். துருத்தி - நதியினடுவிடம்; திருவரங்கம்பெரியகோயில். கிடந்தகோலம்-சயனித்துள்ள திருவுருவம். நீலமேகம் - ஸ்ரீரங்கநாதனது கரியதிருமேனிக்கும், மகாமேருகிரி - நெடுந்தூரத்தும் விளங்குகிற ஒளியையுடைய திருவனந்தாழ்வானுக்கும் மிகப்பொருந்திய உவமம். திறல் - வலிமை. அருந்திறல் - "சென்றாற்குடையாங் கடற்புணையாந் திருத்தீவிகையா, நின்றாலிருதிருப்பாதுகையா நித்திரைக்கணையாங், குன்றாமணியொளியாசனமாம் புகலகோசிகையா, மன்றாலிலையிற்றுயிலரங்கேசர்க்கரவரசே" என்றவாறு ஆதிசேஷமூர்த்திதாமொருவரே எம்பெருமானுக்குச் சகலகைங்கரியங்களையும்ஒருங்குசெய்வதாகிய பிறர்க்கரியஆற்றலெனவுங் கொள்ளலாம்; அன்றியும், உலகமனைத்தையுந் தமது திருவுதரத்திற் பொதிந்துவைத்துள்ள பெருமானைத் தமது மேனிமேல் தாங்குதல் அரியதோராற்றலாமன்றே: அருந்திறல் - வேறொருவடிவங்கொண்டு உலகத்தைக் கீழே தாங்கிநிற்கும் மகாசக்தியுமாம்; தேகபலத்திலும் சாந்தகுணத்திலும் பகவத்பக்தியிலும் வாயுதேவன் முதலிய பிறரால் வெல்லப்படாத பெருந்திறலுமாம்: இவற்றில் ஆதிசேஷன்வாயுவினால் வெல்லப்படாமை புராணங்களில் விளங்கும்; அருந்திறல் என்பதில், கொடிய சர்ப்பங்களுக்கெல்லாம் அரசனாந்தன்மையும் அடங்கும். பாயல், அல்-

சாரியை. தொழுதி யேத்த - நமஸ்கரித்துத் துதிக்க. காவிரி - காவேரி: வடசொல்லின் விகாரம்: கவேர மென்னும் மலையினின்று உற்பத்தியானதென்றும், கவேரனென்னும் அரசனுக்கு மகளானவ ளென்றும் பொருள்; இதனைத் தமிழ்ச்சொல்லாகவே கொண்டால், சோலைகளிற்பரவிப்பாய்வதென்றும், சோலைகள் செழித்து வளர்தற்குக் காரணமாவ தென்றும் பொருள்படும்; இனி, இது - (அகத்தியமகாமுனிவரது கையிலிருந்த) திருக்காவேரியினின்றும் [திருக்காவேரி - கமண்டலம், குண்டிகை.] உண்டானதுபற்றி வந்த பெயரென்று உரைப்பாரு முளர். வியன் - அகலமுணர்த்தும் உரிச்சொல்; "வியலென் கிளவி யகலப் பொருட்டே" என்பது தொல்காப்பியம்: வியலென்பது உரிச்சொல்லெனக்கொண்டு அது ஈறு திரிந்ததென்றலும் ஒன்று. பெரு - பெரிய; மகிமையுடைய. திருவமர்மார்பன் - திருமால். ஸ்ரீரங்கநாதனென்பதற்கு - திருமகளுக்குத்திருநிருத்தஞ்செய்யுமிடமாகவுள்ள தலைவனென்றும ஒருபொருள்படும்: அப்பொருளும் 'திருவமர்மார்பன்' என்பதில் தோன்றுதல் காண்க.

சக - ருக. வீங்குநீ ரருவி வேங்கட மென்னு
மோங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
யிருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமுந்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ராரமார் பிற்பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்

(இ - ள்.) கொடிவழித்தீர்த்தமுதலிய மிக்க அருவிநீரையுடைய வேங்கடமென்னு பெயர்கூறப்படும் மலையி னுச்சிமீதே ஞாயிறுந்திங்களும் இருமருங்கும் ஓங்கிவிளங்கிய இடைப்பட்டவிடத்தே நல்ல நீலநிறத்தையுடைய மேகம் தன்மின்னலாகிய புதிப்புடைவையை யுடுத்துத் தன்வில்லாகிய பணியைப் பூண்டுநின்றாற்போலப் பகையைவருத்தும் ஆழியையும் சங்கையும் அழகிய தாமரைக்கையகத்தே வலனுமிடனுமேந்தி அழகுகிளருமாரத்தைத் திருமார்பிற்பூண்டு பொற்பூவாடையையுடுத்த வெளிப்பட்ட சிவந்த திருக்கண்மலரையுடைய நெடியோன் நின்றகோலமு மென்க.

மேகம் இடைநிலைத்தானத்து உடுத்துப் பூண்டு நின்றதுபோல ஏந்திப் பூண்டு பொலிந்து உச்சிமீமிசைத்தோன்றிய நெடியோன் நின்றவண்ணமு மென்க. இது மயக்கமின்மை. உச்சிமீமிசையென ஒருபொருட்பன்மொழி சிறப்பின்கண் வந்தன.

(கு - ப.) கொடிவழித்தீர்த்தம்-ஒருபள்ளியதீர்த்தம்போலும்; அன்றி, பாபவிநாசம், ஆகாசகங்கை, ஆழ்வார்தீர்த்தம் என இவை போன்ற கொடிவழியாகச்சென்றுசேருந்தக்கதீர்த்தங்களுமாம். வேங்கடம் - திருமாலினது திவ்யதேசங்கள் நூற்றெட்டனுள் ஒன்றும், வடநாட்டுத்திருப்பதிகள் பன்னிரண்டனுள் முதலது மாகிய திருப்பதி; தன்னை அடைந்தவர்களது பாவமு வெப்பத்தையும் நீக்குவதனால், வேங்கடம் எனப் பெயர்பெற்றது: வேம்-பாவம், கடம்-எரித்தல். இனி, அழிவில்லாத ஐசுவரியங்களைத் தருவதென்றும் பொருள்படும்: வேம்-அழிவின்மை, கடம்-ஐசுவரியம். வெவ்விய காடுகளையுடையதென்ன, தமிழ்மொழியாம். ஓங்குஉயர் - மிகவுயர்ந்த; ஒருபொருட்

பன்மொழி. உச்சி - சிகரம். விரிகதிர் - பரவியகிரணங்களையுடைய; இது - இருசுடர்க்கும்அடைமொழி. இருமருங்கும் - வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும். விளங்கிஓங்கியவென்பது ஓங்கிவிளங்கியவென விகுதிபிரித்துக் கூட்டப்பட்டது. தானம் - ஸ்தானம்; வடசொற்றிரிபு. விரிகதிர்ஞாயிறுந் திங்களும்விளங்கிஇருமருங்கோங்கியஇடைநிலத்தானத்து என்றது,உபமேயமாகியதிருமால் வலத்திருக்கையில்சக்கரத்தையும் இடத்திருக்கையில் சங்கத்தையும் தரித்து இடையில்இருத்தல் விளங்க. ஞாயிறுந்திங்களும் என உபமானப்பொருள்களை வைத்தமுறைக்கு ஏற்ப ஆழியுஞ்சங்கமும்என உபமேயப்பொருள்களையும் வைத்தது, முறைநிரனிறைப்பொருள்கோள். ஞாயிறு-சுதரிசனத்திற்கும், திங்கள்-பாஞ்சசன்னியத்திற்கும் உவமை. மின்னுக்கொடி - மின்னற்கொடியாகிய விளங்குதலுடையபுதுச்சேலை; ஸ்லேஷ்டரூபகம்; இது, எம்பெருமான்திருவரையிற்சாத்தியுள்ள பொன்மயப்பீதாம்பரத்துக்கு உவமையாம். வில் - இந்திரதனுசு; இது - பலநிறங்களையும் உடையதாதலின், வெவ்வேறுபட்டநிறத்தையுடைய பலவகையிரத்தினங்களும் அமைந்துள்ள ஹாரத்துக்கு உவமையாம். ஆரம் - மார்பின்மாலை. பணி - ஆபரணம். ஆழி - பகைவரை அழிப்பதெனக்காரணப்பெயர்; அல்லது, வட்டவடிவுடையது. பால்வெண்சங்கம் - பால்போல்வெண்ணிறமுள்ள சங்கு. தகைபெறு - அழகைப்பெற்ற. தாமரை-தாமரஸம். தாமரைக்கை - தாமரைமலர்போலுந்திருக்கைகள். பொன் + பூ = பொலம்பூ; "பொன்னென்கிளவி" என்னுந்தொல்காப்பியவிதியால்அமைந்தது. செங்கண்நெடியோன் - புண்டரீகாக்ஷனாகிய நிலங்கடந்தநெடுமுடியண்ணல். அடியவரைஅருளொடுநோக்கிநோக்கித்திருக்கண்கள்சிவந்தனபோலும்; கொடியஅசுரராதியோர்பக்கல்வெகுளிநோக்கினாலுமாம். நெடியோன் - திருக்கலியாணகுணகணங்களாற்பெரியவன்; யாவரினும்மேம்பட்டகடவுளென்றுமாம். மின்னுக்கொடியுடுத்து விளங்குவிற்பூண்டு என உபமானத்தைக்கூறிநிறுத்தினமுறைமைக்கு ஏற்ப உபமேயத்தை 'பொலம்பூவாடையிற்பொலிந்து நலங்கிளராரமார்பிற்பூண்டு' எனக் கூறாது மாறிநிறுத்தினது எதிர்நிரனிறைப்பொருள்கோள்; எதிர்நிரனிறையெனினும் மயக்கநிரனிறையெனினும் ஒக்கும்; [நன் - பொது - ௬௯.] ஒருபொருட்பன்மொழிக்குச்சிறப்பு - சொல்லின்பந்தோன்றநிற்றலும், மிகுதிப்பொருளுமாம். மலையத்து, அத்து - சாரியை. பகை - பகைவர்; பண்பாகுபெயர். அணங்காழி - பிறவினைவினைத்தொகை; வருந்துதற்குக்காரணமான ஆழி யெனத் தன்வினையுமாம். பிரதானமானவையாதலால், கோயிலும் திருமலையுங் கூறப்பட்டன. இவற்றைக்கூறினது, பிற விஷ்ணுக்ஷேத்திரங்களுக்கும் உபலக்ஷணம்.

௫௨ - ௫௩. என்கண் காட்டென் றென்னுளங் கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்

(இ - ள்.) இங்ஙனமாகிய இரண்டுவண்ணத்தையும் காட்டுவாயாக வென்று என்கண் என்னுள்ளத்தைக் கவலைசெய்தலாலே ஈண்டுவந்தேன்; ஆண்டுக் குடகமலைப்பக்கத்து மாங்காடென்னு மூரின்கண் உள்ளவன் நானென்றானென்க.

என்கண் - எழுவாய். * "கண்ணுந் தோளும்" என்பதனால், கண்ணென்றார். உள்ளேன் - உள்ளவனான்.

(அரு - உரை.) கண்கள் என்னுள்ளத்தைக் கலக்கக்கலக்க; கண் - எழுவாய்.

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், ௬௧.

(கு - பு.) இரண்டுவண்ணம் - திருமாலின் கிடந்த திருக்கோலமும், நின்றதிருக்கோலமும். என்கண் எழுவாயாவது, கவற்றமென்னும் வினைக்கு. "கண்ணுந் தோளு முலையும் பிறவும், பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி, பன்மை கூறுங் கடப்பா டிலவே, தம்வினைக் கியலு மெழுத்தலங் கடையே" என்னுந் தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக் கிளவியாக்கச் சூத்திரத்துக்கு - கண்ணுந் தோளும் முலையும் அவைபோல்வன பிறபெயர்களும் பன்மையைக்குறித்து நின்ற உறுப்பின் நிலைமையை யுணர்த்துஞ் சொற்க ளாயினும் தமக்குரிய பன்மையாலேயே கூறப்படவேண்டுமென்னும் நியதியுடையன வல்ல என்பதுபொருள்: இதனால், கண்களெனப்பன்மையாற் கூறாது 'கண்' என ஒருமையாற் கூறினார்; இது பால்பகாவஃறிணைப்பெயரிலடங்கும்: [நன் - பெயர் - உச.] உள்ளேன் - தன்மையொருமைக்குறிப்பு வினையாலணையும்பெயர்.

௫௪ - ௫௭. தென்னவ னாட்டுச் சிறப்புஞ் செய்கையுங்
கண்மணி குளிர்ப்பக் கண்டே னாதலின்
வாழ்த்திவந் திருந்தே னிதுவென் வரவெனத்
தீத்திறம் புரிந்தோன் செப்பக் கேட்டு

(இ - ள்.) அத்தென்னவனுடைய நாட்டி லுள்ள சிறப்பும், அவன் கொடை அளி முதலிய செய்கைகளும் கேட்டலன்றிக் கண்கள்குளிரக் கண்டேனாகலான், அவன்புகழை நாவால்வாழ்த்தி வந்திருந்தேன்; என்வரவு இது வென்றுகொண்டு முத்தீயின்திறத்து மனம்புரிந்தோன் சொல்லக் கேட்டென்க.

(அரு - உரை.) தீத்திறம் - அக்கினி.

(கு - பு.) கொடை - ஈகை; தானம். அளி - அருள். கண்மணி -- கருவிழி. அது இன்றியின் பார்வையின்று ஆதலின், கண்மணி குளிர்ப்பக்கண்டே னென்றது. தீத்திறம் புரிந்தோன் - ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி என்னும் மூவகை அக்கினியினிடத்துச் செய்யப்படும் யாகமுதலியவைதிககாரியங்களில் விருப்பமுள்ள அந்தணன். இக்காதையிற் கூறுமாற்றால், வந்த அந்தணன் வைஷ்ணவ விசிஷ்டாத்துவைதி என விளங்கும்.

௫௮ - ௫௯. மாமறை முதல்வ மதுரைச் செந்நெறி
கூறு நீயெனக் கோவலற் குரைக்கும்

(இ - ள்.) கோவலன், பெரிய மறைமுதல்வனே, அருளிற்க; மதுரைக்குச்செல்லும் செவ்வியநெறியை எங்கட்குக் கூறுவாயாக வென, அவற்கு அவன் இதனைக் கூறு மென்க.

அது மேற்கூறுவார்.

(கு - பு.) மறைமுதல்வன் என்பதற்கு - வேதத்துக்குத்தலைவன் என்றும், வேதம்வல்ல முதற்சாதியா னென்றும் பொருளாம். சென்னெறியென்றும் பாடமிருக்கலாம்.

௬௦ - ௬௭. கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்திய லிழந்த வியனிலம் போல
வேனி லிளவரசொடு வெங்கதிர் வேந்தன்
றானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்
காலை யெய்தினிர் காரிகை தன்னுடன்

(இ - ள்.) வன்கண்மையன்றிக் குடியோம்பாத அமைச்சரோடே நாடோறும் நாடி முறைசெய்யாத அரசனுங் கோல்கோடலானே அரசிய லிழந்த அகன்றநிலம்போல முதிர்ந்த வேனிலாகிய உரிய அமைச்சனோடே வெவ்விய விளக்கத்தோடே யமைந்த *வேந்தன்தானும் வெம்மைமிகுத லானே தமது இயற்கைகெட்டு முல்லைகுறிஞ்சியென்னும் இருதிணையும் முறைமைதிரிந்து தமதுநல்லியல்பையிழந்து தம்மைச்சேர்ந்தோரை நடு ங்குந்துயரையுறுவித்துப் பாலையென்பதோர் வடிவைக் கொள்ளும் இந்தக் காலத்து இக்காரிகையோடு வந்தீர் நீரென்றானென்க.

பாலைக்கு நிலமின்மையும் முல்லையும் குறிஞ்சியும் இனிப் பாலையாத லும் முன்னர்ப் பதிகச்செய்யுளுரையிற் கூறப்பட்டன. அன்றியும், †"வான மூர்ந்த வயங்கொளி மண்டில, நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட், டிலையில மலர்ந்த முகையி லிலவம்" என முல்லை முறைமைதிரிந்து பாலை யாயினவாறும், ‡"சீறருங்கணிச்சியோன் ... ...வரைபிளந் தியங்கு ந, ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை" எனக் குறிஞ்சி முறைமைதிரி ந்து பாலையாயினவாறுங் காண்க.

கோடி இழந்த நிலம்போலக் கிழவனொடு வேந்தன்திருகக் குன்றித் திரிந்து இழந்து உறுத்துக் கொள்ளுங் காலை யெனக் கூட்டுக. காரிகைதன் னுடன் காலை யெய்தினி ரென மாறுக. காலை - காலம்.

(அரு-உரை.) தொழிலாளர்-மந்திரிகள். நலந்திருக - நலம்வேறுபட.

(கு - பு.) கோத்தொழிலாளர் - அரசனது செய்கையாகிய ஆளு கை முதலிய காரியங்களை நடத்தத் துணையாய் நிற்பவர்; எனவே மந் திரிகளாயிற்று. பின்னே, கோடி என வந்ததனால், இவர் கொடுங்கோன் மைக்குரிய தீக்குணங்களையுடைய மந்திரிக ளாயினர். வன்கண்மை யன்றிக் குடியோம்பாத அரசர் - கொடுந்தன்மையாலல்லாமற் சனங்களைப்

---

* வேந்தன் - சூரியன்.

† அகநானூறு, களிற்றியானைநிரை, ௧௧: "வான மூர்ந்த வயங்கொளி மண்டில, நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட், டிலையில மலர்ந்த முகையி லிலவங், கலிகொ ளாய மலிபுதொகு பெடுத்த, வஞ்சுடர் நெடுங் கொடி பொற்பத் தோன்றுங், கயந்துக ளாகிய பயந்தபு கான, மெம்மொடு கழிந்தன ராயிற் கம்மென, வம்புவிரித் தன்ன பொங்குமணற் கான்யாற் றுப், படுசினை தாழ்ந்த பயிலிணர் றெக்கர், மெய்புகு வன்ன கைகவர் முய க்க, மவரும் பெறுகுவர் மன்னே நயவர, நீர்வார் நிகர்மலர் கடுப்ப வோ மறந், தறுகுள நிறைக்குந போல வல்கலு, மழுதன் மேவல வாகிப், பழி தீர் கண்ணும் படுகுவ மன்னே" என்பது, தலைமகன் பொருள்வயிற் பிரிந்த விடத்து ஆற்றாளாய தலைமகளது வேறுபாடுகண்டு ஆற்றாளாயதோழிக்குத் தலைமகள் ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது; ஔவையார்.

‡ கலித்தொகை, முதலாவது பாலை, ௧. "தொடங்கற்கட் டோன் றிய முதியவன் முதலாக, வடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின், மடங்கல்போற் சினைஇ மாயஞ்செ யவுணரைக், கடந்தடு முன்பொடு முக் கண்ணான் மூவெயிலு, முடன்றக்கான் முகம்போல வொண்கதிர் தெறு தலிற், சீறருங் கணிச்சியோன் சினவலி னவ்வெயி, லேறுபெற் றுதிர்வன போல்வரைபிளந் தியங்குந, ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை, மறப் பருங் காத லிவளின் றொழிய, விறப்பத் துணிந்தனிர் கேண்மினமற் றைஇய"

பாதகாவாத மந்திரிகள்; கொடுமையாலேயே சனங்களையாள முயல்பவர். வன்கண்மையின்றி என்றிருந்தால், தொழில்செய்வதிற்சோர்வில்லாமையில்லாமையால் குடிகளைக்காப்பாற்றாத அமைச்சரென்று ஆகும்; "வன்கண் குடிகாத்தல் கற்றறிதலாள்வினையோ, டைந்துடன் மாண்ட தமைச்சு" என மந்திரிகளுக்கு முக்கியகுணமாகக் கூறப்பட்ட வன்கண்மையுங்குடிகாத்தலும் இல்லாதவரென்றவாறு. நாடி - ஆராய்ந்து. முறைசெய்யாது - அருளை நடத்தாமல். கோல்கோடலானே - நீதிதவறியதனாலே. அரசியலிழந்த - காவலைடாத்திமுறைமையைநீங்கின. வேத்து + இயல் = வேத்தியல்; மென்றொடர்வன்றொடராயிற்று. நிலம் - இராச்சியம். வேனில் - வெயிற்காலம். வெங்கதிர்வேந்தன் எனவே, சூரியனாயிற்று. தான்நலந்திருக - தான்தன்மைமாறுபடுதலினால்; மிகவெப்பம்வீசுதலினால். முல்லை - காடும் காடுசார்ந்தஇடமும். குறிஞ்சி - மலையும்மலைசார்ந்தஇடமும். இருதிணை - இரண்டுநிலம். முறைமைதிரிந்து - ஒழுங்குகெட்டு; ஊர்ந்தனுருபு, நீக்கம். நடுங்குதுயர் - அச்சத்தால்மனமும்உடம்பும்நடுங்குதற்குக்காரணமானதுன்பம். காரிகை - அழகுடையமகள், கண்ணகி. "வானமூர்ந்த" என்னும்மேற்கோளுக்கு - ஆகாயத்திலேசெல்லுகிற விளங்குகிறஒளியையுடையசூரியமண்டலம் நெருப்புப்போலச்சிவந்தஉஷ்ணத்தைவீசுதற்குஇடமான அந்தக்காட்டில் இலையில்லாமலும் மலருந்தன்மையுள்ளஅரும்பில்லாமலு மிருக்கிற இலவமரம் என்று பொருள். "சிறுநுங்கணிச்சியோன்" என்னும்மேற்கோளுக்கு-பிறராற்சிறுதற்கரிய மழுவாயுதத்தையுடைய பரமசிவன்கோபித்தலாலே அந்தமுப்புரம் அழித்தலைப்பெற்று உதிர்வனபோல மலைகள்பிளந்து போவார்க்குவழியில்லையாக வீழ்ந்து குறுக்கிட்டுக்கிடந்த வெம்மைவிளங்கும் தொலையாத வழியிடையிலே என்றுபொருள். "நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு, முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தாலும் பாலைநிலத்துக்கு வேனில் காலமாதல் உணரப்படும். வேனில் எனப் பொதுப்படக்கூறவே, இளவேனில் முதுவேனில் என்ற இருவகைவேனிலும் அடங்கும். வெங்கதிர்வேந்தன்தானலந்திருக என்றதனால், இந்நிலத்துக்குத் தெய்வம் சூரியன் என்பர். மேல் வேட்டுவவரியிலும் 'கடுங்கதிர் திருகலின்' என வருதல் காண்க. கொற்றம் - வெற்றி; அதனையுடையவன், கொற்றவன்.

௬௮ - எ௨ அறையும் பொறையு மாரிடை மயக்கமு
நிறைநீர் வேலிய முறைபடக் கிடந்தவிந்
நெடும்பே ரத்த நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்காற்
பிறைமுடிக் கண்ணிப் பெரியோ னேந்திய
வறைவாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும்

(இ - ள்.) பாறையும் சிறுகலும் அருவழியின் நெறிமயக்கமும் பேய்த்தேரு மெனுமிவை அடைவுபடக்கிடந்த இந்தத் தொலையாத பெரிய சுரத்தநெறியைத் தொலைத்துப் போய்க் கொடும்பாளூர் நெடுங்குளமென்னும் இரண்டூர்க்கும் பொதுவாகிய ஏரியினது கரையைக் கழிந்துசென்றால் முடிக்குப் பிறையைக் கண்ணியாகச்சூடிய இறைவனேந்திய கண்ணறையாகிய வாயையுடைய சூலவேல்போல மூன்றுவழி அறிதற்கரியவாம்படி கவர்க்குமென்றுணர்க.

பொறையைப் பொத்தையென்பாருமுளர்; அவது, மட்சிறுமலை. ஆரிடை - அரியவழி; அவது, ஆறலைப்போரும் ஊறுசெய்விலங்குமுடைத்தாய் ஏறிழிவும் கல்லுங்கன்னெறியுமாயிருப்பது. நிறைநீர்வேலியென்றார், பேய்

த்தேரை; நீர்போலத் தோன்றுதலின். உடைகுளங்களுமாம். இவை இவைப்பெயர்பெற்றவூர். இனிக் கொடும்பைக்கோட்டகநெடுங்குளமென வுமாம். கோட்டகம் - கரை; பள்ளமுமாம். நீந்திப் புகவரி தென்பது தோன்ற, புக்காலென்றார். சூலத்து - சூலம்போல; சாரியை நிற்க உருபும் உவமவுருபும் தொக்கன.

(அரு - உரை.) அறை - கற்பாறை. பொறை - பொத்தைமலை; சிறு மலை. ஆரிடை - அருவழி. நிறைநீர்வேலி - நிறைந்தநீருக்குவேலியான ஏரிக்கரை. கொடும்பை - கொடும்பாளூர்; அவ்வூரிலேநெடுங்குளக்கரைக்குள்ளாகப்புக்கால். அறைவாய்- அற்றவாய். சூலத்து-சூலம்போலக்கவர்க்கும்.

(கு - பு.) பாறை - கருங்கல். துறுகல் - கல்லில் ஒருவகை; இது இக்காலத்தில் திருக்கல் என வழங்கப்படும். அரு - செல்லுதற்கரிய. நெறிமயக்கம் - வழியின் தடுமாற்றம். பேய்த்தேர் - கானல். அடைவுபட - வரிசைப்பட. கிடந்த - பொருந்தப்பெற்ற. தொலையாத - வெகுவிரைவாக வழிநடந்தாலுங் கடக்கமுடியாத; மிகநீண்ட. சுரம் - பாலைநிலம். அத்தம்- அருநெறி. தொலைத்து - கடந்து ஒழித்து. முடி - மயிர்முடி. பிறை - இளஞ்சந்திரன். கண்ணி - மாலை. பெரியோன் - பெருமைக்குணமுடையவன். அறை, கண்ணறை - அகலமான இடத்துவாரம். கவர்க்கும் - பிரிவுபடும். ஆறலைப்போர் - வழியிற்பறிப்பவர். ஊறுசெய்விலங்கு - துன்பஞ்செய்யுங்கொடியமிருகங்கள். ஏற்றிழிவு - ஏற்றமும் இறக்கமும்; பெருமேடுபெரும்பள்ளங்கள். கவலைச்சின்னெறி - இதுவோ அதுவோ நேரான வழியென்று விசாரப்படத்தக்க (நிலையறியவொண்ணாத) சிலவழிகள். நிறைநீர்வேலி - நிறைந்தநீர்போலச் சுற்றிலுந்தோன்றுவது. பாலைநிலத்துக் கானல் நீர்போலக் காணப்படுவதை "கானகத்தியங்கியகழுதின்றேர்க்குலம், தானகத்தெழுதலாற்றலைக்கொண்டோடிப்போய், மேனிமிர்ந்தெழுந்திடல் விசும்புமேவமெனு, வானவர்க்கிரங்கிநீர்வளர்ந்ததொத்ததே" என்னுங் கம்பராமாயணத்தாலும் அறிக. நீந்தி - கடந்து. சூலம் - ஒருவகையாயுதம்; முத்தலைவேல்.

எசு. வலம்படக் கிடந்த வழிநீர் துணியின்

(இ - ள்.) அங்ஙனம் கவலைப்படுநெறியினுள் வலப்பக்கத்ததாய்க் கிடந்த வழியில் நீர் போகத்துணிவீராயி னென்று சொல்லக. நெறியருமைகூறிறான்.

எரு - அசு. அலர்தலை மராமு முலறுதலை யோமையும்
பொரியரை யுழிஞ்சிலும் புன்முளி மூங்கிலும்
வரிமரற் றிரங்கிய கரிபுறக் கிடக்கையு
நீர்நசைஇ வேட்கையின் மாநின்று விளிக்குங்
கானமு மெயினர் கடமுங் கடந்தா
லைவன வெண்ணெ லறைக்கட் கரும்புங்
கொய்பூந் தினையுங் கொழும்புன வரகுங்
காயமு மஞ்சளு மாய்கொடிக் கவலையும்
வாழையுங் கமுகுந் தாழ்குலைத் தெங்கு
மாவும் பலாவுஞ் சூழ்தீத் தோங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்று
மம்மலை வலங்கொண் டகன்பதிச் செல்லுமின்

(இ - ள்.) விரிந்த தலைதலையுடைய வெண்கடம்பும், உலறிய தலைகளையுடைய ஓமையும், பொரிந்த தாளியுடைய வாகையும், தண்டுமுளிந்த புற

க்காழாகிய மூங்கிலும், வரியையுடைய மரல் நீர்வற்றித் திரங்கிய கரிந்து கிடக்கின்றவிடங்களும், அவ்விடத்தே நீருண்டலைவிரும்பி அவ்விருப்பத்தாலே உழைமான் நின்று உளைக்குங் காடும், எயினருறையடுத்தவழியுமாகிய அவை கடத்தற்கரிய; அவற்றைக்கடந்துபோனால், அவ்விடத்து மலைச்சாரலில்விளையும் நெற்பயிரும் முதிக்கும்பருவத்தைத் தன்னிடத்துடைய கரும்பும் கொய்யும்பருவத்தையுடைய தினையும் வளவிய புனத்தில் விளைந்த வரகும் வெள்ளுள்ளியும் மஞ்சளும் அழகியகொடியையுடைய கவலையும் தலைதாழ்ந்த குலையையுடைய வரைவாழையும் கமுகும் தெங்கும் மாவும் பலாவுமென்னுமிவை தனக்குச் சுற்றெங்கும் சூழப்பட்டு ஓங்கிய தென்னனுடைய சிறுமலையென்னும் பெயரையுடைய மலை விளங்கித்தோன்றும்; அம்மலையை வலப்பக்கத்துக்கொண்டு இடப்பக்கத்து நெறியிற்சென்று மதுரையிற்புகுதி யென்று மென்க.

* உலறுதல் - தலைமுளிதல். உழிஞ்சில் - உன்னமுமாம். புல் - புறக்காழ். வரிமாற்றிரங்கியவென்பதற்கு - விலங்கு சுவைத்தலால் திரங்கியவென்றுமாம்; † "மரையா மரல்கவர" என்றாராதலின். எயினர் - மறவர். அறைக்கண் - வரைக்கண்ணுமாம். பூந்தினை - பொலிவினையுடையதினை. காயம் - வெள்ளுள்ளி. சிறுமலை - பெயர். அகன்பதி - மதுரை.

(அரு - உரை.) அலர்தலை - விரிந்ததலை. புன்முளிமூங்கில் - தண்டுலர்ந்தமூங்கில். கடம் - வழி. அறை - அறுத்தலையுடைய. கட்கரும்பு - கண்ணையுடையகரும்பு. காயம் - வெள்ளுள்ளி. சிறுமலையென்பது - ஒரு மலை. வலங்கொண்டு - வலத்திட்டு. அகன்பதி - மதுரை.

(கு - பு.) மாத்தலைக்குத்தலை - மேற்கிளைகள். உலறுதல் - காய்தல். ஓமை, வாகை - மரவகைகள்; ஓமை - காட்டுமாமரமென்றும், வாகை - காட்டுவாகையென்றுங்கூறுவர்; [காட்டுவாழையெனவழங்கும்.] மரங்களின் அடிப்பாகம் - கோழரை, பொகுட்டரை, பொரியரை, முள்ளரை என நால்வகைப்படும்; இவற்றுள், பொரியரை - பொருக்குவிட்டாற்போலவரை. தாள் - அடியிடம். தண்டு முளிந்த - நுனியிடம் உலர்ந்த. புறக்காழாகிய - வெளிவயிரம்பற்றியதான. வரி - கோடு. மரல் - ஒருவகைச்செடி: ஓர்கற்றாழையென்றுங்கூறுவர்: "மரைபா மரல்கவர மாரிவறப்ப, வரையோங்கருஞ்சுரத்தாரிடைச்செல்வோர்" எனக் கலித்தொகையில் வருவதனாலும் இது பாலைநிலவழிக்கருப்பொருளாத லறிக. திரங்கிய - ஒடுங்கியுள்ள. கரிகிடக்கைப்புறமெனமாறுக. கரிதல் - தீந்துபோதல். புறம் - இடம். நசை என நிற்பினும் செய்புனோசைகுன்றுதாயினும், விருப்பமெனப்பொருள்படும் நசையென்னும்பெயர்ச்சொல், விரும்பியென வினையெச்சப்பொருள்படும்பொருட்டு, வினையெச்சச்சொல்லாதற்கு, நசைஇ என அளபெடுத்தது; இது, சொல்லிசையளபெடை: "உரனசைஇயுள்ளந்துணையாகச் சென்றார், வரனசைஇயின்னுமுளேன்" என்றுந்திருக்குறளிற்போல. வேட்கை - இங்கே, தாகம். உழைமான் - மானின்சாதி; இங்கே, மான் - விலங்குப்பொதுப்பெயரன்று: ஒரு சாதிச் சிறப்புப்பெயர். உளைக்கும் - கூவி வருந்தும். எயினர் - பாலைநிலமாக்கள். ஐவன நெல் - மலைநெல். கண்ணகலுமென்பது, அரும்பதவுரை. இடமென்பது, விரிவுரை. பூ - அழகு; மலருமாம். தினை - மலைச்சாரலில் விளையும் ஒருவகைத்தானியம். வளவிய புனம் - செழிப்பானகாட்டுக்கொல்லை. கவலை - கவலைக்கிழங்கின்கொடி. வரைவாழை - மலைவாழை. தாழ்குலை என்பதனை வாழைமுதலிய பிறவற்

---

* அலறுதலெனவும் பிரதிபேதமுண்டு.

† கலித்தொகை, முதலாவது பாலை-டு.

றுக்குங் கூட்டுக. கமுகு - பாக்குமரம். உன்னம் - ஒருமரம். "புறக்காழனவே புல்லெனமொழிப, அகக்காழனவேமரமெனமொழிப" என்னுந் தொல்காப்பிய விதியால், 'புல், புறக்காழ்' என்றார். மூங்கில் அகக்காழ தன்றென்றும், அது புல்வகையிற்சேர்வதென்றுங் கூறுவார், இங்ஙனங்கூறினார். விலங்குசுவைத்தலால் - மிருகங்கள் உண்டுவிடுதலால். வரைந்த - கோடிட்ட.

அஎ - கஉ. அவ்வழிப் படரீ ராயி னிடத்துச்
செவ்வழிப் பண்ணிற் சிறைவண் டரற்றுந்
தடந்தாழ் வயலொடு தண்பூங் காவொடு
கடம்பல கிடந்த காடுடன் கழிந்து
திருமால் குன்றத்துச் செல்குவி ராயிற்
பெருமால் கெடுக்கும் பிலமுண்டு

(இ - ள்.) அங்ஙனமாகிய வலப்பக்கத்துநெறியைப் போகீராயின் இடப்பக்கத்துச் சிறையையுடையவண்டுகள் செவ்வழியாழ்ப்பண்ணினைப் பாடும் தாழ்ந்த தடத்தோடும் தாழ்ந்தவயலோடும் குளிர்ந்தபூங்காவினோடும் அருஞ்சுரங்கள்பலவும்இடைக்கிடந்த காட்டுநெறியையுங் கழிந்து திருமால்குன்றத்துச் செல்லக்கடவீராயின், அவ்விடத்தே மிக்க மயக்கத்தைக் கெடுக்கும் பிலத்துநெறி யுண் டென்றானென்க.

திருமால்குன்றம் - அழகர்திருமலை.

(அரு - உரை.) இடத்து - இடப்பக்கத்து. கடம் - பாலைநிலத்து வழி. திருமால்குன்றம் - அழகர்திருமலை.

(கு - பு.) போகீர் - செல்லாதீர். தாழ்ந்ததடம் - ஆழமானநீர்நிலைகள். தாழ் என்பதை மத்திமதீபமாகத் தடத்தோடுங் கூட்டினார். வயல் - கழனி. பூங்கா - பூமரச்சோலை. திருமால்குன்றம் - விஷ்ணுவின்மலை; திருமாலிருஞ்சோலைமலை. பிலம் - மலைக்குகைவழி.

கஉ. ஆங்கு—(இ - ள்.) அப்பிலத்திக்குள்ளே,

(அரு - உரை.) ஆங்கு - அப்பிலத்துவாய்.

கஙு - கஎ. விண்ணோ ரேத்தும் வியத்தகு மரபிற்
புண்ணிய சரவணம் பவகா ரணியோ
டிட்ட சித்தி யெனும்பெயர் போகி
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுள

(இ - ள்.) தேவர்களாலேத்தப்படுதலின் யாவரும் வியக்கத்தகும் மரபினையுடைய புண்ணியசரவணம் பவகாரணி இட்டசித்தியென்னும்பெயர் எங்கும் பரக்கப்பட்டு இடையறாத சிறப்பினையுடையவாய்த் தம்மிற்சேர்ந்திருக்கின்ற மூன்றுபொய்கைகளுளவென்றானென்க.

(அரு - உரை.) விட்டு நீங்காத - தம்மினீங்காத. முட்டாச்சிறப்பு - விசேடம். இந்தவிசேடம் எக்காலத்துமுள. மூன்றுள - மூன்றுபொய்கையுள.

(கு - பு.) ஏத்தல் - துதித்தல். வியக்கத்தகும்மரபு - அதிசயிக்கத்தக்க தன்மை. 'பெயர்போகி' என்பதை "ஏமாங்கதமென்றிசையாற்றிசை போயதுண்டே" என்றாற்போலக்கொள்க. 'பொய்கை - மானிடராக்காத நீர்நிலை' என்றார் ஆசிரியர் நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணியுரையில் "வண்டார் குவளைய வாவியும் பொய்கையும்" என்றவிடத்து.

௯௭. ஆங்கு—(இ - ள்.) அவற்றுள்,

௯௮ - ௯௯. புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநா லெய்துவிர்

(இ - ள்.) புண்ணியசரவணமென்றுசொன்ற பொய்கையின் ஆடுவீரா யின் இந்திரனாற்செய்யப்பட்ட ஐந்திரவியாகரணமென்னும் இலக்கணத் தை உணர்வீ ரென்று சொன்க.

இது, நினைவின்றிப்பெறும்பேறு. பொருந்துதல் - ஆடுதல். எய்துதல் - உணர்தல்.

(அரு - உரை.) விழுநால் - ஐந்திரவியாகரணம். எய்துவிர் - உணர் விர். பொருந்துதல் - ஆடுதல்.

(கு - பு) ஆடுதல் - நீராடல். விண்ணவர்கோமான் - தேவராசன். விழுநால - பெரியநூல், சிறப்புடையநூல்; விழு - விழுமமென்னும் உரிச் சொல்லின் விகாரம்: “விழுமஞ்சீர்மையுஞ் சிறப்புமிடும்பையும்” என்பது தொல்காப்பியம். விழுநால என்பதில் இக்காலத்து விழுந்துபோயுள்ள நூலென்றும் ஒருபொருள்தோன்றும். நினைவின்றிப்பெறும்பேறு - சிந்தனை யில்லாமலடையும்பயன். ‘அடைதலென்னும் பொருளுள்ள வினைப்பகுதிகள் அத்தைக்கும் அறிதலென்னும்பொருள்கொள்ளலாம்’ என்ற வடமொழிநியாய த்தாலும், எய்துதல் [அடைதல்] இங்கே அறிதலாயிற்று. ஐந்திரவியாகர ணம் - இதுவடமொழிவியாகரணங்களுள்ஒன்றென்பர்; “ஐந்திர நிறை ந்த தொல்காப்பியன்” என்பது தொல்காப்பியப்பாயிரம். புண்ணியசரவ ணம் - பரிசுத்தமான நாணற்காட்டினிடையிலுள்ளதெனக் காரணப்பெயர் போலும். விண்ணவர்கோமான் விழுநால் - தேவாதிதேவனான திருமா லால் உரைத்தருளப்பட்ட ஸ்ரீபாஞ்சராத்திரமுமாம்.

௧௦௦ - ௧௦௧. பவகா ரணிபடிந் தாடுவி ராயிற்
பவகா ரணத்திற் பழம்பிறப் பெய்துவிர்

(இ - ள்.) அதுவன்றிப் பவகாரணியென்னும் பொய்கைக்கண் ஆடுவீ ராயின் இப்பிறப்பிற்குக் காரணமாகிய பழம்பிறப்பை யுணர்வீ ரென்று சொன்க.

முன்னும்பின்னுமாகிய இருபிறப்பையும் உய்த்துணர்தற்குக் காரண மாகிய இப்பிறப்பிலே எப்பிறப்பையும் எய்தவுணர்வீ ரென்று சொல்லினு மமையும். இனிப் பவமென்பதனை விகாரமாக்கிப் பாவத்தான்வரும்பிறப் புக்களை யெனவுமாம்.

(கு - பு.) பவகாரணி - பிறப்புக்காரணத்தையுணர்த்துவதெனக்கார ணக்குறி. பிறப்புக் காரணகாரியத்தொடர்ச்சியாய் வருதலால், ‘பவகாரண த்திற்பழம்பிறப்பு’ என்றது. மூன்றுமுறைக்கு, இரண்டாம்பவம்-குறுக்கல்வி காரம். உய்த்துணர்தல - ஆராய்ந்தறிதல்.

௧௦௨ - ௧௦௩. இட்ட சித்தி யெய்துவி ராயி
னிட்ட சித்தி யெய்துவிர் நீரே

(இ - ள்.) அதுவன்றி இட்டசித்தியென்னும் பொய்கையின் ஆடுவீரா யின் நீர் நினைத்ததெல்லாம் எய்துதலையுடையீ ரென்று சொன்க.

இனி.எண்வகைச்சித்திகளையுந் தவஞ்செய்து வருந்திப்பெறுமல் நினைத் ததிப்பெறுவீ ரென்று சொல்லினு மமையும்.

(கு - பு.) இஷ்டஸித்தி - காரணப்பெயர். அஷ்டசித்தி - அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் எனபன: அவற்றுள், மிகவும் நுண்ணியதாதல், அணிமா; மிகவும்பருத்தல்,

மகிமா; மிகவுங்கனத்தல் - கரிமா; மிகவும் நொய்தாதல், லகிமா; வேண்டுவன அடைதல், பிராப்தி; குறைவின்றி நிறைவுள்ளவனுதல், பிராகாமியம்; யாவர்க்கும் மேம்பட்டிருத்தல், ஈசத்துவம்; எல்லாவற்றையுந்தன்வசமாக் கவல்லவனுதல், வசித்துவம்: இவை - அஷ்டஐசுவரியங்களெனவும்படும்.

கoச. ஆங்குப் பிலம்புக வேண்டுதி ராயின்

(இ-ள்.) அங்ஙனமாகிய அப்பிலத்திக்கண் புகுதலை விரும்புவீராயி னென்றா னென்க.

கoரு - கoஎ. ஓங்குயர் மலையத் துயர்ந்தோற் றொழுது
சிந்தையி லவன்றன் சேவடி வைத்து
வந்தனை மும்முறை மலைவலஞ் செய்தால்

(இ - ள்.) மிகவுமுயர்ந்த அத்திருமலைக்க ணுள்ள பெரியோன்சேவடிகளைக் கையாற்றொழுது மனத்தானினைந்து வாக்காற்றுதித்தலுடனே அம்மலையை மும்முறை வலஞ்செய்தா லென்க.

அத்து - சாரியை. வைத்தல் - நினைத்தல்—தியானம். வந்தனை - ஈண்டுத் துதித்தல். தொழுது வைத்து வந்தனையோடு வலஞ்செய்தா லென்க.

(அரு - உரை.) வந்தனை - வந்தனையோடே.

(கு - பு.) பெரியோன் - தன்னிலும்பெரியோரைஎவ்விதத்திலும்பெறுதமுழுமுதற்கடவுள்; திருமால். சேவடி - சிவந்தசீர்பாதம். தொழுது - அஞ்சலிசெய்துவணங்கி. முன்னே ‘தொழுது’ என வந்ததனுல்,பின்னே ‘வந்தனை’ என்றது - சொல்வணக்கமாகிய துதியாயிற்று. வலஞ்செய்தல் - பிரதக்ஷிணம்பண்ணுதல்.

கoஅ - ககக. நிலம்பக வீழ்ந்த சிலம்பாற் றகன்றலைப்
பொலங்கொடி மின்னிற் புயலைங் கூந்தற்
கடிமல ரவிழ்ந்த கன்னிகா ரத்துத்
தொடிவளைத் தோளி யொருத்தி தோன்றி

(இ - ள்.) பாதாளகங்கைக்கு மேலுள்ள நிலம் கூறுபடும்படி அறுத்துத் தாழ்ந்த * சிலம்பாறென்னும் அகற்சியையுடைய ஆற்றினது கரைக்கண்ணதாகிய விளக்கத்தையுடைய முகைகளவிழ்ந்த மலரையுடையதோர் கோங்கினிழற்கண்ணே ஓர் பொற்கொடிபோலவும் மின்போலவும் புயல்போலும் ஐவகைக்கூந்தலையும் வளைந்த தொடிபுனைந்த தோளினையுமுடையா ளொருத்தி தோன்றியென்க.

சிலம்பாறு - அவ்வியாற்றின்பெயர். தலை - இடம். இன்-உவமவுருபு. கன்னிகாரம் - கோங்கு. தொடி - வளைவு. ஒருத்தி - ஓரியக்கி.

(அரு - உரை.) சிலம்பாறென்பது - ஓராறு. அகன்றலை - அகன்றவிடம். பொற்கொடிபோன்ற ஒளியினையும் புயல்போலும் ஐங்கூந்தலினையுமுடைய தொடிவளைத்தோளாள் ஒருத்தி கன்னிகாரம்போலத் தோன்றி; கன்னிகாரம்போலவென்றார், மதாணியவிதலின். கோங்கடியிலேதோன்றியென்றுமாம்.

(கு - பு.) பாதாளகங்கை, போகவதியெனப்பெயர்பெறும்; “ஓதப்புனற்பொன்னினன்னிராங்கருலகளந்த, பாதத்தினீர்விண்டடியில மூன்றிலும் பால்புரைவெண், சீதந்தரங்கமந்தாகினியாகிச் செழுங்கங்கையாய், மேதக்கபோகவதியாகி நாளும் விழுகின்றதே” என்பதுகாண்க. பக-பிளவுபட. கடி - பலபொருளுணர்த்தும் உரிச்சொல். முகை - அரும்பு; மொக்கு என

* சிலம்பாற்றினை நூபுரகங்கையென்பர்.

வழங்கும். கோங்கு - ஓர்மரம். கன்னிகாரம் - கர்ணிகாரம்என்னும்வடமொழித்திரிபு. அரும்பதவுரையில், மதாணி - ஒருபூஷணம்; பதக்கம். புயல் - மேகம். ஐவகைக்கூந்தல்என்றது - மயிரை உச்சியில் முடித்தலாகிய முடியும், பக்கத்தில்முடித்தலாகிய கொண்டையும், பின்னேசெருகலாகிய சுருளும், சுருட்டிமுடித்தலாகிய குழலும், பின்னிவிடுதலாகியபனிச்சையுமெனப் பெண்கள் மயிர்முடியும்வகை ஐந்தாதலால்; இதுபற்றிக் கூந்தலுக்கு ஐம்பாலென்று ஒருபெயர்உண்டு: மணம், மது, மென்மை, நெய்ப்பு, கருமை என்னும் ஐந்துதன்மையையுடைய கூந்தலென உரைத்தலும் ஒன்று. தொடிபுனைந்த - தொடியென்னும் அணியை அணிந்த. தோன்றி - எதிரில்வந்து காணப்பட்டு. திருமால்உலகமளந்தகாலத்தில் மேலே சத்தியலோகத்திற் சென்ற அவரது திருவடியைப் பிரமன் தன்கைக்கமண்டலநீர்த்தத்தாற் கழுவிவிளக்க அக்காற்சிலம்பினின்றும் தோன்றிவந்த நதியாதலால், திருமாலிருஞ்சோலைமலையிலாற்றுக்குச் சிலம்பாறென்றுபெயர். மின்னின் என்பதில், இன் - ஒப்புப்பொருளது; இதனைப் பொலங்கொடி யென்பதோடும் இயைத்தார். அரும்பதவுரைகாரர்க்கு, இன் - சாரியை; மின்னின்என்பதில் சாரியைநிற்க இரண்டனுருபும் பொருளுந் தொக்கது. தொடிவளை - வளைந்ததொடி. வளை - தொடி. இயக்கி - யக்ஷமகள்.

ககஉ-ககஎ. இம்மைக் கின்பமு மறுமைக் கின்பமு
மிம்மையு மறுமையு மிரண்டு மின்றியோர்
செம்மையி னிற்பதுஞ் செப்புமி னியீரிவ்
வரைத்தாள் வாழ்வேன் வரோத்தமை யென்பே
னுரைத்தார்க் குரியே னுரைத்தி ராயிற்
றிருத்தக் கீர்க்குத் திறந்தேன் கதவெனும்

(இ - ள்.) அங்ஙனம் தோன்றினவள் இப்பிறப்பிற்கின்பமும், மறுபிறப்பிற்கின்பமும் இவையிரண்டுமொழிந்து எக்காலத்தும் ஒன்றுந்தன்மையாய்க் கேட்டமின்றி அழிவறநிற்குமின்பமு மாகிய பொருள்கள் யாவை? அவற்றை நீயிருரைமின்; யான் இத் * தாள்வரைக்கண்ணே வாழ்வேன்; வரோத்தமையென்று கூறப்படுவேன்; யான் வினவிய இவற்றை உரைத்தாருளராயின், அவர்க்கு எத்தொழிற்குமுரியேன்; ஆதலின், திருத்தக்கீர், உரைத்தீராயின், உமக்கு இப்பொழுதே இப்பிலவாயிற்கதவம் திறந்துதருவேனென்று சொல்லுமென்றுரைக்க.

இம்மைக்கின்பம் - புகழ்; மறுமைக்கின்பம் - புண்ணியம்; செம்மையினிற்பது - மோக்கம். இனி, ஒருவர்க்கு இம்மைமறுமைகட்கு இன்பத்தைத்தருது பூமியுள்ளளவும் நிற்பதுமாவது புகழ்; † "ஒன்றா வுலகத்........ தொன்றில்" எனவும், ‡ "இவணிசை யுடையோர்க் கல்ல தவணது, துயரில் புலகத் துறையு ளின்மை, விளங்கக் கேட்ட மாறுகொல்" எனவுங் கூறினாராகலின். கதவந்திறத்தற் குரியேனெனவுமாம். திறந்தேன் - காலமயக்கம்; விரைபொருட்கண்வந்தது.

---

* அடிமலையைப் பாதசைலமென்று வடநூலார் கூறுதலின், தாள்வரையென்றார். தாழ்வரையென்றும் பிரதிபேதமுண்டு.

† திருக்குறள், புகழ், ௩. "ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்றுது நிற்பதொன் றில்."

‡ புறநானூறு, ருo:— "மாசற விசித்த வார்புறு வள்பின், மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை, யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார், பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக், குருதி வேட்கை யுருகெழு முரச, மண்ணி வாரா வளவை யெண்ணெய், நுரைமுகந் தன்ன

(அரு - உரை.) இம்மைக்கின்பம் - பொருள். மறுமைக்கின்பம் - புண்ணியம். இரண்டுமின்றிச் செம்மையினிற்பது, வீடுபேறு. உரியேன் - தொழில்செய்வேன். இறந்தேனென்றது. விரைவு.

(கு - பு.) கோட்டமின்றி - நிலைமாறுதலில்லாமல்; முத்தியுலகத்தின் தன்மைஇனனதாதலை "சிறுகாலையிலாநிலையோதிரியா, குறுகாநெடுகாகுணம்வேறுபடா, வுறுகால்கிளர்பூதமெலாமுகினும், மறுகாநெறியெய்துவென்வானுடையாய்" என்னுங் கம்பராமாயணக்கவியாலும் உணர்க. தாள்வரை - மலையடிவாரம். வரோத்தமை - மேலானவர்க்கும் மேலானவளென்றுபொருள்படும். வினைய அவற்றை - கேட்ட. இவ்வினாக்களுக்கு ஏற்ற விடைகளை. திருத்தக்கீர்-மேன்மைமிக்கவரே; இது-திருத்தக்கார்என்பதன் விளி; ஈற்றயல்திரிந்தது - உருபு.மோக்கம் - மோக்ஷம். "ஒன்றாவுலகத்து" என்னும் மேற்கோளுக்கு- தனக்குஇணையில்லாததாக உயர்ந்த கீர்த்தியல்லது உலகத்து இறவாதுநிற்பது வேறொன்றுஇல்லை என்றும், "இவணிசை" என்னும்மேற்கோளுக்கு-இந்தஉலகத்திலே கீர்த்தியையுடையவர்களுக்கல்லாமல் (பிறர்க்கு) அவ்விடத்ததாகிய உயர்ந்த நிலைமையையுடைய உலகத்தில் தங்குதலில்லாமையைக் கேட்டவிதத்தாலேயோ என்றும் பொருள்; இவற்றில்முந்தின மேற்கோள் இம்மைப்பயனையும்,பிந்தினது மறுமைப்பயனையும்உணர்த்தும். புகழுடையார் இரண்டுபயனையும்ஒருங்கேஅடைதல் "நிலவரைநீள்புகழாற்றிற்புலவரைப், போற்றாதுபுத்தேளுலகு" என்னுந்திருக்குறளினும், "புலவர்பாடும்புகழுடையோர்விசும்பின், வலவனேவாவானவூர்தி, யெய்துபவென்பதஞ்செய்வினைமுடித்து" என்னும் புறநானூற்றினும் விளங்கும். இறந்தேன்—இந்தக்காலவழுவமைதிக்குவிதி, "வாராக்காலத்து நிகழுங்காலத்து, மோராங்குவருஉம் வினைச்சொற்கிளவி, யிறந்தகாலத்துக்குறிப்பொடுகிளத்தல், விரைந்தபொருளவென்மனார் புலவர்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரம்; [நன் - பொது - ௩௩.]

ககஅ-கஉ௩. கதவந் திறந்தவள் காட்டிய நன்னெறிப்
புதவம் பலவுள போகிடை கழியன
வொட்டுப் புதவமொன் றுண்டத னும்பர்
வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி
யிறுதியி லின்ப மெனக்கீங் குரைத்தாற்
பெறுதிர் போலுநீர் பேணிய பொருளெனும்

(இ - ள்.) அவருரைப்பின், அவள் கதவைத்திறந்து இதுவென்று காட்டிய நல்லவழியில் நீண்ட இடைகழிவாயில்கள் பலவுள; அவைகழித்தால் இரட்டைக்கதவையுடையதோர் வாயிலொன்று உண்டு; அதற்குமேலாகச் சென்றால் வட்டிகையிலே யெழுதின பாவை போல்வா ளொருத்தி வெளிப்

மென்பூஞ் சேக்கை, யறியா தேறிய வென்னைத் தெறுவர, விருபாற் படுக்குநின் னொளிவா ளொழித்ததை, யதுவுஞ் சாலுமற் றமிழ்முழு தறித, லதனொடு மமையா தணுக வந்துநின், மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென, வீசி யோயே வியலிடங் கமழ, விவணிசை யுடையோர்க் கல்ல தவண, துயர்நிலை யுலகத் துறையு ளின்மை, விளங்கக் கேட்ட மாறுகொல், வலம்படு குரிசினீ யீங்கிது செயலே." திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி. சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை, முரசுகட்டிலறியாதேறிய மோசிகீரனைத் தவறுசெய்யாது அவன்றுயிலெழுந்துணையும் கவரிகொண்டுவீசியானை மோசிகீரனார்பாடியது. [இப்பாட்டே இந்திரவிழவூரெடுத்தகாதையில் முரசுகாட்கோடற்கு உதாரணமாக அடியார்க்குநல்லாராற்காட்டப்பட்டது.]

பட்டு, ஈறில்லாத இன்பம் யாது? அதனை உரைத்திராயின் நீயிர் இம்முப் பொருளினும் விரும்பியபொருளைப் பெறவீ ரென்று மென்று மென்க.

புதவம் - வாயில். போகு - நெடுமை. ஒட்டுப்புதவம் - இரட்டைக் கதவம். உம்பர் - மேல். பூங்கொடி - உவமப்பெயர். அன்றித் தவாரவட் டிகையிற் பூங்கொடி அப்பனங்கேட்கு மெனவுமாம். இறுதியிலின்பம் - வீடு. பெறுதிர் - முன்னிலைப்பன்மை. போலி - ஒப்பில்போலி.

(அரு - உரை.) போகிடைகழியன - நீண்ட இடைகழியி லுள்ளன. ஒட்டுப்புதவம் - இரட்டைக்கதவம். வட்டிகையினெழுதிய கொடிபோல் வாள். இறுதியிலின்பம் - வீடு. பேணியபொருள் - மூன்றினுளொன்றுய் நினைத்த காரியம்.

(கு - பு.) இடைகழி - கதவுவிட்டுப்புகும்வழி. வட்டிகை - சித்திரம். பாவை - பிரதிமை. ஈறில்லாத இன்பம் - நிரதிசயானந்தம். முப்பொருள் - முற்கூறிய மூன்றுபொய்கை. பூங்கொடி - உவமவாகுபெயர். கொடி - பெண்ணுக்கும், பூ - அவளவயவங்களுக்கும் உவமையாம். "ஒப்பில்போலியுமப்பொருட்டாகும்" என்றுந்தொல்காப்பியவிதியால், போலு மென்பது உரையசைப்பொருளதாய் நின்றது; ஒப்பில்போலியாவது - ஒன்றற்கொன்று ஒக்குமென்னும் பொருள் தன்கண் இன்றிவரும் போலி யென்னுஞ் சொல்.

கஉச-கஉரு. உரையீ ராயினு முறுகண் செய்பே
னெடுவழிப் புறத்து நீக்குவ னும்மெனும்

(இ - ள்.) விருபவள், யான்வினுயதனை நும்பேதைமையான் உரையீராயினும் நும்மை வருத்தஞ்செய்பேன்; நீர் போகக்கடவ நெடுநெறிக்கண்ணே நும்மைப் போக்குவ லென்று மென்று மென்க.

(அரு - உரை.) நெடுவழிப்புறம் - நீங்கள்போகின்ற பெருவழியிடம்.

(கு - பு.) பேதைமை - அறியாமை. போக்குவல் - செலுத்துவேன்.

கஉசு-கஉஎ. உரைத்தா ருளரெனி னுரைத்த மூன்றின்
கரைப்படுத் தாங்குக் காட்டினள் பெயரும்

(இ - ள்.) அவள் அப்பனங்கேட்டபொருளை உரைத்தா ருளராயின், முற்கூறப்பட்டபொய்கைமூன்றின்கணக்கட்செலுத்தி அவை இவையெ ன்றுகாட்டி மீளு மென்று மென்க.

ஆங்கு - அசை.

கஉஅ-கஙஉ. அருமறை மருங்கி னைந்தினு மெட்டினும்
வருமுறை யெழுத்தின் மந்திர மிரண்டு
மொருமுறை யாக வுளங்கொண் டோதி
வேண்டிய தொன்றின் விரும்பினி ராடிற்
காண்டகு மரபின வல்ல மற்றவை

(இ - ள்.) ஓதவும் உணரவு மரிய மறையிடத்தனவாகிய ஐந்தாலும் எட்டாலும் வரு முறைமைப்பட்ட எழுத்தினையுடைய * மந்திரமிரண்டையும் ஒருதன்மையாக மனத்தானினைத்து வாக்காற்றுதித்து அவற்றுள் வே

* மந்திரமிரண்டையும் முறையே பஞ்சாக்கரமென்றும், அட்டாக்கர மென்றுங் கூறுவர் அரும்பதவுரையாசிரியர்.

ண்டிபதியாதொன்றுஅதனில் விரும்பினிரா யாடின், அவற்றின்பயனையவை தங்களைச் செய்தோர்க்கும் காணத்தரும் மரபினையுடையவல்லவென்று னென்க.

இனி, அங்ஙனமாகிய பொய்கைகளின் பயனை விரும்பினிராய் ஒன்றினை டின் அதன்பயனை நுகர்ந்தநெஞ்சம் பிறிதொன்றினையும் காதலியா தென்று மாம். இன்னும், மற்றவைகாண்டகுமரபினவல்லவென்பதற்கு- இவையொழிந்ததீர்த்தங்கள் இவைபோலக் கைம்மேற் காணத்தரும் மரபினையுடைய வல்ல வெனினு மமையும்.

(அரு - உரை.) ஐந்தும் எட்டுமாவன - பஞ்சாக்கரம் அட்டாக்கரம். வேண்டியதொரு பொய்கைக்கண் ஆடினால் ஏனைய இரண்டும் தோன்றுமரபினவல்ல.

(கு - பு.) மறை - வேதம். மந்திரமென்பது மறைபொருளாதலின், இங்குக்காட்டப்படவில்லை. மூதலாவதுரைக்கு, மற்று - அசை. நுகர்ந்த - அனுபவித்த. காதலியாது - விரும்பாது. கைம்மேற்காணத்தரும் - உடனே பயன்தரும்.

கஙஙு - கஙஅ. மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்று மரைத்தா ளுள்ளம் பொருந்துமி
னுள்ளம் பொருந்துவி ராயின் மற்றவன்
புள்ளணி நீள்கொடி புணர்நிலை தோன்றுந்
தோன்றிய பின்னவன் றுணைமலர்த் தாளிணை
யேன்றுதுயர் கெடுக்கும்

(இ - ள்.) அங்ஙனமாகிய பொய்கைகளின் பயனை விரும்பீராயின், அவற்றை நினையாதே அம்மலைமீதுநின்றோனுடைய பொலிவுபொருந்திய தாமரைமலர்போலும் தாள்களை நினைமின்கள்; அங்ஙனநினைப்பீராயின், அப்பொழுதே அவனது கருடப்புள்ளெழுதிய கொடித்தண்டு பொருந்திநிற்கும் நிலையிடத்தைக் காண்பீர் ; கண்டவளவிலே அவன்திருவடிநிலை நும்மை எடுத்துக்கொண்டு பிறவித்துன்பத்தைக் கெடுக்கு மென்றுனென்க.

நீயிர் ஆண்டுச்சென்று அதுகாண்பீரென்பான், தோன்று மென்றான். கெடுக்கும் - முற்று.

(அரு - உரை.) உள்ளம்பொருந்துமின் - நினையுங்கோள். புள்ளணி நீள்கொடி நின்ற நிலைமை தோன்றும். கொடிபுணர்நிலை - கொடிமரநிற்குந் திருவாசலுமாம். துணைமலர்த்தாமரை - திருவடி. கெடுக்குமென்பது - முற்று. (கெடுத்தால்) இன்பமெய்தியென ஒருசொல்வருவிக்க.

(கு - பு.) நின்றோன் - கடவுள்; அழகர். தாள் - திருவடி. புள்ளணி நீள்கொடி-துவஜஸ்தம்பம்; கருட கம்பம். புள் என்னும் பறவைப்பொதுப் பெயர், இங்குச்சிறப்பாய், பக்ஷிராஜனை கருடனை உணர்த்திற்று. அவன்துணைமலர்த்தாளிணை - அவ்வெம்பெருமானது ஒன்றோடொன்று ஒத்த [வேறு ஒப்புமையில்லாத] உபயதிருவடித்தாமரைமலர். மற்று-பின்பு. ஏன்று - அங்கீகரித்து.

கஙஅ - சஙக. இன்ப மெய்தி
மாண்புடை மரபின் மதுரைக் கேகுமின்

(இ - ள்) அங்ஙனம் அதுகாண்டலின் பின்னர்ப் பரமபதத்திற்குச்சேறலும்மெய்யென்று இன்பமெய்தி மாட்சிமைபொருந்திய மரபினையுடைய மதுரைக்குச் செல்மின்க ளென்று னென்க.

(கு - பு.) அரங்காண்டலின் - எம்பெருமானது திருவடிகளைத் தரிசித்ததனால். பின்னர் - இறந்த இப்பிறப்பை ஒழித்தபின்பு. பரமபதம் - எல்லாப்பதவிகளினும் மேலான இடம். சேறல் - செல்லுதல். இன்பமெய்தி - சீவன்முக்தனாகியென்றவாறுமாம். மாட்சிமை - பெருமை. மரபு - பழமையான தன்மை.

௧௪0. காண்டகு பிலத்தின் காட்சி யீது

(இ - ள்.) கண்கூடாகக் காணத்தகும் பிலத்தின் தன்மை இத்தன்மையாயிருக்கு மென்று ரைக்க.

(கு - பு.) கண்கூடு - பிரதிபக்ஷம். காட்சி - நிலைமை. ஈது - இது;விகாரம்.

௧௪0 - ௧௪௮. ஜூங்

கர்நெறிப் படரீ ராயி னிடையது
செந்நெறி யாகுந் தேம்பொழி லுடுத்த
ஊரிடை யிட்ட காடுபல கடந்தா
லாரிடை யுண்டோ ராரஞர்த் தெய்வ
நடுக்கஞ் சாலா நயத்திற் றோன்றி
யிடுக்கண் செய்யா தியங்குநர்த் தாங்கு
மடுத்துடன் கிடக்கு மதுரைப் பெருவழி
நீணிலங் கடந்த நெடுமுடி யண்ணல்
றாடொழு தகையேன் போகுவல் யானென

(இ - ள்.) அத்தன்மையவாகிய இரண்டு பக்கவழிகளிற் போகீராயின், இடைப்பட்டநெறி செவ்வியநெறி; அதனிடத்து இனிய பொழில்சூழ்ந்த ஊரும் ஊர்களை இடையிட்ட பலகாடுங் கடந்தாற் கடத்தற்கரியதோர் மிக்கவழிக்கண் மிக்கதுயரைத்தருவதோர் தெய்வமுண்டு; அத்தெய்வம் தோன்றி வழிப்போவாரை இடுக்கண்செய்யாது; செய்வதியாதெனின், நடுக்கஞ்சாலாநயத்தாலே போவார்போக்கைத் தடுக்கும்; அங்ஙனமாகிய அதனைக்கடந்தபின், அப்பெருவழி போவார்யாவர்க்கும் முகஞ்செய்துகிடக்கும்; ஆதலால் நீயிருஞ்சென்மின்; யானும் நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் தாள்களைத் தொழுதகையை யுடையே னாகிப் போகுவ லென்ன வென்க.

தாங்கும் - தடுக்கும். மடுத்துடன்கிடக்கும் - இம்மூன்றுவழியும் ஒருபடிப்பட முகஞ்செய்துகிடக்கு மெனினு மமையும்.

(அரு - உரை.) செந்நெறி - செவ்வியவழி. ஆரஞர்த்தெய்வம் - வருத்தத் தெய்வம். இயங்குநர்த்தடுக்கும் - வழிபோவாரைப் போக்குவிலக்கும். இவ்வகைச் சென்றுகிடக்கும்.

(கு - பு.) இடைப்பட்டநெறி - நடுவிலுள்ளவழி. செவ்வியநெறி - நேரானவழி. ஊர்களையிடையிட்ட - ஒருரிலிருந்து மற்றோரூருக்கு நடுவிலுள்ள. ஆரஞர் - வினைத்தொகை; ஆர்தல் - மிகுதல்: பண்புத்தொகையாய், நீங்குதற்கரியதுன்பமுமாம். இடுக்கண் - வருத்தம்; கண்இடுங்குதற்கு ஏதுவாவதெனக் காரணக்குறியென்பர்: இடுங்குகண், இடுக்கண். நடுக்கஞ்சாலாநயம் - அச்சந்தருதலில்லாத அநுகூலமானவழி. இயங்குநர், ந் - பெயரிடைநிலை; உயர்திணையில் இரண்டனுருபுதொக்கது. முகஞ்செய்து - நேர்மையாய். நீணிலங்கடந்த நெடுமுடியண்ணல் - நீண்டநிலவுலகத்தை (த்திரிவிக்கிரமாவதாரத்தில் திருவடியால்) அளவிட்ட நீண்டகிரீடத்தையுடைய தலைவன்; திருமால். கடந்தஅண்ணல், முடியண்ணல் எனஇயையும். நீணிலங்கடந்த அண்ணல் - நீண்ட இவ்வுலகசம்பந்தத்தைக் கடந்த பெருமான்

என்றுமாம். (விசுவரூபத்தில்) நீண்ட எல்லாவுலகத்தினும் மேலோங்கின சிறந்த கிரீடத்தை யுடையானுமாம். நெடுமுடி - எல்லாவுயிர்களுக்கும் இவனே தலைவனாதல் தோன்ற இருக்குந் திருவபிஷேகம். தொழுதனை - எதிர்காலவினைத்தொகை; வணங்கவேண்டுந்தன்மை. போகுவல் - போவேன். என்ன - என்றுசொல்ல. அடுத்து என்று ஒருஉரை.

கரு0 - கருக. மாமறை யோன்வாய் வழித்திறங் கேட்ட
காவுந்தி யையையோர் கட்டுரை சொல்லும்

(இ - ள்.) அங்ஙனம்போகுவலென்ற மூதமறையோன்வாக்கால் வழியின்திறங்களைக்கேட்ட கவுந்தியடிகள் ஓர்பொருள்பொதிந்தவுரையை உரைக்கும்; அஃதியாதெனின்,—

(கு - பு.) காவுந்தி - நீட்டல்விகாரம். ஐயை - தலைவி, தவப்பெண்: ஐயனென்பதன் பெண்பால்; ஆர்யாஎன்னும் வடசொல்லின் திரிபு.

கருஉ - கசுச. நலம்புரி கொள்கை நான்மறை யாள
பிலம்புக வேண்டும் பெற்றியீங் கில்லை
கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கை விளங்கக் காணா
யிறந்த பிறப்பி னெய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணா யோநீ
வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ வெய்தா வரும்பொருள்
காமுறு தெய்வங் கண்டடி பணிய
நீபோ யாங்களு நீணெறிப் படர்குது
மென்றம் மறையோற் கிசைமொழி யுணர்த்திக்
குன்றாக் கொள்கைக் கோவலன் றன்னுட
னன்றைப் பகலோ ரரும்பதித் தங்கி

(இ - ள்.) நல்லொழுக்கத்தைப்புரிந்த கோட்பாட்டையுடைய மறைவல்லவனே, தேவர்களினும்வைத்து ஆயுக்கற்பத்தினை மிகவுடைய இந்திரன்தோற்றுவித்த வியாகரணத்தினை எம்முடைய அருககுமரனருளிச்செய்த பரமாகமங்களிற் காண்கின்றிலையோ? அஃதுளதாக, நின் புண்ணியசரவணம்பொருந்துதல்வேண்டா; அஃதன்றி முற்பிறப்பிற்செய்தவற்றை இப்பிறப்பிற் காண்கின்றிலையோ? ஆகலான் நின்பவகாரணி படியவேண்டா ; அஃதன்றி வாய்மையும் கொல்லாமையு மென்னும் இரண்டினையும் வழுவாதோம்புவார்க்குக் கடைகூடாதிருக்கும்பொருள் யாவதுமில்லை: ஆகலின்,நின் இட்டசித்தியெய்துதல்வேண்டா ; இவை இங்ஙனம்பெறுதலின், பிலம்புகவேண்டுமுறைமை எங்கட்கில்லைகாண்; நீ காமுற்றுவந்ததெய்வத்தைச் சென்று கண்டு அடிபணிதற்குப் போவாயாக; யாங்களும் எங்கட்கு ஏற்றநெறியே செல்வோமென்று அந்தமறையோனுக்குப் பொருந்தவனவாகிய மொழிகளை யுணர்த்திக் குன்றாத ஒழுக்கத்தினையுடைய கோவலனுடனே அற்றைநாள் தங்குதற்கரியதோர்பதியில் தங்கி யென்க.

நலம்புரிகொள்கை நான்மறையாள - இகழ்ச்சி. கற்பமென்பதனைப் பிராகிருதத்தாற் கப்பமென்றார். தேவர்களிடைச்சென்று கற்பிக்கு மிந்திரனென்றுமாம். மெய்ப்பாட்டியற்கை - பரமாகமம். அதில் ஐந்திரவியாகரணங்காணலாம். நூலினையென்னுமுருபு தொக்கது. இந்தப்பிறப்பில்நுகர்வன முற்பிறப்பிற்புரிந்த வினைப்பயனென்பது கருத்து. 'வாய்மை...பொ

றன்.'—*"யாமெய்யா... ...பிற" எனவும், †"கொல்லான்........தொழும்" எனவும் உட்கொண்டவா றெனக் கொள்க. இனி, காமுறுதெய்வம் - காமமுறாந்தெய்வம்; எனவே, காமக்குரோதாதிகளெல்லாமுடைய தெய்வமென்பதூஉ மாயிற்று; கண்டு - கண்டுவைத்துமென்க.

(அரு - உரை.) கற்பம் - கப்பமெனகின்றது; பிராகிருதம். மெய்ப்பாட்டிபற்கை - பரமாகமம்; பரமாகமத்தில் இந்திரன்நூல்காணலாம்.

(கு - பு.) புரிந்த - விரும்பின. கொள்கை - எண்ணம். நான்மறை - இருக்குமுதலியன. கற்பம் - கல்பம்; வடசொல்: நீண்டஆயுள். வாய்மை - சத்தியம். வழாது - தவறாமல். மன்னுயிர் - உலகத்தில் நிலைபெற்ற உயிர். ஓம்புநர் - காப்பவர். யாவது - யாது; விரித்தல். எய்தாஅரும்பொருள் - கிடைக்காத அரியபொருள். காமுற்று - விரும்பி. அடிபணிய - பாதம்வணங்க. "யாமெய்யாக்கண்டவற்றுளில்லையெனைத்தொன்றும், வாய்மையினல்லபிற," "கொல்லான்புலாலைமறுத்தானைக்கைகூப்பி, யெல்லாவுலகுந்தொழும்" இவைதிருக்குறள். குரோதம் - கோபம். ஆதி - லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன; இவை,அறுபகையெனப்படும்.காமுறுதெய்வம் - மோக்ஷபலனைக் கொடுக்காமல் காமியபலனைக் கொடுப்பதெனவுமாம்.படர்குதும் - தன்மைப்பன்மை யெதிர்காலமுற்று; கு - சாரியை. பகல் - இலக்கணையாய்த் தினத்தைக் குறித்தது.

கசுரு-கஎ0. பின்றையு மவ்வழிப் பெயர்ந்துசெல் வழிநாட்
கருந்தடங் கண்ணியுங் கவுந்தி யடிகளும்
வருந்துசெல் வருத்தத்து வழிமருங் கிருப்ப
விடைநெறிக் கிடந்த வியவுக்கொண் மருங்கிற்
படைநெறிப் போயோர் பொய்கையிற் சென்று
நீர்நசை வேட்கையி னெடுந்துறை நிற்ப

(இ - ள்.) அன்றைப்போலப் பின்பும் தங்கி அப்பதியினின்றும் பெயர்ந்துசெல்கின்ற பின்னாள் கரிய பெரிய கண்ணையுடையாளும் கவுந்தியடிகளும் வழிநடைவருத்தத்தினாலே வழிப்பக்கத்தே யிராநிற்க, முற்கூறிய இடைநெறிகிடந்த செலவைக்கொண்ட பக்கநெறியைக் கடந்துபோய் ஓர்பொய்கைக்கரையிற்சென்று நீரையுண்டல்விரும்பிய வேட்கையோடே கோவலன் ஒரு பெரிய துறையிடத்தே நின்றானாக வென்க.

பின்றை - பின்னை. வழிநாள் - மற்றைநாள். வருந்து - வழி. இடைநெறி - நெறியிடையென்றமாறிநுமமையும். இயவு - செலவு. நீர்நசைவேட்கை - நீர்மேன்மிகவிருப்பம். இது கூறவே பாலைத்திணையின்தன்மைச் சிறப்புமாயிற்று.

(அரு - உரை.) இடைநெறி - முன்சொற்றவழி மூன்றிலும் நடுவில் வழி; நெறியிடையிலே யென்றுமாம். இயவுக்கொள் - செலவுகொண்ட.

(கு - பு.) கருந்தடங்கண்ணி - கண்ணகி. வருந்து - வழியாதலை "வருந்தின்வசவரிவதிந்ததில்வனம்" எனக்கம்பராமாயணத்திலுங்காண்க. நீர்நசை வேட்கை - பெருந்தாகம். துறை - நீர்த்துறை. மிகுந்ததாக முண்டாக்குதல், பாலைநிலத்தியற்கை.

கஎக - கஎநு. கானுறை தெய்வங் காதலிற் சென்று
நயந்த காதலி னல்குவ னிவனென
வயந்த மாலை வடிவிற் றோன்றிக்
கொடிநடுக் குற்றது போல வாங்கவ
னடிமுதல் வீழ்ந்தாங் கருங்கணீர் உகுத்து

* திருக்குறள், வாய்மை, கு0. † திருக்குறள், புலான்மறுத்தல், கு0.

(இ - ள்.) அம்மறையோன்கூறிய ஆரணர்த்தெய்வமாகிய வனதெய்வம் தனது காதல்மிகுதியாற் சென்று கூடக்கருதி மாதவிமேல் நயந்த காதலால் நம்மேல் இவன் அன்புறுவனென் றெண்ணி அவள்தோழியாகிய வசந்தமாலையது வடிவைக் கொண்டு வந்து வெளிப்பட்டு ஒருகொடி காற்றால் நடுக்கமுற்ற தென்னும்படி அவனுடைய தாளிணைக்கண்ணே வீழ்ந்து பொய்க்கண்ணீரை யுகுத் தென்க.

அருங்கண்ணீர் - அன்பின்மையின் உகுத்தமை தோன்ற நின்றது. சென்று தோன்றி வீழ்ந்து உகுத் தென்க.

(அரு - உரை.) நயந்தகாதலுடையளாதலால், யான்சொல்லுகின்றவதற்கு இவன் நல்குவா னென.

(கு - பு.) மாதவி - ஒருபாத்தை. நயந்தகாதல் - விரும்பினஆசை. வசந்தமாலை - மாதவிதோழி; கூனியென்றும் இவளுக்குப் பெயருண்டு. வயந்தம் - வடசொல்விகாரம். அடிமுதல, மூதில் - ஏழனுருபு. உகுத்து - பிறந்தி.

௧௭௬ - ௧௭௯. வாச மாலையி னெழுதிய மாற்றந்
தீதிலேன் பிழைமொழி செப்பினை யாதலிற்
கோவலன் செய்தான் கொடுமையென் றென்முன்
மாதவி மயங்கி வான்றுய ருற்று

(இ - ள்.) இனி மாதவிகூற்றாகக் கொண்டுகூறுகின்றவள், வாசத்தையுடையமாலையினெழுதிய ஓலைப்பாசுரத்தில் தவறுடையேனல்லேன்; நீ கூறிய மாற்றங்களிற் சிலதவறுண்டுபோலும்; அதனானன்றே கோவலன் எனக்குக்கொடுமைசெய்தானென்று என்முன்னே மாதவி மயங்கிவீழ்ந்து மிக்கதுயரமுற் றென்க.

(கு - பு.) மாற்றம் - வார்த்தை. கொடுமை - வெறுத்துப்பிரிதல். மாதவியென்னும் வசந்தகாலமல்லிகைக்கொடியின்பெயர், அதுபோல் மெல்லிய அழகிய நறுமணமுள்ள விரும்பத்தக்க ஒருபெண்ணுக்கு உவமைபற்றிவைக்கப்பட்ட பெயர்போலும். நெஞ்சறிய வேறுகாதலனிடத்து வேட்கைகொள்ளாதமாதவியைக் கோவலன்மாறுபாடாகஎண்ணிவெறுத்துப் பிரிந்துவந்துவிட்ட அன்றைத்தினத்து மாலைப்பொழுதில் மாதவி பிரிவாற்றாமையால் மிகவருந்தி ஒருசிறந்த பூமாலையின் நடுவிலேவைத்துத் தொடுக்கப்பட்டுள்ள தாழம்பூவின் றொலையிலே சிறுசண்பகத்தின்பேரரும்பாகிய எழுதுகோலை எடுத்து அதனைச்செம்பஞ்சுக்குழம்பில்தோய்த்து உதறிச் சிலபாசுரங்களை எழுதி அத்திருமுகத்தை வசந்தமாலையென்னுந் தனது தோழியின்கையிலே கொடுத்து அவளைக் கோவலனிடஞ் சென்றுபேசி அவனைச்சமாதானப்படுத்தி இப்பொழுதே அழைத்துவரும்படி அனுப்ப, அவளும் அங்ஙனமே அதனைக்கோவலனிடம் வந்துகொடுக்க, கோவலன் நாடகக்கணிகையினது புறநடனச்செய்கைகளை யெல்லாங் கூறி அத்திருமுகத்தை மறுத்துவிட, தோழி மிகுந்த வருத்தத்தோடு விரைந்து சென்று தலைவிக்குச்செய்தியைக் கூறிப்போயினளென்பது கீழ்வேனிற்காதையிற் கூறப்பட்ட வரலாறாதலால், இங்கே இங்ஙனங்கூறப்பட்டது; இதனை வனதேவதை தனது ஞானத்தால் உணர்ந்து கூறலுற்றது.

௧௮௦ - ௧௮௭. மேலோ ராயினு நூலோ ராயினும்
பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட் டொழியுங்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்மெனச்
செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்கண்
வெண்முத் துதிர்த்து வெண்ணிலாத் திகழுந்
தண்முத் தொருகாழ் தன்கையாற் பரிந்து

துனியுற் றென்னையுந் துறந்தன ளாதலின்
மதுரை மூதூர் மாநகர்ப் போந்தது
எதிர்வழிப் பட்டோ ரெனக்காங் குரைப்பச்
சாத்தொடு போந்து தனித்துய ருழந்தேன்
பாத்தரும் பண்பநின் பணிமொழி யாதென

(இ - ள்.) முனிவரும் கற்றோரும் அல்லாது நன்மைத்தன்மையறிவோரும் இதனெஞ்சையொறுக்கும்பிணியென்று உட்கொண்டு முகம்பாராது விடுக்கப்பட்ட இப்பொதுமகளிருடைய செய்தொழில் கடையானதொழிலென்று சொல்லித் தனது சிவந்த அரிபரந்த வளவியகடையையுடைய கண்களால் வெண்முத்தத்தைச்சொரிந்து விரும்பி முலைக்குப்பூட்டிய வெள்ளிய நிலாவிளக்கும் குளிர்ந்ததனிமுத்துவடத்தையும் வெறுத்துப் பூட்டிய தன்கையாற்பரிந்து சிந்தித் துறவாவென்னையுந்துறந்தனள்; ஆதலான் நீங்கள் மதுரையென்னு மூதூராகிய நகரைநோக்கிப் போந்ததனை வழியிலெதிர்ப்பட்டோர் எனக்குரைத்தலானே * வாணிகச்சாத்தொடுபோந்து தனிமையால் யான்துயருழந்தேன்; பகுத்தலரிய பண்பையுடையோனே, அதற்கு நீயருளிச்செய்யுமாற்றம் யாதென்று கேட்ப வென்க.

பிறக்கிடுதல் - பின்னிடுதல்; ஆவது, முகம்பாராமை. வாழ்க்கை - பொய்த்தொழில். ஏகாரம் - தேற்றம். போன்ம் - போலும்; † "செய்யுளிறுதிப் போலி மொழிவயின், னகார மகார மீரொற் றாகும்" என்பதனாற்கொள்க. மேலோர் - முனிவர். நூலோர் - கற்றோர். பால்வகைதெரிந்த பகுதியோர் - மதிநுட்பமுடையோர்.

(அரு - உரை.) மேலோர் - அருந்தவர். நூலோர் - கற்றோர். பால்வகைதெரிந்தபகுதியோர் - ஓதாது நன்மைதீமையறிவோர்; ஞாதிகளில் உயர்ந்த கூற்றோ ரென்றுமாம். பிறக்கிடுகை - பின்னிடுகை; என்றது, முகம் பாராமை. அவர்கள் இது பிணியெனக்கருதிக் கழிந்து போங் கணிகையர். பாத்தரும் பண்ப-பகுத்தலரிய பண்பனே; என்றது, பிறர்க்கில்லாதபண்பு.

(கு - பு.) பகுதி - பகுப்பு; நன்மைதீமைகளைப் பகுத்தறியும் விவேகம்: அதனையுடையோர் - பகுதியோர். பிணி - நோய். அரி - இரேகை; உத்தமலக்ஷணமாகவுள்ளது. வாளியகடை - அழகிய கண்ணின் நுனியிடம்; கட்கடை - கடாக்ஷமெனப்படும். மழைக்கண் - மழைபோலக்குளிர்ந்தகண்.
வெண்முத்தத்தைச்சொரிதல் - வெண்மையான நீர்த்துளிகளைச் சிந்துதல். பரிந்து- அறுத்து, பெருக்கி. துனி-வெறுப்பு. துறவா-விடத்தகாத. மூதூர்-பழமையான ஊர். வாணிகம் - வியாபாரம்; வாணிஜ்யம் என்னும் வடமொழித் திரிபு. பகுத்தலரியபண்பு- நீக்கமுடியாத நற்குணம். துயருழந்தேன்-துன்பத்தில் முழுகினேன். போலுமென்னுஞ் செய்யுமென்முற்று, ஈற்றுமிசையுகரம் மெய்யொழித்துக்கெட்டு லகாரந்திரிந்து நின்றது; [நன் - வினை. ௨௨.] இங்கே இது நுப்பின்போல். "செய்யுளிறுதி" என்னுஞ்சூத்திரத்துக்கு- செய்யுளிற் போலுமென்னுஞ்சொல்லினிறுதியில்னகாரமும்மகாரமும் ஈரொற்றுடனிலையாய்நிற்குமென்றுபொருள்.

௧௯௯ - ௨௦௦. மயக்குந் தெய்வமிவ் வன்காட் டுண்டென
வியத்தகு மறையோன் விளம்பின னாதலின்

* வாணிகச்சாத்து - வாணிகஞ்செய்வோர்திரள்; "சாத்தொடு வழங்கு முல்குடைப் பெருவழி" எனப் பெரும்பாணாற்றுப்படையிலும், "தாளி யுக்குப சாத்தி னெருங்கவே" எனச் சிந்தாமணியிலும் கூறினர்.

† தொல்காப்பியம், எழுத்ததிகாரம், மொழிமரபு, ௧௮.

வஞ்சம் பெயர்க்கு மந்திரத் தாலிவ்
வைஞ்சி லோதியை யறிகுவன் யானெனக்
கோவல னாவிற் கூறிய மந்திரம்
பாய்கலைப் பாவை மந்திர மாதலின்
வனசா ரிணியான் மயக்கஞ் செய்தேன்
புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கு
மென்றிற முரையா தேகென் றேக

(இ - ள்.) இங்ஙனம் இயக்கி நடிக்கக் கண்ட கோவலன் மதியை மயக்குவிக்குந் தெய்வம் இவ் வலிய காட்டி னுண்டென்று அம்மறையோன் கூறினாதலான் மந்திரத்தால் இந்த ஐவகைப்பட்ட சிலவாகிய ஓதியையுடையாளைத் தெய்வமகள் மானிடமக ளென்ப தறிவே னெனக்கருதி அவன் நாவிற்கூறியமந்திரம் அந்தரிமந்திரமாதலானே, அஞ்சி, யான் இவ்வனத்திற்றிரிகின்றவியக்கி; நின்றனை விரும்புதலான் மயக்கஞ்செய்யப்புக்கேன்; யான்செய்த இப்பிழையை நின்மனைவிக்கும் கவுந்தியடிகட்கும் மொழியாது போவாயாக வென்றுசொல்லித் தானும் தன்னிடமே போக வென்க.

தவத்தினும் கற்புச் சிறந்ததாகலின், முற்கூறினார். இவர் சாயலும் அறனுமுடையாரேனும் தவறுகண்டுழிக் கணத்தின் வெகுண்டு சவிப்பரென் றஞ்சி அவர்க்குஉரையாதொழியென்று இரந்தா ளென்க.

(கு - பு.) மதி-அறிவு; வடசொல். வியத்தகு - சிறப்பித்துக்கூறத் தக்க. வஞ்சம் பெயர்க்கும் மந்திரம் - வஞ்சனையை வெளிப்படுத்தி ஒழிக்கும் மந்திரம். ஓதி - கூந்தல். அந்தரி - துர்க்கை. இவளுக்குக்கலைமானும் ஆளியும் வாகனமாம். பாய்கலைப்பாவை - சிறந்தெடுத்தகலைமானின் மீதுசெல்லும்மகள். புனமயிற்சாயல்-காட்டில்வாழும்மயில்போலுஞ்சாயலையுடையாள். புண்ணியமுதல்வி - புண்ணியத்துக்குத் தலைவி. என்திறம் - எனதுதன்மை. முற்கூறினார் - கவுந்திக்குமுன்னேகண்ணகியைவைத்தார். தவத்தினுங் கற்புச் சிறந்ததாதலை "வெங்கனன் முழுகியும் புலன்கள் விக்கியு, நுங்குவ வருந்துவ நீக்கி நோற்றவ, ரெங்குளர் குலனில்வந் தில்லின் மாண்புடை, நங்கையர் மனத்தவ நவிலற் பாலதே" என்னுங் கம்பராமாயணத்திலுங் காண்க. இவர் - கண்ணகியுங் கவுந்தியும்.

௨௦௧ - ௨௦௨. தாமரைப் பாசடைத் தண்ணீர் கொணர்ந்தாங்
கயர்வுறு மடந்தை யருந்துயர் தீர்த்து

(இ - ள்.) அங்ஙனம் அவள்போனபின்பு தாமரைப்பொதியுள் தான் அந்தவிடத்திற் குளிர்ந்தநீரைக் கொண்டுசென்று நீர்வேட்கையான் வருத்தமுற்ற மடந்தையது வருத்தத்தைத் தீர்த் தென்க.

(கு - பு.) பாசடை - பசிய இலையா லாகிய பாத்திரம். அருந்துயர் - தீர்த்தற்கரிய துயரம்.

௨௦௩ - ௨௦௬. மீதுசெல் வெங்கதிர் வெம்மையிற் றொடங்கத்
தீதியல் கானஞ் செலவரி தென்று
கோவலன் றன்னொடுங் கொடுங்குழை மாதொடு
மாதவத் தாட்டியு மயங்கத ரழுவத்து

(இ - ள்.) எழுகின்றகதிர் வெம்மைசெய்தலைத் தொடங்குதலாலே பாலைத்தன்மைமேவுகின்ற இக்கானம் இனி வழிச்சேறற்கு அரிதென்று கோவலனுடனும் வளைந்த மகரக்குழையையுடைய மாதினுடனும் மாதவத்தாட்டியும் வழிமயக்கத்தையுடைய பாலைநிலபரப்பின்கண் ணென்க.

தீதியல்கானம் - தீங்காகியன்றகானமுமாம்.

(கு - பு.) மீதுசெல் வெங்கதிர் - ஆகாயத்திற் செல்கின்ற வெவ்விய கிரணங்களையுடைய சூரியன். வெம்மையின், இன் - சாரியை. வெம்மை -

வெப்பம். நீதியல்கானம் - கொடுந்தன்மைபொருந்தியகாடு; எனவே, பாலையாயிற்று. வழிச்சேறற்கு - வழியிற் செல்லுதற்கு. அரிது - அருமையுடையது; முடியாதது. மாது-கண்ணகி. மாதவத்தாட்டி - கவுந்தி.

உ0எ - உகசு. குரவமு மரவமுங் கோங்கமும் வேங்கையும்
விரவிய பூம்பொழில் விளங்கிய விருக்கை
யாரிடை யத்தத் தியங்குந ரல்லது
மாரி வளம்பெறா வில்லே ருழவர்
கூற்றுறழ் முன்பொடு கொடுவில் லேந்தி
வேற்றுப்புலம் போகிநல் வெற்றங் கொடுத்துக்
கழிபே ராண்மைக் கடன்பார்த் திருக்கும்
விழிநுதற் குமரி விண்ணோர் பாவை
மையறு சிறப்பின் வான நாடி
யையைதன் கோட்ட மடைந்தன ராங்கென.

(இ - ள்.) குராவும் வெண்கடம்பும் கோங்கும் வேங்கையும் தம்மில் நிமைணந்த பொழில்சூழ்ந்த இருப்பிடத்து அரியவழிகளின் இயங்குவார் கைப்பொருளாகிய வளத்தை விரும்பினல்லது மழைவளத்தைவிரும்பாத விற்றொழிலையே உழவுதொழிலாகவுடைய மறவர் கூற்றத்தையொத்த வலியோடே வில்லையேந்திப் பகைவர்முனையிடத்தே புக, அவர்க்கு வென்றியைக்கொடுத்து அதற்கு விலையாகிய மிக்க ஆண்மைத்தன்மையையுடைய அவிப்பலியைத் தான் பெறுதற்கு வழிபார்த்திருக்கும் நெற்றிக்கண்ணையுடையகுமரி, விண்ணோர்பரவும்பாவை.குற்றமற்ற சிறப்பினையுடைய சுவர்க்கநாட்டையுடையாளாகிய ஐயை கோட்டத்தைச் சென்றடைந்தார் அப்பொழுதே யென்க.

போகி - போக. இனிப் போகவெனத்திரியாது ஏந்திப் போகி வெற்றங்கொடுத்துப் பார்த்திருக்கு மென்பதும் பொருள். அதற்கு உழவர்க்கெனனான்கனுருபு விரிக்க. முன்பொடுவெற்றங்கொடுத்தென்க. மயங்குதாழுவத்து விளங்கிய இருக்கைக்கட் கோட்டமென்க; அஃது ஏந்திப் போகிக் கொடுத்து இருக்கும் குமரி பாவை நாடி யாகிய ஐயைகோட்ட மென்க. கழிபேராண்மைக்கடன் - தன்னைத்தானிடும்பலிக்கடன். விழிநுதல் - நுதல்விழியென்க.

இஃது,எல்லாவடியும் நேரடியால்முடிதலின், நிலைமண்டிலவாசிரியப்பா.

(கு - பு.) குரா - ஓர்மரம்; அது, குறிபதன் கிழாக் குறுகி உகரமும் அம்சாரியையும் பெற்றது. நிமைணந்த- கலந்திருக்கப் பெற்ற. வில்லேருழவர் - வில்லாகிய கலப்பையைக் கொண்டு போராகிய உழவுத்தொழிலை நடத்துபவர். பொழில் - சோலை. இயங்குதல் - சஞ்சரித்தல். கூற்று - யமன். கொடுவில் - அச்சந்தரும்வில்; அன்றி, வளையுந்தன்மையதானவில். முனையிடம் - போர்க்களம். வேற்றுப்புலம் - அயலிடம். விண்ணோர் - தேவர். பரவும் - துதித்து வழிபடும். பாவை - மகள். நாடி - பெண்பாற் பெயர்; நாடு - பகுதி, இ - விகுதி. குமரி, பாவை, நாடி, ஐயை என்பன - காளியையுணர்த்தும்; துர்க்கையுமாம். கோட்டம் - கோயில்.

இஃது - "திங்கண்மூன்று" என்றுதொடங்கிய இக்காதைச் செய்யுள். எல்லாவடியும் நாற்சீரடியாகவருதல், நிலைமண்டிலவாசிரியப்பாவின் இலக்கணம். இது, ஏகாரத்தானாயினும், ஓகாரத்தானாயினும், எனவென்பதனானாயினும் முடியுமென அறிக.

காடுகாண்காதை முற்றிற்று.

ஸ்ரீ

பாகவதம்.

மூலமும் உரையும்.

உரையின் அவதாரிகை.

எல்லாவுலகங்களினும் மேம்பட்டுள்ள ஸ்ரீவைகுண்டமென்கிற திவ்விய லோகத்திலே செம்பொன்செய்கோயிலிலே திருமாமணிமண்டபத்திலே சிரியசிங்காசனத்திலே திருவனந்தாழ்வானின்மீது ஸ்ரீ பூமி நீளைகளென்னும் தேவிமார்மூவரோடுங் கூடி வீற்றிருந்து நித்தியமுக்தர்களுக்கு நிரதிசயஆனந்தத்தை அனுபவிப்பித்தருளுகிற சகலகல்யாணகுணகணபரிபூர்ணனான சர்வேச்வரன், அவ்வுலகத்துக்குக்கீழ்ப்பட்டுள்ள பலஉலகங்களிலும் இருக்கின்ற உயிர்களெல்லாம் மாறிமாறிப்பலபிறப்பும்பிறந்து இறந்து வருந்தி உழல்வதை உற்றுநோக்கி, அவற்றையும் அழிவில்லாதவீட்டுலகத்தில் அந்தமில்லின்பத்தை அனுபவிக்கும்படி செய்யவேண்டுமென்று இயல்பாக எழுந்த பரமகருணையாலே, அவ்வுயிர்கள் நல்வழிதீவழிகளை நன்றாகப்பகுத்துணர்ந்து நடக்குமாற்றை அறிவித்தற்பொருட்டு, தன்கட்டளைரூபமாக வேதத்தை வெளியிட்டருளினான். வேதமென்னும் பதத்திற்கு - (இன்னவை செய்யத்தக்கவை இன்னவை செய்பாதொழியத்தக்கவை என விதி விலக்குக்களால் தத்துவங்களை) அறிவிப்பதொரு நூல் என்பது பொருள்; இஷ்டப்பிராப்தியையும் அநிஷ்டநிவிருத்தியையும் அநேகஉபாயங்களாலே அறிவித்து யாகாதிகிரியைகளைக்குறித்தும் பகவானைக்குறித்தும் தெளிவாக உணர்த்துகின்றதொரு நூலுக்கு வேதமென்று பெயர்: இத்தகைய வேதமானது ஒருவராலுஞ்செய்யப்படாமல் அநாதியாயிருந்து கடவுளாற் பிரமனுக்கு உபதேசிக்கப்பட்டு வழிவழியாய் உலகத்திற் பரவிற்றென்றும், வேதந் தான் முக்காலத்தும்ஒருபடிப்பட நித்தியமாயிருக்கிறதாகையாலே சிறந்தபிரமாணமா மென்றும் நூல்கள் கூறும்.

இந்த வேதத்தின் பொருளை அறிதற்குக் கருவியாக ஆறுஅங்கங்கள் ஏற்பட்டன; அவை - சிட்சை, வியாகரணம், சந்தம், நிருக்தம், சோதிடம், கற்பம் என்பவையாம். இவைகளேயன்றி வேதங்களின் பொருளை அறிய மீமாம்சை, நியாயம், புராணம், தருமசாஸ்திரம் (ஸ்மிருதி) என்று வேறு சாஸ்திரங்களும் உண்டு; இவை - வேதத்தின் உபாங்கங்களெனப்படும். அவற்றுள் புராணத்தினால், சிருஷ்டி சங்காரங்களின் கிரமங்களும், மனுவந்தரங்களின்கிரமங்களும், வம்சங்களும், சரித்திரங்களும் அறிவிக்கப்படுகின்றன: இதிகாசங்களும் புராணங்களோடு சேர்ந்தவையே;உபதேசபரம்பரையில்வந்த ஒருவருடைய பழைய சரித்திரத்தைப் பிரதானமாகஎடுத்துப் பலகிளைக்கதைகளோடுபுணர்த்தி விரித்துக்கூறும்நூல் இதிகாசமென்றும், பழையபலவரலாறுகளை லோகசிருஷ்டிமுதலியவிவரத்துடன் விரவிக் கூறும் நூல் புராண மென்றும் வேறுபாடு உணரத்தக்கது: இவை- வேதத்தின்கருத்து இன்னதென்று நியாயப்பிரமாணங்களால் தேற்றிவிளக்குதல்பற்றி, வேதத்திற்கு உபப்பிரம்மணங்களென்று சொல்லப்படும்; உபப்பிரஹ்மணமென்றால், வளர்ப்பதென்று பொருளாம்.

புராணமானது, கிருதயுகத்திற் பிரமாவினால் நூறுகோடிக்கிரந்தவிஸ்தாரமாய் வெளியிடப்பட்டு ஒன்றேயாயிருந்தது. பின்பு திரேதாயுகத்திலே

அதனை ருஷிகள் நாற்றுப்பதினொருசங்கிதைகளோடுகூடின பதினெட்டுப்
பிரிவுள்ளதாய்க் கோடிக்கிரந்தமாகச் சுருக்கினார்கள். பின்பு வேதவியாச
மகாமுனிவர் துவாபரயுகத்தின்இறுதியில் அந்தப்புராணங்களின்சாரங்களை
நான்குலட்சம்கிரந்தத்தில்அடக்கித்தமதுசிஷ்யரானரோமஹர்ஷணரென்ப
வருக்கு உபதேசித்தருளினார். அவருக்கு ஆறுசிஷ்யர்க ளிருந்தார்கள்.
அவர்களாலும், அவர்களுடைய சிஷ்யரும் ரோமஹர்ஷணர்து குமாரரு
மாகிய சூதராலும், அவராதி சிஷ்யர் பலராலும் புராணப்பிரவசனஞ் செய்
யப்பட்டுவந்தது.

புராணங்கள்பதினெட்டாவன - பிராம்மம், பாத்மமம், வைஷ்ணவம்,
சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம்,பவிஷ்யத்,
பிரமகைவர்த்தம், லிங்கம், வாராகம், ஸ்காந்தம், வாமனம், கௌர்மம்,
மாத்ஸ்யம், காருடம், பிரஹ்மாண்டம் என்பவையாம். இவற்றுள், பிராம்
மம் பதினாயிரம்கிரந்தமும்,பாத்மமம் ஐம்பத்தையாயிரம்கிரந்தமும்,வைஷ்
ணவம் ஆறாயிரம்கிரந்தமும், சைவம் இருபத்தினாலாயிரம்கிரந்தமும், பாக
வதம் பதினெண்ணாயிரம்கிரந்தமும், நாரதீயம் இருபத்தையாயிரம்கிரந்த
மும், மார்க்கண்டேயம் முப்பத்தினாயிரம்கிரந்தமும், ஆக்கினேயம் எண்
ணாயிரம்கிரந்தமும், பவிஷ்யத் முப்பத்தோராயிரம்கிரந்தமும், பிரமகைவர்
த்தம் பன்னிராயிரம்கிரந்தமும், லிங்கம் பதினோராயிரம்கிரந்தமும், வாரா
கம் இருபத்தினாலாயிரம்கிரந்தமும், ஸ்காந்தம் லட்சம்கிரந்தமும், வாம
னம் பதினாலாயிரம்கிரந்தமும், கௌர்மம் ஆறாயிரம்கிரந்தமும், மாத்ஸ்யம்
பதினாலாயிரம்கிரந்தமும், காருடம் ஆறாயிரம்கிரந்தமும், பிரம்மாண்டம்
பன்னிராயிரம்கிரந்தமும் உடையது. ஆகப் புராணங்களின் கிரந்தத்தொகை
நான்குலட்சத்தெண்ணாயிரமாயினும் கீழே நான்குலட்சமென்றுசொன்னது
பெருந்தொகைபற்றி. இவ்வாறே ஒவ்வொன்றிலும் நூறு இருநூறு ஏறவுந்
தாழவும் இருக்கும். [இங்கே ஒருகிரந்தமென்பது - மெய்யெழுத்தொழிய
உயிரும்உயிர்மெய்யுமாகிய முப்பத்திரண்டு எழுத்தாம்.]

இப்பதினெண்புராணங்களுள் பாகவதம், பாத்மம், வாராகம், வைஷ
ணவம், காருடம், நாரதீயம் என்னும் ஆறும் ஸாத்துவிகபுராணங்களாம்.
மார்க்கண்டேயம், பவிஷ்யத், பிராம்மம், பிரமகைவர்த்தம், பிரம்மாண்
டம், வாமனம் என்னும் ஆறும் ராஜஸபுராணங்களாம். ஸ்காந்தம், ஆக்கி
னேயம், சைவம், மாத்ஸ்யம், லிங்கம், கௌர்மம் என்னும் ஆறும் தாமஸ
புராணங்களாம். இதனை இந்நூலின் பன்னிரண்டாய்கந்தத்தில் வேதநான்
காகவகுத்தஅத்தியாயத்தில் "இத்தகைப் புராண மூவா றியலும்பா கவ
தம் பற்பம், பொய்த்தலில் வாரகம் வைண வத்தொடு புகல்கா ருட, மெய்
த்தநா ரதிய மென்ப விளம்புசாத் திகநூ லாமால், கத்தறு மார்க்கண்
டேயங் கருதுபெள டிகம்பி ராமம்; பிரமகை வர்த்த மிக்க பிரமாண்டம்
வாம னஞ்சீர், பெரியரா சதநூல் காந்தம் பேசுமாக் கினேயஞ் சைவம்,
விரியுமச் சுயமி லிங்கம் விறற கமட மென்னத், தெரிதரு தாம தப்பேர்
செறிந்தநூ லென்பர் மேலோர்" என்னும் பாடல்களால் அறிக.

இவற்றுள் சாத்துவிகபுராணங்களில் ஸ்ரீமஹாவிஷ்ணுவினுடைய மகி
மையும், ராஜசபுராணங்களில் பிரமதேவனது மகிமையும், தாமசபுராணங்
களில் சிவபிரான் அக்கினி என்பவாது மகிமையும் பெரும்பாலும் உரைக்கப்
படும்; இதனை மாத்ஸ்யபுராணத்தின் ஐம்பத்துமூன்றும் அத்தியாயத்தால்
உணர்க. படைத்தல்தொழில் ரஜோகுணத்தின்காரியமென்றும், காத்தல்
தொழில் சத்துவகுணத்தின்காரிய மென்றும், அழித்தல்தொழில் தமோ
குணத்தின்காரிய மெனறும்,ஆதலால பிரம விஷ்ணு ருத்திரர்கள் முறை

யே ராஜஸ ஸாத்விக தாமஸ குணங்களுக்கு உரியவ ரென்றும் நூல்கள் கூறும். அன்றியும், இங்குக்கூறியமுறையே திரிமூர்த்திகளும் முக்குணங்களுக்கு உரியவராவ ரென்பது இந்நூலின் பத்தாங்கந்தத்தில் பிருகுமுனி சென்றஅத்தியாயத்தின்வரலாற்றாலும் விளங்கும். அதுவருமாறு:— * முன்னொருகாலத்தில் முனிவர்தேவர்முதலியயாவருங்கூடி மேருமலையின்சிகரத்தைச்சேர்ந்து பரதத்துவநிர்ணயஞ் செய்யத்தொடங்கினபொழுது முத்தொழிற்குமுரியவராய அயஹரிஹரரென்னும் மூர்த்திகள்மூவருள்ளும் பரதத்துவம் இன்னா ரென்று அறியாது ஐய முற்று ராஜசதாமச நூல்களிற் கூறியுள்ள கோட்பாடுகளால் மயங்கி மாறுபட்டுச் சப்தருஷிகளைச்சரணமடைந்து வினவ, அவர்களுள் தலைமைபெற்றபிருகுமகாமுனிவர் 'முக்குணங்களுள்ளும் சத்துவகுணத்தையேயுடையவன் யாவனோ, அவனே பரதத்துவம்; அவனை இன்னானென்று யான் சென்று அறிந்துவந்து சொல்வேன்' என்றுசொல்லிப் புறப்பட்டு முதலிற் கைலாசகிரிக்குச்சென்று கோயில்வாயிலைச்சேர்ந்துஆங்குள்ளநந்திதேவரால்தடுக்கப்பட்டு ஏழுநாள்கழிந்தபின்னரும்உமாதேவியோடுஉருத்திரமூர்த்திசம்போகஞ்செய்துகொண்டிருக்குந்தன்மையை அறிந்து, தாமசகுணத்தாற்காமமுற்றுத்தம்மைவினவிச்சற்கரியாதிருந்தஅக்கடவுட்கு இருகுறியுந்தணிந்துவிழக்கடவதென்று சாபங்கொடுத்துப்போக, அவ்வளவிற் கலவிப்பெருங்கடல்கடந்துவந்த முக்கட்கடவுள்நந்தியால்நிகழ்ந்ததுணர்ந்து அம்முனிவரை மீள அழைத்து அவர்சினந்தீர்க்கும்பொருட்டுத் தன்னுடன்பிறந்தவனொன்றுங்கருத்தால்ஆலிங்கனஞ்செய்யஅணுகியபொழுது அம்முனிவர் 'அசுசியானாநீ என்னைத்தொடாதே' என்றுதடுக்க, உமாபதி மிகச்சினந்து தனதுநெற்றியிலுள்ளநெருப்புக்கண்ணைவிழித்து அம்முனியைஅழிக்கப்பார்த்தவளவில் அவர்அஞ்சாது தன்பாதத்தின்பெருவிரலிலுள்ளகண்ணைவிழித்துஅதினின்றும்எழுந்த அழலால் அவ்வழலைஅடக்கிவிட்டு 'நீ பிராமணதெய்வம்ஆகாதுபோதி' என்று மீளவுஞ்சபித்திட்டுச் சத்தியலோகஞ்சேர்ந்துபிரமனையடைந்துவணங்க, அவன் ராஜசகுணத்தால் 'தந்தையைத் தனயன் வணங்குதல் தக்கதே' எனநினைந்து பிரதிவந்தனமுஞ் செய்யாதிருக்க, முனிவர் பெற்றதந்தையென்பதையும்எண்ணாமல் 'உனக்கு ஆலயப்பிரதிஷ்டை இல்லையாக' என்றுசபித்துவிட்டு, திருப்பாற்கடலுக்குச்சென்று கோயிலைச்சேர்ந்து வாயில்காவலர்அஞ்சிநிற்க உள்ளேபுக்குத் திருவனந்தாழ்வான்மேலே திருமகளுநிலமகளுந்திருவடிவருடப் பள்ளிகொண்டிருக்கும்பரமனை மார்பில்உதைக்க, அப்பெருமான் மக்கள் மேல்விழத் தாய் உகப்பதுபோல மனமகிழ்ந்து அக்கணத்திற் கடிதெழுந்து 'ஐய! என்பொருட்டாக இன்று உமது மெல்லிய பாதம் நொந்ததோ? உமது திருவடித்தாமரை பட்டதனால், என்மார்வு திருநிலைபெற்றது; நுமதுவரவை யான் அறியாதுபடுத்திருந்ததைப் பொறுத்திர்' எனப்பலவாறுமுகமனியம்ப, முனிவர்பெருமான் திருமாலின்திருவடிகளில் விழுந்து தெண்டனிட்டுக் கைகூப்பிக்கொண்டு 'சுத்தசத்துவகுணசுவருபமாகியபரதத்துவத்தைஇன்னதென்று அறியும்பொருட்டு அடியேன் செய்த இப்பெரும்பிழையைப் பொறுத்தருள்க' என்று பிரார்த்தித்து மேருசேர்ந்து தம்வருகையையே எதிர்பார்த்திருந்தவர்யாவர்க்கும் 'ஸ்ரீமந்நாராயணனே சுத்தசாத்துவிகபரதத்துவம்' என்று சித்தாந்தஞ் செய்துபகர, ஆங்குள்ளவர்யாவரும் அவ்வெம்பெருமானுக்கே அடியவராகி அவனருளைப்பெற்று உய்ந்தன ரென்பதாம்.

'இராஜஸதாமஸபுராணங்கள் தம்மைப்படித்தல் முதலியன செய்பவர்களது துன்பங்களை ஒழித்து உயர்கதியை அளிக்கும் ஆற்றல் இல்லாதன

* இவ்வரலாறு, சிறிதுசிறிது வேறுபடுத்தியுங் கூறப்படும்.

வாதலாற் சிறந்தனவல்ல; சாத்துவிகபுராணங்கள் தம்மைப்படித்தல்முதலியன செய்பவர்களது பிறவித்துன்பங்கள்பலவற்றையும் வேரற ஒழித்துப் பரமபதமருளும் பேராற்றலுடையனவாதலால் மிகச்சிறந்தனவாம்' என்பதை "இராசதந் தாமத மிரண்டும், வந்தெழுஞ் சனன மறுத்துயர் பதத்தைக் கொடாதிசாத் திகமகா புராணஞ், சந்தா வரியின் பதத்திலை யளிக்கும்" என்னும் மகாபாகவதத்தால் உணர்க.

இப்பதினெண்புராணங்களேயன்றி நாரசிம்மம், நந்தம், சாம்பம், ஆதித்தியம், பார்க்கவம், வாசிஷ்டம், வாயவியம் முதலாகப் பதினெட்டு உபபுராணங்களும் உண்டு.

புராணத்தின் இலக்கணங்கள் - சர்க்கம், விசர்க்கம், விருத்தி, ரட்சை, மனுவந்தரம், வம்சம், வம்சானுசரிதம், ஸம்ஸ்த்தை, ஹேது, ஆச்ரயம் எனப் பத்தாம்; இதனை வேதநான்காக வகுத்த அத்தியாயத்தில் "பூதமிந்திய முதலிய படைப்பினைப் புகறல், கோதிலாதவித் தின்வழி வித்துறுங் குணம்போற், பேதமாகிய சராசரம் பிறப்பன பேச,லோது சீவனுற் றவற்றுக் கிங்குறுதொழி லுரைத்தல்; ஞால மீதுமா லவதரித் தருள்வகை நவிற்றல், கோல மேவிய மனுமுதற் றேவரைக் கூறல், கால மூன்றுறு மரசரை யிவரெனக் கழறல், சில மேவுமம் மன்னவர் சரித்திரந் தெரித்தல்; "ஏய நால்வகைப் பிரளய மியம்புத லெழில்சேர், மாயை யால்வரு முயிர்த்திற னொருவகை வழங்கல், மேய மற்றவற் றிருப்பிட னுய்விளங் கறிவாய்த், தூய காரண மாம்பொரு டெரிதரச் சொறல்" என்னுஞ் செய்யுட்களால் அறிக. சிருஷ்டி, சங்காரம், வம்சங்கள், மனுவந்தரங்கள், வம்சங்களின் சரித்திரம் என்னும் ஐந்துமே புராணத்தின்இலக்கணமென்று சிலவிடங்களிற் சொல்லப்படும். இவற்றுட் பத்துலக்ஷணங்களையுமுடையது மகாபுராணமென்றும், ஐந்துலக்ஷணங்களையுடையது அல்பபுராணமென்றும் உணர்க. [இந்நூல் மகாபுராணங்களு ளொன்றும்.]

இப்புராணங்கள்பதினெட்டனுள் பாகவதம் ஐந்தாவது. இது-வடமொழியில் பத்தியங்களாலும் கத்தியங்களாலும் தண்டகங்களாலும் நிறைந்த இருநூறு அத்தியாயங்களாகப் பிரிந்த பன்னிரண்டுஸ்கந்தங்களை யுடையது. இதில் ஒவ்வொருஅத்தியாயத்தின் ஆரம்பத்திலும் மத்தியிலும் பெரும்பாலும் அத்தியாயமுடிவிலும் பகவத்ஸ்துதிகள் உண்டு. இதில் சுருதிகீதை முதலிய பன்னிரண்டுகீதைகளும் எம்பெருமான்திருவவதாரங்களில் விஸ்தாரமாக நான்குஅவதாரங்களின் சரித்திரங்களும் அடங்கியுள்ளன. இதில் நான்குவிஷ்ணுபக்தர்களின்கதை விரிவாகச்சொல்லப்பட்டுள்ளது. இதனைச் சொல்லியருளினவர், சுகமுனிவர். கேட்டவர், பரீக்ஷித்துமகாராஜா. இது தமிழில் நூற்றைம்பத்தைந் தத்தியாயங்களாக ஏறக்குறைய ஐயாயிரம்பாடல்களால் இந்நூல்வடிவமாக மொழிபெயர்க்கப்பட்டது. இது, ஸ்ரீபாகவதமென்றும் ஸ்ரீமத்பாகவதமென்றுஞ் சிறந்தபிரமாணமாகப் பலராலும் அங்கீகரிக்கப்படும்.

இதுவன்றி, மகாபாகவதமென்று ஒருநூல் வடமொழியில் உண்டு. அதில் இருபத்தைந்துகீதைகள் அடக்கம். எம்பெருமான்திருவவதாரங்களில் ஆறுதிருவவதாரங்களின்சரித்திரம் விஸ்தாரமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அத்தியாயத்திலும் பகவத்ஸ்துதி உண்டு. பெரும்பாலும் அநுஷ்டுப் சுலோகங்களாலும் சிறுபான்மை பிறவற்றாலும் அமைந்த அறுநூறு அத்தியாயங்களை யுடையது. முப்பத்தாறாயிரங்கிரந்தமுள்ளது. அதனைக் கூறினவர், நாரதபகவான். கேட்டவர், ருக்குமணிப்பிராட்டியார். அதனை ஏறக்குறைய முந்நூற்றைம்பதுவருடங்களுக்குமுன் இருந்த நெல்வி

நகர் அருளாளதாச ரென்னும் மதுரகவி வரதராசையங்கார் ஏறக்குறைய ஒன்பதினாயிரம்பாடல்களாகத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

இவற்றுள் சுகபாகவதம்அஷ்டாதசபுராணங்களுள் ஒன்றென்று மாத்ஸ்யபுராணத்தால் விளங்குதலால், மற்றொன்றாகிய நாரதபாகவதம்உபபுராணங்களுள் ஒன்றாக இருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது. இனி, இதிகாசம், புராணம், சம்ஹிதை, உபசம்ஹிதை, விஷ்ணுரகசியம், விஷ்ணுயாமளம், கௌதமசம்ஹிதை எனப் பாகவதம் ஏழு திறத்தன வென்றும், இதிகாசபாகவதமே சுகபாகவத மென்றும், புராணபாகவதமென்பது பதினெண்புராணங்களினுட்பட்டதொன்றாகிய நாரதபாகவதமென்றும் கௌதமசம்ஹிதையுடையார் கூற்று. இவையன்றித் தேவிபாகவதமென்றும் ஒன்றுஉண்டு.

இவைநிற்க. இத்தமிழ்ப்பாகவதநூலாசிரியர்இன்னாரென்பதும்அவரது காலம் இடம் சாதி சமயம முதலியன ஒன்றுந் தெளிவாக எங்குங் காணப்படவில்லை. வேம்பத்தூரார் இந்நூலைத் தம்மவர்செய்ததென்று சொல்வதோடு, அதற்குஆதாரமாக (வேம்பத்தூரார்புகழ்ச்சி) "திருமருவுபஞ்சலட்சணவேலைபொங்கிச்செழிக்குமிருநிதிகொழிக்குந் தென்னிம்பைநகரமதில்வாழுமந்தணரிற்சிறந்தசெவ்வைச்சூடுவார், சுருதிபுகழ்பாகவதபௌராணமோதினர்துலங்கும்வாசிட்டமதனைச் சொல்லின * ராளவந்தார்மாதவப்பட்டர்சொன்னதிருவிளையாடலும், * * * புகழ்சவுந்தரியலகரி, பெருமைமிகுகவிராசபண்டிதர்புகன்றனர்பிரதாபமிகுதிருநெல்வேலிப் பெருமாளையன்சொன்னநெல்லையின்கோவைப்பிரபந்தவகைபுகழ்பெருகவே" [இந்தத் தனிச்செய்யுளில், நிம்பைநகரம் - வேம்பத்தூர்.] என்பதொருபாடலையுங் காட்டுவர்; இதனால், இத்தமிழ்ப்பாகவதம்பாடியவர் வேம்பத்தூர்ச்சங்கவித்துவான்களு ளொருவராகிய செவ்வைச்சூடுவார் என விளங்குகின்றது; செவ்வையாகச்சூடும் பாமாலையுடையவராதலால், இவர் செவ்வைச்சூடுவார் எனக் காரணப்பெயர்பெற்றனர்போலும். சௌந்தரியலகரிபாடிய கவிராஜ பண்டிதரது மூத்தகுமாரரும் ஞானவாசிட்டஞ்செய்தவரு மாகிய (மட்டியென்னும் முன்பெயரையுடைய) ஆளவந்தாரும், இவரது தம்பியும் பரபரைமாலைபாடியவரு மாகிய அம்பிகாபதியும், அழகர்கலம்பகம்பாடிய கவிகுஞ்சரமையரும், அழகர்பிள்ளைத்தமிழ்பாடிய சங்கவித்துவான்களும் இச்செவ்வைச்சூடுவார்காலத்தவ ரென்றும், பாண்டியநாட்டிலுள்ள வேம்பத்தூர் கலியுகம்பிறந்த பதினாறாவதுவருஷத்தில் குலசேகரபாண்டியனால் முன்குடுமியுடையவரும் தனஞ்சயகோத்திரத்தவரும் அத்வைதசமயத்தவருமாகிய ஸ்மார்த்தப்பிராமணர்க்குத் தானஞ்செய்யப்பட்டதென்றும், பிலேடைபாடுதலிற்சிறந்த ப்ரஹ்மஸ்ரீ-வேம்பத்தூர்ப் பிச்சுவையரவர்கள் சொல்ல இப்பொழுது தெரிந்தது. இந்நூலை முன்னே முழுவதும் அச்சிட்டுள்ள கோமளபுரம் - ம-ரா-ரா-ஸ்ரீ. இராசகோபாலப்பிள்ளையவர்களால் இந்நூல் திருக்குடந்தையிலிருந்த ஆரியப்பப்புலவர் செய்ததென்று வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்விரண்டுவகைகளுள் எது உண்மையோ, துணிந்து சொல்லக்கூடவில்லை. எங்ஙனமாயினும், இந்நூல் நல்லதமிழ்நடையுடையதொரு நூலென்பது நூலைநோக்குமிடத்து நன்குவிளங்கும். இந்நூலின்நடையை நோக்குமிடத்து இதன் காலம் ஏறக்குறைய நானூறுவருஷ மாயிருக்கலாமென்று தோன்றுகின்றதென்பர்.

பாகவதமென்பதற்கு-பகவானைக்குறித்துச்சொல்லும்நூல்என்றுபொருள்; இது, வடமொழித்தத்திதாந்தநாமம். பகவான் என்னுஞ் சொல்லுக்கு - நிறைந்த மகிமை, தைரியம், கீர்த்தி, சம்பத்து, ஞானம், வைராக்கியம் என்

* 'வாழவந்தார்' என்றும் பாடமுண்டு.

கிற ஆறையும் உடையவனென்று பொருள்; 'பகம்' என்று இந்த ஆறுக்கும் பெயர். இந்த, அடைமொழியில்லாத பகவானென்னுஞ்சொல் - சிறப்பாய் அத்தனைக்குணங்களையுடையார்பலரினும்உயர்ந்த திருமாலை உணர்த்திற்று. 'காயத்திரியின்சொற்பொருள்களாலேதொடங்கிப் பகவத்சம்பந்தமானதருமங்களைவிஸ்தாரமாகவர்ணித்து விருத்திராசுரவதம்முதலானசரித்திரங்களோடு சாரஸ்வதகல்பத்தின்வரலாறுகளைவிளக்கிப் பதினெண்ணாயிரம் கிரந்தமாக ஸ்ரீவேதவியாசமுனிவராலே செய்யப்பட்டது பாகவதம்' என்றும், 'அதனைப் பாராட்டினவன் மறுமையிற் பரமபதமடைவான்' என்றும்மத்ஸ்யபுராணங் கூறுகின்றது; இன்னும் இந்நூலின்பயனை இதன்இறுதியத்தியாயத்தில் "இன்ன நற்கதை கேட்டுநெஞ் சுருகின ரிசைப்போர், பின்னல் வெண்டிரைப் பார்புகழ் பெருந்திருவினராய், மன்னுகின்றவ ராகியும் வல்வினை மருவார், தன்னலந்திருமால்பரந்தாமநண்ணுவரால்" என்பதுமுதலியவற்றால் அறிக.

கடவுள்வாழ்த்து.

அஃதாவது - எடுத்துக்கொண்டகாரியம் இடையூறின்றி இனிதுமுடிதற்பொருட்டு உயர்ந்தோர்வழக்கத்தின்படியே கவி தான் வழிபடுகடவுளையாதல் எடுத்துக்கொண்டபொருட்கு ஏற்புடைக்கடவுளையாதல் வாழ்த்துதல். இந்நூலின்காப்புச்செய்யுள்மூன்றனுள் முன்னது இருவகைவாழ்த்தும் அடங்கியதென்றும், இடையது வழிபடுகடவுள்வாழ்த்தென்றும், பின்னது ஏற்புடைக்கடவுள்வாழ்த்தென்றும் அறிக. இவைமூன்றும் ஆசீர்வாதம், நமஸ்காரம், வஸ்துநிர்த்தேசம் எனப்படுகின்ற மூன்றுவகையான மங்களங்களுள் நமஸ்காரரூபமான மங்களமாமென்றும், அதிலும் தியானமென்னும் மனவணக்கமாகுமென்றும் உணர்க.

சீர்பூத்த பரஞ்சுடராய்ச் சித்தாகிக் கானலிடை
நீர்பூத்த தெனவுலக நிறைந்தொளிர்தன் பாற்றோன்ற
வேர்பூத்த முத்தொழிலு மினிதியற்றித் தனிநின்ற
கார்பூத்த திருமேனிக் கடவுண்மல ரடிநினைவாம்.

இச்செய்யுள் நூலாசிரியர்க்கு வழிபடுகடவுளும் எடுத்துக்கொண்ட பிரபந்தத்திற்கு ஏற்புடைக்கடவுளுமாகிய திருமாலைப் பற்றியதாம்.

(இதன்பொருள்.) சீர் பூத்த - சிறப்பு மிக்க, பரம் சுடர் ஆய் - (சூரியன் சந்திரன் அக்கினி முதலிய எல்லாவொளிகளினும்) மேம்பட்ட ஒளிவடிவமாகி, சித்து ஆகி - ஞானசொரூபமுமாய், கானலிடை நீர் பூத்தது என நிறைந்து ஒளிர் தன்பால் உலகம் தோன்ற - கானலினிடத்திலே நீரின்தன்மை தோன்றுதல் போல (எங்கும்) நிறைந்துவிளங்குகின்றதன்னிடத்திலே உலகங்கள்(அவித்யைமாத்திரத்தால்)காணப்படாநிற்க, ஏர் பூத்த முத்தொழிலும் இனிது இயற்றி - அழகு பொருந்திய (படைத்தல் காத்தல் அழித்தல் என்னும்) மூன்றுசெயல்களையும்(சிரமமில்லாமல்) எளிதிலேசெய்து, தனி நின்ற - ஒப்பில்லாமல் [ஏகமூர்த்தியாகி] என்றுமழியாது நிலைபெற்ற, கார் பூத்த திருமேனி கடவுள் - (கருநிறத்தால் நீர்கொண்ட) காளமேகத்தையொத்த அழகிய திருவுருவத்தையுடைய (எல்லாப்பற்றுக்களையுங்)கடந்துநின்ற திருமாலினது, மலர் அடி - செந்தாமரைமலர்போலுந் திருவடிகளை, நினைவாம் - தியானிப்போம்; (என்றவாறு.)

எல்லாநூல்களும் மங்கலமொழிமுதல்வகுத்துக்கூறவேண்டுவது பெருமரபாதலின், காப்புச்செய்யுளின்முதலில் 'சீர்' என்று தொடங்கினர்; மேல் நூல்தொடக்கத்தில 'தாமரை' எனச் சிறந்தமலரை முதலில்வைத்தவாறுங் காண்க: இவை மங்கலப்பொருத்தச்சொற்களென்பதை "சீர்மணி பருதி யானை திருநல முலகு திங்கள், கார்மலை சொல்லெ முத்துக் கங்கை

நீர் கடல்பூத் தேர்பொன், வேருறு மிவை மூவாறு மிறப்பரி யாயப் பேரு, மாருமங் கலச்சொற் செய்யு ளாய்ந்தமுன் வைக்க நன்றாம்" என்னும் நிகண்டினால் அறிக. படைத்தல் முதலிய தொழில்கள் கடவுளுக்கு நினைத்த மாத்திரத்தில் நிராயாசமாகச் செய்யத்தக்க விளைகளா யிருத்தலினால், முத்தொழிலுக்கு 'ஏர்பூத்த' என்ற அடைமொழியைக் கொடுத்து, 'இனிதியற்றி' என்றுங்கூறினார்; முத்தொழிலும் எம்பெருமானுக்குத் திருவிளையாட்டாதலை "உலகம் யாவையுந் தாமுள வாக்கலு, நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலா, வலகி லாவிளை யாட்டுடை யாரவர், தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே" என்னுங் கம்பர்வாக்காலுங் காண்க. தனி - இரண்டற்றதாய், அத்விதீயமாய், ஏகபரப்பிரஹ்மமாய் என்றபடி. 'வினைப்பகுதிகள் வேண்டியபொருளை விளைக்கும்' என்ற வடமொழிந்யாயத்தால், இக்கவியுள் 'பூத்த' என்னுஞ் சொல்லுக்குச் சந்தர்ப்பத்திற்கேற்பப் பலபொரு ளுரைக்கப்பட்டது. திருமேனி - திருமகளோடு கூடிய வடிவுமாம். நினைவாம் - தன்மைப்பன்மை முற்று; யாம் என்னும் பயனிலை குறைந்துநின்றது. இனி, யாம் என்பது தோன்றாஎழுவாய் எனக்கொண்டு, 'நினைவாம்' என்னும் வினைப்பயனிலை கொண்டதெனினும் அமையும். இது கடவுள்வணக்கமாதலால் "நான்முகற் றொழுதுநன் கியம்புவன்," "பந்தமடிதொடை பாவிளங் கூறுவன்" என்றாற் போல ஒருமையாற்கூறித் தன்னைத்தாழ்த்தாமற் பன்மையாற்கூறித் தன்னை உயர்த்தியபின் இதில் வணக்கமெவ்வெனின்;—அங்ஙனம் உயர்த்திக் கூறுதல் பிறவிடங்களில் உண்டெனினும் இவ்விடத்தில் உயர்த்தியதன்று; தன்மைப்பன்மையென்பது தன்னோடுசார்ந்தாரையுங்கூட்டியல்லது தனித்து இயலாமையால், தானொருவன் கடவுளை அறிந்து அன்புகூர்ந்து வணங்கி அப்பயனைத்தான்அடைதலினும் சிருஷ்டிதொடங்கித் தன்கோத்திரத்தாரையுந் தன்னொடுகூட்டி வணங்கி அவர்க்கும் அப்பயனைஅடைவித்தலே சிறந்ததெனக் கருதிச் சான்றோரெல்லாந் தொன்றுதொட்டு இவ்வாறுகூறி வருவது ஓர்மரபா மென்க: [மரபு - பழையமுறைமை.] என்னெனின்,— "ஏக தந்த னிணையடி பணிவாம்," "ஏத்தி யேத்தித் தொழுவோ மியாமே," "சரணவா ரிசமலர் தலைக்கொள் வாமரோ," "மலரடி சென்னி வைப்பாம்" என இவ்வாறு கூறியவை அளவிலவென்க. இனி, தன்மாணாக்கரையும் இந்நூல்கற்போரையும் உளப்படுத்திய தன்மைப்பன்மையெனினுமாம். யாமென்னுந் தோன்றாஎழுவாயை முதலிற்கூட்டித் தொழுவாம்என முடிப்பினும், இச்செய்யுளில்நின்றவாறே யாமென்பதனை இறுதியிலேகூட்டி முடிப்பினும், யாற்றுநீர்ப்பொருள்கோளெனக் காண்க. [பொருள்கோள் - அந்வயம்.] கானலினிடத்து நீரென்கிறபிரமந் தோன்றுவதனை "கானகத் தியங்கிய கழுதின் றேர்க்குலம், * * * வானவர்க்கிரங்கிநீர் வளர்ந்த தொத்ததே" என்னுங் கம்பராமாயணக்கவியாலுங் காண்க; "நிறைநீர் வேலி" என்றார் பேய்த்தேரைச் சிலப்பதிகாரத்திலும். கடவுள் தாமே பிரபஞ்ச வடிவமாய்க் காணப்படுகின்றன ரென்பது, இரண்டாமடியின் கருத்து. 'கானலிடை நீர்பூத்ததென வுலக நிறைந்தொளிர்தன்பாற் றோன்ற' என்றும், 'கார்பூத்த திருமேனிக் கடவுள்" என்றுங் கூறியுள்ளதனால், இந்நூலாசிரியர் கிருஷ்ணபக்தியையுடைய அத்வைதசமயத்தவ ரென அறியலாம். [எங்கும் ஒருமுதலாக விரிந்திருக்கின்ற பரமாத்மாவொன்றே மாயையினால் அளவிறந்தஜீவாத்மாக்களாகக் காணப்பட்டு அவித்யை நீங்கினவளவிலே அவையொன்றுங் காணப்படாமல் மீளவும் ஒன்றுபட்டுப் போம் என்பது அத்வைதசித்தாந்தம்.]

இச்செய்யுள் - ஸ்ரீபாகவதத்தின் முதல்சுலோகத்தின் கருத்தைக் கொண்டது.

இது - பலவகைக்காய்ச்சீர்களும் விரவிவந்த நாற்சீர்களா லாகிய அளவடி நான்கு கொண்டு வந்த கலிவிருத்தம்; ஓசையமைதிலயநோக்கி ஒருதரவுமாத்திரமாய்நின்ற கொச்சகக்கலிப்பா வென்றுங் கூறப்படும். (க)

சிந்தகத்துக்கிழமர்ந்து திருமதுரகவியடிகள்சிந்தையுட்க, சிந்தகத்துப்பேரின்பக்கடல்கோப்பத் திரைப்புணரி திவள்வெண் முத்தச், சிந்தகத்துமன் னுயிர்களொருபெருவீட டையுநெறிதெ ருண்டுசூழ்வி, சிந்தகத்துமலமறச்செந்தமிழ்மறைசொல்பெருமு னிதாள்சிந்தித்துய்வாம்.

இக்காப்பு, ஆழ்வார்கள் பன்னிருவருட் பிரதானராய் அவயவியெனப் படுகிற நம்மாழ்வாரைப் பற்றியது.

(இ-ள்.) சிந்து அகத்து இழ் அமர்ந்து-புளிய மரத்தின் அடியிலே எழுந் தருளியிருந்து,திரு மதுரகவி அடிகள் சிந்தை உள் களிந்து அகத்து பேர் இன்பம் கடல் கோப்ப - சிறந்த மதுரகவியாழ்வார் நெஞ்சினிடம்உருகி அவ் வுள்ளத்திலே பேரின்பவெள்ளம் நிரம்பப்பெறும்படியாக, திரை புணரி திவள் வெள் முத்து சிந்து அகத்து மன் உயிர்கள் ஒரு பெரு வீடு அடையும் நெறி தெருண்டு-அலைகளையுடைய கடல்கள் (புடைசூழ்ந்து) ஒளிபிறழ்கின்ற வெண்ணிறமானமுத்துக்களைக்கொழிக்கப்பெற்ற பூமியிற் பொருந்திய ஜீவா த்மாக்களெல்லாம் ஒப்பில்லாத பெரிய பரமபதத்தை அடையும்படியான வழியை ஆராய்ந்தறிந்து, அகத்து மலம் சூழ்வு இசிந்து அற - (உலகத்தா ருடைய)பாவமாகிய அழுக்கு (அவ்வுயிர்களைச்) சூழ்தல் நீங்கி ஒழியும்படி, மறை செம் தமிழ் சொல் -(ஸம்ஸ்கிருத) வேதங்களின்பொருள்முடிவைச் சுத்தமான தமிழ்ப்பாஷையிலுஞ் சொல்லியருளிய, பெரு முனி - சிறந்த சட கோபமுனிவராகிய, தாள்- திருவடிகளை, சிந்தித்து - தியானித்து, உய்வாம்- ஈடேறுவோம்; (எ - று.)

எம்பெருமானுடையதிருக்கல்யாணகுணகணமாகியஅமிருதப்பெருங்க டலிலே முழுகி ஆழ்ந்து ஈடுபடுபவ ராகையாலே,ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாய த்திலே ஆழ்வார்களென்று திருநாமம்பெற்றவர், பதின்மர்; அவர்களது பெயரும் முறையும் வருமாறு:—பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரி யாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை யாழ்வார்: இனி, இவர்களோடு ஆண்டாளையும், மதுரகவிகளையுங் கூட்டி, ஆழ்வார்கள் பன்னிருவ ரென்பதும் உண்டு. இவர்களில் ஐந்தாவராகிய நம்மாழ்வார், மற்றையாழ்வார்கள்போல லௌகிகவிஷயஞானம்நடை யாடுகையில்எம்பெருமானருளாலேஒருகாலவிசேஷத்திலேதத்துவஞானத்தி கள்பிறந்து அத்தப்பகவானை அநுபவிக்கையன்றிக்கே,திருத்துழாய் பரிமள த்தோடே அங்குரிப்பதுபோலே இயற்கையிலேயே விலக்ஷணஞானபக்திக ளையுடையராகையாலே, மிகுந்த ஏற்ற முடையராய், தத்துவஞானப்பிரவ ர்த்தனத்திலே பிரதமாசாரியராகக் கொள்ளப்படுவர். இவரைக் கௌஸ்து பாம்சமென்று மார்க்கண்டேயபுராணமும்,சேனைமுதலியாரம்சமென்றுவரு ந்தபாத்மபுராணமும், பகவதம்சமென்று பாத்மபுராணமுங் கூறுகின்றன. இவரொருவரைத் தனித்தனி ஒவ்வொன்றின் அம்சமென்று மூன்றுபுராணங் கள் மூழங்குவது எவ்வனம் ஒக்கு மெனின்;—சக்கரவர்த்தியான அரசன் அஷ்டதிக்பாலகர்களுடைய எட்டுஅம்சங்களுங் கூடிப்பிறந்தவ னென்றும், லக்ஷ்மணனும் பலராமனும் தனித்தனி ஆதிசேஷாம்சமும் பகவதம்சமுங் கூடியவ ரென்றும் நூல்கள் கூறுகின்றமையால, அவைபோலவே இது வும் ஒக்கு மெனக. இவருக்கு இருப்பிடமான திருப்புளியமரம் எம்பெரு

மானுக்குத் திருப்பள்ளிமெத்தையான ஆதிசேஷனது அம்சமென்று பிரமாண்டபுராணங் கூறுகின்றது. பாண்டியநாட்டில் தாமிரபர்ணிநதிதீரத்தில் திருக்குருகூரென்கிற திவ்வியதேசத்திலே காரியென்பவருக்கு உடையநங்கையார்திருவயிற்றிலே அவதரித்த இவர் அழுதல் முலையுண்ணுதல் சிரித்தல் முதலிய குழந்தைச்செய்கை யொன்றையுஞ் செய்யாமலே வாட்டமின்றிப் பரிபூர்ணராயிருக்கிற ஆச்சரியத்தைத் தாய்தந்தையர் கண்டு இவரை அத்திருப்பதியிலுள்ள திருமாலின் திருக்கோயிலிற் கொண்டுபோய்விட அங்கு ஒருபுளியமரத்தின்கீழே சென்று வீற்றிருந்து பதினாறாண்டளவுங் கண்திறவாமல் மௌனமாக எழுந்தருளியிருந்தன ரென்றும், பின்பு மதுரகவிகள் இவ்வாழ்வாருடைய மகிமையைக் கேட்டுங் கண்டும் அறிந்து அடைந்து அடிமைத்தொழில்செய்தவருகையில் ஆழ்வார் ருக் யசுர் அதர்வணம் சாமம் என்கிற நான்குவேதங்களின் சாரார்த்தத்தை முறையே திருவிருத்தம் திருவாசிரியம் பெரியதிருவந்தாதி திருவாய்மொழி என்னும் நான்குபிரபந்தங்களாலே அருளிச்செய்ய மதுரகவிகள் முதலிய ஸஜ்ஜனங்கள் அவற்றைக் கற்றறிந்து வல்லராய் அப்பொழுது உய்வுபெற்றார்க ளென்றும், அப்பால் நாதமுனிகளென்னும் பூருவாசாரியர்மூலமாக அப்பிரபந்தங்களைப் பெற்று அநுசந்தித்துப் பின்புள்ளாரும் பிறவிப்பெரும்பாசபந்தமற்று வீடுபெற்றன ரென்றுங் குருபரம்பராப் பிரபாவம் முதலிய நூல்களிற் கூறியிருத்தல் காண்க. முதலடியில், சிந்தகம் - சிந்தவகமென்பதன் விகாரம்; புளியாகிய மரம் என இருபெயரொட்டுப் பண்புத்தொகை. சிந்தமென்பது புளியமரத்தின் பெயராதலை "சந்தஞ் சிந்தூரஞ் சிறந்த வாமிரம்,வந்த திந்திருணி யெகினம் புளியே" என்னுந் திவாகரத்தால் அறிக: இது - சிந்த என்னுந் தெலுங்குமொழியினின்றும் வந்த திசைச்சொற் போலும். அகமென்பதற்கு - முதலடியில் மரமென்றும், இரண்டாமடியில் மனமென்றும், மூன்றாமடியில் பூமியினிடமென்றும், நான்காமடியில் பாவமென்றும் பொருள்; இது இப்பொருள்களை உடையதாதலை,"மனமு முள்ளு மலையும் பாவமும், புவியு மரப் பொதுப் பெயரு மாகும்" எனனும் பிங்கலந்தையால் உணர்க. அகமென்பது - மரத்தையும் பாவத்தையும் உணர்த்தும்பொழுது, வடசொல்லாம். மரத்தையுணர்த்தும்பொழுது, (ந+கம்=அகம்) நடத்தலில்லாத தென்று அவயவப்பொருள். மனத்தை உணர்த்தும்பொழுது, அகம்என்னும் உள்ளிடப்பெயர் அங்கிருக்கின்ற மனத்தைக் குறித்தலால், இடவாகுபெயராம். மதுரகவி - இனிப்பாகச்செய்யுள்செய்பவ ரென்பதுபற்றிய பெயர். அடிகள் என்பதற்கு - இங்கே, பெரியவர் என்று பொருள். பேரின்பம் - நிரதிசய ஆனந்தம். மூன்றாமடியில், சிந்தகம் - வினைத்தொகைநிலைத்தொடர். 'மன்னுயிர்கள்' என்றது, ஜீவாத்மாக்கள் பரமாத்வாவைப்போலவே என்றுமழியாது முக்காலத்தும் ஒருபடிப்பட நித்தியமாயிருப்பன வென்பது சித்தாந்தமாதலால். வீடு - (ஸம்ஸாரபாசபந்தங்களை) விட்டு அடையும் இடம்; இது - முக்தியென்னும் வடமொழியின் பொருள் கொண்டது. சூழ்வு - தொழிற்பெயர்; வு - விகுதி. இசிந்து - வினையெச்சம்; இசிதல் - நீங்குதல். மலம் - அசுத்தமானபொருள். இனி, சூழ் விசிந்த அகத்து மலம் எனக் கொண்டு, (ஆன்மாக்களைச்) சூழ்ந்து பந்தப்படுத்தின கருமமாகிய மலம் என்னவுமாம்; சூழ் - சூழ்ந்து என்பதன்விகாரம், பகுதியே வினையெச்சப்பொருளுணர்த்திற்று: விசித்தல் - கட்டுதல்; விசிந்தகம் - தொகுத்தல்விகாரம். இனி, அகத்து மலம் - அகங்காரமாகிய மலம் என்றும் உரைக்கலாம்; அகங்காரமாகிய மலம் அறும்படி தமிழ்மறைசொல்லியதைத் திருவாய்மொழியில் "நீர்நும தென்றிவை, வேர்முதல் மாய்த்திறை, சேர்மி

(b)

னுயிர்க்கத, னேர்நிறை யில்லை" என்று அருளிச்செய்திருத்தல் கொண்டும் அறிக. செந்தமிழ் - வடபாண்டியநாட்டில் வழங்குஞ் செவ்விதான தமிழ்; இதற்கு எதிர்மொழி, கொடுந்தமிழ். திராவிடமென்னும் வடமொழி, தமிழ் எனச்சிதைந்தது; இனி, தனிமைப்பொருள்குறித்த தமி என்னும் வினையடியாப் பிறந்து ழகரவொற்றெழுத்துப்பேறு பெற்றுக் கருத்தாப்பொருள் விகுதி புணர்ந்துகெட்டுத் தனக்குஒப்பில்லாதபாஷையெனப் பொருள்தருவதென்பாரும், செவிக்குஇனிமைதருதலால் மதுரமென்னும்பொருளுடையதாய்த் தமிழென வழங்கியதென்பாரும், வடமொழிமுதலிய வேறுபாஷைகளுக்கு இல்லாமல் தனக்குமாத்திரமே தனியாகவுள்ள ழகாரவெழுத்தையுடைய பாஷையெனப் பொருளுரைப்பாரு முளர். முனிவர்களினும் ஆழ்வார்கள் மிகச்சிறந்தவர்க ளென்னுங் கருத்தால், நம்மாழ்வார் 'பெருமுனி' எனப்பட்டார்; 'தேகாத்மாபிமானிகளுக்கும், ஆத்மஸ்வரூபம்கைவந்திருக்கும் ருஷிகளுக்கும் பர்வதபரமாணுவோட்டைவாசி போதரும்; ருஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் அத்தனைவாசி போதரும்' என்பது ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாயம். இருந்து, தெருண்டு, கோப்ப, அற மறை சொல் பெருமுனி என இவையும். இதில் எல்லா அடிகளிலும் முதலில் வந்தஎழுத்துக்களே மீண்டும்வந்து பொருள்வேறுபாடுடைத்தாயிருத்தல் யமகமென்னுஞ் சொல்லணி யெனக் காண்க.

இச்செய்யுள் ஏட்டுப்பிரதிகளில் இல்லையாயினும், அச்சுப்பிரதியிலிருத்தல்பற்றியும் ஆழ்வார்விஷயமாதல்நோக்கியும் உரையிடப்பட்டது.

இது - முதல்நான்குசீர்களுங் காய்ச்சீர்களும் மற்றையிரண்டும் மாச்சீர்களு மாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தம்; வருங்கவியும் இவ்வாறே: இவற்றில் ஒவ்வொருஅடியிலும் ஈற்றுச்சீர் தேமாச்சீராகவே நிற்கும். (௨)

பிறந்தபொழுதேதுறந்துபிறைக்குழவிபோனடப்பப்பின்
போய்த்தொன்னூ,லறைந்தபுகழ்வியாதமுனியாதரத்தான்மதலா
யென்றழைப்பச்செவ்வாய்,திறந்துநறைபொழியுமலர்ச்செழுந்
ருவுமேனென்னவுயிர்களியாவு, நிறைந்துறையுஞ்சுகமுனிவனி
ரையிதழ்த்தாமரைமலர்த்தாளினைதல்செய்வாம்.

இக்காப்பு - இந்தப்பாகவதபுராணத்தை ஆதியிற் பரீக்ஷித்துக்குக் கூறி வெளியிட்டருளின மகோபகாரியும், ஸ்ரீவேதவியாசமகாமுனிவரது திருக்குமாரு மாகிய ஸ்ரீ சுகமகாமுனிவரைப் பற்றியது.

(இ - ள்.) (சுகமுனிவர்),பிறந்த பொழுதே - (தாம்) அவதரித்த காலத்திலேயே, துறந்து - (எல்லாப்பற்றுக்களையும்) விட்டு, பிறை குழவி போல் - இளஞ்சந்திரன்போல (ஒளியுந் தண்மையும் கலையும் உடையவராய்), நடப்ப - (பெற்றோரைவிட்டுநீங்கித்தனியேவிரைந்து) நடந்துசெல்ல, தொல் நூல் அறைந்த புகழ் வியாத முனி - பழமையான வேதம் முதலிய நூல்களை வகுத்துக்கூறிய கீர்த்தியையுடைய (தந்தையாகிய) வியாசமுனிவர், ஆதரத்தால் - (தமதுகுழந்தையென்று) உண்டான ஆர்வத்தினாலே, பின் போய் - அக்குழந்தையின்பின்னே சென்று, மதலாய் என்று அழைப்ப - 'குழந்தாய்' என்று விளித்துக் கூப்பிட, நறை பொழியும் மலர் செழு தருவும் செவ் வாய் திறந்து ஏன் என்ன - தேனைச் சொரிகின்ற பூக்களையுடைய செழிப்பான மரங்கள் யாவுஞ் சிவந்த வாயைத் திறந்து (அவ்வியாசர்வார்த்தைக்கு) 'ஏன்' என்று உத்தரங்கூறும்படி, உயிர்கள் யாவும் நிறைந்து உறையும் - எல்லாவுயிர்களினிடத்தும் (யோகஞானத்தாற் கடவுள்போல) நிரம்பி வசிக்கின்ற,சுக முனிவன் - சுகமகாமுனிவரது, நிரை இதழ் தாமரை மலர்

தாள் - கூட்டமாகிய இதழ்களையுடைய செந்தாமரைமலர்போன்ற திருவடிகளை, நினைதல்செய்வாம் - தியானிப்போம்; (எ - று.)

"அன்னைதன் னுதரத் தடைந்தசோ டசமாம் வருடமா மழகனுய்த் தரங்கந், தன்னுபாற் கடலிற் சோதிபா லேகச் சுதனெனு மவாவினால் வியாசன், பின்னுற நடந்து விளித்திட வனத்திற் பிறங்குபா தபங்களே னெனவே, தொன்னல னுறவே சனனபா சத்தைத் துணித்தகன் முனிவனைத் தொழுவாம்" என்றார் மகாபாகவதத்தும். இது - ஸ்ரீபாகவதத்தில், இரண்டாம்சுலோகத்தின் மொழிபெயர்ப்பு. 'பிறந்தபொழுதே துறந்து' என்றதனால் சுகமுனிவரது இயற்கையிலே அகங்காரமமகாரமறுத்திருக்குந்தன்மையும், 'வியாதமுனி யாதரத்தான் மதலாயென் றழைப்ப' என்றதனால் வியாசமுனிவரினும் மேம்பட்ட ஞானமுடையவர் சுகமுனிவரென்பதும் உணர்த்தப்பட்டன. தாங்கள் சுகமுனிவரது ரூபங்களென்கிற காரணத்தால், மரங்கள் 'ஏன்' என்றன. மதலாய் - மதலையென்பதன் ஈறு திரிந்த விளி. (௩)

நூன்மாண்பு.

நூலினது பெருமை. இது, இதற்கு முதனூலாகிய வடமொழிப்பாகவதத்தைப்பற்றியது.

சுழித்துநல்லமுதொழுகியஞ்சுகமுகஞ்சேர்ந்து
தழைத்தநான்மறைத்தடஞ்சினைக்கற்பகதருவிற்
பழுத்துதிர்ந்ததுபரமபாகவதமென்றிசைக்கும்
விழுப்பெருங்கனிநுகர்ச்சியேவிரும்புவர்மேலோர்.

(இ - ள்.) நல் அமுது சுழித்து ஒழுகி - நல்ல தேவாமிர்தம்போன்ற இனிய இரசம் சுழிகளையுடைத்தாய் மிகுதியாகப்பெருகப்பெற்று, அம் சுக முகம் சேர்ந்து-அழகிய சுகமுனிவரது திருமுகமாகிய கிளியினது வாய் பொருந்தப்பெற்று, தழைத்த நால்மறை தட சினை கற்பக தருவின் பழுத்து உதிர்ந்தது - பரவிய நான்குவேதங்களாகிய பெரிய கிளைகளையுடைய கற்பக மரத்திலே பழுத்து (அதினின்று கீழ்) நழுவியதான, பரமபாகவதம் என்று இசைக்கும் விழு பெரு கனி-(எல்லாநூல்களினுஞ்) சிறந்த பாகவதமென்று கூறப்படுகிற சிறந்த பெரியபழத்தை, நுகர்ச்சியே - உண்ணுதலையே, விரும்புவர் - விரும்புவார்கள், மேலோர் - மேன்மையையுடையோர்; (எ - று.)

உபமேயமாகிய பாகவதம் சுகமகாமுனிவரது திருவாய்மலரினின்று வந்ததனாலும், உபமானமாகிய பழத்திற்குக் கிளிகொத்தப்பெறுதல் ஒரு சிறப்பாதலாலும்,இரண்டுக்கும் பொதுப்படச் சிலிஷ்டரூபகத்தால்'அஞ்சுகமுகஞ்சேர்ந்து' என்றார். வேதமாகிய மரத்திக்குக் கிளை யென்றது, அதன் பகுப்புக்களை; அவை சாகை யெனவும் படும்.இச்செய்யுள்உருவகவணி. வடநூலுக்கு ஏற்ப, இக்கவி'விரும்புவிர் மேலோர்'என மேலோரை முன்னிலைப்படுத்திக்கூறியதாக இருத்தல்வேண்டும். வேதத்தைக் கற்பகமென்றது, எல்லாப்பொருளையுந்தருதலால்.அதிற்பழுத்துச்சிந்தியபழமிதுவெனவே,பாகவதம் வேதத்தில்வடித்தெடுத்தசாரமென்றதாயிற்று.

இது, பெரும்பாலும் முதற்சீரும்ஈற்றுச்சீரும் மாச்சீர்களும் மற்றைய மூன்றும்விளச்சீர்களு மாகிய நெடிலடி நான்கு கொண்ட கலிநிலைத்துறை

அவையடக்கம்.

கற்றறிந்தவர்சபையின்முன் தனது அடக்கத்தைத் தெரிவித்தல்.

பூமடந்தைபுணர்ந்தவன்மாக்கதை
நாமடந்தைநவின்றனளாகலாற்
காமடந்தையென்றோர்கவியான்சொலிற்
பாமடந்தையள்பாடியதாகுமே.

(இ - ள்.) பூமடந்தை புணர்ந்தவன் - திருமகளையும் நிலமகளையுங் கூடினவனான திருமாலினது, மா கதை - சிறந்த சரித்திரத்தை, நா மடந்தை - (பிரமதேவனது) நாவில்வாழும் சரச்சுவதிதேவி, நவின்றனள் - (முன்னே சுகமுனிவர்முகமாகக்) கூறியருளினாள்; ஆகலான் - ஆதலால், மடந்தை கா என்று ஓர் கவி யான் சொலின் - தேவியே காத்தருள் என்று (அச்சரசுவதியைநோக்கி) யான் பிரார்த்தித்து ஒரு செய்யுளைப் பாடினால், (அது), பா மடந்தையள் பாடியது ஆகுமே - பாட்டிற்குரிய மகளான அக்கலைமகளே (அடியேன்முகமாகப்) பாடியதாகும்; (எ - று.)

திருமாலினது திவ்வியசரித்திரத்தைக் கூற மிகவிருப்பமுடைய சரசுவதியைச் சரணமாக அடைந்து யான் பாடல்பாடத் தொடங்குதலால் எனது பாடல்களிற் பிழைவாராதபடி அத்தேவி கருணைசெய்து காத்தருளுவள் என்பதாம். இரட்டுறமொழித லென்னு முத்தியால், பூமடந்தை என்பதற்கு- தாமரைமலரில்வாழுந் திருமகளென்றும்,பூமிதேவி யென்றும் இருபொருள் கொள்ளப்பட்டது;"வாயு மனைவியர் பூமங்கையர்க ளெம்பிராற்கு" என்றார் பிறரும். மூன்றாமடியில்,மடந்தை - அண்மைவிளி.மடந்தையள் -மடந்தை யென்னும் பெண்பாற்சொல்லின்மேல், அள்-பெண்பால்விகுதி.

இது-முதற்சீர் மாச்சீரும் மற்றைமூன்றும் விளச்சீர்களு மாகிய அளவடி நான்கு கொண்டு வந்த கலிவிருத்தம். (௧)

உறைபடுமங்குல்வானுருவவோர்திறஞ்
சிறைபடுபுள்ளெலாஞ்செலவல்லவோ
விறைவனூலறிவினரெடுத்திசைத்ததென்
னறிவினதளவுமேயறைவன்யானுமே.

(இ-ள்.) உறைபடுமங்குல்வான் உருவ-மழைநீர்த்துளிபொருந்தியமேகங்கள் சஞ்சரித்தற்கிடமான ஆகாயத்தினிடம்முழுவதிலும், ஓர் திறம் - ஒரே வகையாய்,சிறை படு புள் எலாம் - இறகுகள்பொருந்தியபறவைகள்யாவும், செல்ல வல்லவோ-போதற்குவல்லமையுடையனவோ? [அல்லவென்றபடி]:(அளவின்றிமிகப்பரந்த ஆகாயத்திலே ஒவ்வொருபறவையுந் தனது வல்லமைக்கு ஏற்றபடி உலாவுதல்போல), யானும்—, இறைவன் நூல் அறிவினர் எடுத்து இசைத்தது- யாவர்க்குங்கடவுளானதிருமாலைப்பற்றினதத்துவசாஸ்திரங்களையெல்லாமறிந்துள்ள வியாசரும்(சுகரும்முதலிய) மகாத்துமாக்களால் எடுத்துக்கூறப்பட்ட பாகவதபுராணத்தை, என் அறிவினது அளவுமே அறைவன் - எனது அறிவிற்கு ஏற்றவளவே கூறுவேன்; (எ-று.) எடுத்துக்காட்டுவமையணி.

இச்செய்யுள் - பெரும்பாலும் மூன்றாஞ்சீரொன்றுமாச்சீரும் மற்றை மூன்றும்விளச்சீர்களுமாகிய அளவடிநான்கு கொண்டு வந்த கலிவிருத்தம்.

இவ்வாறுகவிகளும்-நூலாசிரியரால் நூலின் முதலிற் கூறப்பட்டனவாதலின், தற்சிறப்புப்பாயிரமெனப்படும். (௨)

ஸ்ரீ

பாகவதம்.

முதற்கந்தம்.

முதலாவது

மாயவனமிசாவதாரமுரைத்தவத்தியாயம்.

தாமரைத்தவிசுறைதருசதுர்மறைமக்கிழவ
னேமியுய்த்தலானைமிசமெனநிலநிகழ்த்து
நாமமுற்றநல்வனத்திடைநவில்சவுனகரே
யாமுதற்றவர்சத்திரவேள்வியாற்றினரால். (க)

அரியமாமகம்புரிதருசாலையிலடைந்த
வுரியமாதவச்சூதனுக்குயர்தவிசளித்துப்
பெரியமால்கதைகேட்குறுபெட்பினராகித்
தெரியுநான்மறையந்தணர்செப்பலுற்றனரால். (உ)

வந்துவெங்கலிவளர்தலிற்றருமங்கடவங்கள்
சிந்தையுற்றொருங்குறைவறச்செய்குவதரிதா
னந்தலின்றியானந்தமாய்நண்ணியஞான
மெந்தவாற்றினுலியைந்திடுமெனமதித்திருந்தேம். (ங)

வேதநான்கெனவிதித்தவன்விளம்புநற்புராண
மோதுமொன்பதிற்றிரட்டியுமுணர்தருமுரவோய்
காதலோடுனைக்கண்ணனேகாட்டிடக்கண்டே
மேதநீங்கினேமுத்தியுமெமக்கெளிதாமால். (ச)

தரையின்மேற்பொறைதவிர்த்திடத்தண்ணளிசுரந்து
விரியுமன்பினிற்றன்பதம்வேட்டவர்தமக்கும்
பரிவினிற்கொலைபற்றியவுளத்தொடுபகைத்துக்
கருதினோருக்கும்வீடருடன்மையையேகருதி. (ரு)

உலகெலாந்தனதகல்வயிற்றொருபுடைகிடப்பக்
கலையரும்புறுகதிரிளமதியெழில்கவற்றுந்
திலகவாணுதற்றேவகிதிருவயிற்றுதித்தோன்
குலவுமாக்கதைகூறுவாயென்றுகூறினரால். (சு)

முனிவரித்திறமுரைத்தலுமுழுதுணர்சூத
னனகன்மாக்கதைகேட்பவுள்ளன்புமிக்கதுதான்
வினையினீங்கியமெய்த்தவப்பயனெனுக்குருவைப்
புனிதமாலைநாமடந்தையைப்போற்றினன்புகல்வான். (எ)

அலர்பொலம்பொருட்டரக்கிதழ்முளரியம்போதிற்
குலவுசேயிழைகுவிமுகிழிளமுலைமணந்தோன்
கலையின்மன்னியசாலகமேகனேகடல்வேலி
யுலகெலாநிறைந்தவன்றிறமெங்ஙனமுரைக்கேன். (அ)

கரைக்குறும்பெறிசனோடற்றுயிலிறைதோன்றால்
விரிக்கநான்மடல்விரிமலரவற்குமற்றரிதாற்
றெரித்தநான்மறைத்திருமுனியருளினாற்சிறிதிங்
குரைப்பலென்றுணர்சூதமாமுனியெடுத்துரைப்பான். (௯)

உரைசெய்வெங்கலியுததியைக்கடந்திடற்கோடம்
பொருவிறன்பதந்தோற்றியகங்கையிற்புனிதந்
தெரிதரச்சொலக்கேட்கநற்றெவிட்டிடாவமுத
மரியவெம்பவநோய்க்கருமருந்தரிகதைதான். (௧௦)

புரியும்பாதகம்போக்கிடப்புனிதநீர்படிந்தா
இரியமாதவருறவுவந்துற்றிடுமுற்றான்
மருவுவெம்பவந்தீர்ந்திடுமால்கதைகேட்பப்
பெருகுமன்புபின்பிறப்பறுஞானமெய்திடுமால். (௧௧)

மன்றுமாபுரைமதிகளுமிக்கிலாக்கலியிற்
றன்னியோர்முறைசாற்றியதவத்தினர்தமக்கும்
பன்னுதொல்கதைபத்தியிற்கேட்குநர்தமக்குந்
துன்றுவெம்பவந்தீர்த்துவிடருளுவன்றொல்லோன். (௧௨)

பலமெலார்தொலைத்தருள்கதைபத்தியிற்கேளான்
புவியின்மேற்பிறந்தென்பயன்புனிதனாங்கதையை
நவிலுநாவினோர்நண்ணியவன்பொடுகேட்குஞ்
செவியினோர்தவத்தால்வருஞ்சென்மமேசென்மம். (௧௩)

துளவினன்பதத்தன்பிலராய்நனிதுணிந்தே
யளவிலாதநற்கருமங்களாற்றினுமறிவின்
வளமிலாதவராயுடல்வருந்துநராமக்
கிளரும்வான்கதியடைந்திடக்கிடைப்பதொன்றிலையால். (௧௪)

நலத்தினிற்றிகழ்நான்கெனும்வருணவாச்சிரமப்
புலத்தினிற்றமகருமங்கள்பத்தியிற்புரியின்
வலத்தின்மிக்குயர்மாயவன்மகிழ்தரமருவும்
பலத்தையிச்சியாதாற்றுவோர்பரஞ்சுடராவர். (௧௫)

ஆற்றுமோர்வினையுருப்பெயரடைந்திடாவமலன்
சாற்றுதாமதத்தாலரனுருவெனச்சார்ந்தான்
போற்றிராசதத்தாலயன்புரமெனப்பொலிந்தா
னேற்றுசாத்துவத்தாலரியுருவெனவியைந்தான். (௧௬)

தாமதத்தனுத்தாவருந்தாவரஞ்சார்ந்த
தூமமற்றிராசதத்தனுச்சொல்லிசத்துவத்தி
னுழுதற்றனுவாங்கெழுமக்கினியதுதான்
வாமமூர்த்தியைத்தரிசனமாக்கிடும்வகையால். (௧௭)

முத்தரானவர்பிரமமொன்றெனத்தனிமொழிவார்
வித்தைசேர்தருமனத்தினோர்விராட்டுவையப்பார்

சுத்தரானவர்பரமவான்மாவெனச்சொல்வார்
பத்தியோர்பகவானெனவேநனிபகர்வார். (கஅ)

கேடில்வேதமுமங்கஞ்ங்செழுமியதவமு
நீடியோகமுந்தானமுநிகழ்த்தியகதியுங்
கூடுமாயையுந்தருமமுங்தலவியவீடு
நாடுஞானமுநவிலிஞராயணனெனுமால். (கசு)

பின்னபின்னமாத்தருக்களிற்பிறங்கியதழலி
னுன்னுகூத்தினிற்பற்பலவேடமுற்றவரின்
மன்னுமெவ்வுலகத்தினுமருவியேழ்பிறப்பாத்
துன்னுநல்லுருவாகவுந்துலங்குவன்றொல்லோன். (உ0)

ஆயிரந்தலையாயிரங்கண்மலரணிசேர்
ஆயிரம்புயமாயிரஞ்சேவடிதழைப்ப
ஆயிரந்தலையரவினினறிதுயிலமர்ந்த
ஆயிரம்பெயரிறைகலையளப்பிலவுளவால். (உக)

இலகுமேழ்பிறப்பினில்வருசராசரத்தோடு
முலகெலாந்தனியுதிப்பதுமொழிந்தடங்குவது
மலகிலாதவன்பாலலதிலையவயவமாங்
கலையலாதுவேறுலகெனக்காட்டவுமிலையால். (உஉ)

உரியமாயையாலுலகெலாம்படைத்திடவுவந்து
விரியுமண்டமாய்விளங்கியவிராட்டுவாம்புருடன்
மருவுதன்கலையாற்சவுமாரமாய்வயங்கவ்
வரியராஞ்சனகாதியராயவதரித்தான். (உந)

ஆதியாமவதாரமாய்ப்புருடனையறைவார்
கோதிலாதவன்குலவிரண்டேமுதலாக
வேதநீங்கவதாரங்களெடுத்தமையினிநா
னோதுகேனெனச்சூதமாமுனியெடுத்துரைப்பான். (உச)

இறைவனானமாலேனமாயிருநிலமெடுத்தான்
மறைசொனாரதனாய்ப்பஞ்சராத்திரம்வகுத்தான்
விறல்செய்மாநரநாரணராய்த்தவம்விரித்தா
னுறையுந்தாய்க்குநற்கபிலனாய்த்தத்துவமுரைத்தான். (உரு)

வித்தைசேர்தத்தாத்திரையனாய்விண்ணவர்போற்ற
வத்திரிக்குநன்மகனெனவுதித்தலர்க்கனுக்கும்
புத்தியாலரிநாண்வரப்போற்றுவோன்றனக்குந்
தத்துவந்தெரித்துரைத்தனன்றரணிமேன்முதல்வன். (உசு)

ஓதுநான்மறைருசியெனவுரைதருமாவோன்
மாதவத்தினன்யாமகப்புருடனாயுதித்தே
யாதியாகியமநுவினையடைந்தானுமி
காதலாற்றரவிடபனாய்க்கருதுவிடுற்றான். (உஎ)

பிருதுமன்னவனாகியேபெருவளஞ்சுரப்பக்
கருதுபூமியைக்கறந்தனன்மீனுருவெடுத்தே
மருவுசர்த்திவைவச்சுதனெனும்பெயர்மனுவா
மரசர்கோனைமன்வந்தரத்தடைகெடக்கெடுத்தான். (௨௮)

அந்தரத்துறையமரருமசுரருங்கடையு
மந்தரத்தினைமறுகுமவ்வாரிதிமருவிச்
சுந்தரப்பெருங்கமடமாய்முதுகினிற்சுமந்தான்
கந்தரத்தினிற்கவுத்துவங்கவினியகண்ணன். (௨௯)

மருவுவேலையின்வயங்குதன்வந்திரிபகவா
னுருவமாகிநல்லமுதுறைகடத்தொடுமுதித்தான்
பொருவின்மோகினிவடிவமாய்ப்புத்தமுதத்தை
யிருவிசும்பின்வாழிமையவர்க்கீந்தனனிறைவன். (௩0)

சனகராதியரேத்துறத்தவங்குதம்பத்தி
னனகமாநரமடங்கலாயவதரித்திகழுங்
கனகனாகியகடுந்திறலோனெஞ்சுகதழ்ந்த
சினவாளினன்மாய்தரச்சினந்துடன்கீண்டான். (௩௧)

சினக்கும்வாள்வலியவுணர்செய்தீமைசொல்லதிதி
தனக்குவாமனனாகிநற்றனிமுதலுதித்தே
யுனக்குநின்புகழுந்திடவுவந்துமாவலிநீ
யெனக்குமூவடியிடமருளென்றுமுனிரந்தான். (௩௨)

பரசுராமனாய்ப்பாரினிற்றலைமுறைமூவே
ழரசர்மாமுடிதுணித்தனன்வியாதனாயிறைவன்
விரவுமாமறைநான்கெனவகுத்துமேன்முறையா
லுரைசெய்வேதத்தின்முன்மறைபயிலுநர்க்குரைத்தான். (௩௩)

வழுத்திசிரண்டாமறைவைசம்பாயனற்கு
முழத்தசாமத்தைச்சயிமினியாமுதலவற்குந்
தழைத்துமேவுநான்காமறைதனைச்சுமந்துவற்குந்
தொழத்தகும்படிபுராணமென்றதைக்குஞ்சொற்றான். (௩௪)

அணிசெய்காவுசூழயோத்தியிலிராமனென்றடைந்து
பணிசெய்வானரப்படைகளாற்பரவையையடைத்து
மணிசெய்மாமதிளிலங்கையின்மருவிராவணனைத்
துணிசெய்தானவன்பதத்துணைவானவர்தொழுவோன். (௩௫)

தெண்ணிலாநகையுரோகிணிதேவகிவயிற்பால்
வண்ணனாகியபலராமனுமலர்ந்தசெங்கமலக்
கண்ணனாகியகண்ணனுமெனவந்துகடல்சூழ்
பெண்ணினிடலைப்பெரும்பொறைதீர்த்தனன்பெரியோன். (௩௬)

புனிதன்கீகடதேசத்திற்புத்தனென்றுதித்துக்
துனிசெய்வெங்கலியிறுதியிற்கற்கியாயெழுந்தும்

பலிசெய்தெண்டிரைப்பாரினிற்பகைஞரைத்துணித்தே
யினிது நல்லறனிலையினினிறுத்துவனினியால். (௩௭)

இருபதோடிரண்டெனுமவதாரங்கண்முறையே
யருவுமிங்ஙனமாயவன்கலைகளாலின்னுங்
கருதுசிரவதாரங்கள்கணக்கிலையெண்ணி
னரியவாரிதிமணலினுமநேகமென்றறைவார். (௩௮)

போற்றுதேவர்கண்மனுக்கண்மற்றவரெழிற்புதல்வர்
சாற்றுமாந்தர்கண்மரீசியேமுதலியதவத்தோ
ராற்றுநீர்ப்பிறிவெனவவன்கலையினிற்பிறிவாய்த்
தோற்றுவாரிதையேத்துவார்தொல்வினையறுப்பார். (௩௯)

இருந்துநல்லறிவாயவன்குணத்தொடுசேர்ந்து
வருந்துமுத்தொழிலிபற்றுமாமாயையைமணந்தே
யிருந்தனன்னெனத்தோன்றினுமிவையுளத்தறிவு
பொருந்திநோக்கின்வெங்கானலிற்புனலெனப்போமால். (௪0)

பற்றுநீக்கியபராசரற்குதித்தநற்பாலன்
கொற்றமால்கதைவகுத்தவன்குமரனுக்கிசைப்ப
வெற்றிமாதவமைந்தனும்விண்டுராதனுக்குச்
சொற்றவாறியான்சொல்குவன்கேண்மினென்றுரைத்தான். (௪௧)

மாயவனமிசாவதாரமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது

நாரதர்தோற்றமுரைத்தவத்தியாயம்

உரைத்தவாசகங்கேட்டலுமுனிவரருவந்து
வரத்தின்மிக்கவவ்வியாதமாமுனிவன்மால்கதையை
விரித்தவாறெவன்காரணம்விளம்பயார்சொன்னு
ரருத்திமாதவசொல்கெனச்சூதனங்கறைவான். (௧)

கடல்வயிற்றெழுகற்றைவெண்கதிர்மதிகடுப்ப
நெடுநிலாப்பொழினிரையிதழ்முளரிவீற்றிருப்பாள்
வடமொழிப்பெயர்வயங்குநல்வளந்திகழ்பேர்யாற்
றடைகரைத்தலைவியாதமாமுனிவரனடைந்தான். (௨)

நிலவரைப்பினிலுறைபவர்நெஞ்சகந்தெருளப்
பலவுரைத்தனம்புராணநூல்பாரதந்தெரித்தே
மலைவறப்பழமறைவகுத்துரைத்தனமென்றே
விலகியெம்முளந்தெருடரப்பெற்றிலமின்னும். (௩)

வரிச்சுரும்பிமிர்வண்டுழாய்முகில்கதையினிது
விரித்திலெமினிவிளங்கயாம்விரிக்குவமென்றுக்
கருத்தினெண்ணினனிருந்துழிக்கனிந்ததெள்ளமுதைச்
சிரித்தவின்னிசையாழ்முனியவ்வழிச்சேர்ந்தான். (௪)

சேர்ந்தயாழ்முனிசெழுமறைக்கிழவனைநோக்கி
யார்ந்தநூல்பலவுரைத்தனையாயினுமன்பா
லோர்ந்துமால்கதையுரைத்திலைபோலுமுட்டெளிய
வார்ந்துதென்னமுதொழுகமற்றவன்கதைவகுப்பாய். (ரு)

களிக்குமஞ்சிறைவண்டுணக்கதுழியந்தேற
வளிக்குந்தாமரைக்கிழவனேடுலகெலாந்தோற்றி
யளிக்குமாயவன்கதையலாலாரிருணெஞ்சந்
தெளிக்கவல்லதுபிறிதுமொன்றுளதுகொறெரியின். (சு)

மானதப்பெருந்தடத்தினின்மருவிபவன்னங்
கானகச்சிறுகாக்கைசேர்தடங்கருதாதா
னினிறச்செழுமுகில்கதைநிகழ்த்திடக்கேட்போர்
ஞானமிக்கவராய்ப்பிறிதொன்றையுநாடார். (எ)

கன்னியர்துழாய்க்கரியவன்கதைகளையன்றிப்
பின்னைமற்றெருகதையும்வெம்பிறவிநோய்போக்கா
முன்னமால்கதைகேட்டதான்முடிந்ததென்பவநோ
யன்னவாறுசொன்னமுனிநாரதனறைவான். (அ)

வேறு.

வழிந்துமட்டொழுகுமுளரியம்பசுந்தார்வனையுமோர் மறையவன்றனக்குத், தொழும்புபட்டொழுகுமொருத்திதன்வயிற்றிற் றெருன்றிமுற்பிறப்பினில்வளர்நாள், பொழிந்திடுந்தண்கார்ப்பருவம்வந்தியக்கப்புகன்றவம்மறைவலான்மனைவாய்த், தழைந்தெழுமார்வம்வேர்முதறடிந்துதலைப்படுதறவினாரடைந்தார். (கூ)

அடைந்திடுமெதிகடமக்கெனையேவலந்தணன்செய்திடப்பணித்தான், கடந்தவர்மிகவுண்மகிழ்ந்திடும்படிசெய்கருத்தினனேவல்செய்தவர்கேடிடந்தனின்மருவிநுகர்ந்திடுசேடமிருந்தவர்சொல்லிருண்டதனுற், றொடர்ந்திடுபாவம்வேரொடுந்தொலையத்துலங்கியதுள்ளமுமாதோ. (கo)

சங்கொடுதிகிரிதாங்கியதடக்கைத் தாமரைக் கண்ணினன் சரிதம், மங்கவரமுதமூற்றிருந்தொழுக வறைவது கேட்டனனதனும், சங்கைதீர்ந்தமலத்தாளிணைக்கனபுகனிந்திடவறிவொடுபொலிந்தேன், பொங்கராத்தண்டியின்றவளிறப்பப்பொன்வரைச்சாரல்வாய்ப்புக்கேன். (கக)

தம்பரமாகியமலமாய்நின்ற தலைவனைக்காண்குது மென்று, வெம்பிணிந்தவஞ்செய்காலையிப்பிறப்பின்விழியெதிர்காண்கிலையெனவோர், சொற்பெருவிசும்பிலெழுந்ததுவினையாற்றேன்றுமவ்வுடலம்விழ்ந்திடலும், சற்பமொன்றொழியக்கண்படைபொருந்துங்கடிமலரவனிடத்துற்றேன். (கஉ)

உடைக்கும்வெண்டரங்கக்கருங்கடன்முகட்டி லுறங்குமவ்வு றக்கம்விட்டரும்பு, வெடித்தபூங்கமலமலர்புரைசெங்கண்விழித்த னன்விழித்துநான்மறைநூல், வடித்துணர்மரீசியங்கிராவாதிமா மறைக்கிழவரைமுறையின், படைத்தனன்படைக்குங்காலேயில்யா னும்பனிமலரவனிடத்துதித்தேன். (கங)

விளக்கழற்கொழியாவெண்மதிக்ககலா விரிதிரைக்கருங்கடன் முகட்டின், முளைத்துயர்பசும்பொன்வரைவலந்திரியுமோட்டுவெங் கதிரவற்கேகா, வுளத்திருள்கடியுமாயவன்றென்னாலுரைமறையெ ன்றுபைந்தேற, றுளக்கறவொழுகியன்னபைந்தொடையாழ்த் தொன்முனிசொற்றனனகன்றான். (கச)

நாரதனகல நான்மறைக்கிழவ னருமணிச்சுடிகைநாகணை யான், பார்பொதிபசுந்தாட்டாமரைபாவிப்பழமறைபொருவுபாக வதந், தேர்தொறுமமுதமூற்றிருந்தொழுகுதிஞ்சொலாற்றெள்ளி திற்புனைந்தாங், கார்வமொடிருந்துமுழுதுணர்சுகன்றனஞ்செவிநி றைத்தனனன்றே. (கரு)

நாரதர்தோற்றமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

மூன்றவது

தன்மபுத்திரன் அரசியலடைந்தவத்தியாயம்.

வேறு.

அனையதுகேட்டவாறேயரும்பெறற்காட்சியெஃகின்
வினைவனமெறிந்துசாய்த்தவியாதமாமுனிவன்மைந்தன்
பனிமதிர்கவிகைநீழற்படுதிரைவையங்காக்குங்
குனிசிலைவிசயன்மைந்தன்குமரனுக்குரைசெய்தானால். (க)

என்னனுமுனிவர்சொல்வார்யாதினும்பற்றொன்றின்றித்
தன்னையேநோக்கிநின்றதபோதனன்றன்மைசாற்றி
னுன்னியவையங்கொள்வானோர்பசுப்பீர்கொள்காலந்
துன்னுவன்மனைகளன்றித்தொன்னகர்மனையின்வைகான். (உ)

மத்தர்போன்மூகரேபோல்வனைதுகிலின்றிஞான
வித்தகனோர்நாட்சென்றான்வியாதமாமுனிபின்செல்ல
வத்திசையரம்பைமாதரணிதுகிலின்றிக்கூலந்
தத்திவெண்டரளஞ்சிந்துதடநதியாடுவாரால். (ங)

நீடியநதியிலாடுநேரிழையரம்பைமாதர்
விடறிசுகனைக்கண்டுமென்றுகில்வனைந்திலாராய்
நாடிநான்மறைசொற்சொற்றநற்றவவியாதனைக்கண்
டோடினூர்கரைசென்றுற்றுருடுத்தினர்நாணித்தானே. (ச)

வரம்பிலாமறையைநான்காய்வகுத்தவன்வனப்புவாய்ந்த
வரம்பையர்தம்மைநோக்கியரைக்கொருதுகிலிலாதா

விரம்பியவறிவன்சென்றுநீங்கியபின்னர்யாழி
னரம்பைவெல்சொல்லிர்சொன்மினற்றுகிலுடுத்ததென்றான். (ரு)

ஏடலர்கூந்தன்மாதரிசைத்தவம்முனியைநோக்கி
யாடவரிவர்கண்மற்றையரிவையரிவர்களென்ன
நாடுதலிலக்குண்டந்தநம்பவன்றனக்கதில்லை
பீடுசான்முனியவென்றேபேசினரகன்றுபோனார். (சு)

இவ்வண்ணமறிவுதானேயிலங்கியசுகன்றான்யாண்டு
மைவண்ணத்தடக்கையானைமருவினன்கண்டுசொன்னான்
கைவண்ணக்கரிற்றான்சேட்டலென்னைகொல்கருதியென்று
ரைவண்ணப்புலன்செற்றோருக்கன்பொடுசூதன்சொல்லும். (எ)

தின்றுவானரவுதீண்டித்தொலைந்திடவுயிர்தானென்று
முன்னமோர்மறையோன்மைந்தன்மொழிதருசாபமேவி
மன்னவன்வெறுத்தியாவும்வரநதிக்கரையினுற்றா
னன்னவன்றன்னையங்கேயருந்தவன்கண்டுசொன்னான். (அ)

என்றனம்பரவைசூழ்ந்தவிருநிலங்காக்குமேந்த
லொன்றியசெல்வமெல்லாமுடலொடும்வெறுத்தானென்றாய்
நன்றவன்செய்தியெல்லாநவிலுதியென்றுமோகம்
வென்றவர்கூறச்சூதன்விழுத்தவர்க்கியம்பலுற்றான். (கூ)

கருமுகிற்குலங்கள்பெய்யக்கடையுகக்கடனீர்வான்போய்ப்
பெருகுதல்போலவந்தபெய்முகிற்குலங்களாகக்
குருகுலத்தரசர்சேனைக்குரைகடலிகலித்தம்முட்
பொருதுடைந்தரசவெள்ளம்பொன்றுலகடைந்தபின்னர். (க0)

வேறு.

காற்றின்மாமகன்கடுங்கதைப்புடைப்பினுற் கலின்பெறுகவா
னற்றுச்,சிற்றவானராவுயரியமன்னவன்செருக்களத்திடைவிழப்,
பாற்றினஞ்சுழல்பரிதிவெற்குருபதன்பாவைபாலகரைவர், மாற்ற
ருந்துயில்புரிவுழிமுருக்கினனவன்றிறம்பரித்தாமா. (கக)

மஞ்சாமாய்தலு மஞ்சகங்கண்டெழு மலர்கதிர்த்தடித்தன்
ன, வஞ்சொலாயிழையழுதலுமழற்கனின்னரும்பெறன் மகரா
வி, அஞ்சவாளுமைகழித்தவன்கருந்தலைதுணிக்குவன்யானென்
றனைச்,செஞ்சிலைத்தழும்பிருந்ததோட்டனஞ்சயன்றேரிவர்ந்தனன்
சென்றான். (கஉ)

கன்னன்றன்னெடுங்கட்கடைசிவந்தனல்கனன்றெழு காண்
டவ, வன்னவார்சிலைத்தனஞ்சயன்வெஞ்சினமடங்கல்போல்
வாரேறுக்கி, யன்னல்வாம்பரிவிரலியபெயரினனஞ்சினனகன்
றோடித், தன்னார்தாமரைத்தவிசுறைதனிமுதறமழற்படைதொடு
த்தெய்தான். (கங)

ஏழொடேழுலகங்களுமெரிதரவெறிதிரைக்கடன்மேய்ந்த,வூ
ழியாரழல்கடுப்பவெங்கனற்றிரளுமிழ்ந்ததுவரலோடு,மாழியான்
முகநோக்கினன்வரிமிடற்றஞ்சிறையளிகோடி, சூழுந்தண்டுணர்
ச்சோலைவெந்நீபுணத்தொடுசிலைவளைத்தோய்கேள். (கச)

பாட்டுவண்டிமிர் மலரினுன் படையிது விட்டனன் பரித்தா
மா, மீட்டலாங்கவனறிகலனீயுமவ்விறற்படைதொடுசென்றுச்,சூ
ட்டராவணைத்துயிலொழிபரம்பொருடுவரிதழ்மலர்விள்ளக், கோ
ட்டினுன்சிலைதொட்டனனயன்படைகுலைந்ததுநிலமாதோ.(கரு)

தொட்ட வெங்கணை யூழியினுலகெலாஞ்சுட்டவெங்கதிரே
போன்,முட்டிநின்றெதிர்படையொடுபொரவெளிமுசடுதீந்ததுகா
ணு, விட்டிலங்கியவயன்படையிரண்டையுமீட்டனன்விரைந்தெய்
திக்,கட்டினுன்மறைக்காளையையாயிரங்கண்ணினுன்றருகாளை. ()

உருவப்பூணணியுயிர்புரைகாதலருறங்குழியுயிர்மாய்த்த,குரு
திவாட்படைக்குரிசிலைக்கொல்லுதிகொல்லுதியெனப்பல்கா, லர
வவெண்டிரைப்பாற்கடன்முகட்டினினம்புயவிழிதுஞ்சுங், கரு
ணைமாகடல்கூறினன்றனஞ்சயன்கருத்தினைத்தெரிகிற்பான்.(கஎ)

ஆட்டுவண்டிமிர்தாரினுய் மத்தரை யஞ்சினரடைந்தோ
ரைக், கோட்டினிற்புரிகொடிஞ்சியந்தேரொடுகொல்படையிழந்
தோரைத், தோட்டபூங்குழன்மகளிரைமழவரைத்துயில்புரிகுநர்
தம்மை, வீட்டினூர்தமைவீட்டனல்லறனெனவிரித்தனனுரை
செய்தான். (கஅ)

அரவணைத்துயிலஞ்சனப்புயலனுனங்ஙனமெடுத்தோத, வி
ரைவிற்கொண்டுபோய்த் துருவதன்மகண்முனம்விடுத்தன னவ
ள்காணு, வொருவனந்தனனுனக்குவிற்றொழில்புவியியப்புறவுண
ர்த்திட்ட, குரவன்காதலன்கொல்லனீவிடுகெனக்குயிலெனக்கரை
ந்தாளால். (கக)

இறப்புவந்ததேயின்னெழிற்புதல்வனுக் கென்றிவன்றனையீ
ன்ற, நறைக்கருங்குழனங்கையும்பொருமுதனன்றுகொலெனத்தா
ழ்ந்து, மறுத்தவிர்ந்தொளிர்மதிபுரைதிருநுதன்மடக்கிளிமொழி
கூற, வறத்தின்மாமகன்முதலவருவர்தனமுன்றனன்படைவி
மன். (உ0)

அரிவைசொன்னதுமரசர்தமுள்ளமுமாழியானறிந்தேதான்,
பெரியவெம்பிழைமறையவர்செய்திடிம் பிடித்தருஞ்சிகைபோக்கி,
யுரியசெல்வமாமிருநிதிமுதலியவொழித்துறைதருமூர்விட், டிரிய
மற்றவர்த்துரத்துதலையவர்க்கிருங்கொலையெனச்சொன்னுன். ()

மல்லலைத்ததோண்மாயவனுரைத்தது மஞ்சரைக்கொன்று
னைக், சொல்வலென்றுதானுரைத்ததும்பிழைப்பறக்கோதில்சீர்க்கு

ருநாடன், பல்படைத்தொழில்விதியினிற்பயிற்றியபார்ப்பனச்சிறு வன்ற, னெல்லிலங்கியசிகாமணியிருஞ்சிகையிர்ந்துகொண்டனன் மன்றே. (௨௨)

பதுமைசேர்தருமாயவன்றன்னெடுபாண்டவர்முதலாயோர், கதிர்செய்மாமதிக்கவின்பெறுதிருமுகக்கருங்குழற்பாஞ்சாலி, புதல்வராதியாப்பொருகளத்திடையுயிர்பொன்றினர்தமக்கெல்லாம், விதியினிமுதல்வினைபுரிந்துதசநீள்வினைமுடித்தனர்மாதோ. (௨௩)

மலர்ந்தசெங்கதிர்மாமணியிழந்தவன்மலர்விழிசிவப்பூர, வலர்ந்ததாமரைப்பொகுட்டுறையயன்படை யபாண்டவமெனத்தூண்ட, வலங்கலந்ததாளவர்தமுயிர்பிழிந்துண்ணவந்துறல்பாரா, விலங்குமாழியைநோக்கினன்மறைமுதலிரிந்ததப்படைமாதோ ()

மருவளைத்தளிகூட்டுணமலர்ந்ததண்மரைமலரயன்வாளி, யரவினைத்திடவெகுளிமிக்கொண்டமுன்றம்புயமலரோடச், செருவினைத்துவெல்பொருவிழியுத்தரைதிருவயிற்றகஞ்சேர்ந்த, கருவளைத்ததுகளன்றிவெம்புகையொடுகனற்றிரளுமிழ்ந்தன்றே. (௨௫)

தித்திகழ்த்தொளிர்சிலைப்படைகருவினைச்சேர்தலுந்தெருமந்தாள் பார்த்தன்மெய்த்திருமருமகளைய்டைந்தனள்பங்கயநறும்போது பூத்தாளியக்குவளைவிழிகலுழ்ந்துநீர்போற்றுவாயெனமாழ்கக் காத்தளித்தனனாருள்கூர்ந்தவெறிகமலலோசனன்மாதோ. (௨௬)

வேறு.

ஆடெடுபுவனியதின்டோளைவரைப்புரந்தவண்ண
நாடிகாவலைச்சுவற்றேநட்பொடுபகையிலாதா
பெடவிழ்மலர்சண்ணவெய்திரும்பனைக்கைவேழக்
கோடியசுழ்ந்திட்டானைக்குந்தியங்கேத்தினளால். (௨௭)

தலையணிமுலக்கன்மாலைத்தண்குடைத்தருமனோடு
தெளிவுடைமுனிவர்கண்ணத்தெரிவனையணையின்மீதாக்
கினர்புகழ்க்கங்கைமைந்தன்கிடந்துழியினிதுசென்று
னனியினம்மிறைப்பந்பெழ்வாய்கச்சராவணையான்மன்றே. (௨௮)

கடம்பொழிகளிறகாத்தகருணையங்கமலச்செங்கட்
டடஞ்சிறைச்சுழுப்பாகன்றலைவருந்தோற்றநோக்கி
விடம்பொழிதழல்வாய்வாளிவெவ்வணைக்கிடந்தவிர
னுடம்பெலாங்குளிர்ந்துசெந்தேறுரவாய்விண்டுகூறும். (௨௯)

எழிற்படையெடுக்கிலென்றிசைத்தநின்மொழிவிட்டுன்னை
விழிப்படையெடுப்பித்தன்றிவிடுகலனெனயான்சொற்ற
மொழித்திறம்பிழையாவண்ணமுனைவெஞ்சினத்தவாழி
யழற்படையெடுத்தாயன்பர்க்கரியையப்பெரிதுமன்றே. (௩௦)

கரும்புகழ்தொடையல்சேர்ச்சுரிகுழல்விழுமார்பின்
விரிந்தபொன்னுத்தரீயம்விழ்ந்திடவிரைந்துதேர்விட்

டெரிந்தபொற்றிகிரிதாங்கியெறும்வலிமடங்சலேயு
கருங்களிறெதிரல்போலென்கண்ணுறல்கண்ணதாமால். (௩௧)

எழில்விளையா... ...பத்தெழுதியகலவைச்செஞ்சே
றழிதரப்... ...வேர்மாரூடலஞ்சிலைக்கைப்பார்த்தன்
கொழுமணிக்கொடிஞ்சித்திண்டேர்க்குரகதத்தூளிமூழ்கி
யொழுகுசேருகவோடியுற்றதென்னுள்ளத்தாமால். (௩௨)

சொரிகணைமாரிபாயத்துணிந்தபொற்கவசத்தோடு
மரகதகாந்திகான்றுவயங்குநின்பசுந்தார்மார்புங்
குரகதத்தூளிசேர்ந்துகுழல்விராய்க்குறுவேர்வார்ந்த
முருகவிழ்கமலச்செவ்விமுகமுமென்முகத்ததாமால். (௩௩)

நறைவளந்திகழ்பூமேவுநான்முகன்வழுத்தவெட்டாய்
மறைவளந்திகழுஞ்செப்பமாதவராசராய
நிறைவளந்திகழும்வேலைநெருக்குறுவிராசசூயத்
திறைவளந்திகழ்முற்பூசைக்கேற்றனையென்சொல்கேனே. (௩௪)

நச்சராவுச்சிமேயநானிலப்பொறைதீர்ப்பான்வந்
திச்சையாஞ்சூதென்றோதுமெரிசினத்தழலைமூட்டிக்
கச்சமார்களிற்றுவேந்தாங்கடுவனமெரித்தகண்ணே
பச்சைமாலேநின்மாயைபகருதற்கெளியதன்றால். (௩௫)

மூட்டமர்க்களத்தினேற்றுமொய்த்தவென்றமரையெல்லாம்
வீட்டிலனெனமுன்சொற்றவிசயனுள்ளிருதைந்நி
நாட்டினேஞானமுன்னேநானுடலொழிக்குமின்று
காட்டினைநின்பொற்கோலங்கடந்தனன்பிறவிவேலை. (௩௬)

அருங்கதிரம்பொனுடையணிதராவந்ததோற்றம்
பொருந்தியமாயையாமீப்போர்வையாற்பொதியவுற்றுத்
திருந்துமேலோரால்வாசுதேவனென்றுரைக்கும்பேர்பெற்
றிருந்ததிவ்வண்ணமென்னுவெனர்க்குணர்வித்ததாமால். (௩௭)

உண்மையானினக்குநாடிஒருவிலையுரைக்கிற்பொய்க்கும்
பெண்மையாமாயையாலேபெருகுநல்லுருவென்றுறுந்
திண்மைசேர்நின்னையன்றித்திகழ்சாமின்றேலென்னே
வண்மையால்வழுத்துவார்யார்வழுத்திடப்படுவோர்யாரே. (௩௮)

என்றிருங்கங்கைமைந்தனியற்றுநற்றவத்திற்றன்முன்
னின்றநம்பிறைவன்சோலநெஞ்சினிற்றெரியநாடி
பொன்றியநடம்பைநீத்துஞவந்தெழுபறவைபோல
வன்றுடற்சுமைநீந்தொல்காவழிவில்வீடடைந்தான்மன்னோ. ()

அடைதருவேலைவானோரலர்மழைசொரிந்திட்டார்த்தா
ருடைதிரையுகளுங்கங்கையுயிர்த்தவன்றனர்...
னடைதருகருமமெல்லாநாடினன்றருமன்செய்தான்
...டைதருமுனிவர்மாலைமெய்மனங்...விப்போனார். (௪௦)

மலிதருதிணிதோண்மன்னர்மணிமுடிதுகளதாகச்
சிலைகடைகுழைத்தபார்த்தன்செழுமணித்தடந்தேர்ப்பாகன்
பலர்புகழ்தருமன்றன்னைப்பகர்பெருந்தாதைசொல்லா
லலர்தலையவனிகாப்பவரியணையிருத்தினானால். (௪௧)

வேறு.

மன்னியமணிமுடிமன்னரைச்செகுத்
தெண்ணியவிருப்பொடுமிசைந்துளானலன்
கண்ணனுட்கருத்தினைக்கடக்கவஞ்சியே
நண்ணினனரசியனுமவேலினான். (௪௨)

மழைவளஞ்சிறந்திடவளங்கண்மிக்கன
குழைவொடுபிணிகளுங்குலைந்துசாய்ந்தன
விழைவொடுநல்லறம்வேர்படைத்தன
தழைபுகழொடுபுவிதருமன்காக்கவே. (௪௩)

ஞானிலத்தவர்களுநவையினீங்கினர்
வானகத்தமரருமகிழ்வினோங்கினர்
பானிறமதிக்குடைநிழற்றிப்பார்மக
டானுவப்புறப்புகழ்த்தருமன்காக்கவே. (௪௪)

சுடர்தருசிதித்திறைசொரிந்துவாய்தலி
னடையலரடிதொழவவனிகாத்தன
னிடியுறழ்படையுடையிளைஞர்தன்னடி
மிடைதரமணிமுடிவேந்தர்வேந்தனே. (௪௫)

தர்மபுத்திரன் அரசியலடைந்தவத்தியாயம் முற்றிற்று.

நான்காவது

கண்ணபிரான்றுவரையடைந்தவத்தியாயம்.

வேறு.

உரவுநீரமுதின்சாயலுத்தரைபொலிறுவெள்வேற்
பருபதன்பாவைகாதற்சுபத்திரைகுந்திதம்மோ
டரசரோரைவர்வேண்டவருமறைமுதல்வன்வேழத்
திருநகர்சிறப்பத்திங்கள்சிலமகிழ்ந்துறைந்தானன்றே. (௧)

அரசியலடைந்தவாற்றலடைந்தவெம்மாவியாய
பிரசநாறருவப்பைந்தார்ப்பெருந்தகைபிரிவானென்று
முரைசெறிபுகழ்சால்வருளங்குழைந்துருகும்வேலை
முரசொடுமுழவம்விம்மமுழங்கிடவெழுந்தான்கண்ணன். (௨)

காத்துலகளிக்குங்கற்றைக்கதிர்மதிக்கவிகைபற்றிப்
பார்த்தனன்புடனிழுத்தப்பாருமுன்னவன்றனோடு

சாத்தகிதடக்கையேந்திச்சாமரையிரட்டமிக்க
வேத்தவைதொடர்ந்துசெல்லவீதிவாயேகலுற்ருன். (௩)

வேறு.

வண்ணவீதிவாய், நண்ணுநல்லதேர்
கண்ணன்கார்சொலென், றெண்ணவேறினன். (௪)

அலகிலானையாள், வலவர்வாசிக
ளிலகுதேர்களேழ், நிலநிறைந்தவே. (௫)

ஏகன்றேர்த்துகண், மாகமன்னல்பார்
மோகனேகமுன், போகல்போலுமே. (௬)

கோதிறேர்க்கொடி, மீதுமேவன்மால்
பாதபங்கய:ப், போதுபோலுமே. (௭)

வெற்றிமேவியம், பெற்றபேரொலி
பொற்றபூவண்ட, முற்றுடைத்தவே. (௮)

வேறு.

வெண்டுகிற்பதாகைமேற், கொண்டதேரின்கூம்பினு
லண்டகோளம்விண்டறன், மண்டிவீழ்தன்மானுமே. (௯)

காரையொத்தகைக்கிரி, வீரையொத்தவெம்பரி
பாரின்மொய்த்தபைங்கிரிச், சீரையொத்ததேர்களே. (௧௦)

தோளையுற்றதூணிவில், வாளையுற்றவாளொடங்
காளியொத்தடைந்தனர், வேளையொத்தவீரரே. (௧௧)

சுந்தரத்தனைத்தொழா, வந்தரத்திறைசையால்
வந்துமொய்த்தவானவர், சிந்தினர்பொற்றேமலர். (௧௨)

கண்ணன்செவ்விகண்டுகண், ணெண்ணினின்னமாயிர
நண்ணினன்றுநன்றெனு, விண்ணின்மன்விளம்பினன். (௧௩)

உற்றுநோக்குமும்பர்நம், வெற்றிவேந்துபோல்விழி
பெற்றிலம்மெனப்பெருஞ், சுற்றமோடுசொல்லுவார். (௧௪)

தண்ணசெய்யதாமரைப், பெண்ணினல்லபேதையர்
வண்ணமாடமன்னியே, கண்ணன்செவ்விகண்டனர். (௧௫)

வீரவாளிதூவவேள், சேருமாழிசெங்கையின்
சோருமாதர்தூவினின், ருர்வமோடபூங்குவார். (௧௬)

நாடுநல்லசாளரத், தூடுசெவ்விகண்டுவந்
தாடன்மாரனம்பினுன், மாடமீதுமாழ்குவார். (௧௭)

எண்ணிலாதவேழைமார், கண்ணன்செவ்விகண்களா
லுண்ணவாவியுண்ணுமா, னின்றுவாடைநாடியே. (௧௮)

குல்லைவேய்ந்தகொண்டலே, மெல்லவந்துவெம்முலை
புல்லியின்றுபோகெனச், சொல்லிநின்றுசோர்குவார். (௧௯)

கண்ணகண்ணவெம்பித, முண்ணவாவென்றேநிபெ
வண்ணமேவுகைவளை, சுண்ணமோடுதூவுவார். (௨௰)

பண்டுவெண்ணெய்பாலொடு, மண்டர்மாதரார்நல
முண்டகாரெம்முண்ணிறை, கொண்டதென்றுகூறுவார். (௨௧)

மந்தபோதும்வண்ணனை, நெஞ்சினேடுநேர்சலா
வஞ்சொலாரருஞ்சுதை, நஞ்சுபோலநாடுவார். (௨௨)

நாகமேனடித்தவன், மோகவாரிமூழ்கினோர்
கோகிலங்கள்கூவலாற், சோகவாரிதுன்னுவார். (௨௩)

துன்னியண்டர்தோகைமார், மன்றுகொண்டல்வண்புக
ழின்னரம்பின்யாழ்கொடு, பன்னிநின்றுபாடுவார். (௨௪)

ஆணவாவுவானெழில், காணநூறுகோடிகண்
பாணியாற்படைத்திலன், வாணிமன்றவானென்பார். (௨௫)

ஈறிலாவிக்காதலாற், கூறமாதர்தேர்கொடு
வேறோர்வீதிமேவினான், மாறிலாதமாயனே. (௨௬)

வேறு.

மாதர்கள்வீதிபெய்திமதுவனமதுரையாயிப்
போதணிமார்பன்றன்னாற்பொலிந்ததுசாலவென்பார்
காதல்செய்துவரைநங்கள்கண்ணாற்சிறந்ததென்பா
ரோதுமிப்பிறவியங்கேயுதித்திலந்தவத்தானென்பார். (௨௭)

மதுகுலத்துடனிலங்கைமன்னவன்மலங்கவென்றோன்
விதுகுலத்தரசர்போற்றவீதிவாய்வருதனோக்கி
யெதுகுலமாயதிதின்றேத்துமுகுலங்கட்கெல்லா
முதுகுலமாயதிந்தமுதல்வன்வந்ததனுலென்பார். (௨௮)

தென்றுதெண்டிரைகலாமிச்செழும்புவிமுதலுலோகத்
துன்னவர்மனங்கடோதுமொழிவிலாதுறைவானன்றே
மென்னவெம்முள்ளத்தூடேவிழிவழிபுகுந்துமேவுங்
கன்னனென்றுரைப்பப்புந்திகருதிலசிறிதுமென்பார். (௨௯)

பொன்னியல்பழுத்துவானிற்பொலிதருமாடவீதி
துன்னியசாதகம்போற்சூழ்ந்துநோக்குநர்கட்கெல்லாங்
கன்னியக்குழாம்மிலந்தருபுகில்கடைக்கணேக்கான்
மன்னியகருணைவெள்ளமழைநனிவழங்குமென்பார். (௩௰)

தாமநன்மறுகிற்செல்வான்றுமைபோதுஞ்சண்க
ளேமமேதினத்துக்காண்போர்க்கிடரொலாயொழிக்குமென்ப
காமனும்வருந்துமற்பத்தைக்காதலோடினிதுகண்ட
வாமமேகலையார்ச்சென்றேவனக்குதல்புதுமைத்தென்பார். (௩௧)

வண்ணமாமுகில்போல்வீதிவருபவன்றன்னைநோக்கி
பெண்ணணிமொழிரண்டாயிபம்புபேருலகத்தோடே

தண்ணறுமலரோன்றன்னைத்தந்தினிதளிக்குஞ்செய்ய
கண்ணனிக்கண்ணனேயாங்கருத்துறநாடினென்பார். (௩௨)

காட்டுவாரணமுன்சொல்லக்காத்துவெங்கஞ்சன்வாய்தம்
கோட்டுவாரணத்தைக்சொன்றகுரிசிலைவீதிநோக்கி
வேட்டுநாண்மலரிற்றோன்றும்விரிஞ்சனுங்காணுவண்ணஞ்
சூட்டுநாசணையிற்றுஞ்சுந்தோன்றலித்தோன்றலென்பார். (௩௩)

கண்ணனைக்கண்கள்கண்டுகளிப்புறக்கருங்கார்போலும்
வண்ணனைமனங்கணீங்காவண்ணமாய்மகிழ்தலானே
நண்ணியயோகத்தாலிக்கண்ணனைநாடுமேலோ
ரெண்ணிலாநந்தமாகியிருப்பதின்றறிந்தோமென்பார். (௩௪)

சுரும்பிமிர்கூந்தல்சோரத்தொடர்ந்தனளசோதைவீக்க
விரும்பினையுரலோடும்போய்வேரொடுமருதஞ்சாய்த்தாய்
பெரும்பணைதுணித்தாயன்றுபெண்பழிகொள்ளும்வேடன்
கரும்பினைமுறிக்கவில்லாயெனச்சிலர்கழறிச்சோர்வார். (௩௫)

வேறு.

தார்மாரிதரப்புலவோரெழுநாள்
கார்மாரிவிலக்கினைகண்ணமதன்
போர்மாரிமலர்க்கணைபோசவிழி
நீர்மாரிநிறுத்திலையென்பர்சிலர். (௩௬)

பழிகூறவைகின்றுபறிக்குதலுங்
கழியாமலளித்தனைகண்ணநுகி
லழியாமலுவந்துநெகிழ்ந்தறுவை
யொழியாமலுகந்திலையென்பர்சிலர். (௩௭)

வண்ணந்திகழ்வாயமுதூறதுணைத்
தண்ணங்குழைவைத்தனைசாருமெமை
யுண்ணும்படியுற்றிலையென்றுதின
மெண்ணும்படிவைத்தனையென்பர்சிலர். (௩௮)

வளையாழினரம்புறழ்சொன்மலராள்
வளையாழிதரித்தனிவாய்விழியால்
வளையாழிவளைந்தவனுக்கெளியேம்
வளையாழிவழங்கலெனென்பர்சிலர். (௩௯)

விழைமேவொடுறிவெண்ணெய்நுகர்ந்தனை
வுழைமேவியகானமுலுண்டனையா
னிழன்மேவியநித்திலமாலையையென்
னழல்போலவமைத்தனையென்பர்சிலர். (௪௦)

கடியாதுசொல்காளியன்வெவ்விடமும்
படிமிதுதவிர்த்தல்செய்பைம்புயலே

விடமாமெனமெல்லியதென்றலினு
விடர்நீசெயலெவ்வகையென்பர்சிலர். (சக)

புள்ளின்பகுவாயதுபோலநனி
வின்ஞங்குயில்வெவ்வியவாய்கிழியாய்
தன்ஞந்தரமானதுதான்மொழியா
லென்ஞந்தரம்வைத்தனையென்பர்சிலர். (சஉ)

அள்ளித்தழன்முன்னமயின்றதையெம்
முள்ளத்தினினின்றுமுமிழ்ந்தனைகொ
லள்ளிச்சுடநெஞ்சுதுடிக்குமெனா
வள்ளைக்குழைமங்கையர்சொல்வர்சிலர். (சங)

களியோடெதிர்கண்டவர்கண்களினீ
யளியோடுமதித்தும்விடாயதனு
லொளிசேர்பெயருற்றனைகண்ணனென
வெளியெமதறிந்தனமென்பர்சிலர். (சச)

மன்றற்செழுமாமதுரைப்பதியிற்
குன்றத்தனுவிறுகொற்றவனி
யொன்றித்தனூர்லையொழித்திடுத
லின்றைக்கரிதோபுகலென்பர்சிலர். (சரு)

வழியோடொருமங்கையைவாலனின்முன்
னெழியாவுடலோடுமெடுத்தொழிவாய்
மொழிவெழுயிர்முற்றுமெடுத்தொழித
லெழில்சேருமனக்கெளிதென்பர்சிலர். (சசு)

மைக்கார்நிகர்வோயிடைமாதர்துகி
லக்காலமகற்றுபயிற்சிகொலோ
புக்கெமணிபொற்றுகில்பார்வையிரு
லிக்காலமகற்றினையென்பர்சிலர். (சஎ)

சென்றேறுடியதிபவனுகியகன்
றன்றேறுடியெதிர்தனையாசில்விழிச்
சன்றேடடியோமணிபாழிகழன்
றின்றேடவெறிந்தனையென்பர்சிலர். (சஅ)

தகைகொண்டுறுதானவனுருமழ
லுதுகின்றடர்குறையொழித்தனையாம்
புகுமெம்முடனெஞ்சுபுழுங்கமழன்
றிகறென்றலொழித்திலையென்பர்சிலர். (சகூ)

துதிசேர்விசயன்றுயராவகைவெங்
கதிரோனைமறைத்தல்செய்காவலநற்
பதியாகவெம்பாலணையாயெனிறு
மதிபோகமறைத்திலையென்பர்சிலர். (ருo)

மன்னிப்புலவோர்பொழிமாமலர்சூ
ழுன்னைப்புகழ்வோருனைநேர்வதுமெய்
துன்னிப்பொழிவெண்மலர்சூழ்தவினீ
யென்னப்பொலிவேமிவணென்பர்சிலர். (௫௧)

தோராம்வரைமீதுமெஞ்சிந்தையெனு
நீராம்மலர்மீதுநெடுங்கணெனு
மாராக்கலிமீதுமம்மூவரென
வேராகவிருந்தனையென்பர்சிலர். (௫௨)

மைவண்ணமலர்க்குழன்மாதரெலாங்
கைவண்ணமலர்க்கணைசாமன்விலா
னைவண்ணமனத்தொடுநாடினரா
யிவ்வண்ணமிரங்கிடவேகினனே. (௫௩)

வேறு.

தூண்டுவாம்புரவிமேலூந்துளிமுகிலகடுகிண்டு
நீண்டபொற்கொடித்தேர்மேலுங்கிழல்பொருகளிற்றின்மேலும்
பாண்டவர்குருநாடெல்லாம்படர்ந்தனர்பரிவிற்புல்லி
மீண்டனர்வாடுநெஞ்சமீள்கிலாத்தொடரமாதோ. (௫௪)

விண்ணகம்வணக்குமாற்றல்வெந்திறலவுணர்த்தேய்த்துக்
கண்ணகன்ஞாலங்காக்குங்காவலன்றன்னைக்காக்க
வண்ணல்வேற்றருமன்விட்டவாடலர்தானைவெள்ளம்
பண்ணமைபசும்பொற்றிண்டேர்ப்படையொடுநடந்ததன்றே. ( )

வளங்கொள்பாஞ்சாலநாடுமலர்ப்புனல்யமுனைநாடுந்
தெளிந்தவெண்முத்தஞ்சிந்துந்திம்புனற்சிந்துநாடு
மிளங்களியானைமன்னரெதிர்கொளவிருத்துமாநீர்
விளிம்படுத்தயாநத்தமெல்லெனச்சென்றுசேர்ந்தான். (௫௬)

அதிர்கடல்வேலிமூதூரணித்தெனக்குறுகியண்ண
லிதழொளிமுத்தினூடேயெறித்தலிற்செவ்வாயன்ன
மதுவிரிமுளரிசேர்ந்தவண்ணமொத்திலங்குகற்றைக்
கதிர்வளைதுவர்வாய்வைத்துக்கல்லெனமுழக்கினானல். (௫௭)

குடவளைமுழக்கங்கேட்டுக்கொற்றவன்வந்தானென்றுக்
கடலுடைத்தெழுந்ததென்னக்கடாம்பொழிகளிற்றினோடும்
விடுகணைவிசையவாயவெம்பரிவெள்ளமீண்ட
விடிமுரசியம்பவெள்வேல்யாதவரெதிர்சென்றுற்றார். (௫௮)

மண்ணவர்க்களப்பில்காலம்வைகுந்தமருவினோருக்
கெண்ணிடிற்கணமாம்போலவெங்களுக்களப்பில்காலங்
கண்ணனிற்கலந்துவைகிற்கணமரைக்கணமேயேறு
மண்ணனிற்பிரியினென்னோவாயிரமுகமாமென்றே. (௫௯)

நான்மறையாளர்வாழ்த்த நகுமுடியரசர்தாழ
மிறையவர்கொடியோனுதிவெந்திறற்குமரரெல்லாந்
தானையோடிறைஞ்சாநிற்பத்தாமரை மலரின்வாழுந்
தேனவார்தெரியன்மார்பன்றிருநகர்சென்றுபுக்கான். (௬0)

கன்னலினர்க்கன்னிறுலுங்காதல்செய்மனத்தினூறு
முன்னெகிழ்ந்தன்பினாலேயுருகுறமழலைத்தீஞ்சொற்
றன்னலங்குமுதவாயாற்சாற்றியகிளவியாலும்
பென்னமுதனையநல்லார்பெட்பொடுதழீஇக்கொண்டாரால். (௬௧)

எழில்வளர்செம்பொன்மார்பனிறைஞ்சியுந்தொழுவார்தம்மைத்
தழுவியுந்தடக்கைதொட்டுந்தண்ணகைமுகிழ்த்துநோக்கி
மொழியினிதுரைத்துஞ்செவ்விமுகமலர்ந்துவகைபொங்கச்
செழுநகர்மாந்தர்க்கெல்லாஞ்செய்தனன்சிறப்புமாதோ. (௬௨)

தந்தைதாடொழுது தாயர்தளிரடிசென்னிசூடிச்
சிந்தரிமழைக்கட்செவ்வாய்த்தேவியர்திவலைசிந்தி
வந்தெழுகருங்கார்கண்டமடமயிற்குழாத்தின்மொய்ப்பக்
கொந்தழலாழியான்றன்குருமணிக்கோயில்புக்கான். (௬௩)

பண்ணெனப்பழுத்ததீஞ்சொற்பவளவாய்முளரிப்பாவை
கண்ணெனக்கிடந்தநீலக்கடலிலுங்கறங்குதெண்ணீர்
மண்ணகமடந்தைகொங்கைவரையிலுமுறைந்தமாயன்
விண்ணெனத்திகழ்ந்துவிண்ணோர்பரவவீற்றிருந்தானன்றே. ()

கண்ணபிரான்துவரையடைந்தஅத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது

பரிட்சித்துவின்றோற்றமுரைத்தவத்தியாயம்.

வேறு.

என்னலுமுனிவரிகற்பரித்தாமாவெய்கணையுத்தரைவயிற்றின், மன்னியகுழவிசெகுக்கலாவண்ணமாயவன்காத்தனனென்று, கன்னியர்துளவோன்காத்ததும்பிறந்துகமலலோசனன்கதைகேட்ட, தன்மையும்புகலவேண்டுமென்றுரைப்பச்சாற்றினன்சூதமாமுனிவன். (௧)

சூழ்தருபொலந்தண்முடியினன் வயிரத்தொடியினனிலகுபொற்றகிலோன், றாழ்மணிக்குழையன் சுடுங்கதைசுழற்றுந்தாமரைக்கரத்தினனாகி, யூழிவெந்தப்போடுத்தரைவயிற்றினுறுகணைகுழவிமேவுறுமுன், லாழியானுங்கோர்பெருவிரலளவையாயதோருருக்கொடுபுகுந்தான். (௨)

வேறு.

பரிவினிற்றிங்களோர்பத்துஞ்சென்றபின்
ருருகினர்திங்களக்குழவிபோன்மென

வுருவளர்குழவியையொசியுநுண்ணிடை
வருமுலையுத்தரைவயிறுவாய்த்தனள். (௩)

போற்றிடுதவுமியன்முதலபுங்கவர்
தோற்றியபுதல்வனைச்சூழ்ந்துநான்மறை
சாற்றியவிதிமுறைச்சாதநல்வினை
யாற்றினர்புவிமிசையறங்களிப்பவே. (௪)

மழைவளஞ்சிறந்திடமலர்ந்தபாரெலா
நிழன்மதித்தனிக்குடைநிழற்றுகாவலன்
பொழிவதுபுரிந்தனன்பொருவில்பொன்மழை
முழுமறையந்தணர்முகந்துகொள்ளவே. (௫)

தள்ளருங்கொடையினாற்சார்ந்தவஞ்சிறைப்
புள்ளினுக்குயர்துலைபுக்கவேந்தின
னெள்ளலிலன்பினாலெறிந்ததூணெழு
வள்ளுகிர்மடங்கலைவழுத்துதோன்றலே. (௬)

மேதகுதயரதராமன்மெய்ம்மையாற்
றீதகல்விசயன்வெஞ்சிலையினாலிவ
னேதமில்பொறுமையாலினியபார்மக
ளோதியதாயுலகுயிர்புரத்தலான். (௭)

காட்சியாலிந்திரன்கநகமீட்டுநன்
மாட்சியால்வடதிசைத்தலைவன்மாதவத்
தாட்சியாலரும்புகழரசமாமுனி
பூட்சியோடுறைமதன்பொற்பினாலிவன். (௮)

இருபொழுதுந்திகழ்ந்திடைவிடாமலே
மருவிளமதியெனவயங்குசீரினான்
பரதனின்மகன்செயும்பண்பினானிகற்
செருவிடைப்பகைஞரைச்செகுக்குஞ்சிங்கமே. (௯)

காந்துநீள்விழிக்கலிகடிந்துதிண்புயத்
தேந்துபார்முழுவதுமினிதினாண்டபின்
சாந்தமாதவரொடுசார்ந்துகங்கையின்
பாந்தளாலுடல்விழப்பரத்தினண்ணுவான். (௧௦)

கோதகல்கணிதநூல்குறித்தவாறெனா
மாதவராசன்முன்வழங்கியிவ்வகைச்
சாதகமெழுதினர்தாழ்தடக்கைவெம்
போதகமெனவளர்புதல்வற்காங்கரோ. (௧௧)

வேறு.

தித்திராணுமிழுமிந்தச்சினப்பணடபாடர்துநம்மைக்
காத்துமையிவன்யாரென்றுகருவினிற்கண்ணன்றன்னைப்

பார்த்தலிற்பரிட்சித்தென்றும்பராஞ்சுடர்நல்கலாலே
யேத்துசீர்விண்டுராதனென்றுநன்னுமமுற்றான். (கஉ)

மறமலிநெடுவேன்மன்னன்மணிக்குறங்கிருந்தும்விமன்
றுறுமலரலங்கன்மாலைத்தோளின்மேற்றவழ்ந்தும்பார்த்த
னெதிகதிர்ப்பரிதியன்னவெந்தெழிலாரமார்பின்
குழகுழநடந்துஞ்செவ்வாய்க்கோமகன்வளர்கின்றனல். (கங)

துள்ளுவாம்புரவியூர்ந்துசுழித்துவெண்முத்தஞ்சிந்தும்
வெள்ளிவெண்டிரையிற்றோன்றும்விரிகதிர்த்திங்கள்காட்டுங்
கொள்ளைமாமதத்தநால்வாய்க்குஞ்சரமிவர்ந்துபொற்கோட்
டொள்ளொளிநிலக்குன்றத்துதித்தசெங்கதிரைவெல்லும். (கச)

அலைகடற்பவளச்செவ்வாயஞ்சிறையன்னமேபோற்
கலைக்கடல்வடித்துப்பெற்றகாட்சியான்மாரிகாக்க
மலைக்குடையெடுத்துநின்றமௌவலந்தொடையினானே
யிலக்கமற்றுயர்ந்தசோதியென்றுணரிளங்கோவேய்க்கும். (கரு)

நடைநவில்பரிக்குத்தந்தைநகுலனைச்சடுக்குங்கூர்வாட்
படையினுக்குலகமெல்லாம்பழிச்சுநற்றுதைநேரு
முடல்குழைவரிவிலாண்மைக்கோங்கெழில்விசயனைக்குங்
கொடையினுக்கிருள்கால்சீக்குங்கொழுஞ்சுடர்மகனையெள்ளும். ()

முழுவலிக்கெழுகுன்றேடுமுனிந்ததோள்விமன்மானுந்
தழையுநல்லணிக்குத்தண்டார்த்தருமனைப்பொருவுந்தாழா
வழகினுக்கழகுவாய்ந்தவம்புயமடந்தைபுல்லுங்
குழகன்முன்னுயிர்த்தசெல்வக்கோவிளங்குமரன்போலும். (கஎ)

மங்குறோய்பசும்பொற்கோட்டுமால்வரையனைத்துந்தாங்குந்
துங்கவெண்டிரைப்பார்தாமேசுமந்திடப்பணைத்துவிங்குங்
குங்குமக்குவவுத்திண்டோட்குமரனல்வனப்புநோக்கித்
திங்களங்கவிகைமன்னன்செருக்கினன்றருக்கின்மிக்கான். (கஅ)

கண்ணனையழைத்துக்கண்ணன்காத்திடக்கறங்குதெண்ணீர்
மண்ணகம்புரக்குமாற்றன்மன்னவர்திறைகொடுப்ப
வண்ணலம்புரவிவேள்வியாற்றினனொருமூன்றென்ப
தண்ணளிதழைத்துப்பொன்னந்தருவெனத்திகழுநீரான். (ககூ)

எண்டிசைகடந்ததோளானியற்றியவேள்விகாத்து
வண்டுகொப்புளித்துமாந்தமதங்கலுழ்களிநல்யானை
யொண்டிறல்விளக்குகூர்ங்கோடொசித்தவன்விசயனேடு
வெண்டலைப்புணரிவேலிவியனகரெய்தினானல். (௨0)

பரிட்சித்துவின்றோற்றமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

முதற்கந்தம்.

முதலாவது பாகம். கந்தம்-ஸ்கந்த்தமென்னும் வடமொழித் திரிபு. கந்தமென்பதற்கு - கூட்டமென்று முதலிற் பொருள்; இங்கே, பலஅத்திபாயங்களின்கூட்டமென்று சிறப்பாகக்கொள்ளத்தக்கது.

முதலாவது

மாயவனமிசாவதாரமுரைத்தவத்தியாயம்.

திருமாலினது அமிசத்தாலாகிய அவதாரங்களைக் கூறினபாகம். மாயவன் - மாயையையுடையவன்; மாயையாவது - கூடாததையுங் கூட்டுவிக்குந்திறம்: [அகடிதகடநாசாமர்த்தியம்.] பிரபஞ்சகாரணமான பிரகிருதியுமாம்; ஆச்சரியகரமான குணங்களுஞ் செயல்களுமென்றுங் கொள்ளலாம். அம்ச + அவதாரம் = அம்சாவதாரம்; வடமொழிப்புணர்ச்சி, தீர்க்கசந்தி. அமிசம் - பாகம். அவதாரம் - அவ்வுலகினின்று இவ்வுலகில் இழிந்து தோன்றிய வடிவம். அத்தியாயம் - கூறுபாடு; வடசொல்.

க.—(இ - ள்.) தாமரை - (திருமாலினது திருநாபித்) தாமரைமலராகிய, தவிசு - ஆசனத்திலே, உறைதரு - தங்குகின்ற, சதுர் மறை கிழவன் - நான்குவேதங்களுக்கும் உரியவனாகிய பிரமதேவன், நேமி - சக்கரத்தை, உய்த்தலால் - செலுத்துதலாலே, [பிரமதேவனாற்செலுத்தப்பட்ட வட்டவடிவமான சக்கரம்போன்ற தருப்பைவளையம் இங்கேவந்து விழுந்துநின்றதனா லென்றபடி], நைமிசம் என நிலம் திகழ்த்தும் நாமம் உற்ற - நைமிசாரணியமென்று நிலவுலகத்தார்யாவராலுஞ் சிறப்பித்துக்கூறப்படுகிற பெயரைப் பொருந்தின, நல்வனத்திடை - சிறந்தகாட்டிலே, நவில்சவுனகரேஆம் முதல் தவர் - சிறப்பித்துக்கூறப்படுகிற சௌனகர்முதலான தவஞ்செய்துள்ள முனிவர்கள், சத்திரம் வேள்வி - சத்திரமென்னும் யாகத்தை, ஆற்றினர் - (ஒருகாலத்திற்) செய்தார்கள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

உறைதரு - பிறந்துவீற்றிருக்கின்ற என்றவாறு. சதுர்மறைக்கிழவன் - நான்குவேதங்களையும் நான்குமுகங்களாலும் எப்பொழுதும் ஓதிவருகிற பெரியவன். தவஞ்செய்தற்குச்சிறந்தவிடம் நிலவுலகத்தில் யாவதென்று தங்களுக்கு விளக்கிக்காட்டும்பொருட்டுப் பிரமனைவேண்டிய முனிவர்க்கு அவன் தான் ஒருதருப்பையாழியைச்செய்து மண்ணுலகத்தினிலுருட்டி அது அங்குச் சென்று நின்றவிடத்தையே சிறந்ததென்று காட்டினனென்க. நைமிசம் - நேமிவிழுந்தவிடம். நாமம் - பெருமையுமாம். ஆம் முதல் தவர் - முதலாந்தவர்எனமாறுக. சத்திரவேள்வி - இருபெயரொட்டு. இருத்துவிக்குக்களே யஜமானர்களாக வுள்ளதொரு யாகத்துக்குச் சத்திரமென்றுபெயர். நைமிசம் - விஷ்ணுக்ஷேத்திரமென்றும், இந்தயாகம் பரமபதமடையும்பொருட்டுச் செய்யப்பட்டதென்றும் முதனூலால் விளங்கும். (க)

உ.—(இ - ள்.) அரிய - (பிறராற்செய்வதற்கு) அருமையான, மா - பெரிய, மகம் - அந்தச்சத்திரயாகத்தை, புரிதரு - செய்தற்கிடமான, சாலையில் - யாகசாலையிலே, அடைந்த - வந்துசேர்ந்த, உரியமாதவம் சூதனுக்கு - தகுந்தசிறந்ததவத்தைச்செய்துள்ள சூதமகாமுனிவருக்கு, தெரியும் நால்மறை அந்தணர் - அறிந்தநான்குவேதங்களையுமுடைய (அங்குள்ள) முனிவர்கள், உயர் தவிசு அளித்து - சிறந்ததோர் ஆசனத்தை (அவர்வீற்றிருத்தற்கு)க் கொடுத்து உபசரித்து, பெரியமால்கதை கேட்குறு பெட்பினர் ஆகி - சிறந்த திருமாலினது திவ்வியசரித்திரத்தை(அவரிடம்)கேட்கவேண்டுமென்கிற விருப்பத்தை யுடையவர்களாய், செப்பலுற்றனர் - (அவரை நோக்கிச் சிலவார்த்தைகள்) கூறத்தொடங்கினார்கள்; (எ - று.) — ஆல் - ஈற்றசை. அவ்வார்த்தைகளை மேல் நான்குகவிகளிற் காண்க.

நான்மறைதெரியுமென மாறனுமாம். பெரிய-மாலுக்கும், கதைக்கும் அடைமொழி. பெட்பு - தொழிற்பெயர்; பெள் - பகுதி. (உ)

௩.—(இ-ள்.) வெம்கலி- கொடிய கலிகாலம்,வந்து வளர்தலின்-(உலகமெங்கும்)வந்துவளர்ந்திருந்ததினால், தருமங்கள் தவங்கள் சிந்தையுற்று ஒருதுறையுமற செய்குவது அரிது - தருமங்களையும் தவங்களையும் (மறவாமல்) மனத்திலே நினைத்து ஒருகுறைவுமில்லாமற் செய்வது அருமையுள்ளது; ஆல் - ஆதலால், கந்தல இன்றி ஆனந்தமாய் நண்ணிய ஞானம் -அழிதலில்லாமற் பேரின்பப்பெருக்களிப்புக்குக் காரணமாய்ப் பொருந்திய தத்துவஞானம், எந்த ஆற்றினால் இயைந்திடும் - எந்தவிதத்தால் (எங்களுக்கு) உண்டாகிக்கைபெறும், என - என்று, மதித்திருந்தேம் - (நாங்கள்) ஆலோசித்துக்கொண்டிருந்தோம்; (எ - று.)

மறுமையிற் பேறுபெறக் காரணமான தருமமுதலியன செய்வதற்கரியனவாயினமையின் பரமானந்தத்திற்குக் காரணமான மெய்யுணர்வு எங்ஙனம் உண்டாகுமோ எனக் கவலையுளதாயிற்றென்க. (௩)

௪.—(இ-ள்.) வேதம் நான்கு என விதித்தவன்-வேதங்களை(இருக்கு முதலிய) நான்காகப்பகுத்தருளின வியாசபகவான், விளம்பும் - கூறியுள்ள, ஒசிம் நல் புராணம் ஒன்பதிற்று இரட்டியும் - சிறப்பித்துக்கூறப்படுகிற நல்லபுராணங்கள் பதினெட்டையும், உணர்தரும் - அறிந்த, உரவோய் - ஞானவல்லமையையுடையவனே! உன - உன்னை, கண்ணனே - ஸ்ரீகிருஷ்ணபகவான்தானே, காதலோடு - (எங்கள்பக்கல்) அருளுடனே, காட்டிட- (நீயாக் கொண்டுவந்து) காண்பிக்க, கண்டேம் - (உன்னை இப்பொழுது) தரிசித்தோம்;ஏதம்நீக்கினேம் - (எல்லாமுணர்ந்தவுன்னைச்சேவிக்கப்பெற்ற அம்மாத்திரத்தால்) எங்கள்மனத்துயரமெல்லாம் ஒழிந்தோம்; முத்தியும் எமக்கு எளிது ஆம் - மோக்ஷமும் எங்களுக்கு (இனி)எளிதிற்கிடைப்பதாம்; (எ - று.) —ஆல் - அசை. (௪)

இதுவும், மேற்கவியும் - ஒருதொடர்.

௫.—(இ-ள்.)தரையின்மேல் பொறை தவிர்த்திட-பூமிதேவியின்மேலுள்ளபாரத்தை ஒழித்தருளுதற்கு, தண் அளி கூர்ந்து - குளிர்ந்தகருணைமிகுந்து, விரியும் அன்பினில் தன்பதம் வேட்டவர்தமக்கும் - மிகுந்தபக்தியினால் தன்னுடையதிருவடிகளை விரும்பியடைந்தவர்களுக்கும், பரிவிலின்கொலை பற்றிய மனத்தொடு பகைத்தகருதினோருக்கும் - துன்பத்தைத்தருவதான கொல்லுதற்றொழிலிற்பொருந்தினமனத்துடனே தன்னிடம்பகைமைகொண்டு தம்மோரெண்ணின கொடியவர்களுக்கும், வீடு அருள் தன்மையே கருதி - மோக்ஷத்தைக்கொடுக்குந்தன்மையையே எண்ணி, (எ - று.)—இது மேற்கவியில் 'உதித்தோன்' என்பதனோடுமுடியும்.

இதனால்,கடவுளது வேண்டுதல்வேண்டாமையிலாத்தன்மை வெளியாகின்றது. பரிவிலின்பதற்கு - அருளின்றியென்றுமுரைத்து, வீடருள்என்பதனோடு இயைப்பினுமமையும்.தன்பதம் - பரமபதமுமாம்;பதம் - இடம்.

௬.—(இ-ள்.) உலகெலாம்தனது அகல்வயிறு ஒருபுடை கிடப்ப- எல்லாவுலகங்களும்,தன்னுடையபரந்ததிருவயிற்றின்ஒருபுறத்திலேதங்கியிருக்கவும், கலை அநம்புஉறு கதிர் இளமதி எழில் கவற்றும் திலகம்வாள்நுதல் தேவகி திருவயிறு உதித்தோன் - கலைகள்கூடிவளரப்பெற்றதன்மையையுடையஇளமையானபிறைச்சந்திரனது அழகை (தனக்கு ஒப்பாகமையாற்)கவலைப்படச்செய்கிற திலகத்தையணிந்த ஒளியினையுடைய திருநெற்றியையுடைய தேவகிதேவியினது சிறந்த திருவுதரத்திலே திருவவதரித்தருளிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய, குலவு மா கதை - விளங்குகிற சிறந்த சரித்திர

த்தை, கூறுவாய் - (நீஎங்களுக்குக்) கூறியருளுவாய், என்று—, கூறினர்-(முனிவர்கள் சூதனைநோக்கிச்) சொன்னார்கள்; (எ - று.)—ஆல்- ஈற்றசை. கிடப்ப உதித்தோன் என்க. பரத்துவமும்சௌலப்பியமுங்கூறியவாறு. தேவகி - தேவகன்மகள். குலவும் - அழகிய என்றுமாம். (சு)

எ.—(இ-ள்.)முனிவர்-முனிவர்கள், இத்திறம்-இவ்வாறு,உரைத்தலும்-கூறினவுடனே, முழுதி உணர் சூதன்- எல்லாமறிந்த சூதமாமுனிவர், 'அனகன் மாகதை கேட்ப உள் அன்பு மிக்கதுதான் - குற்றமற்ற எம்பெருமானது திவ்யசரித்திரத்தைக் கேட்பதற்கு (உங்களுக்கு)மனத்திலே அன்பு மிகுந்த இது, வினையின் நீங்கிய மெய்தவம் பயன்- கருமங்களினின்றும் ஒழிதற்குக்காரணமான உண்மையான தவத்தினது பயனாகும்', எனா - என்று (அம்முனிவர்களை நோக்கிக்) கூறி,குருவை-(தமது) ஆசிரியராகிய ஸ்ரீவேதவியாசமகாமுனிவரையும், புனித மாலை - பரிசுத்தகுணமுள்ளதிருமாலையும், நாமடந்தையை - சரச்சுவதியையும், போற்றினன் - வணங்கித்துதித்து, புகல்வான்- கூறுபவரானார்; (எ - று.)—அது மேற் காண்க.

ந+அகம்+அன்=அநகன்; ந - எதிர்மறையிடைச்சொல், அகம்-தீவினை, அன் - ஆண்பால் விகுதி. (எ)

அ.—(இ - ள்.) அலர் - மலர்ந்து விளங்குகிற, பொலம் பொகுட்டு - பொன்னிறமான கொட்டையையும், அரக்கு இதழ் - சிவந்த இதழ்களையுமுடைய, முளரி அம் போதில் - அழகிய தாமரைமலரிலே, குலவு - வாழ்ந்து விளங்குகிற, சே இழை - சிவந்த (பொன்மயமான) ஆபரணங்களையுடைய திருமகளினது, குவிமுகிழ் இளமுலை - குவிந்த அரும்புபோன்ற இளமையானதனங்களை, மணந்தோன் - கூடியருளுகிறவனும், கலையின் மன்னிய கலைகளே - தனது அம்சத்திற் பொருந்தின அம்சங்களே, கலை கடல் வேலி உலகு எலாம்-ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த நிலவுலகமுழுவதிலும், நிறைந்தவன் - நிறையப்பெற்றுள்ளவனும் ஆகிய திருமாலினது, திறம் - மகிமையை, எங்ஙனம் உரைக்கேன் - எவ்வாறு (யான்) கூறுவேன்? (எ - று.)

கடவுளின் திறம் என்னாற்கூறுதற்கரிதென அதன்தன்மையும் அவையடக்கமுங் கூறியவாறும். பொகுட்டு - தாமரைக்கொட்டை. சேயிழை - பண்புத்தொகையன்மொழி. முகிழ் - தாமரை கோங்கு முதலிய அரும்புகள். கடல்வேலியுலகு - கடலையே சுற்றிலும் வேலியாகவுடைய உலகம். உரைக்கேன் - ககரவிடைநிலை, எதிர்காலங்காட்டிற்று. (அ)

கூ.—(இ-ள்.) கரைகுறும்புஎறி-கரையாகிய எல்லையிடத்தை அலைவீசியெறிகிற, கலை கடல் - ஒலிக்கின்றகடலினிடத்தே, துயில் - யோகநித்திரை செய்தருளுகிற, இறை - யாவர்க்குந்தலைவனான [எங்கும்நிறைந்த] திருமாலின்விஷயமான, தொல்நூல் - பழையபுராணநூலை, விரிக்க - எடுத்துவிவரித்துச்சொல்ல, நாள் மடல் விரி மலரவற்கும் - இதழ்கள்விரிந்த புதிய தாமரைப்பூவில் வாழ்கிற பிரமதேவனுக்கும், அரிது - அருமையானதாம்; (அத்தகையபுராணத்தை), தெரித்தநால்மறை திருமுனி அருளினால்- (யாவர்க்கும்) அறிவித்த நான்குவேதங்களையுடைய சிறந்த வேதவியாசமகாமுனிவரது கருணையினால், இங்கு சிறிது உரைப்பல் - இங்கே [இப்பொழுது](எனக்குத்தெரிந்தவளவு) சிறிதுகூறுவேன், என்று - என்றுஅடக்கமாகக்கூறி, உணர்சூதமாமுனி - எல்லாமறிந்த சூதமகாமுனிவர், எடுத்துஉரைப்பான் - (அதனை) விவரித்துச் சொல்வாரானார்; (எ - று.)—அது மேற் காண்க.

மற்று, ஆல் - அசைகள். குறும்பு- அரணிருக்கை. கடல் - திருப்பாற்கடலும், பிரளயோதகமுமாம். தொன்னூல் - புராணம். நான்மறைதெரித்த முனிபென்னலுமாம். தெரித்த - எனக்குஅந்நூலைத்தெரிவித்த, நான்மறைத்திருமுனி எனினுமாம். (கூ)

க0.—(இ - ள்.) உரைசெய் - (யாவராலும்பழித்துச்) கூறப்படுகிற, வெங்கலி - கொடியகலிகாலபுருஷனது செய்கையாகிய, உததியை - கடலை, கடந்திடற்கு - தாண்டி விடுவதற்கு, ஓடம் - ஏற்றபுணையாவதும், பொருவுஇல்தனபதம்தோற்றிய கங்கையின் புனிதம் - ஒப்பில்லாதஅவ்வெம்பெருமானதுதிருவடியினின்றுதோன்றினகங்கைநீரினும் பரிசுத்தமாயிருப்பதும், தெரிதரசொலகேட்க தெவிட்டிடா நல்அமுதம் - அறிவதற்கும் சொல்வதற்கும் கேட்பதற்குந் தெவிட்டாதசிறந்தஅமிர்தம்போல்வதும், அரியவெம்பவம்நோய்க்கு அருமருந்து - நீக்குதற்கரிய கொடியபிறப்புத்துன்பமாகிற நோயையொழிப்பதற்குக் கிடைத்தற்கரியமருந்துபோல்வதும், அரிகதைதான் - திருமாலினது திவ்யசரித்திரமேயாம்; (எ - று.)

இச்செய்யுளில் ஒருபொருளினிடத்துப் பலபொருள்களின் தன்மையை ஏற்றிக்கூறியதனால், பலபடப்புனைவணி; வடநூலார்உல்லேகாலங்காரமென்பர். தெவிட்டுதல் - வெறுத்தொழித்தல். (க0)

கக.—(இ - ள்.) புரியும்பாதகம்போக்கிட - (தாந்தாம்) செய்துள்ள பாவங்களைஒழிக்கும்பொருட்டு, புனிதம்நீர்படிந்தால் - பரிசுத்தமான புண்ணியதீர்த்தத்திலே நீராடினால், உரியமாதவர் உறவு வந்துஉற்றிடும் - தகுந்த பெருந்தவத்தையுடைய முனிவர்களது சேர்க்கை (அதன்பயனாக) வந்து கிடைக்கும்; உற்றால் - அதுகிடைத்தால், மருவுவெம்பவம் தீர்ந்திடும் மால்கதை கேட்ப - (அநாதியாகப்) பொருந்திய கொடியபிறவித்துன்பம் ஒழிந்துவிடுதற்குக்காரணமாகிய திருமாலினது திவ்யசரித்திரத்தை(அவர்களிடம்) கேட்க, (அதனால்), அன்புபெருகும் - (அத்திருமாலிடத்துப்) பக்திமிகுதியாயுண்டாகும்; பின் - அதன்பிறகு, பிறப்பு அறும் ஞானம் எய்திடும் - பிறப்பு நீங்குவதற்குக்காரணமான தத்துவஞானம் உண்டாகும்; (எ - று.) (கக)

கஉ.—(இ-ள்.) மன்னும்-பொருந்தின, ஆயுளும்-பிராயமும், மதிகளும்-அறிவுகளும், மிக்கு இலா - அதிகப்பட்டிராத, கலியில் - கலியுகத்திலே, தொல்லோன் - அநாதியான எம்பெருமான், தன்னை ஓர் முறை சாற்றிய தவத்தினர்தமக்கும் - தன்னுடைய திருநாமத்தை ஒருதரஞ்சொல்லுதலாகிய தவத்தைச் செய்தவர்களுக்கும், பன்னுதொல்கதை பத்தியின்கேட்குநர்தமக்கும் - சிறப்பித்துச்சொல்லப்படுகிற பழமையான தன்னுடைய சரித்திரத்தைப் பக்தியுடனே கேட்டவர்களுக்கும், துன்றுவெம் பவம் தீர்த்து - நெருக்கினகொடியபிறப்புத்துன்பங்களையொழித்து, வீடு அருளுவன் - முத்தியைக்கொடுத்தருளுவன்; (எ - று.)

“மாதவங்களென்றேதவங்களின் மருவுசீவனென்றுருவதீபெரும், பூதமல்லுயிர்திரியமல்லவைம் புலனுமல்லநற்புந்தியல்லகாண், சீதரன் பார்தாமன்வாமனன் திருவரங்கனுக்கடிமையியுனக், கேதமில்லையென்றறியதிர்தயி னிதின்மாதவமில்லையெங்குமே” இவ்வாறு சித்தாந்தமிருப்பதால், ‘தன்னையோர்முறைசாற்றிய தவத்தினர்’ என்பதற்கு இங்ஙனம் உரைக்கப்பட்டது. ஆயுள் - ஆயுஸ்; வடசொல். (கஉ)

கங.—(இ-ள்.) பவம்எலாம் தொலைத்து அருள்-பிறப்புத்துன்பமெல்லாவற்றையும் ஒழித்து (நற்கதியை) அளித்தருளுந்தன்மையதாகிய, கதை - பகவச்சரித்திரத்தை, பத்தியின் கேளான் - பக்தியுடனே கேட்காதவன், புவியின்மேல் பிறந்து - பூமியிலே பிறந்ததனால், என் பயன் - என்னபயன்? [ஒருபிரயோசனமுமில்லையென்றபடி]; புனிதன் நல்கதையை - பரிசுத்தனும் முன்னவனுமாகிய எம்பெருமானது திவ்யசரித்திரத்தை, நவிலும்- கூறுகிற, நாவினோர் -நாக்கையுடையவர்களும், நண்ணிய அன்பொடு கேட்கும்- பொருந்திய பக்தியுடனே கேட்கிற, செவியினோர் - காதுகளையுடையவர்களுமாகிய இவர்களது,தவத்தால் வரும் சென்மமே-(முற்பிறப்பிற்செய்த)

தவத்தால் உண்டாகிற பிறப்பே, சென்மம் - (சிறந்தபயனுடைய) பிறப்பாம்; (எ - று.)

சென்மம் - ஜன்மம்; வடசொற்றிரிபு: மோனைநோக்கிய விகாரம். புனிதன் கதைக்கு, நன்மை - நாற்பொருட்பயன்களையும் ஒருங்கே அளிக்குந் தன்மை. 'நன்னிய அன்பொடு' என்பதை 'நவிலும்' என்பதோடுகூட்டுக.

கச.—(இ-ள்.)துளவினன்பதத்துஅன்புஇலர்ஆய் - திருத்துழாய்மாலையையுடையதிருமாலினதுதிருவடிகளிற் பக்தியில்லாதவர்களாகி, நனி துணிந்து - (கருமயோகமே சிறந்ததென்று) நன்றாக நிச்சயித்து, அளவு இலாத நல் கருமங்கள் ஆற்றினும் - அளவில்லாத (யாகமுதலிய) சற்காரியங்களைச் செய்தாலும், அறிவின் வளம் இலாதவர் ஆய் - தத்துவஞானத்தின் சிறப்பை யுடைத்தாகாதவர்களாகி, உடல் வருந்தினர் ஆம் - (வீணாய்) உடம்பு வருத்தமாத்திரத்தை யடைந்தவராவர்; (அதுவேயன்றி யாகாதிகருமமாத்திரத்தால்),அ கிளரும் வான்கதி அடைந்திட கிடைப்பது ஒன்று இலை- மேம்பட்டுவிளங்குகிற சிறந்த அந்தப்பரமபதத்தை அடைதற்குப் பொருந்துவதொரு உபாயம் (அவர்களுக்கு) இல்லை; (எ -று.)—ஆல் - ஈற்றசை.(கச)

கரு.—(இ - ள்.) நலத்தினில் திகழ் - நன்மையோடுகூடி விளங்குகிற, நான்கு எனும் வருணம் ஆச்சிரமம் புலத்தினில் - (பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திர ஜாதிகளாகிய) நான்குஜாதிகளும் (பிரமசரியம் கிரகஸ்தம் வானப்பிரஸ்தம் சன்னியாசம் என்கிற) நான்கு ஆச்சிரமங்களும் ஆகிய இடங்களில் (இருந்து), தம கருமங்கள் - தத்தம்வருணாச்சிரமங்களுக்கு உரிய (யாகாதி) சற்கருமங்களை, பத்தியின் - விருப்பத்துடனே, புரியின் - செய்யத்தொடங்கினால், வலத்தின் மிக்கு உயர் மாயவன் மகிழ்தர - வலிமையினால் மிகச்சிறந்த திருமால் திருவுள்ளமுகத்தலையே பலமாகக்கொண்டு, மருவும் பலத்தை இச்சியாது ஆற்றுவோர் - பொருந்தும் வேறு பலன்களை விரும்பாமற் செய்பவர்கள், பரம்சுடர் ஆவார் - (எல்லாவொளிகளினும்)மேம்பட்டஒளியாகியமுழுமுதற்கடவுளின் தன்மையராவர்.

என்றது, முத்தியுலகத்தில் எம்பெருமானோடொத்த தேஜோமயமான திவ்வியசரீரத்தைப் பெற்றுவாழ்வர் என்பதாம். தம, அ - ஆறனுருபு. (கரு)

கசு.—(இ - ள்.) ஆற்றும் - (தான்) செய்கிற, ஓர் வினை - (நல்வினை தீவினையென்னும் இருவகைவினைகளுள் யாதாயினும்) ஒருகருமத்தின் சம்பந்தத்தால், உரு - ஒரு சரீரத்தையும், பெயர் - ஒருநாமத்தையும், அடைந்திடா - அடையுந்தன்மையனல்லாத, அமலன் - குற்றமற்ற எம்பெருமான், சாற்று தாமதத்தால் - (இழிவாகச்) சொல்லப்படுகிற தாமசகுணத்தால், அரன் உரு என சார்ந்தான் - உருத்திரனது சொரூபமாகப் பொருந்தினான்; போற்று இராசதத்தால் - (தாமசத்திலும் மேலானதென்று) உயர்த்திச் சொல்லப்படுகிற ராஜசகுணத்தால், அயன் புரம் என பொலிந்தான் - பிரமனது வடிவமாய் விளங்கினான்; ஏற்று சாத்துவத்தால் - (எல்லாவற்றினுஞ் சிறந்ததென்று) உயர்த்துக்கூறப்படுகிற சாத்துவிககுணத்தால், அரி உரு என இயைந்தான் - விஷ்ணுவடிவமாய் விளங்கினான்; (எ-று.)

'ஏற்ற சத்துவத்தால்' என்றபாடத்துக்கு - தனக்கு உரிய சிறந்த சத்துவகுணத்தால் என்று பொருள். (கசு)

கஎ.—(இ - ள்.) தாமதம் தனு - தாமசகுணத்தினது வடிவம், தா அரு தாவரம் - பெருமையில்லாத (மரம்முதலிய எரிக்கப்படும்) நிலைத்திணைப்பொருள்போலும்; இராசதம் தனு - (அதனினுஞ் சிறிதுசிறந்த) ராஜஸகுணத்தினது வடிவம், சார்ந்த தூமம் - (அதனிடத்துப்)பொருந்திய புகையைப்போலும்;சொல்லு முதல் ஆம் சத்துவத்தின் தனு- சிறப்பித்துச்சொல்லப்படுகிற தலைமைக்குணமாகிய சத்துவகுணத்தினது வடிவம், ஆங்கு

எழும் அக்கினி - அத்தாவரத்தினிடத்துண்டாகிற நெருப்பைப் போலும்; (சத்துவவடிவம் அக்கினியாவது எங்ஙனமெனின்), அதுதான் வாமமூர்த்தியை தரிசனம் ஆக்கும் வகையால் - அச்சத்துவகுணந்தான் அழகியவடிவத்தையுடைய எம்பெருமானது சொரூபத்தைக் காட்டுகின்ற தன்மையினால்; (எ - று.)— மற்று - அசை. 'வாமமுத்தி' என்றும்பாடம். (கஎ)

கஅ.—(இ - ள்.) முத்தர்ஆனவர்-முத்திபெற்றவர்கள், பிரமம்ஒன்று என - ஏகமானபரப்பிரம்மம் என்று, தனி - தாங்கள்தனியே, மொழிவார் - (கடவுளுக்குப் பெயர்)கூறுவார்கள்; வித்தை சேர்தரும் உளத்தினோர் -தத்துவஞானம்பொருந்தினமனத்தையுடையவர்கள், விராட்டுவை நயப்பார் - விராட்என்னுந் திருநாமத்தை (எம்பெருமானுக்கு)விரும்பிக்கூறுவார்கள்;சுத்தர்ஆனவர் - பரிசுத்தகுணமுடையவர்கள், பரம ஆன்மா என - பரமாத்துமாவென்று,சொல்வார் - திருநாமங் கூறுவார்கள்; பத்தியோர் - பக்தியையுடையவர்கள், பகவான் எனவே- பகவான் என்றே, நனி பகர்வார் - பெரும்பாலும் (பெயர்) கூறுவார்கள்; (எ - று.)

இச்செய்யுளில் 'நனி' என்றதனால், சிறுபான்மை அவரவர் வேறுபெயர் கூறுதலுமுண்டெனக் கொள்க. (கஅ)

க௯.—(இ - ள்.) கேடு இல் வேதமும் - அழிதலில்லாதவேதங்களும், மகங்களும் - யாகங்களும், செழுமிய தவமும்- நிறைந்ததபசும், நீடு யோகமும்- சிறந்தயோகாப்பியாசமும், தானமும்-ஈகையும், நிகழ்த்திய கதியும்- சொல்லப்படுகிற (சுவர்க்கமுதலிய) உயர்கதியும், கூடு மாயையும் - பொருந்தினமாயையும், தருமமும் - அறமும், குலவிய வீடும்-விளங்குகிறமுத்தியும், நாடும் ஞானமும் -(யாவராலும்)விரும்பியடையப்படுகிற தத்துவஞானமும், (ஆகியஇவற்றின்தன்மையை), நவிலின்-கூறப்புக்கால், நாராயணன் எனும் மால்- நாராயணனென்னப்படுகிற திருமாலின் சொரூபமேயாம்;(எ - று.)

வேதம் கடவுளைப்போல நித்தியமாதலால், அதற்கு 'கேடில்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. நாராயணன்எனும் - நாராயணனெனப்படும் என்று உரைத்து, ஆல் - ஈற்றசையென்றுங் கூறலாம். (க௯)

உ0.—(இ - ள்.) பின்னம் பின்னம் ஆ - வெவ்வேறு பகுப்பாக, தருக்களில் பிறங்கிய தழலின் - மரங்களிற்பற்றியெரிந்துவிளங்குகிற நெருப்புப் போலவும், உன்னு கூத்தினில் பல்பலவேடம் உற்றவரின் - (யாவராலும் விரும்பி) நினைக்கப்படுகிற கூத்திலே பலபலவேடங்களைப்பொருந்தினவர்கள் போலவும், தொல்லோன் - அநாதியானகடவுள், மன்னும் எ உலகத்தினும் மருவி-நிலைபெற்ற எல்லாவுலகங்களிலும் பொருந்தி, எழ்பிறப்பு ஆ தன்னும் நல் உரு ஆகவும் - (மக்கள், தேவர், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்என்னும்) எழுவகைப்பிறப்பாகப் பொருந்திய நல்லவடிவமாகவும், துலங்குவன் - விளங்குவான்; (எ-று.) (உ0)

உக.—(இ-ள்.) ஆயிரம் தலை - ஆயிரந் திருமுடிகளும், ஆயிரம் கண் மலர் - செந்தாமரைமலர்போன்ற ஆயிரந்திருக்கண்களும், அணி சேர் ஆயிரம் புயம் - அழகுபொருந்திய ஆயிரந்திருத்தோள்களும், ஆயிரம் சே அடி - சிவந்த ஆயிரந்திருவடிகளும், தழைப்ப - வளர்ந்து விளங்க, ஆயிரம்தலை அரவினின் - ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேஷசயனத்திலே, அறிதயில் அமர்ந்த - எல்லாவற்றையும் அறிந்தே தூங்குவதான யோகநித்திரையைப் பொருந்தியருளிய, ஆயிரம் பெயர் இறை - ஆயிரந் திருநாமங்களையுடைய எம்பெருமானது, கலை - அம்சங்கள், அளப்பு இல உள - அளவில்லாதன உண்டு; (எ - று.)—ஆயிரம் - அநேகமென்னும் பொருளது. (உக)

உஉ.—(இ-ள்.) இலகும் - விளங்குகிற, எழ்பிறப்பினில் - எழுவகைப் பிறப்புக்களிலே, வரு - தோன்றுகிற, சராசரத்தோறும் - ஜங்கமமுந்தா

வரமுமாகிய எல்லாவுயிர்களுடனே, உலகு எலாம் - எல்லாவுலகங்களும், தனி - தனியே, உதிப்பதும் - தோன்றுவதும், ஒழிந்து அடங்குவதும் - அழிந்தொடுங்குவதும், அலகு இலாதவன்பால் அலது இலை - (திருக்கலியாணகுணகணங்களுக்கு) ஒரு எல்லையில்லாத திருமாலினிடத்தல்லாமல் வேறெருவரிடத்திலில்லை; அவயவம் ஆம் கலை அலாது - (எல்லாம்) எம்பெருமானது உறுப்பாகிய அம்சமேயல்லாமல், வேறு - வேறே, உலகு என காட்டவும் - உலகமென்று எடுத்துக்காட்டவும், இலை - பொருளில்லை; (எ-று.) (உஉ)

உங.—(இ-ள்.) உரிய மாயையால் - (உலகத்தோற்றத்துக்கு) உரிய காரணமாகிய மாயையினாலே, உலகு எலாம் படைத்திட - லோகங்களையெல்லாம் உண்டாக்குவதற்கு, உவந்து - விரும்பி, விரியும் அண்டம் ஆய் விளங்கிய - பரவியபலஅண்டங்களின் வடிவமாய் விளங்கின, விராட்டு ஆம் புருடன் - விராட்புருஷனது வடிவமான புருஷோத்தமன், மருவு தன் கலையால் - பொருந்தின தனது அம்சத்தினாலே, கௌமாரம்ஆய் - கௌமாரமென்னும்படைப்பிற்பொருந்தி, வயங்கு அ அரியர் ஆம் சனக ஆதியர் ஆய் அவதரித்தான் - விளங்குகின்ற அப்படிப்பட்ட [மிகச்சிறந்த] அருமையானவர்களாகிய ஸனகர்முதலிய யோகிகளாய்த் தோன்றினான்; (எ-று.)

கௌமாரம் - இளமை; வடசொல். (உங)

உச.—(இ-ள்.) புருடனை - கௌமாரவடிவமானவிராட்புருஷனை, ஆதி ஆம் அவதாரம் ஆய் - முதலவதாரமாக, அறைவார் - கூறுவார்கள்; கோது இலாதவன் - குற்றமில்லாத முதற்கடவுள், குலவு - விளங்குகிற, இரண்டே முதல் ஆக - இரண்டாவது முதலாக, ஏதம் நீங்கு அவதாரங்கள் - குற்றம் நீங்கின அவதாரங்களை, எடுத்தமை - எடுத்ததனை, இனி நான் ஓதுகேன் - இனி நான் சொல்லுவேன், என - என்றுகூறி, சூதமாமுனி - சூதமகாமுனிவர், எடுத்து உரைப்பான் - (அவற்றை) விவரித்துக்கூறுவாரானார்; (எ - று.)—அதனைமேற்காண்க.

'ஏதம் நீங்கு அவதாரங்கள்' என்றது, கருமசம்பந்தத்தினாலன்றி இச்சைமாத்திரத்தால்தோன்றும் பிறப்புக்களாதலால். (உச)

உரு.—(இ-ள்.) இறைவன் ஆன மால் - யாவர்க்குந்தலைவனான திருமால், ஏனம் ஆய் - வராகஅவதாரமாய், இரு நிலம் எடுத்தான் - பெரிய பூமியை எடுத்துவந்தான்; மறை சொல் நாரதன் ஆய் - வேதங்களையே எப்பொழுதும் பாராயணஞ்செய்கிற நாரதமகாமுனிவரது வடிவமாய், பஞ்சராத்திரம் வகுத்தான் - ஸ்ரீபாஞ்சராத்திரசாஸ்திரத்தை விவரித்துக்கூறினான்; விறல்செய்மா நரநாரணர் ஆய் - பெருமைபொருந்திய சிறந்த நரநாராயணர்களது வடிவமாய், தவம் விரித்தான் - தவநிலைமையை விவரித்தான்; நல் கபிலன் ஆய் - நல்லகபிலமகாமுனிவரதுவடிவமாய், உறையும் தாய்க்கு - (தான்பிறப்பதற்குக்காரணமாய்ப்) பொருந்தின தன்னுடைய தாயாருக்கு, தத்துவம் உரைத்தான் - தத்துவப்பொருளைக்கூறினான்; (எ - று.)

பாஞ்சராத்திரம் - ஐந்துராத்திரியிற்கூறிய நூலென்றுபொருள். கபிலர் ஆசுரியென்னும் பிராமணனுக்குச் சாங்கியமென்னுந் தத்துவசாஸ்திரத்தைக் கூறினதாக முதனூல்கூறும். (உரு)

உசு.—(இ-ள்.) தரணிமேல் - பூலோகத்திலே, முதல்வன் - முதற்கடவுள், வித்தை சேர் - கல்விபொருந்தின, தத்தாத்திரையன் ஆய் - தத்தாத்திரேயனென்னும்முனிவனதுவடிவமாய், விண்ணவர் போற்ற - தேவர்கள்துதிக்க, அத்திரிக்கு நல்மகன் என உதித்து - அத்திரிமகாரிஷிக்கு நல்லகுமாரனாய்த்தோன்றி, அலர்க்கனுக்கும் - அலர்க்கனென்பவனுக்கும், அரிதுணர்வர புத்தியால் போற்றுவோன்தனக்கும் - திருமால் நரசிங்கவடிவமாய்க் கம்பத்திலேதோன்றும்படி தனதுஇயற்கையறிவால் துதிப்பவ

ருன பிரகலாதனுக்கும், தத்துவம் - தத்துவப்பொருளை, தெரித்து உரைத்தனன்-விவரித்துக்கூறினன்;(எ-று.)—அத்திரியின்மனைவி-அநசூயை.(உசு)

உஎ.—(இ - ள்.) (அன்றியும் திருமால்), ஓதும்நால்மறை ருசிஎன உரைதரும் உரவோன் மாதவத்தினால் - ஓதினநான்குவேதங்களையுமுடைய ருசியென்று பெயர்கூறப்படுகிற அறிவுடையான் செய்த சிறந்ததவத்தால், மாமகம்புருடன் ஆய் - சிறந்த யாகபுருஷனாய், உதித்து - தோன்றி, ஆதி ஆகிய மனுவினை - முதல்மனுவந்தரமாகிய சுவாயம்புவ மனுவந்தரத்தை, அடைந்தனன் - (காத்தற்பொருட்டுச்)சேர்ந்தான்;நாபிகாதலால்தர - நாபி என்னும் அரசன் அன்போடுஉண்டாக்க, இடபன்ஆய் - ரிஷபனென்னும் அவனதுகுமாரனாய், கருது வீடு உற்றான் - (யாவராலும்) எண்ணி விரும்பப்படுகிற முத்தியைப் பெற்றான்; (எ - று.) (உஎ)

உஅ.—(இ-ள்.) (எம்பெருமான்),பிருதுமன்னவன்ஆகி-பிருதுவென்னும் அரசனது வடிவமாய், பெருவளம்சுரப்ப - (பூமியெங்கும்) சிறந்த ஓஷதிவளங்கள் செழிக்கும்படி, கருது பூமியை - (யாவராலும்) எண்ணப்படுகிற (பசுவடிவங்கொண்ட) பூமிதேவியை, கறந்தனன் - பால்கறந்திட்டான்; மீன் உரு எடுத்து - மத்ஸ்யாவதாரஞ்செய்து, மருவு சீர்த்தி வைவச்சுதன் எனும் பெயர் மனு ஆம் அரசர்கோனை - பொருந்தினபெரும்புகழையுடைய வைவச்சுதனென்னும்பெயருள்ள மனுவாகிய சக்கரவர்த்தியை, மன்வந்தரத்து - (சாக்ஷுஷமென்னும்) மநுவந்தரத்திலே, அடை கெட - (பிரளயஜலத்தால் அவன்)அடைந்ததுன்பங்கெடும்படி, கெடுத்தான் - (அத்துன்பத்தை) அழித்தருளினான்; (எ-று.)

அடை - முதனிலைத்தொழிலாகுபெயர். அரசர்கோனைக் காத்தானென்றபடி. 'அடைதுயர்கெடுத்தான்' எனப்பாடங்கொள்வது நலம். (உஅ)

உகூ.—(இ - ள்.) அந்தரத்து உறை அமரரும் - வானுலகத்திலே வசிக்கின்ற தேவர்களும், அசுரரும் - அசுரர்களும், கடையும் - கடைகின்ற, மந்தரத்தினை - மந்தரமலையை, கந்தரத்தினில் கவுத்துவம் கவினிய கண்ணன்-தனது திருக்கண்டத்திலே கௌஸ்துபரத்தினவாரம் அழகிதாகப்பொருந்தப்பெற்ற திருமால், சுந்தரம் பெரு கமடம் ஆய்- அழகிய பெரிய ஸ்ரீகூர்மாவதாரமாகி, மறுகும் அ வாரிதி மருவி - கடையப்படுகிற அப்பாற்கடலை அடைந்து, முதுகினில்சுமந்தான - தனதுமுதுகின்மேல் தரித்தருளினான்.

கமடம் - ஆமை, வடசொல். மந்தரத்தினைச் சுமந்தானென இயையும்.()

௩௦—(இ - ள்.) இறைவன் - எங்கும் நிறைந்துறைபவனாகிய எம்பெருமான், மருவு வேலையின் - பொருந்திய திருப்பாற்கடலிலே, வயங்கு தன்வந்திரிபகவான் உருவம் ஆகி - விளங்குகிற தன்வந்திரியென்னும் பெரியவாது வடிவமாய், நல் அமுது உறை கடத்தொடும் - சிறந்த தேவாமிருதம் பொருந்தின கலசத்துடனே, உதித்தான் - தோன்றினான்; (அன்றியும் அப்பொழுதுஅங்கே), பொருவு இல் மோகினிவடிவம் ஆய் - ஒப்பில்லாத மோகினியென்னும் அழகியபெண்தெய்வத்தின் சொரூபமாகி, புது அமுதத்தை - புதிய அந்த அமிருதத்தை, இருவிசும்பின்வாழ் இமையவர்க்கு - பெரியவானுலகத்திலே வாழ்கிற தேவர்களுக்கு,ஈந்தனன்-கொடுத்தருளினான்; (எ-று.)

௩௧.—(இ - ள்.) (திருமால்), சனகர் ஆதியர் ஏத்துற - சனகர்முதலிய யோகிகள் துதியாநிற்க, தயங்கு தம்பத்தின் - விளங்குகிறதூணிலிருந்து, அகம் மா ஈரமடங்கல் ஆய் அவதரித்து- குற்றமில்லாதசிறந்த நரசிங்கவடிவமாய்த் தோன்றி,இகலும் கனகன்ஆகிய கடுதிறலோன் நெஞ்சு- பகைமை கொண்ட இரணியாசுரனாகிய மிக்கவலிமையையுடையவனது மார்பை, கதழ்ந்த சினகம் வாளினால் - மிகுந்த கோபத்தையுடைய (தனது கைந்க

மாகிய) வாளாயுதத்தினால், மாய்தர - அழியும்படி, சினம் தூ - கோபங்கொண்டு, உடன் - விரைவிலே, கீண்டான் - பிளந்தருளினான்; (எ - று.)

சனகாதியர்-சனகர், சனந்தனர், சனத்குமாரர், சனத்சுசாதர் என்னும் நால்வர். தம்பம்- ஸ்தம்பம்; வடசொல். நரமடங்கல்- மனிதவுருவமும் சிங்கவுருவமுங்கலந்தவடிவம். கனகன், இரணியன் என்பவற்றிற்கு- பொன்னிறமானவனென்றுபொருள்; கநகம், ஹிரண்யம் - பொன்னின்பெயர்கள். உடையவனது கோபத்தை ஆயுதத்தின்மேல் ஏற்றி, 'சினகவாள்' என்றது. சினமென்னுந் தமிழ்மொழி, வடசொற்போலக் கப்பிரத்தியயம்பெற்று, சினகமெனநின்றது. (௩௧)

௩௨.—(இ - ள்.) நல் தனி முதல் - சிறந்தஒப்பற்றமுழுமுதற்கடவுள், சினக்கும் வாள் வலி அவுணர் செய் தீமை சொல அதிதிதனக்கு - (தேவர்கள்மீது எப்பொழுதும்) கோபிக்கின்ற ஆயுதபலத்தையுடைய அசுரர்கள் செய்கின்ற தீமைகளைத் தன்னிடம்எடுத்துக்கூறிமுறையிட்ட அதிதிதேவிக்கு, வாமனன் ஆகி உதித்து - குள்ளமானவாமநாவதாரமாய்ப் (பிள்ளையாய்) பிறந்து, 'மாவலி - மகாபலிச்சக்கரவர்த்தியே! உனக்கு நீள் புகழ் உற்றிட - உனக்கு என்றுமழியாதகீர்த்தி உண்டாம்படி, உவந்து - மனமகிழ்ச்சியுடனே, எனக்கு நீ மூஅடி இடம் அருள் - எனக்கு நீ மூன்றடிநிலத்தைத் தந்தருளுவாய்,' என்று - என்றுகூறி, முன் - (அவ்வசுரராஜனது) முன்னிலையில் (சென்று), இரந்தான் - யாசித்தான்; (எ - று.)—அதிதி - தேவர்தாய்.

௩௩.—(இ - ள்.) இறைவன் - தலைவனான கடவுள், பரசுராமன் ஆய்- பரசுராமாவதாரஞ்செய்து. பாரினில் - பூமியிலே, மூ எழ் தலைமுறை - இருபத்தொருதலைமுறை, அரசர்மாமுடி துணித்தனன் - க்ஷத்திரியர்களதுசிறந்த தலைகளை அறுத்துத்தள்ளினான்; வியாதன் ஆய் - வியாசமகாமுனிவடிவமாய், விரவு மா மறை- (ஒன்றோடொன்று) கலந்திருந்தசிறந்தவேதங்களை, நான்கு என வகுத்து- (இருக்குயசுர்சாமம்அதருவணம் என்னும்) நான்காக வரையறையிட்டு, மேல்முறையால் உரைசெய் வேதத்தில் - சிறந்தபிரமாணமாகச்சொல்லப்படுகிற அந்தவேதத்திலே, முன்மறை - முதலாவதான இருக்குவேதத்தை, பயிலனுக்கு - பைலமுனியென்னும் மாணுக்கருக்கு, உரைத்தான் - கூறியருளினான்; (எ - று.)

தலைமுறை - ஒருவரிருந்துவாழுங்காலம். வ்யாஸனென்பதற்கு - பிரிப்பவனென்றுபொருள். பரசுராமன் - கோடாலிப்படையுடையஇராமன். ()

௩௪.—(இ - ள்.) வழுத்து சீர் இரண்டும் ஆம் மறை - சொல்லப்படுகிற சிறப்பையுடைய இரண்டாவதானயசுர்வேதத்தை, வைசம்பாயனற்கும் - வைசம்பாயனமுனிவருக்கும், முழுத்த சாமத்தை - (மூன்றாவதாகிய) பூரணமானசாமவேதத்தை, சயிமினி ஆம் முதல்வற்கும் - ஜைமினிமுனிவராகிய தலைமாணாக்கருக்கும், தழைத்தமேவும் நான்குஆம் மறைதனை - சிறந்ததாகப்பொருந்திய நான்காவதான அதருவணவேதத்தை, சுமந்துவுக்கும் - சுமந்து என்னும் முனிவருக்கும், தொழ தரும்படி - (யாவரும் கௌரவித்து) வணங்கத்தகும்படி, புராணம் - எல்லாப்புராணங்களையும், என்தந்தைக்கும் - எனது [சூதமுனிவரது]தந்தையாரான ரோமஹர்ஷணருக்கும், சொற்றான் - கூறியருளினான்; (எ-று.)

சாமம் வேதங்களிற்சிறந்ததாதலால், 'முழுத்தசாமம்' என்றது; அதனைப் பகவத்கீதையிற் கண்ணபிரான் 'வேதங்களிற் சாமமாகின்றேன் யானே' என உண்மைகூறியவாற்றாலும் அறிக. ரோமஹர்ஷணர் என்பதற்கு- (கதைகூறி) மயிர்ச்சிலிர்ப்புண்டாம்படி (யாவரையும்) மகிழ்விப்பவரென்பது பொருள். (௩௪)

௯௫.—(இ - ள்.) பதம் தனை வானவர் வந்து தொழுவோன்-(தனது) உபயதிருவடிகளைத் தேவர்கள்வந்து தொழப்பெறுபவனாகிய எம்பெருமான், அணிசெய்காவுசூழ் அயோத்தியில் - அழகுபொருந்திய சோலைகளாற் புடைசூழப்பெற்ற அயோத்தியாபட்டணத்திலே, இராமனென்று அடைந்து -ஸ்ரீராமனென்னுந் திருநாமங்கொண்டு திருவவதரித்து, பணிசெய் வானரப்படைகளால் - தொண்டுபூண்டொழுகுகிற குரங்குச்சேனைகளைக்கொண்டு, பரவையையடைத்து - பரவியகடலை அணைகட்டி நிறுத்தி, மணிசெய்மாமதிள் இலங்கையில் மருவு இராவணனை - இரத்தினங்களைப்பதித்துச்செய்த பெரியமதில்களையுடைய லங்காநகரத்திலே பொருந்திவாழ்ந்த இராவணனை, துணிசெய்தான் - நாசப்படுத்தினான்; (எ - று.)

துணிசெய்தான் - உடல்வேறுஉயிர்வேறுஆம்படி துண்டப்படுத்தினான் என்றவாறு; தலைபறித்திட்டானென்னுமாம். காவு, உ - சாரியை. கா - காவலாளராற்காக்கப்படுவதுபற்றிவந்த பெயர்போலும். மதிள் - மதில்என்பதன் ஈற்றுப்போலி. இராவணன் - தான்கூச்சலிடுபவன்; லோகத்தாரையெல்லாங் கூச்சலிடச்செய்பவன். (௯௫)

௯௬.—(இ - ள்.) பெரியோன்-(யாவரினுஞ்)சிறந்தகடவுள், தெள்நிலா நகைஉரோகிணி தேவகி வயிறு-தெளிவானசந்திரகாந்திபோன்றவெள்ளியபற்களையுடையரோகிணிதேவகி என்னும் வசுதேவபத்தினியரிருவரிடத்தும், (முறையே), பாலவண்ணன் ஆகிய இராமனும் - பால்போல வெண்மையான நிறமுள்ளவனாகிய பலராமனும், மலர்ந்த செம்கமலம் கண்ணன் ஆகிய கண்ணனும் - மலர்ந்தசெந்தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடையவனாகிய கிருஷ்ணனும், என வந்து-என்று இரண்டுதிருவவதாரமாய்த்தோன்றி, கடல் சூழ் மண்ணின் நீள் தலை பெரு பொறை தீர்த்தனன் - கடலாற்சூழப்பட்ட பூமிதேவியினது நீண்ட இடத்திலேயுள்ள பெரிய பாரத்தைத் தீர்த்தருளினான்; (எ - று.)

பூமிக்குப்பாரம் - பாவிகள்பலர்கூடித்தன்மீதுவசிக்கப்பெறுதல். (௯௬)

௯௭.—(இ-ள்.) புனிதன் - பரிசுத்தகுணமுள்ளவனான திருமால், இனி - இனிமேல் [கலியுகத்திலே], கீகடதேயத்தில் - கீகடமென்னுந் தேசத்திலே, புத்தனென்று உதித்தும் - பௌத்தாவதாரஞ் செய்தும், துனிசெய்வெம்கலி இறுதியின் - துன்பத்தைச்செய்கின்ற கொடியகலியுகத்தினது முடிவிலே, வாகம் ஆய் எழுந்தும் - குதிரைவடிவமாய்த் தோன்றியும், பனிசெய்தெள் திரைபாரினில் - குளிர்ச்சியைச்செய்கின்ற தெளிவான அலைகளையுடைய கடலினாற்சூழப்பட்ட பூலோகத்திலே, பகைஞரை தணித்து - (சற்காரியங்களுக்கு அப்பொழுதப்பொழுது) சத்துருக்களாகுபவர்களை நாசப்படுத்தி, இனிது - நன்றாக, நல் அறன் - சிறந்ததருமத்தை, நிலையினில் நிறுத்துவன் - நிலைகுலையாமல் நிற்கச்செய்தருளுவான்; (எ - று.)

இங்ஙனம் கூறுதல் பிறர்க்குக்கூறினது கலியுகத்தொடக்கத்திலெனவறிக. வாகமாயெழுதல் - கற்கியவதாரம். ஆல் - அசை. (௯௭)

௯௮.—(இ - ள்.) இருபதோடு இரண்டு எனும் அவதாரங்கள் - இருபத்திரண்டாகிய அவதாரங்கள், முறையே இங்ஙனம் மருவும் - முறையே இவ்வாறு பொருந்தும்; மாயவன் கலைகளால் - அவ்வெம்பெருமானது அம்சங்களினால், இனமும் - இன்னமும் (உள்ள), கருது சீர் அவதாரங்கள் - (யாவராலும்) தியானிக்கப்படுகிற சிறப்பையுடைய திருவவதாரங்களுக்கு, கணக்கு இலை - ஒரு எண் இல்லை; எண்ணின் - ஆராயுமிடத்து, அரிய வாரிதி மணலினும் அனேகம் என்று - (அவைதாம், எண்ணி அளவிடுதற்கு) அருமையான கடலின்மணலினும் பலவாகுமென்று, அறைவார் - (அறிந்தபெரியோர்) கூறுவார்கள்; (எ - று.) (௯௮)

௩௯.—(இ - ள்.) போற்று தேவர்கள் - சிறப்பித்துச்சொல்லப்படுகிற தேவர்கள்பலரும், மனுக்கள் - மனுக்களும், அவர் எழில் புதல்வர் - அந்த மனுக்களது அழகியபுத்திரர்களும், மற்றுசாற்றும்மாந்தர்கள் - மற்றுஞ் சொல்லப்படுகிற மனிதர்கள்பலரும், மரீசியே முதலிய தவத்தோர் - மரீசிப்பிரஜாபதிமுதலான முனிவர்கள்பலரும், ஆறு நீர் பிரிவு என - யாற்றின் நீர் தனித்தனிபிரிந்துவெவ்வேறாகப்பாய்வதுபோல, அவன்கலையினிற்பிரிவு ஆய்தோற்றுவார் - அப்பெருமானது அம்சத்தினின்றும் பிரிந்தவர்களாய்த் தோன்றுவார்கள்; இதை ஏத்துவார் - இச்செய்தியைத் துதிப்பவர்கள், தொல் வினை அறுப்பார் - அநாதியாய்வருகின்ற கருமசம்பந்தத்தை ஒழித்திடுவார்கள்; (எ - று.)— முத்திபெறுவரென்றபடி. (௩௯)

௪௦.—(இ - ள்.) திருந்து நல் அறிவு ஆயவன் - சுத்தமான சிறந்த ஞானத்தின் சொரூபியான முதற்கடவுள், குணத்தொடு சேர்ந்து - (சத்துவம்முதலிய)குணங்களுடனேகூடி,வருந்தொழில்இயற்றும்மாமாயையைமணந்து - வருந்தொழிற்குக்காரணமான (படைத்தல் அளித்தல் அழித்தல் என்னும்) மூன்றுசெய்கையையுஞ் செய்யவல்ல மகாமாயையைச் சேர்ந்து, இருந்தனன் - இங்ஙனமிருந்தான், என - என்று, தோன்றினும் - காணப்பட்டாலும், இவை - இவற்றையெல்லாம், உளத்துஅறிவுபொருந்திநோக்கின் - மனத்திலே தத்துவஞானம் பொருந்தி அவ்வகைக்கண்ணினாற் பார்த்தால்,(அவையெல்லாம்), வெம் கானலில் புனல் என - வெப்பத்தையுடைய கானலினிடத்திலேதோன்றுகிற நீர்த்தோற்றம்போல,போம்-இருந்தவிடந் தெரியாமல் ஒழியும்;(எ - று.)—இருந்தனனென்ன, னகரமெய் - விரித்தல்.

௪௧.—(இ - ள்.) பற்று - (தானல்லாத உடம்பை யானென்றும் தனதல்லாதபொருள்களைத் தனித்தனி எனதென்றுங் கூறுகிற அகங்கார மமகாரங்களாகிய) அகப்பற்று புறப்பற்றுக்களை, நீக்கிய - ஒழித்த, பராசரற்கு - பராசரமகாமுனிவருக்கு, உதித்த - பிறந்த, நல் பாலன் - சிறந்த குமாரரும், கொற்றம்மால்கதைவகுத்தவன் - வெற்றியையுடைய திருமாலினது வரலாற்றை(ப்புராணங்களில்) வரையறுத்திட்டவரும் ஆகிய வேதவியாசமகாமுனிவர், குமரனுக்கு இசைப்ப - தனதுகுமாரரான சுகமகாரிஷிக்குக் கூறியருள, வெற்றிமாதவம்மைந்தனும்- (ஐம்பொறிகளையும்) வென்றுசெய்யப்படுகிற சிறந்ததவத்தையுடைய அவ்வியாசகுமாரரும், விண்டுராதனுக்கு சொற்ற ஆறு - பரீக்ஷித்துமகாராசனுக்குக்கூறியருளினபடியே, யான்சொல்குவன் - நான் (உங்களுக்குச்) சொல்லுவேன்; கேண்மின் - கேளுங்கள், என்று உரைத்தான் - என்று (சூதமுனிவர்) சொல்லியருளினார்.

-வெற்றி - எல்லாமுனிவர்களினுஞ் சிறந்திருத்தலுமாம்.பராசரர் - வசிஷ்டகுமாரராகிய சக்தியின் புத்திரர். (௪௧)

மாயவனமிசாவதாரமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது

நாரதர்தோற்றமுரைத்தவத்தியாயம்.

நாரதமகாமுனிவர் தமது உற்பத்திக்கிரமத்தை (வேதவியாச மகாமுனிவருக்கு)க் கூறின செய்தியைச் சொல்லும் பாகம். நாரம் - நரசம்பந்தமானது, மனிதர்களுள் உள்ள ஒற்றுமை: தன் - அதனைக்கெடுப்பவன்; அல்லது, நாரம் - ஆத்மஞானம், தன்- அதனைக்கொடுப்பவன். தோற்றம்- தோன்றுதல்; தொழிற்பெயர்.

௧.—(இ - ள்.) உரைத்தவாசகங்கேட்டலும் - (இங்ஙனம் சூதபுராணிகர்) சொன்னவார்த்தையைக்கேட்டவளவிலே, முனிவர் - சிறந்த இருடிகளெல்லோரும், உவந்து - மனமகிழ்ச்சிகொண்டு, 'வரத்தின் மிக்க வியாதமாமுனிவன் - வரம்பெறுதலிலும் (வரந்தருதலிலுஞ்) சிறந்த அந்த வேதவியாசமகாமுனிவர், மால்கதையை விரித்த ஆறு எவன் காரணம் - திருமாலின் திவ்யசரித்திரத்தை விவரித்துச்சொன்னவிதம் என்னகாரணத்தால்? யார் விளம்ப சொன்னார் - (அவரைத்திருமால்கதையைக்) கூறச்சொன்னவர்யார்? அருந்தவ - (அடியேங்களிடத்தில்) அன்புடைய பெருந்தவமுடையானே! சொல்க - சொல்லியருளுவாயாக,' என - என்று வேண்ட, சூதன் அங்கு அறைவான் - சூதமகாமுனிவர் அப்பொழுது கூறியருளுவாரானார்; (எ - று.)—அது மேற்காண்க. (௧)

௨.—(இ - ள்.) கடல்வயிறு எழு - கடலினது நடுவிடத்தே உதிக்கின்ற, கற்றை வெண் கதிர் மதி - தொகுதியாகியவெள்ளியகிரணங்களையுடைய பூர்ணசந்திரமண்டலத்தை, கப்ப - ஒத்திருக்கும்படி, நெடு நிலா பொழி - மிகுந்த சந்திரகாந்திக்கொப்பான வெள்ளொளியை வீசுகிற, நிரை இதழ் - கூட்டமான இதழ்களையுடைய, முளரி - வெண்டாமரைமலரிலே, வீற்றிருப்பாள் - வேறொருவர்க்கில்லாத சிறப்புடன் தங்கியிருப்பவளாகிய கலைமகளினது, வடமொழி பெயர் - ஸம்ஸ்கிருதபாஷைப்பெயராகிய ஸரஸ்வதியென்னும்பெயர், வயங்கு - பொருந்திவிளங்கப்பெற்ற, நல்வளம்திகழ்பேர்யாறு - நல்ல நீர்வளம் விளங்குகிற பெரிய (சரச்சுவதி) நதியினது, அடை கரை தலை - அடுத்துள்ளகரையிடத்திலே, வியாதமாமுனிவரன் - சிறந்தவியாசமாமுனிவர், அடைந்தான் - (ஒருகாலத்தில்) வந்துசேர்ந்தார்.

இதுவும், அடுத்தகவியும் - ஒருதொடர்.

௩.—(இ - ள்.) நில வரைப்பினில் உறைபவர் - பூலோகத்தின் எல்லையிலே வசிப்பவர்களுடைய, நெஞ்சு அகம் - மனத்தினிடம், தெருள - தெளிவடையும்படி, பல புராணம்நூல் உரைத்தனம் - அநேகபுராணக்கிரந்தங்களை (நாம்) கூறினோம்; பாரதம்தெரித்தேம் - மகாபாரதக்கிரந்தத்தைச்செய்துவெளியிட்டோம்; மறுவு அற - தடுமாற்றமில்லாமல், பழமறைவகுத்து உரைத்தனம் - அநாதியானவேதங்களை வரையறைசெய்துகூறினோம்; இன்னும் - (இங்ஙனம் பல அரிய பெரிய தொழில்களைச் செய்துமுடித்த) பின்பும், என்னோ - யாதுகாரணத்தாலோ, எம் உளம் இனிது தெருள்தர பெற்றிலம் - எமதுமனந் தெளிவடைந்து விளங்கப்பெற்றோமில்லை?(எ - று.) (௩)

௪.—(இ - ள்.) வரி - (உடம்பிற்) கோடுகளையுடைய [அல்லது இசைப்பாட்டையுடைய], சுரும்பு - வண்டுகள், இமிர் - ஒலித்துமொய்த்தற்கிடமான, வண்துழாய் - அழகியதிருத்துழாய்மாலையையுடைய, முகில் - காளமேகம்போன்ற திருமாலினது, கதை - சரித்திரத்தை, இனிது விரித்திலேம் - செவ்வையாக (இதுவரையிலும் எந்தநூலிலும்) விவரித்துக் கூறினோமில்லை; (அதனாலேயே எமதுமனந் தெருட்சியடைந்திலதுபோலும்); இனி - இனிமேல், யாம் - நாம், விளங்க விரிக்குவம் - (அத்திருமால்திவ்யசரித்திரத்தைத்) தெரியப்பட விவரித்துக்கூறுவோம், என்று - என்று, கருத்தின் எண்ணினன் இருந்துழி - (ஸ்ரீவேதவியாசபகவான்)தமது திருவுள்ளத்தில் எண்ணியிருந்த சமயத்திலே, கனிந்த தென் அமுதை சிரித்த இன் இசை வாழ் முனி - சுவைமிகுதிபெற்ற தெளிவான தேவாமிருதத்தையும் (இன்சுவையில் தனக்கு ஒப்பாகாதென்று இகழ்ந்து பரிகசித்துச்) சிரிக்கிற இனிய கானத்தையுடைய (மகதியென்னும்) வீணையையுடைய ஸ்ரீநாரதமகாமுனிவர், அவண் சேர்ந்தனன் - அந்த இடத்தில் வந்தருளினார்; (எ - று.) (௪)

௫.—(இ - ள்.) சேர்ந்த யாழ்முனி - (அங்கு அப்பொழுது வந்து)சேர்ந்தருளின (மகதி) வீணைக்குடைய நாரதமகாமுனிவர், செழு மறை கிழவனை நோக்கி - சிறந்தவேதங்களுக்குஉரியவியாசமகாமுனிவரைப்பார்த்து, ஆர்ந்த நூல்பல உரைத்தனை ஆயினும் - நிரம்பின நூல்கள் பலவற்றை (நீ) கூறினையானாலும், அன்பால் ஓர்ந்து மால்கதை உரைத்திலை - பக்தியுடனே ஆராய்ந்து திருமாலின்சரித்திரத்தைக் கூறினையில்லை; (இனியாயினும்), உள் தெளிய - (உன்) மனந்தெளிவடையும்படி, தெள் அமுது வார்ந்து ஒழுக - தெளிவானதேவாமிருதம்போன்ற இனிமை பெருகி வழிய, அவன்கதைவகுப்பாய் - அவ்வெம்பெருமான்வரலாற்றை விவரித்துக்கூறுவாய்; (எ-று.)

மற்று - அசை. போதும் - உரையசை; வாக்கியாலங்காரமென்பர் வடநூலார். 'நோக்கி' என்பது, மேல் எட்டாங்கவியில் 'என' என்பதோடு முடியும்.

௬. —(இ - ள்.) களிக்கும் - மிகமகிழ்ச்சிகொள்ளுந் தன்மையனவான, அம்சிறைவண்டு - அழகிய இறகுகளையுடைய வண்டுகள், உண - பருகும்படி, கலுழிஅம்தேறல் - கலங்குதன்மையதான அழகிய [சுவையினிய] தேனை, துளிக்கும் - பெருகவிடுகிற, தாமரை - (திருமாலின் நாபித்) தாமரைமலரினிடத்திருக்கு, கிழவனோடு - உரியவனாகிய பிரமதேவனுடனே, உலகுஎலாம் - எல்லாவுலகங்களையும், தோற்றி - படைத்திட்டு, அளிக்கும்- (அனைத்தையுங்) காத்தருளுகிற, மாயவன் - திருமாலினது, கதை அலால் - சரித்திரமேயல்லாமல், ஆர் இருள் நெஞ்சம் தெளிக்க வல்லது - (அழிப்பதற்கு) அருமையான அஜ்ஞானாந்தகாரத்தோடுகூடிய மனத்தைத் தெளிவடையச்செய்யவல்லது, தெரியின் - ஆலோசிக்குமிடத்து, பிறிதும் ஒன்று உளதுகொல்-வேறொன்றும் உண்டோ? [ஒன்றுமில்லையென்றபடி];(எ-று.)—ஆரிருள் - நிறைந்த இருளுமாம். (௬)

௭.—(இ - ள்.) மானதம் பெரு தடத்தினில் மருவிய அன்னம் - மானசமென்கிற பெரியதடாகத்திலே பொருந்திய அன்னப்பறவையானது, கான் அகம்சிறுகாக்கைசேர் தடம்கருதாது - காட்டினிடத்திலுள்ள சிறியகாக்கைகள் பொருந்துங் குளத்தை (ச்சேர்தற்கு) நினைத்தலுஞ் செய்யாது; (அதுபோலவே), நீல்நிறம் செழுமுகில் கதை நிகழ்த்திட கேட்போர் - நீலநிறமுள்ள அழகிய [பெரிய] மேகம்போன்ற திருமாலினது சரித்திரத்தைக் கூறக் கேட்பவர்கள், ஞானம்மிக்கவர் ஆய் - தத்துவஞானம்மிகுந்தவர்களாகி, பிறிதுஒன்றையும் நாடார் - வேறொருபொருளையும் விரும்பமாட்டார்கள்; (எ - று.)—எடுத்துக்காட்டுவமையணி. (௭)

௮.—(இ - ள்.) கன்னி - இளமையான, அம் - அழகிய, துழாய் - திருத்துழாய் மாலையையுடைய, கரியவன்-கருநிறமுள்ள திருமாலினது, கதைகளே அன்றி - சரித்திரங்களேயல்லாமல், பின்னைமற்று ஒருகதையும் - வேறுபட்ட மற்றையாவர்கதைகளும், வெம் பிறவிநோய்போக்கா- கொடிய பிறப்புத்துன்பங்களாகிய வியாதிகளை ஒழிக்கமாட்டாவாம்; முன்னம் - முன் ஒருகாலத்தில், மால்கதைகேட்டதால் - விஷ்ணுசரித்திரத்தைக்கேட்டதனாலே, என்பவம்நோய் - எனது பிறப்புத்துன்பம், முடிந்தது - ஒழிந்தது; அன்ன ஆறு கேள் - அந்தவிதத்தைக் கேட்பாயாக, என- என்றுகூறி, முனி நாரதன் - நாரதமுனிவர், அறைவான் - (அவ்வரலாற்றைக்) கூறுபவரானார்; (எ - று.)—அதனைமேற்காண்க. (௮)

௯.—(இ - ள்.) மட்டு வழிந்து ஒழுகும் - தேன்பெருகிவழிதற்கிடமான, முளரி -தாமரைமலர்களாலாகிய, அம்பசு தார் - அழகியபசியமாலையை, வனையும் - அணிந்துள்ள, ஓர்மறையவன்தனக்கு-ஒருபிராமணனுக்கு, தொழும்புபட்டு ஒழுகும் - அடிமைப்பட்டு நடக்கின்ற, ஒருத்திதன் - ஒருத்தியினுடைய, வயிற்றில் - வயிற்றிலே, முந்துபிறப்பினில் - முந்தின சன்மத்தி

லே, தோன்றி - (யான்) பிறந்து, வளர் நாள் - வளர்ந்துவருகிறகாலத்தில்,
பொழிந்திடும் தண் கார் பருவம் வந்திறுக்க - (மேகங்கள்மழையைச்)
சொரிவதற்குரியகுளிர்ந்தகார்காலம் வந்துசேர்ந்ததாக, (அப்பொழுது),
புகன்ற அ மறைவலான் மனைவாய் - சிறக்கூறப்பட்ட வேதம்வல்லஅந்தப்
பிராமணனது வீட்டிலே, தழைந்து எழும் பூர்வம் வேர் முதல் தடிந்த தலை
ப்படு துறவினர் - மேல்மேல்வளர்ந்தெழுகிற ஆசையை வேராகிய முதற்
காரணத்துடனே அழித்த (அதனால்)சிறந்த துறவறத்தையுடைய முனி
வர்கள்பலர், அடைந்தார் - வந்துசேர்ந்தார்கள்; (எ - று.)

தாமரைமலர்மாலை அந்தணர்க்குஉரியதாதலை "பைங்கமலத்தண்டெரி
யற் பட்டர்பிரான்" என்னும் பெரியார்பாசுரத்தாலுங் காண்க; இனி, இல
க்கணையாய், தாமரைமணிமாலையுமாம். (௯)

௧௦.—(இ - ள்.) அடைந்திடும் எதிகள்தமக்கு ஏவல்செய்திட - வந்து
சேர்ந்திட்ட துறவிகளுக்குக் குற்றேவற்றொழில் செய்தொழுகும்படி, அந்த
ணன் - (என்தாய்க்குத்)தலைவனான பிராமணன், எனை பணித்தான் - என்னைக்
கட்டளையிட்டான்; (யானும்அப்படியே), கடந்தவர் மிக உள் மகிழ்ந்திடும்ப
டி செய் கருத்தினன் - (இவ்வுலகப்பற்றுக்களைக்) கடந்திட்ட அத்துறவிகள்
மிகவும் மனமகிழும்படி குற்றேவல்செய்யவேண்டுமென்னுங் கருத்துடை
யவனாய், ஏவல் செய்து - (அவர்கள்) ஏவினதொழில்களைப் புரிந்து, அவர்
சேர் இடந்தனில் மருவி - அவர்கள்சேர்ந்துள்ள இடங்களிலே பொருந்தி,
நுகர்ந்திடு சேடம் - (அவர்கள்) உண்டொழிந்த பிரசாதசேஷத்தை, இருதவ
ர்சொல்லின் - மிக்கதவத்தையுடைய அத்துறவிகளது சொல்லினால், உண்டத
னால் - (யான்) புசித்திட்டதனால், தொடர்ந்திடு பாவம் வேரொடும் தொலைய -
என்னை (விடாது) தொடர்ந்துவந்து சூழ்ந்திருந்த (எனது) தீவினை அடியோ
டே ஒழிந்துபோக, உள்ளமும் துலங்கியது - (எனது) மனமும் (கலக்கம் நீங்
கித்) தெளிவடைந்து பரிசுத்தமாய் விளங்கிற்று; (எ - று.)

மாது, ஒ - ஈற்றசைகள். எதி - யதி; வடசொற்றிரிபு. சேடம் - மிச்
சம்; எஞ்சிநின்றது. இருந்து அவர்சொல்லின் உண்டதனால் என்றும்பிரித்து
உரைக்கலாம். இருந்தவர் - அங்குவந்திருந்த அவர்களது என்றுமாம். (௧௦)

௧௧.—(இ - ள்.) சங்கொடு - சங்கத்தையும், திகிரி - சக்கரத்தையும்,
தாங்கிய - தரித்த, நெடு கை - பெரியதிருக்கைகளையும், தாமரை கண்ணினன் -
செந்தாமரைமலர்போலுந்திருக்கண்களையுமுடைய திருமாலினது, சரிதம் -
சரித்திரத்தை, அந்து - அவ்விடத்திலே, அவர் - அத்துறவிகள், அமுதம்
ஊற்று இருந்து ஒழுக - அமிருதம்போன்ற இனிமை ஊற்றெடுத்துப்பெரு
கும்படி, அறைவது - சொல்வதை, கேட்டனன் - (யான்) செவியுற்றேன்; அத
னால் - அக்காரணத்தால், கங்கைசூழ் கமலம்தாளினுக்கு அன்பு கனிந்திட -
கங்காநதியின்தீர்த்தம்பொருந்திய செந்தாமரைமலர்போலுந் திருவடிக
ளையுடைய திருமாலின் விஷயமாகப் பக்திமிக, அறிவொடு பொலிந்தேன் -
(அதுமுதல்) அறிவோடுகூடி விளங்கினேன்; (பின்புயான்), ஈன்றவள் பொ
ங்கு அரா தீண்டி இறப்ப - என்னைப்பெற்றதாய் சீறுகிறதொருபாம்புகடித்த
தனால் இறக்க, பொன்வரைசாரல்வாய்புக்கேன் - பொன்மயமான மகாமே
ருகிரியினது சாரலிலே போய்ச்சேர்ந்தேன்; (எ - று.) (௧௧)

௧௨.—(இ - ள்.) தற்பரம் ஆகி - எல்லாப்பொருள்களினும் மேம்
பட்டபொருளாய், அமலம் ஆய் - குற்றமற்றசொரூபமாய், நின்ற - (என்
றும் ஒருபடி) நிலைநின்ற, தலைவனை - இறைவனான திருமாலை, காண்குதும் -
(யாமபிரதியக்ஷமாய்த்) தரிசிக்கக்கடவேம், என்று - என்றுகருதி, வெற்
பினில் - அந்தமேருமகாமலையிலே, தவம் செய் காலை - (யான்) தவத்தை
இயற்றியிருக்கும்பொழுது, இப்பிறப்பின் விழி எதிர் காண்கிலை என - (நீ) இந்

தச்சன்மத்திலே (எம்பெருமானைக்)கண்ணெதிரிற்காணமாட்டா யென்று, ஓர்சொல் - ஒரு (அசரீரி) வாணி, பெரு விசும்பில் - பெரிய ஆகாயத்திலே, எழுந்தது - தோன்றிற்று; (தோன்றினமாத்திரத்தில்), வினையால் தோன்றும் அ உடலம் வீழ்ந்திடலும் - கருமசம்பந்தத்தால் உண்டாகியுள்ள அந்த உடம்பு (உயிர்நீங்கிக்கீழ்)விழுந்தவளவிலே, கற்பம் ஒன்று ஒழிய கண்படை பொருந்தும்கடிமலரவனிடத்து உற்றேன் - ஒருகற்பகாலங்கழியக் கண்ணை மூடிக்கொண்டு உறங்குதல்செய்கின்ற வாசனையையுடைய தாமரைமலரில் தோன்றிய பிரமதேவனிடம் போய்ச்சேர்ந்தேன்; (எ - று.)

கல்பம் - இங்கே பிரமனதுதினம். தத்பரம் - வடசொல்; ஜீவான்மாவினும் மேம்பட்டதென்று பொருள்; இனி, தன்பரம் எனத் தமிழாப்பிரித்து, தன்னில்தானேஉயர்ந்த தென்றுமாம். (கஉ)

கங.—(இ - ள்.) (பிரமதேவன்), உடைக்கும் - சிதறுகின்ற, வெள் - வெண்மையான, தரங்கம் - அலைகளையுடைய, கரு - கருநிறமான, கடல் - பிரளயசமுத்திரத்தினது, முகட்டில் - மேலிடத்திலே, உறங்கும் - தூங்குகிற, அ உறக்கம் - அந்தத்தூக்கத்தை, விட்டு - நீங்கி, அரும்பு வெடித்த பூ கமலம் மலர் புரை செம் கண் விழித்தனன் - (முன்னே) அரும்பாகியிருந்து முறுக்குவிரிந்து மலர்ந்த அழகிய தாமரைமலரை யொத்த சிவந்த தனது கண்களை விழித்தான்; விழித்து - அங்ஙனங் கண்விழித்தபின், (அப்பிரமன்), நால் மறை நூல் வடித்து உணர் - நான்குவேதங்களையும் மற்றைய சாஸ்திரங்களையும் ஆராய்ந்தறியுந்தன்மையுள்ள, மரீசி அங்கிரா ஆதி - மரீசியும் அங்கிராவும்முதலிய, மா மறைகிழவரை - சிறந்தவேதத்துக்குஉரியபிரமவிருடிகளை, முறையின் படைத்தனன் - முறையே சிருஷ்டித்தான்; படைக்கும் காலையில் - அங்ஙனஞ்சிருஷ்டிக்கும்பொழுதில், யானும் - நானும், பனி மலரவனிடத்து - குளிர்ந்த தாமரைமலரில் தோன்றிய அப்பிரமனிடத்திலே, உதித்தேன் - பிறந்தேன்; (எ - று.) (கங)

கச.—(இ - ள்.) (திருமால்சரித்திரத்தைக் கேட்டபயனால் யான் இங்ஙனம் இழிபிறப்பொழிந்து உயர்பிறப்புற்றேனாதலால்), விளக்கு அழற்கு ஒழியா - தீபத்தினது சுவாலைக்கும் நீங்காத, வெள் மதிக்கு அகலா - வெண்ணிறமான சந்திரனது ஒளிக்கும் ஒழியாத, விரி திரை கரு கடல் முகட்டில் முளைத்து - வீசுகின்ற அலைகளையுடைய கருநிறமான கடலினது மேலிடத்திலே உதித்து, உயர் பசு பொன் வரை வலம் திரியும் - உயர்ச்சியான பசும்பொன்மயமான மகாமேருகிரியைப் பிரதக்ஷிணஞ் செய்கின்ற, மோடு வெம் கதிரவற்கு - பெருமையையுடைய உஷ்ணமான கிரணங்களையுடைய சூரியனது ஒளிக்கும், ஏகா - விலகாத, [புறவிருள்போல முச்சுடர்களின்முன் ஒழிதலில்லாத], உளத்து இருள் - (பிராணிகளது) மனத்திலேயுள்ள அஞ்ஞானமாகிய இருளை, கடியும் - ஒழிக்கின்ற, மாயவன் தொல்நூல் - மாயையுடைய திருமாலின் விஷயமான பழையதொரு நூலை, உரை மதி - (நீ இனிச்)சொல்லுவாயாக; (சொன்னால் உன்மனந்தெளியும்), என்று—, பைந்தேறல் துளக்கு அற ஒழுகி அன்ன - பசுமையான தேன் அசைதலில்லாமல் நேர்பட ஒழுகினாற்போன்ற, பைந்தொடை - குளிர்ச்சியான நரம்புகளையுடைய, யாழ் - (மகதியென்னுஞ் சிறந்த) வீணையையுடைய, தொல் முனி - பழமையான நாரதமுனிவர், சொற்றனன் - (வியாசபகவானுக்குக்) கூறிவிட்டு, அகன்றனன் - நீங்கிச்சென்றார்; (எ - று.)—தொன்னூல் புராணம். (கச)

கரு.—(இ - ள்.) நாரதன் - நாரதமுனிவர், அகல - செல்ல, (உடனே), நால் மறை கிழவன் - நான்குவேதங்களுக்குமுரிய வியாசமுனிவர், நகு மணி சுடிகை நாக அணையான் - விளங்குகின்ற மாணிக்கத்தையுடைய முடியையுடைய ஆதிசேஷனாகிய சயனத்தையுடைய திருமாலினது,பார் பொதி

பசு தாள் தாமரை - இவ்வுலகமுழுவதையும் அளந்து உள்ளடக்கிய திருவ
டிகளாகிய பசிய தாமரைமலர்களை, பரவி - துதித்து, பழ மறை பொருவு
பாகவதம் - அநாதியான வேதங்களை யொத்த பாகவதமென்னும் இப்புரா
ணத்தை, தேன் தொடும் அமுதம் ஊற்று இருந்து ஒழுகு தீம் சொலால் -
பொருளையாராயும்பொழுதெல்லாம் அமுதம்போன்ற இனிமை சுரப்பெடுத்
துப்பெருகும்படியான இனிமையான தமது சொற்களினால், தெள்ளிதின்
புனைந்து - தெளிவாகச்செய்து, ஆய்ந்து ஆர்வமொடு இருந்து - அவ்விடத்தி
லே அன்புடனேயிருந்து, (அப்புராணத்தை), முழுது உணர் சுகன் தன் - எல்
லாமறிந்த சுகமுனிவரது, அம் செவி - அழகிய காதுகளிலே, நிறைத்தனன் -
உபதேசித்து நிறைத்தார்; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

காதலை - காதலையென்பதன் தொகுத்தல் விகாரம். (௧௫)

நாரதர்தோற்றமுரைத்தஅத்தியாயம் முற்றிற்று.

மூன்றவது

தன்மபுத்திரன் அரசியலடைந்த அத்தியாயம்.

(பாண்டவர்ஐவருள் மூத்தவனான) தருமபுத்திரன் அரசாட்சிநிலைமை
யையடைந்த செய்தியைச் சொல்லும் பாகம். தருமபுத்திரன் - தருமத்தை
க்காக்கின்றவனான யமனது குமாரன்; புத்திரன் - தனது தந்தைதாயரைப்
புத் என்னும் நரகத்தினின்று நீக்கிக் காப்பவன்: புத் - பிள்ளையில்லாதவர
டைவதோர் நரகம், த்ரா - காப்பவன்.

௧.—(இ - ள்.) அரு பெறல் - பெறுவதற்கருமையான, காட்சி - தத்
துவஞானமாகிய, எஃகின் - வேலாயுதத்தால், வினை வனம் - கருமங்களா
கிய காடுகளை, எறிந்து சாய்த்த - வெட்டித்தள்ளி வேரோடொழித்த,
வியாத மா முனிவன் - வியாசமகாமுனிவரது, மைந்தன் - குமாரரான சுகமகா
முனிவர், அவை பகு - அப்புராணத்தை, கேட்ட ஆறே - (தமது தந்தையினிடம்)
கேட்டபடியே, பனி மதி கவிகை நிழல் - குளிர்ந்த பூர்ணசந்திரன்போ
ன்ற வெண்கொற்றக்குடையினது நிழலிலே, படு திரை வையம் காக்கும் -
ஒலிக்கின்ற அலைகளையுடைய கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்தைக் காத்த
ருள்கிற, குனி சிலை விசயன் மைந்தன் குமரனுக்கு - வளைந்தவில்லையு
டைய அருச்சுனனது குமாரனான அபிமன்யுவினது புத்திரனாகிய பரீக்ஷி
த்துமகாராசனுக்கு, உரைசெய்தான் - கூறியருளினார்; (எ - று.)

ஆல் - ஈற்றசை. திரை - கடலுக்கு இலக்கணை. (௧)

இதுமுதலாறுகவிகள் ஒருதொடர்.

௨.—(இ - ள்.) என்னலும் - என்று (சூதர்) சொன்னவளவிலே, முனி
வர் - (கேட்டுநின்ற) சௌனகாதிமுனிவர்கள், சொல்வார் - சொல்லுவார்
கள்:—யாதினும் பற்று ஒன்று இன்றி - எப்பொருளினும் ஆசாபாசஞ் சிறிது
மில்லாமல், தன்னையே நோக்கி நின்ற - தனது (ஆத்ம) சொரூபத்தையே பார்
த்திருந்த, தபோதனன் - தவத்தையே செல்வமாகவுடைய அந்தச்சுகமுனி
வனது, தன்மை - இயல்பை, சாற்றின் - கூறத்தொடங்கினால், உன்னிய
ஐயம் கொள்வான் - தான்கருதின பிச்சையைப் பெறும்பொருட்டு, ஓர் பசு
வின் கொள் காலம் - ஒருபசுவின் பாலைக் கறக்கிற அவ்வளவுபொழுது, மனை
கள் தொறும் அவன் அன்றி - வீடுகள்தோறும் தங்குவனேயல்லாமல், தொல்
நகர் மனையில் - பழமையான பட்டணத்திலே யுள்ளதொரு வீட்டிலே, வை
கான் - (அக்காலத்திலன்றி அம்முனிவன்) தங்கமாட்டான்; (எ - று.) (௨)

௩.—(இ - ள்.) மத்தர் போல் - பித்தமயக்கங் கொண்டவர்போல வும், மூகரே போல் - ஊமைகள் போலவும், வனை துகில் இன்றி - உடுக்கு முடையில்லாமல், ஞானம் வித்தகன் - தத்துவஞானத் தேர்ச்சியையுடைய சுகமுனிவன், ஓர் நாள் - ஒருதினத்திலே, சென்றான் - (காட்டுவழியிற்) போய்க்கொண்டிருந்தான்; (அப்பொழுது), வியாத மா முனி - வேதவியாசமகா முனிவனும், பின் செல்ல - பின்னேபோக, அ திசை - அவ்விடத்திலே, அரம்பை மாதர் - ரம்பைமுதலிய தேவமகளிர், அணி துகில் இன்றி - உடுத்த உடையில்லாமல், கூலம் தத்தி வெள் தரளம் சிந்தும் தட நதி - கரைகளை மோதி வெண்மையான முத்துக்களைக் கொழிக்கின்ற பெரியதொரு நதியிலே, ஆடுவார் - நீராடுபவரானார்கள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை. (௩)

௪.—(இ - ள்.) நீடிய நதியில் ஆடும் - பெரிய யாற்றிலே நீராடுகிற, நேர் இழை அரம்பை மாதர் - அழகிய ஆபரணங்களையுடைய தெய்வமகளிர், வீடு அறி சுகனை கண்டும் - முத்திவழியையறிந்தசுகமுனிவனைப் பார்த்தும், மெல் துகில் வனைந்திலார் ஆய் - மென்மையான தமதுஆடையை யெடுத்து உடுத்தலில்லாதவராய், நால் மறைகள் நாடி சொற்ற நல் தவம் வியாதனை கண்டு - நான்குவேதங்களை ஆராய்ந்து கூறின சிறந்த தவத்தையுடைய வியாசனைப் பார்த்தவளவில், நாணி - வெட்கங்கொண்டு, கரை ஓடினார் சென்று உற்றார் - கரையிலோடிப்போய்ச் சேர்ந்து, தானை உடுத்தனர் - ஆடையையுடுத்திக்கொண்டார்கள்; (எ - று.) (௪)

௫.—(இ - ள்.) வரம்பு இலா மறையை - எல்லையில்லாத வேதத்தை, நான்கு ஆய் வகுத்தவன் - (இருக்குமுதலிய) நான்குகூறாக வகுத்திட்ட வியாசமுனிவன், வனப்பு வாய்ந்த அரம்பையர்தம்மை நோக்கி - அழகுமிகுந்த அத்தேவமாதர்களைப் பார்த்து, 'யாழின் நரம்பை வெல் சொல்லீர் - வீணை நரம்பின் இசையை வெல்லுஞ் சொல்லையுடையவர்களே! அரைக்கு ஒரு துகில் இலாதான் - இடையில் ஒரு ஆடை யில்லாதவனும், நிரம்பிய அறிவன் - நிறைந்தஅறிவையுடையவனுமான சுகன், சென்று நீங்கின பின்னர் - போய் நீங்கினபின்பு, நல் துகில் உடுத்தது - (நீங்கள்) நல்ல ஆடையை உடுத்திக்கொண்ட காரணத்தை, சொன்மின் - சொல்லுங்கள்,' என்றான் - என்று சொன்னான்; (எ - று.) (௫)

௬.—(இ - ள்.) ஏடு அலர் கூந்தல் மாதர் - பூவிதழ்கள் மலர்ந்த கூந்தலையுடைய அத்தேவமாதர்கள், இசைத்த அ முனியை நோக்கி - (இங்ஙனங்) கூறின அந்தவியாசமுனிவனைப் பார்த்து, 'பீடு சால் முனிவ - பெருமை மிகுந்த முனிவனே! ஆடவர் இவர்கள் மற்றை அரிவையர் இவர்கள் என்னை நாடுதல் - புருஷர்கள் இவர்கள் அவர்களின் வேறுபட்ட பெண்கள் இவர்கள் என்று பகுத்தறிதல், நினக்கு உண்டு - உனக்கு உண்டு; அது - அந்தப் பேதஞானம், அந்த நல்தவன்தனக்கு இல்லை - சிறந்த தவத்தையுடைய அச்சுகனுக்கோ இல்லை,' என்று பேசினர் அகன்று போனார் - என்று விடை கூறினவர்களாய் நீங்கிப்போனார்கள்; (எ - று.)

உடையில்லாதவனும்இளையவனுமான சுகனது வடிவத்தை அருகிற் கண்டும் தாம் நாணங்கொள்ளாமல் ஆடையெடுத்துஉடுக்காமலிருந்ததற்கும், உடையுள்ளவனும் வயதுமுதிர்ந்தவனுமான வியாசனைச் சேய்மையிற் கண்டமாத்திரத்தில் தாம் நாணங்கொண்டு ஆடையெடுத்து உடுத்ததற்குங் காரணங் கூறியவாறு. (௬)

௭.—(இ - ள்.) இ வண்ணம் - இவ்வாறு, அறிவு தானே இலங்கிய - தத்துவஞானவடிவந் தானேயாய் விளங்கின, சுகன் - சுகமுனிவன், யாண்டு - எவ்விடத்தில், மை வண்ணம் தட கையானை - மேகம்போல (க்கைம் மாறுகருதாது கொடுக்குந்)தன்மையுடைய பெரிய கைகளையுடைய பரீக்ஷி

த்தரசனை, மருவினன் - சேர்ந்து, கண்டு - பார்த்து, சொன்னான்-(இப்புராணத்தைக்) கூறினான்; கை வண்ணம் களிற்றன்-துதிக்கையழகையுடைய யானைச்சேனையையுடைய அவ்வரசன், கேட்டது - (இப்புராணத்தைக்) கேட்டது, என்ன கருதிகொல்-என்ன காரணத்தைப் பற்றியோ? என்றார்-என்று (சௌனகாதியர்) வினவினார்கள்; (இங்ஙனம் வினவின), ஐ வண்ணம் புலன் செற்றோருக்கு - ஐந்துபகுப்பான புலன்களையடக்கிய அம்முனிவர்களுக்கு, அன்பொடு-அன்புடனே, சூதன் - சூதமுனிவர், சொல்லும் - கூறுகின்றார்; (எ - று.)—அதனை மேற்காண்க. ஐம்புலன் - சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பன. (எ)

அ.—(இ - ள்.) 'துன்னு வாள் அரவு தீண்டி-பொருந்தின வாள்போற் கொடியதொரு பாம்பு கடித்து, உயிர் தொலைந்திட-உன்னுயிர் உடம்பைவிட்டு ஒழிவதாக,' என்று—, முன்னம் - முன்னே, ஓர் மறையோன் மைந்தன்-ஒரு முனிகுமாரன், மொழிதரு - சொன்ன, சாபம் - சாபத்தை, மன்னவன்-பரீக்ஷித்தரசன், மேவி - அடைந்து, யாவும் வெறுத்து - எல்லாப்பொருள்களையும் வெறுத்திட்டு, வர நதி கரையில் - சிறந்த யாற்றின கரையிலே, உற்றான் - போய்ச்சேர்ந்தான்; அன்னவன்தன்னை - அவ்வரசனை, அங்கே - அவ்விடத்திலே, அரு தவன் - அருமையான தவத்தையுடைய சுகன், கண்டு-பார்த்து, சொன்னான் - (இப்புராணத்தைக்) கூறினான்; (எ-று.)—தொலைந்திட - அகரவீற்று வியங்கோள். (அ)

கூ.—(இ - ள்.) என்றதும்-என்று (சூதர்) சொன்னவுடனே, மோகம் வென்றவர்-ஆசையை வென்றிட்ட சௌனகாதியர், (சூதரைநோக்கி), 'பரவை சூழ்ந்த இரு நிலம் காக்கும் ஏந்தல் - கடல்சூழ்ந்த பெரிய பூமியைக் காக்கின்ற பரீக்ஷித்தரசன், ஒன்றிய செல்வம் எல்லாம் உடலொடும் வெறுத்தான் - பொருந்தின செல்வமெல்லாவற்றையும் தன்னுடம்புடனே வெறுத்திட்டான், என்றாய் - என்றுகூறினாய்; அவன் செய்தி எல்லாம்-அவ்வரசனது வரலாறு முழுவதையும், நன்று நவிலுதி- நன்றாகக் கூறியருளுவாய்,' என்று கூற-என்றுசொல்ல, சூதன் - சூதமுனிவர், விழு தவர்க்கு-மேலான தவத்தையுடைய அம்முனிவர்களுக்கு, இயம்பல் உற்றான் - கூறத் தொடங்கினார்; (எ - று.)—அதனை மேற்காண்க.

பாவியுள்ளது - பரவை; ஐ - கருத்தாப்பொருள் விகுதி. (கூ)

இதுவும், மேற்கவியும் - குளகம்.

கo.—(இ - ள்.) கரு முகில் குலங்கள் - கருமையான மேகங்களின் கூட்டங்கள், பெய்ய - மழைபெய்தலினால், கடை யுகம் கடல் நீர் - யுகாந்த [பிரளய] காலத்துக் கடல்நீரானது, வான் போய் பெருகுதல் போல - ஆகாயத்தளவுஞ் சென்று பரவுதல்போல, வந்த- திரளாய்வந்த சேனைகள், பெய் முகில் குலங்கள் ஆக - மழைபெய்கின்ற மேகங்களின் கூட்டங்களை யொத்திருக்க, குரு குலத்து அரசர் சேனை குரை கடல் - குருவம்சத்து அரசர்களது சேனைகளாகிய ஒலிக்கின்ற கடல், இகலி - மாறுபட்டு, தம்முள் பொருது - தமக்குள்ளே ஒன்றோடொன்று போர்செய்து, உடைந்து - நிலைகெட்டு, அரச வெள்ளம் பலஅரசர்களது கூட்டம், பொன் உலகு அடைந்த பின்னர் - பொன்மயமான தேவலோகத்தை அடைந்தபின்பு, (எ - று.)—துரியோதனன்விழ என மேற்கவியோடியையும்.

வந்த - பெயர். 'பெய்முகில்' என மெலிக்க பாடமே தகுதி. குரு - சந்திரவம்சத்துப் பிரசித்திபெற்ற ஓரரசன்; அக்குலத்தரசர் - பாண்டவரும், துரியோதனாதியரும. பொன்னுலகு - வீரசுவர்க்கம். போரிற் பின்வாங்காதிறந்தவர் சுவர்க்கமடைவர் என்பது நூன்மரபு. (கo)

கக.—(இ - ள்.) காற்றின் மா மகன் - வாயுவினது சிறந்த குமாரனு கிய வீமசேனனது, கடு கதை புடைப்பினால் - கொடுமையான (சத்ருகா தினியென்னும்) கதாயுதத்தினது அடியினால், கவின் பெறு கவான் அற்று - அழகுபெற்ற தனது தொடைகள் சிதைந்து, சீற்றம் வாள் அரா உயரிய மன்னவன் - கோபத்தையுடைய வாள்பொற்கொடிய பாம்பை யெழுதிய கொடியை உயர எடுத்த துரியோதனராசன், செரு களத்திடை வீழ - யுத்தகளத்திலே (வலிமை முழுவதும் அழிந்து) கீழ் விழுந்திட, (அப்பொழுது), வல் திறல் பரித்தாமா - கொடிய வலிமையையுடைய அசுவத்தாமன், பாறு இனம் சுழல் பரிதி வேல் துருபதன் பாவை பாலகர் ஐவர் - பருந்து களின் கூட்டஞ் சூழ்ந்துநிற்கப்பெற்ற சூரியன்போல் விளங்குகிற வேலாயுதத்தையுடைய துருபதமகாராசனது புத்திரியான திரௌபதியின் குமாரரைந்தபேரையும், மாற்று அரு துயில் புரிவு உழி - விலக்குதற்கருமையான பெருந் தூக்கத்தைச் செய்துகொண்டிருக்கையில், முருக்கினன் - கொன்றுவிட்டான்; (எ - று.)

கவான் - கவீ என்னும் வடமொழித் திரிபு; இது, வேதத்தில் வழங்குவது. உயரிய - இறந்தகாலப் பெயரெச்சம்; இன் - இடைநிலை, ஈறு தொக்கது. பருந்தினம் வேலைச்சூழ்தல், வேல் பகைவரைக் கொன்று அவரிறைச்சியைத் தமக்கு விருந்தளிவித்தலால். பாலகரைவர் - பஞ்சபாண்டவரின் குமாரரான உபபாண்டவ ரைவர்; இவர்களைப் பதினெட்டாம்போர் நாளிரவில் அயர்ந்து தூங்குகையில் அசுவத்தாமன் பாண்டவர்களென்று மயங்கிக் கொன்றிட்டான். முருக்கு - முருங்கு என்பதன் பிறவினை; முருங்குதல் - அழிதல். அசுவத்தாமன் - குதிரையினிடம்பிறந்தவன். (கக)

கஉ.—(இ - ள்.) மஞ்சர் மாய்தலும் - தனது குமாரர்கள் இறந்த வளவிலே, மஞ்சு அகம் கீண்டு எழும் மலர் கதிர் தடித்து அன்ன அம் சொல் ஆய் இழை - மேகத்தினிடத்தைப் பிளந்து தோன்றுகிற விளங்குகிற ஒளியையுடைய மின்னலைப்போல விளங்குகிற அழகிய சொற்களையுடைய ஆராய்ந்தெடுத்தணிந்த ஆபரணங்களையுடைய திரௌபதி, அழுதலும் - புலம்பின வளவிலே, செம் சிலை தழும்பு இருந்த தோள் தனஞ்சயன் - அழகிய (காண்டீவமென்னும்) வில்லினது தழும்பு பொருந்தின தோள்களையுடைய அருச்சுனன், (திரௌபதியை நோக்கி), 'அழற்க - (நீ) அழாமலிருப்பாயாக; பின் அரு பெறல் மகார் ஆவி துஞ்ச வாள் உறை கழித்தவன் கருதலை யான் திணிக்குவன் - உனது பெறுதற்கருமையான புத்திரர்களது உயிர் (உடம்பை விட்டு) ஒழியும்படி (தனது) வாளாயுதத்தை உறையை நீக்கி யெடுத்தவனான அசுவத்தாமனது வலிய தலையை யான் அறுத்துவிடுவேன்,' என்னு - என்றுகூறி, தேர் இவர்ந்தனன் சென்றான் - தேர்மேலேறிப் போனான்; (எ - று.)

மஞ்சர் - மைந்தர் என்பதன் போலி. தடித் - வடசொல். ஆயிழை - வினைத்தொகை யன்மொழி. அழற்க - எதிர்மறை வியங்கோள். துஞ்சல் - தூங்குதல்; இறத்தலைத் துஞ்சலென்பது, மங்கலவழக்கு. சிலைத்தழும்பு - வில்லைத் தரித்தலினா லான வடு. தனஞ்சயன் - (இராசசூயயாகத்தின்பொருட்டு வடக்கிற் சென்று பகைவரை) வென்று பொருள்கொணர்ந்தவன்; அல்லது, வெற்றியையே செல்வமாகக் கொண்டவன். (கஉ)

கந.—(இ - ள்.) கண்ணன்தன்னொடு - ஸ்ரீகிருஷ்ணபகவானுடனே, கன் கடை சிவந்தனன் சனன்று எழு - (கோபத்தால்) கடைக்கண்கள் சிவந்து புறப்பட்டுவருகிற, காண்டீவம் வண்ணம் வார் சிலை - காண்டீவமென்னும் அழகிய நீண்ட வில்லையுடைய, வெம் சினம் மடங்கல் போல்வான் - கொடுங் கோபத்தையுடைய சிங்கம்போல்பவனாகிய, தனஞ்சயன் - அருச்சுனனை,

நோக்கி - பார்த்து, அண்ணல் வாம் பரி விரவிய பெயரினன் - பெருமையையுடைய தாவுகிற குதிரையின் பெயர் பொருந்தின அசுவத்தாமனென்னும் பெயரையுடையவன், அஞ்சினன் அகன்று ஓடி - பயந்து (முன்னே அவன் முன் நிற்காமல்) நீங்கி ஓடிப்போய், (பின்பு), தண் அம் தாமரை தவிசு உறை தனி முதல் தழல் படை தொடுத்து எய்தான் - குளிர்ச்சியான அழகிய தாமரைமலராகிய ஆசனத்திலே தங்குகின்ற ஒப்பற்ற முதற்கடவுளான பிரமதேவனது நெருப்புப்போற்கொடிய அஸ்திரத்தைச் சந்தானஞ் செய்து அம்பெய்தான். (எ - று.)

அண்ணல்-வடமொழிச்சிதைவு. தனிமுதல்-முத்தொழிலுள் முதலதான படைப்புத்தொழில் செய்யும் முதல்மூர்த்தி. தனிமுதல்படை-பிரமாஸ்திரம்.

இக்கவியும், மேற்கவியும் - ஒருதொடர்.

கஎ.—(இ - ள்.) அது - அப்பிரமாஸ்திரமானது, எழொடு ஏழ் உலகங்களும் எரிதர - கீழேழுலோகங்களுடன் மேலேழுலோகங்களும் எரியும்படி, எறி திரை கடல் மேய்ந்த ஊழி ஆர் அழல் கடுப்ப - வீசுகிற அலைகளையுடைய கடலின் நீரை உறிஞ்சுந்தன்மையுள்ள அழித்தற்கருமையான யுகாந்தகாலத்து அக்கினியை ஒக்கும்படி, வெம் கனல் திரள் உமிழ்ந்து - கொடுமையான நெருப்புக்கூட்டத்தைச் சொரிந்துகொண்டு, வரலோடும் - வந்தவளவிலே, ஆழியான் முகம் நோக்கினன் - (அருச்சுனன்) சக்கரபாணியான கண்ணபிரானது திருமுகத்தைப் பார்த்தான்; (பார்த்தவளவிலே அவன் அருச்சுனனை நோக்கி), 'வரி மிடறு - இசைப்பாட்டையுடைய கண்டத்தையும், அம் சிறை - அழகிய சிறகுகளையு முடைய, அளி கோடி - வண்டுகளின் கூட்டம், குழும் - சூழ்ந்துமொய்க்கப்பெற்ற, தண் துணர் சோலை - குளிர்ந்த பூங்கொத்துக்களையுடைய காண்டவமென்னும் வனத்தை, வெம் தீ உண - கொடிய நெருப்பு உண்ணும்படி, தொடு சிலை வலாய் - (அம்பு) தொடுத்தற்குரிய வில்லை வளைத்தவனே! கேள் - (யான்சொல்லும் இதனைக்) கேட்பாயாக; (எ - று.)

கிருஷ்ணனும் அருச்சுனனும் ஒருநாள் பூம்பந்திட்டு விளையாடச் செய்தே, அக்கினிபகவான் மிகப் பசித்து வந்து, இந்திரனது காவற்காடாய் யாவர்க்கும் அழிக்கவொண்ணாதபடியாய் இவ்வுலகத்திலிருக்கின்ற காண்டவவனமென்னும் பூந்தோப்பை அதிலுள்ள சராசரங்களுடனே எனக்கு விருந்திடவேண்டும் என்று வேண்ட, கிருஷ்ணார்ச்சுனர்கள் அங்கே வந்து ஒதுங்கியிருக்கிற அசுரர் முதலிய துஷ்டர்களை அழித்தருளவேண்டுமென்னும் நோக்கத்தால் நீ அதனைப் புசியென்று இசைந்து அளிக்க, உடனே நெருப்பு பற்றி யெரிந்த தென்பது கதை; அவ்வனமெரிக்கையில் அவ்வனத்திலிருந்த வேடர் முதலிய பிராணிகளெவற்றையும் வெளியிற் செல்லவொட்டாதபடி அருச்சுனன் அக்கினிதேவனிடத்து அப்பொழுதுபெற்ற காண்டீவவில்லை வளைத்து அம்புதொடுத்து அடித்துத்தள்ளிவந்ததனால், 'சோலை வெந்தீயுணத் தொடுசிலை வலாத்தோய்' என்றது. (கசு)

கடு —(இ - ள்.) பரித்தாமா - அசுவத்தாமன், பாட்டு வண்டு இமிர் மலர் நான் படை இசைவிட்டனன் - பாட்டையுடைய வண்டுகள் ஒலித்தற்கிடமான தாமரைமலரைத் தங்குமிடமாகவுடைய பிரமதேவனது அஸ்திரமாகிய இதனைத் தொடுத்துவிட்டான்; அவன் ஆங்கு மீட்டல் அறிகலன் - அவன் அந்தஅஸ்திரத்தை மீட்கும்விதத்தை அறிந்தவனல்லன்; நீயும் அ விறல் படை தொடுக - வெற்றியைத்தருகிற அப்பிரமாஸ்திரத்தையே நீயுந் தொடுப்பாயாக,' என்று - என்று, சூட்டு அரா அணை துயில் ஒழி பரம்பொருள் - உச்சிக்கொண்டையையுடைய ஆதிசேஷனாகிய சயனத்தில் யோகநித்திரைசெய்தருளுதலை யொழிந்து கண்ணனாய்த் திருவவதரித்த

பரமாத்மா, துவர் இதழ் மலர் விள்ள - சிவந்த தனது திருவாய்மலரைத் திறந்து கூற, (அருச்சுனன்), சிலை கோட்டினான் - வில்லை வளைத்து, அயன் படை தொட்டனன் - பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்தான்; (அதனால்), நிலம் குலைந்தது - பூலோகம் நடுங்கிற்று; (எ - று.)—மாது, ஓ - ஈற்றசை. அயன்-அஜன்; திருமாலிடத்துத்தோன்றியவன்; அல்லது, பிறப்பில்லாதவன்.

கசு.—(இ - ள்.) தொட்ட வெம் கணை - (அருச்சுனனால்) தொடுக்கப்பட்ட பயங்கரமான அப்பிரமாஸ்திரமானது, ஊழியின் உலகு எலாம் சுட்ட வெம் கதிரே போல் - உகாந்தகாலத்திலே எல்லாவுலகங்களையும் எரித்திடுகிற பயங்கரமான சூரியன் போல (எரித்துக்கொண்டு), முட்டி நின்று - நெருங்கிநின்று, எதிர் படையொடு பொர - எதிரிற்பொருந்தின (அசுவத்தாமனது) பிரமாஸ்திரத்துடனே போர்செய்ய, (அதனால்), வெளி முகடு தீந்தது - அண்டகோளத்தின் மேல்முகடு தீந்துவிட்டதை, காணா - பார்த்து, ஆயிரம் கண்ணினான் தரு காளை - ஆயிரங்கண்களையுடைய தேவேந்திரன் பெற்ற புத்திரனான அருச்சுனன், விட்டு இலங்கிய அயன் படை இரண்டையும் மீட்டனன் - (அக்கினிச்சுவாலையை) வெளிவிட்டு விளங்கின அப்பிரமாஸ்திர மிரண்டையும் மீட்டிட்டு, விரைந்து எய்தி - துரிதமாக அருகிற் சென்று, மறை காளையை - வேதம் வல்ல அசுவத்தாமனாகிய வீரனை, கட்டினான் - பிடித்துக்கட்டிவிட்டான்; (எ - று.)

அஸ்திரத்தைத் தொடுத்தல் உடஸந்தாநம் என்றும், மீட்டல் உபஸம்ஹாரம் என்றும் வடமொழியிற் கூறப்படும். கட்டுதல் - அவன்வசமின்றித் தன்வசப்படுத்தல். (கசு)

கஎ.—(இ - ள்.) அரவம் - ஒலியையுடைய, வெள் - வெண்மையான, திரை - அலைகளை யுடைய, பால் கடல் - திருப்பாற் கடலினது, முகட்டிடையில் - மேலிடத்திலே, அம்புயம் விழி துஞ்சும் - செந்தாமரைமலர்போன்ற திருக்கண்கள் அறிதுயில்கொள்ளுகின்ற, கருணை மா கடல் - அருள்நிரம்பின பெரிய கடல்போன்ற கண்ணபிரான், தனஞ்சயன் கருத்தினை தெரிகிற்பான் - அருச்சுனனது உள்ளக்கருத்தை அறியும்பொருட்டு, 'உருவம் - அழகியவடிவத்தையுடைய, பூண் அணி - ஆபரணங்களையணிந்த, உயிர் புரை - உயிரை யொத்த [மிகஅன்புக்கிடமான], காதலர் - (உங்கள்) மக்கள், உறங்கு உழி - உறங்குகிற பொழுது, உயிர் மாய்த்த - (அவர்களை) உயிரை யொழித்த [கொன்ற], குருதி வாள் படை குரிசிலை - இரத்தந் தோய்ந்த வாளாயுதத்தையுடைய அசுவத்தாமனாகிய வீரனை, கொல்லுதி கொல்லுதி - [பழிக்குப் பழிவாங்கும்பொருட்டுக்] கொன்றிடுவாய் கொன்றிடுவாய்,' என - என்று, பல் கால் கூறினன் - பலதரஞ் சொன்னான்; (எ-று.)

அரவம்- ரவம்: வடசொல்; அரா என்பதன் திரிபெனக் கொண்டு, ஆதிசேஷசயனத்தோடு கூடிய என்று முரைக்கலாம். அம்புயம் - அம்புஜம்; நீரிற் பிறப்பது. கொல்லுதி - விரைவும் வெகுளியும் பற்றியது. (கஎ)

கஅ.—(இ - ள்.) 'ஆட்டு வண்டு இமிர் தாரினாய் - அசைதலையுடைய வண்டுகளொலித்தற்கிடமான பூமாலையையுடையவனே! மத்தரை - பித்துப்பிடித்தவர்களையும், அஞ்சினர் அடைந்தோரை - பயந்து சரணமடைந்தவர்களையும், கோட்டின புரி கொடிஞ்சி அம் தேரொடு கொல் படை இழந்தோரை - வட்டமாகச் செய்யப்பட்ட கொடிஞ்சி யென்னு முறுப்போடு கூடிய அழகிய தேர் முதலிய வாகனத்தையும் (பகைவரைக்) கொல்லவல்ல ஆயுதத்தையும் இழந்தவர்களையும், தோட்ட பூ குழல் மகளிரை - இதழ்களையுடைய மலர்களைச் சூடின கூந்தலையுடைய பெண்களையும், மழவரை - இளம்பிள்ளைகளையும், துயில் புரிகுநர் தம்மை - தூங்குகிறவர்களையும், வீட்டினோர் தமை - கொன்ற கொடும்பாவியரை, வீட்டல் - கொல்லுதல்,

நல் அறன் - சிறந்த தருமமாகும் [கொலைப் பாவமாகாது],' என - என்று, விரித்தனன் உரைசெய்தான் - (கண்ணன் அருச்சுனனைநோக்கி) விவரித்துக்கூறினான்; (எ - று.)

அசுவத்தாமன் அந்தணனாதலால் இவனைக் கொன்றாற் பிரமகத்தி தோஷம்வருமென்று கருதாதே; பிதாமுதலாக இளம்பிள்ளைகளும் தூங்குகின்றவர்களுமாக இவர்களைக் கொன்றிட்டவரைக் கொல்வது சிறந்த புண்ணியமேயாகுமாதலால், உங்கள் குமாரரைத் தூங்குகையிற் கொன்ற இவ் வசுவத்தாமனை நீ கொல்வது மிகத்தகுதியேயென்று கூறினனென்க. கொடிஞ்சி - தேர்மொட்டு. தோட்ட - தோடு என்னும் பெயரினடியாப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். (க௮)

க௯.—(இ - ள்.) அரவு அணை துயில் - ஆதிசேஷ சயனத்திலே பள்ளிகொண்டருளுகிற, அஞ்சனம் புயல் அனான் - மைபோற் கரிய காளமேகத்தைப் போன்ற கண்ணபிரான், அங்ஙனம் எடுத்து ஓத - அவ்வாறு எடுத்துச் சொல்ல, (கேட்டு அருச்சுனன் அசுவத்தாமனை), விரைவின் கொண்டு போய் - துரிதமாக அழைத்துக்கொண்டு சென்று, துருபதன் மகள் முனம் - துருபதராசனது குமாரியான திரௌபதியின் எதிரிலே, விடுத்தனன் - விட்டான்; அவள் காண - அத்திரௌபதி (அவனைப்) பார்த்து, 'ஒருவன் அந்தணன் - (இவன்) ஒருபிராமணன்; உனக்கு வில் தொழில் புவி வியப்பு உற உணர்த்திட்ட குரவன் காதலன் - உனக்கு வில்வித்தையை நிலவுலகத்தார் (யாவரும் கண்டு) ஆச்சரியப்படும்படி அறிவித்த துரோணாசாரியனது குமாரன்; கொல்லல் நீ - (ஆதலால் இவனை) நீ கொல்லாதே, விடுக - விட்டுவிடுவாயாக,' என - என்று, குயில் என கரைந்தாள் - குயில் கூவுதல் போல (இயற்கையான இனிய குரலாற்) கூறினாள்; (எ - று.)

குரவன் - குருவென்னும் வடசொல்லினடியாப் பிறந்தது. (க௯)

௨௦.—(இ - ள்.) 'இன் எழில் புதல்வனுக்கு - இனிமையான வளர்ச்சியையுடைய தனது புத்திரனுக்கு, இறப்பு வந்ததே - மரணம் வந்துவிட்டதே, என்று—, இவன்தனை ஈன்ற நறை கரு குழல் நங்கையும் - இவனைப் பெற்ற நறுமணத்தையுடைய கருநிறமான கூந்தலையுடைய பெண்ணும், பொருமுதல் - விசனப்படுதல், நன்றுகொல் - நல்லதோ? [அன்று],' என - என்று, தாழ்ந்து - மனமிரங்கி, மறு தவிர்ந்து ஒளிர் மதி புரை திரு நுதல் மடம் கிளி மொழி - களங்கமில்லாது விளங்குகின்றதொரு சந்திரனைப் போன்ற அழகிய நெற்றியையுடைய இளமையான கிளியின் மொழி போன்ற இன்சொற்களை யுடைய திரௌபதி, கூற - சொல்ல, அறத்தின் மாமகன் முதலவர் - சிறந்த தருமபுத்திரன் முதலான பாண்டவர்கள், உவந்தனர் - (அவ்வார்த்தையைக் கேட்டு உடன்பட்டு) மகிழ்ந்தார்கள்; படையினான் - ஆயுதவலிமையையுடைய வீமசேனன்மாத்திரம், அழன்றனன் - (அதற்கு மகிழாமல்) கோபங்கொண்டான்; (எ - று.)

இவனை யீன்ற நங்கை - துரோணாசாரியர் மனைவி; கிருபியென்னும் பெயரினை யுடையாள். வந்ததே, ஏ - இரக்கம். நன்றுகொல், கொல் - வினாவகையால் எதிர்மறைப்பொருள் தந்தது. மறுத் தவிர்ந்தொளிர் மதி - இல்பொருளுவமை. கிளி மொழி - அன்மொழி. எனக் கூற வென இயையும். நங்கையும் என்ற உம்மை - தனைப்போல என்னும் பொருள்தரு தலால், இறந்தது தழுவிய எச்சம். (௨௦)

௨க.—(இ - ள்.) அரிவை சொன்னதும் - திரௌபதி சொன்ன வார்த்தையையும், அரசர்தம் உள்ளமும் - பாண்டவராசர்களது மனக்கருத்தையும், ஆழியான் - சக்கரபாணியான திருமால், அறிந்து—, 'மறையவர் - பிராமணர், பெரிய வெம்பிழை செய்திடின் - பெரிய கொடிய குற்றத்தைச் செய்திட்

டால், பிடித்து - (அவர்களைப்) பிடித்து, அரு சிகை போக்கி - அருமையான குடுமியை யொழித்திட்டு, உரிய செல்வம் ஆம் இரு நிதி முதலிய ஒழித்து - அவர்களுக்குரிய பொருளாகிய மிகுந்த செல்வ முதலியவற்றை (அவர்களை விட்டு) ஒழியச்செய்து, உறைதரும் ஊர் விட்டு இரிய - (பழைமையாக) வசிக்கின்ற பதியை விட்டு ஓடிப்போம்படி, அவர் துரத்துதலே - அவர்களைத் துரத்திவிடுவதே, அவர்க்கு இரு கொலை - அவ்வந்தணர்க்குப் பெரிய கொலைத்தண்டனையோ டொக்கும்,' என சொன்னான் - என்று கூறினான்; (எ - று.)—மற்று - அசை. (௨௧)

௨௨.—(இ - ள்.) மல் - (தன்னைக் கொல்லும்படி கம்சனாலேவி யனுப்பப்பட்ட) மல்லர்களை, அலைத்த - அழியச்செய்த, தோள் - திருத்தோள் வலிமையை யுடைய, மாயவன் - கண்ணபிரான், உரைத்ததும் - கூறின வார்த்தையும், மஞ்சரை கொன்றானை கொல்வல் என்று - தமது மக்களைக் கொன்றவனான அசுவத்தாமனை (யான்) கொல்வேனென்று, தான் உரைத்ததும் - தான் கூறின சபதமும், பிழைப்பு அற - தவறுதலில்லையாம்படி, கோது இல் சீர் குரு நாடன் - குற்றமில்லாத சிறப்புடைய குருநாட்டை யுடைய அருச்சுனன், பல் படை தொழில் விதியினில் பயிற்றிய பார்ப்பனன் சிறுவன்தன் - அநேகம் ஆயுதத் தொழில்களைச் சாஸ்திர முறைமைப்படி தனக்குப் பழக்கிக்கொடுத்த அந்தணரான துரோணரது குமாரனான அசுவத்தாமனது, இரு சிகை - பெரிய தலைமயிர்முடியை, ஈர்ந்து - அறுத்து, எல் இலங்கிய சிகா மணி - ஒளிவிளங்குகிற அவன்முடியிடத்தி லுள்ளதொரு இரத்தினத்தை, கொண்டனன் - எடுத்துக்கொண்டான்; (எ - று.)—மன், ஓ - ஈற்றசை.

மல் - ஆயுதமின்றிக் கை கால் முதலிய உறுப்புக்களாற் போர் செய்யுந் தன்மை; இது - அத்தொழிலையுடைய மல்லர்க்கு இங்கே பண்பாகுபெயர்.()

௨௩.—(இ - ள்.) பதுமை சேர்தரு மாயவன்தன்னொடு - திருமகள் (மார்பில்) வீற்றிருக்கப் பெற்ற திருமாலின் திருவவதாரமான கண்ணபிரானுடனே, பாண்டவர் முதலாயோர் - பாண்டு புத்திரரைவரும் அவர்கள் முதலாகப் போரி லிறவாமல் மிகுந்தவர் சிலரும், கதிர் செய் மா மதி கவின் பெறு திரு முகம் கரு குழல் பாஞ்சாலி புதல்வர் ஆதி ஆய் - ஒளியை வீசுகின்ற பெரிய பூர்ணசந்திரனது தன்மையைப் பெற்ற அழகிய முகத்தையும் கருமையான கூந்தலையு முடைய திரௌபதியினது குமாரரான உபபாண்டவர் முதலாக, பொரு களத்திடை உயிர் பொன்றினர்தமக்கு எல்லாம் - போர்செய்கின்ற யுத்தகளத்திலே உயிரொழிந்தவரெல்லோர்க்கும், விதியின் ஈமம் நல் வினை புரிந்து - சாஸ்திரவிதிப்படி மயானத்திற் செய்தற்குரிய நல்ல அந்திமக்கிரியைகளைச் செய்து, உதகம் நீர் வினை முடித்தனர் - சிறந்த ஜலதருப்பணக்கிரியைகளைச் செய்துமுடித்தார்கள்; (எ - று.)

பதுமை - பத்மா என்னும் வடமொழித் திரிபு; தாமரை மலரில் வாழ்பவளென்றுபொருள். பாண்டுவின் மக்கள், பாண்டவர்; பாஞ்சாலதேசத்தரசன்மகள், பாஞ்சாலி: இரண்டும் - தத்திதாந்தநாமம். (௨௩)

௨௪.—(இ - ள்.) (பின்பு), மலர்ந்த செம் கதிர் மா மணி இழந்தவன் - விளங்குகிற சிவந்த ஒளியையுடைய பெரிய சிகாரத்தினத்தை யிழந்தவனான அசுவத்தாமன், மலர் விழி சிவப்பு ஊற - தாமரைமலர்போன்ற தனது கண்கள் கோபத்தாற் செந்நிறமடைய, அலர்ந்த தாமரை பொகுட்டு உறை அயன் படை - மலர்ந்த தாமரைமலரின் கொட்டையிலே தங்குகிற பிரமதேவனது அஸ்திரத்தை, அபாண்டவம் என தூண்ட - (உலகத்திற்) பாண்டுகுலமில்லாமற் செய்திடக்கடவதென்று சொல்லி (மீண்டும்) பிரயோகிக்க, (அவ்வஸ்திரம்), உலம் கலந்த தோள் ஐவர்தம் உயிர் பிழிந்து உண்ண வந்து

உதல்-திரண்டகற்றூணை யொத்ததோள்களையுடையபாண்டவர்களது உயிரை எடுத்து உட்கொள்ளும்பொருட்டு(நெருங்கி) வந்துசேர்ந்துவிட்டதை,பாரா-பார்த்து, மறை முதல்-வேதங்களிற் கூறப்பட்ட முதற்பரம்பொருளான கண்ணபிரான், இலங்கும் ஆழியை நோக்கினன்- பிரகாசிக்கிற தனது சக்கராயுதத்தை (அந்த அஸ்திரத்தைத் தடுத்துப் பாண்டவர்களைக் காத்திடும் பொருட்டு) குறிப்பாற் பார்த்தருளினான்; (அம்மாத்திரத்திலே)அப் படை-அந்த அபாண்டவப் பிரமாஸ்திரம், இரிந்தது-(பாண்டவர்களைவிட்டு)அப்பாற்சென்றது; (எ - று.)—மாதோ - ஈற்றசை; மூன்கவியிலுமிது. (உச)

உரு.—(இ - ள்.) அளி - வண்டுகள், வளைத்து-சுற்றிக்கொண்டு, மருதேனை, கூட்டுண - கொள்ளைகொண்டுண்ணும்படி, மலர்ந்த—, தண் - குளிர்ச்சியான, மறை மலர் - தாமரை மலரிலே வாழ்கின்ற, அயன் - பிரமதேவனது, வாளி - அந்த அபாண்டவாஸ்திரமானது, அரவு இனத்திட வெகுளி மீக்கொண்டு அழன்று - நாகப்பாம்பும் இளைப்படையும்படி அதனினுமதிகமாகக் கோபத்தைக் கொண்டு சீறி, கனன்று-சுவலித்து, வெம் புகையொடு கனல் திரள் உமிழ்ந்து - வெவ்வியபுகையையும் நெருப்புக்கூட்டத்தையும் வெளிச்சொரிந்து, அன்றே - அப்பொழுதே, அம்புயம் மலர் ஓடசெரு விளைத்து வேல் பொரு விழி உத்தரை திருவயிறு அகம் சேர்ந்த கருவளைத்தது-தாமரைமலர் தனக்கு(ஒப்பாகாமல்)தோற்றோடும்படி(அதனோடு) போரைச் செய்து வேலாயுதத்தோடும் போர்செய்கிற கண்களையுடைய உத்தரையினது அழகிய வயிற்றினிடத்துச் சேர்ந்த கருப்பத்தைச் சூழ்ந்து கொண்டது; (எ - று.)

மறை - முதற்குறைவிகாரம். வளைத்தது என்பதை வினைமுற்றெச்சமாக்கி, சூழ்ந்ததாய் என்று உரைத்து, உமிழ்ந்தன்று என்பதற்கு - ஒருசொல்லாய், சொரிந்ததென்றும் பொருளுரைக்கலாம். உத்தரை- விராடராசன்மகள்; அபிமன்னியுவின்மனைவி. (உரு)

உசு.—(இ - ள்.) தீ திகழ்ந்து ஒளிர் - நெருப்புவடிவமாய் மிக விளங்குகிற, சினம் படை - கோபத்தையுடைய அந்த அஸ்திரமானது, கருவின சேர்தலும் - தனது கருப்பத்தை அடைந்த மாத்திரத்திலே, (உத்தரை), தெருமந்தாள் - மனக்கலக்க மடைந்தவளாய், பார்த்தன் தேர் விடு பாகனை அடைந்தனள் - அருச்சுனனது தேரைச் செலுத்துகிற சிறந்த கண்ணபிரானைச் சரணமடைந்தவளாய், பங்கயம் நறு போது பூத்த காவி அம் தன்ன விழி நீர் ததும்ப - வாசனைவீசுகிறதொரு தாமரைமலரினிடத்தே மலர்ந்த அழகிய இரண்டுநீலோத்பலமலர் போன்றதனது கண்களில் நீர்வழியப்பெற்று, போற்றுவாய் என - தனது கருவைக் காத்தருளுவாயென்று (கண்ணபிரானை நோக்கிப்) பிரார்த்தித்து, மாழ்க - வருந்த, அருள் சுரந்து அலை எறி கமல லோசனன் - கருணை வெள்ளம் பொழிந்து அலைவீசுதற் கிடமான தாமரைமலர்போன்ற கண்களையுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான்,காத்து அளித்தனன் - (அக்கருவையுங்) காத்தருளினான்; (எ - று.)

கரு - கர்ப்பம் என்னும் வடமொழித் திரிபு. தெருமந்தாள், தெருமா - பகுதி. பார்த்தன் - பிருதையின் மகன்; தத்திதாந்த நாமம்: பிருதை - குந்தி. பார்த்தன் என்பது, அருச்சுனனுக்குக் காரண இடுகுறிப் பெயர். பங்கயம் - பங்கஜம்; சேற்றிற் பிறப்பது. தாமரை - முகத்துக்கும், காவி-கண்களுக்கும் உவமை. திகழ்ந்தொளிர்-ஒருபொருட்பன்மொழி.(உசு)

உஎ.—(இ - ள்.) 'கட்பொடு பகை இலாதாய் - (சிலரிடத்துச்) சிநேகமும் (சிலரிடத்து) விரோதமும் இல்லாதவனே! எழில் அகிழ் கமலம் கண்ண - நிகழ் விரிந்த தாமரைமலர் போன்ற கண்களை யுடையவனே! (நீ), ஆடு எழு அனைய திண் தோள் ஐவரை புரந்த வண்ணம் - அசையுந்தன்மை

யுள்ள இருப்புத்தூண் போன்ற வலிமையான தோள்களையுடைய பாண்டவர்களைக் காத்தருளின விதம், நான் நாடி உரைக்க வற்றே· யான் ஆராய்ந்து அறிந்து கூறவல்லனோ? [அன்றென்றபடி],' என்று-என்று கூறி, இரும்பனை கை வேழம் கோடு அடி அகழ்ந்திட்டானை - பெரிய பனைமரம்போன்ற துதிக்கையையுடைய (குவலயாபீட மென்னும்) யானையினது தந்தங்களை வேரோடு பறித்திட்ட கண்ணபிரானை, குந்தி அங்கு ஏத்தினாள் - குந்திதேவி அப்பொழுது துதித்தாள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

ஐவர் - ஐந்தும்பெயர்; இங்கே, பஞ்சபாண்டவர்க்குத் தொகைக்குறிப்பு. வற்று - வல் என்னும் பண்டடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று. ஓ - எதிர்மறை. சீவகசிந்தாமணியில் "பகைநண்பொடில்லான்" என்றவிடத்து 'இறைவன் அன்பிலனாயினும் அருஞ் சுரத்தின் மரம்போல் அடைந்தார்க்கு அளித்தல் அவற்கு இயல்பு' என்ற நச்சினார்க்கினியருரையை இங்கே 'நட்பொடுபகையிலாதாய்' என்றவிடத்து அறிக. குவலயாபீடமென்னும் யானை, கம்சனாற் கிருஷ்ணனைக் கொல்லும்படி ஏவப்பட்டது. (உஎ)

உஅ.—(இ - ள்.) (பின்பு), நளி இள பிறை பல் பேழ் வாய் நஞ்சு அரா அணையான் - பெரிய இளமையான பிறைச்சந்திரன் போல (வெண்ணிறமாய்வளைந்த)பற்களையும் திறந்த வாயையும் விஷத்தையு முடைய ஆதிசேஷனைச் சயனமாக வுடைய கண்ணபிரான், தளை அவிழ் அலங்கல் மாலை தண் குடை தருமனோடு - முறுக்குவிரிந்து மலர்ந்த அசையுந்தன்மையுள்ள பூமாலையையும் குளிர்ச்சியான வெண்கொற்றக்குடையையு முடைய தருமபுத்திரனும், தெளிவு உடை முனிவர் - தெளிவான தத்துவ ஞானத்தை யுடைய முனிவர்களும், நண்ண - உடன்வர, தெரி கணை அணையின் மீது ஆ கிளர் புகழ் கங்கை மைந்தன் கிடந்த உழி - ஆராய்ந்தெடுத்தஎய்யத்தக்க அம்புகளாகிய படுக்கையின்மேலே விளங்குகிற கீர்த்தியையுடைய கங்கையின் குமாரரான வீட்டுமர் பள்ளிகொண்டிருக்கிற இடத்தில், இனிது சென்றான் - இனிமையாகப் போய்ச்சேர்ந்தான்; (எ-று.)—மன்னோ-ஈற்றசை·

கணையணை - சரதல்பம். கிடந்துழி - பெயரெச்சவீறு தொகுத்தல். முத்திபெறுமாறு உயிர்விடும்பொருட்டு உத்தராயணவருகையைநோக்கிக் காத்து உயிர்த்திருந்தனர் வீட்டுமரென்க. (உஅ)

உகூ.—(இ - ள்.) கடம் பொழி - மதசலத்தைச் சொரிகிற, களிறு - கஜேந்திராழ்வானை, காத்த - காத்தருளின, கருணை அம் கமலம் செம் கண் - அருள்நோக்கத்தையுடைய அழகியசெந்தாமரைமலர்போன்ற சிவந்தகண்களையுடைய, தட சிறை கலுழன் பாகன் - பெரிய இறகுகளையுடைய கருடனை வாகனமாகக் கொண்டு ஏறி நடத்தும் பாகனான கண்ணபிரான், தலைவரும் - முன்னே வருகிற, தோற்றம்-காட்சியை, நோக்கி - பார்த்து, விடம் பொழி தழல் வாய் வாளி வெவ் அணை கிடந்த வீரன் - விஷத்தைக் கக்குகின்ற நெருப்புப்போற்கொடிய நுனியையுடைய அம்புகளாகிய கொடிய சயனத்திலே படுத்துக்கொண்டுள்ள வீரரான வீட்டுமர், உடம்பு எலாம் குளிர்ந்து - (ஸ்ரீகிருஷ்ணதரிசனத்தாலாகிய ஆனந்தத்தால்) (தமது உடம்பு முழுவதுங் குளிர்ச்சிபெற்று, செம் தேன் ஊற - சிவந்த தேன்போன்ற இனிமை மிகும்படி, வாய் விண்டு கூறும் - தமது வாயைத்திறந்து (சில வார்த்தை) சொல்பவரானார்; (எ - று.)—மேல் ஒன்பது கவிகளிற் காண்க.

கடம்-வடசொல்; யானைக் கன்னத்தின் பெயர், அதனினின்று வழியும் மதநீருக்கு ஆகுபெயர். கலுழன் - கருடன்; வடசொற்சிதைவு. (உகூ)

௩௰.—(இ - ள்.) 'எழில் படை எடுக்கிலேன்' என்று இசைந்த நின் மொழி விட்டு - அழகிய ஆயுதத்தை(ப் போரில் நான்) எடுக்கிறேனில்லை யென்று(துரியோதனனுக்குச்)சொன்ன உனது சபதவார்த்தையை யொழிந்து,

உன்னை விழு படை எடுப்பித்து அன்றி - உன்னைச் சிறந்த ஆயுதத்தை எடுக்கச்செய்தல்லாமல், விடுகலன் - (யான்) விடமாட்டேன்,' என - என்று, யான் சொற்ற - நான் கூறின, மொழி திறம் - பிரதிஜ்ஞைவார்த்தையின் தன்மை, பிழையா வண்ணம் - தவறாதபடி, முருகு வெம் சினத்த ஆழி அழல் படை எடுத்தாய் - மிகுதியாகக்கொண்ட கொடிய கோபத்தையுடைய (உனது) சக்கரமாகிய அக்கினிச்சுவாலையைவீசும்ஆயுதத்தை ஏந்தியருளினாய்; நீ அன்பர்க்கு பெரிதும் அளியை அன்றே - நீ (உனது) பக்தர்களுக்கு மிகவும் அருள்செய்யுந்தன்மையுடையவனன்றோ? (எ - று.)

துரியோதனன், கண்ணனைப் படைத்துணையாக அழைக்கப் போனபொழுது, மூர்த்திப் பாண்டவர்க்கு உதவியான அவரை 'போரிற் படையெடா திருக்க வேண்டும்' என்று வேண்ட, அவர் 'அருச்சுனனுக்குத் தேரூர்தலேயன்றிப் பாண்டவர்பக்கத்திற் படையெடுத்துப் போர்செய்யேன்' என்று வாக்குத்தத்தஞ் செய்திருந்தார்; அதனையொழிந்து அவர் ஆழியையெடுத்தது - மூன்றாநாட்போரிற் பீஷ்மர் பாண்டவசேனையையெல்லாம் பாணவருஷந்தா லழித்துப் போர்செய்யவும், அருச்சுனன் எதிரிற் பொராமல் மறந்துநின்றபொழுதென்க: இதனால், தமது வாய்மையைத் தவறியாயினும் அடியார்களுக்கு வருகிற ஆபத்தைப் போக்கிக் காத்தருளுகிற பகவானது பேரருளுடைமை விளங்குகிறது. பகவான் நிரங்குச ஸ்வதந்திரனாதலால், தாம் வாய்மை தவறினால் அவருக்கு வருவதொரு குற்றமில்லை; வாய்மைதவறுதலாலாகிற குற்றம் தமது பக்தரான பீஷ்மருக்கு வாராதிருத்தற்பொருட்டுத் தமது வாய்மையைத் தவறி அவரது வாய்மையைக் கண்ணன் காத்தருளினார். அளியை - முன்னிலை யொருமைக் குறிப்பு வினையாலணையும்பெயர். (௩௦)

௩௧.—(இ - ள்.) சுரும்பு சூழ் தொடையல் சோர - வண்டுகள் சூழ்ந்து மொய்க்கப் பெற்ற பூமாலை தளர்ந்து விழவும், சுரி குழல் வீழ - கடை சுழன்ற தலைமயிர் கலைந்து விழவும், மார்பின் விரிந்த பொன் உத்தரீயம் வீழ்தர - மார்பின்மேல் விளங்குகிற பொன்மயமான மேலாடை நழுவி விழவும், விரைந்து - துரிதப்பட்டு, தேர் விட்டு - (அருச்சுனனது) தேரை விட்டு இறங்கி, எரிதபொன் திகிரி தாங்கி - சுவலிக்கின்ற பொன்மயமான அழகிய சக்கராயுதத்தை யேந்தி, ஏறு வலி மடங்கல் ஏறு கரு களிறு எதிர்ந்தால் போல் - மிக்க வலிமையையுடையதொரு ஆண்சிங்கம் கருநிறமுடைய [பெரியதொரு] ஆண்யானையை எதிர்த்தல் போல, என் கண் உறல் - எனது எதிரிலே (நீ போருக்கு) வந்துசேர்ந்த காட்சி, கண்ணது ஆம் - (இப்பொழுதும் எனது) கண்ணிடத்துள்ளதாம்; (எ - று.)

ஆல் - ஈற்றசை. மால் எனப்பிரித்து, திருமாலே என விளியாகவுங் கொள்ளலாம். பொன்னுத்தரீயம் - பீதாம்பரம். ஏறுவலி - ஒருபொருட் பன்மொழி. ஆண்சிங்கம் - கண்ணனுக்கும், ஆண்யானை - வீட்டுமனுக்கும் உவமை. குழல் - ஆண்மயிர் பெண்மயிர் இருவகைக்கும் பொது. தொடையல், அல் - சாரியை. (௩௧)

௩௨.—(இ - ள்.) எழில் விளையாடும் மார்பத்து - அழகு என்றும் பொருந்தி விளையாடுதற்கு இடமான (உனது) மார்பிலே, எழுதிய - நிரம்பப் பூசியுள்ள, கலவை செம் சேறு - செந்நிறமான பலவகை வாசனைப் பொருளுங் கலந்த சந்தனக் குழம்பு, அழிதர - அழியும்படி, பொடித்த - தோன்றிய, வேர் - வியர்வைநீரானது, மாறு ஆடல் அம் சிலை கை பார்த்தன் - பகைவரோடு போர்செய்யுந்தன்மையுள்ள அழகிய வில்லை யேந்திய கையையுடைய அருச்சுனனது, கொழு மணி கொடிஞ்சி திண் தேர் - சிறந்த இரத்தினங்களைப் பதித்த கொடிஞ்சியென்னும் உறுப்பையுடைய வலிய தேரிற் பூட்டிய,

துரகதம் - குதிரைகளின் காலினு லெழுப்பப்பட்ட, தூளி - புழுதி, மூழ்கி - தன்னிடத்துப் படிதலால், ஏழுகு சேறு ஆக - நெகிழுந் தன்மையுள்ள சேற்றின் தன்மையாய், ஓடி உற்றது-வழிந்து பொருந்தினது, என் உள்ளத்து ஆம் - (இப்பொழுதும்) எனது மனத்திலே பொருந்தும்; (எ - று.)

மாறு-மாற்றார்க்குப்பண்பாகுபெயர். துரகதம்-குளம்புகளால்நடப்பது.

௫௩.—(இ - ள்.) சொரி கணை மாரி பாய - (பகைவர்கள்) பெய்கின்ற பாணவருஷம் பாய்தலால், துணிந்த - துணிபட்ட, பொன் கவசத்தோடு - அழகிய கவசத்துடனே, மரகத காந்தி கான்று - மரகத ரத்தினத்தினது ஒளிக்கு ஒப்பான பசிய ஒளியை வீசி, வயங்கும்-விளங்குகிற, நின் பசு தார் மார்பும் - உனது பசுமையான வனமாலையை யணிந்த திருமார்பும், துரகதம் தூளி சேர்ந்து-குதிரைகளின் காற்புழுதி படிந்து, குழல் விராய் - தலைமயிர் சோர்ந்து விழப்பெற்று, குறு வேர் வார்ந்த - சிறிய வியர்வைநீர்த்துளி யொழுகப்பெற்ற, முருகு அவிழ் கமலம் செவ்வி முகமும் - வாசனை வீசுகிற தாமரைமலர்போன்ற அழகிய திருமுகமும், என் முகத்தது ஆம் - (இப்பொழுதும்) எனது முன்னிடத்துள்ளதாம்; (எ - று.)

மார்பும் முகமும் தனித்தனி முகத்ததா மென்க. 'முகத்தவாம்' எனப் பன்மையான பாடமுங் கொள்ளலாம். (௫௩)

௫௪.—(இ - ள்.) நறை - தேனையுடைய, வளம் திகழ் - செழிப்பு மிக்கு விளங்குகிற, பூ - தாமரைமலரிலே, மேவும்- பொருந்தின, நான்முகன் - நான்கு முகங்களையுடைய பிரமதேவனுக்கும், வழுத்த - துதிப்பதற்கு, எட்டாய் - எட்டாதவனே! மறை வளம் திகழும் - வேதம்வல்ல சிறப்புப் பொருந்தின, செய்ய மா தவர்- சிறந்த பெருந்தவமுடைய முனிவர்களும், அரசர் - அரசர்களும், ஆய - ஆகிய, நிறை வளம் திகழும் வேலை - நிறைந்த வளப்பம்மிக்க கடல், நெருக்கு உறு - நெருங்குதலைப் பொருந்தின, இராசசூயத்து - (யுதிட்டிரனது) ராஜசூய யாகத்திலே, இறை வளம் திகழ் முன் பூசைக்கு - தலைமைச் சிறப்பு மிக்க முற்பட்ட பூசனைக்கு, ஏற்றனை - (நீ) பொருந்தி யிருந்தாய்; என் சொல்கேன் - (அச்சிறப்பை யான்) என்னவென்று சொல்லுவேன்? (எ - று.)

இராசசூயம் - எல்லாவரசரையும் வென்று செய்வதொரு யாகம். முற்பூசை-அக்கிரதாம்பூலம்; இந்தச்சமயத்திலேதான் சிசுபாலவதம் நடந்தது.

௫௫.—(இ - ள்.) நஞ்சு அரா உச்சி மேய - விஷத்தையுடைய ஆதிசேஷனது தலைகளின்மீது பொருந்தின, நானிலம் - பூமியினது, பொறை - பாரத்தை, தீர்ப்பான் - நீக்கியருளுதற்பொருட்டு, வந்து - அவதரித்து, இச்சை ஆம் சூது என்று ஓதும் எரி சினம் தழலை மூட்டி-விருப்பம்மிக்க சூதாட்டத்தை(ச்சகுனியோடு தருமன் ஆடுதலென்று சொல்லப்பட்ட எரியுந்தன்மையுள்ள கோபத்தையுடைய நெருப்பைப் பற்றியெரியச்செய்து, (அதனால்), கச்சம் ஆர் களிறு வேந்து ஆம் கடு வனம் எரித்த - கழுத்திடுகயிறு பொருந்தின யானைச்சேனையை யுடைய அரசர்களாகிய கொடிய காட்டை எரியச்செய்த, கண்ணா - ஸ்ரீகிருஷ்ணனே! பச்சை மாலே - பசுநிறமுடைய திருமாலே! நின் மாயை - உனது மாயை, பகருதற்கு எளியது அன்று- (எவர்க்கும்) சொல்லுதற்குச் சுலபசாத்தியப்படுவதன்று; (எ - று.)

நானிலம் - மனிதசஞ்சாரத்துக்குஉரியதன்றாதலால், பாலை நிலம் நீக்கப்பட்டது. பொறுக்கப்படுவது, பொறை. பாரதயுத்த முண்டாகி அதிற் பலஅரசரும் அழிதற்கு ஆதியில் தருமன் சகுனியோடு சூதாடினதே காரணமாதலால், பூபாரத்தை யொழிப்பதற்குச் சூதாட்டம் நெருப்பெனப்பட்டது. கச்சம் - கக்ஷம் என்னும் வடசொற் றிரிபு. (௫௫)

கசு.—(இ - ள்.) 'மூட்டு-(ஒருவரோடொருவர்) போர்செய்தற்கிட மான, அமர் களத்தின் - யுத்த களத்திலே, ஏற்று - எதிர்த்து, மொய்த்த- நெருங்கின, என் தமரை எல்லாம் - எனது உறவினர் யாவரையும், வீட்டி லேன் - (யான்) கொல்லமாட்டேன்,' என - என்று, முன் சொற்ற - முன்னே கூறின, விசயன் - அருச்சுனனது, உள் இழுதை - மனச்சஞ்சலத்தை, நீக்கி- (நீ) ஒழித்து, முன்னே ஞானம் காட்டினை - முன்னே (அவனுக்குத்) தத்துவ ஞானத்தை நீ பெறச்செய்தாய்; நான் உடல ஒழிக்கும் இன்று- நான் இவ் வுடம்பை யொழிக்க இருக்கிற இன்றைத்தினத்தில், நின் பொன் கோலம் காட்டினை - உனது அழகிய திருவடிவத்தை (எனக்கு)த்தரிசனந் தந்தருளி னாய்; பிறவி வேலை கடந்தனன்-(யான் அதனால்) பிறப்புத்துன்பங்களாகிய பெருங்கடலை (இப்பொழுது) தாண்டிவிட்டேன்; (எ - று.)

முதல்நாட்போரில் எதிர்வந்து நின்ற வீரர்களெல்லாரும் பாட்டனும் அண்ணன் தம்பிமாரும் மாமனும் உறவினரும் கல்வி பயிற்றிய ஆசாரி யரும மனங்கலந்த நண்பர்களு மாகவே யிருக்கக் கண்டு "உற்றாரை யெல் லா முடன்கொன் றாசாளப், பெற்றாலும் வேண்டேன் பெருஞ்செல்வம்" என் றெண்ணிப் போர்புரியேனென்று காண்டீவங்கைந்நெகிழத் தேர்த்தட்டின் மீதே திகைத்துக்கிடந்த அருச்சுனனுக்குக் கண்ணன் தத்துவோபதேசஞ் செய்து தமது விசுவரூபங்காட்டி அவனது மயக்கத்தை யோட்டி அவனைப் போர்புரியுமாறு உடன்படுத்தினர். இழுதை - இரண்டனுருபுத்தொகை.

கஎ.—(இ - ள்.) அரு - (பெறுதற்கு) அருமையான, கதிர் - ஒளியை யுடைய, அம் - அழகிய, பொன் - பொன்மயமான, ஆடை - வஸ்திரத்தை அணிதரா - (நீ) தரித்து, வந்த- (இங்கு)வந்த, தோற்றம் - காட்சியானது, பொருந்திய மாயை ஆம் மீ போர்வையால் பொதியவுற்று - பொருந்தின மாயையாகிற மேற்போர்வையினாலே மூடப்பெற்று, திருந்து மேலோ ரால் வாசுதேவன் என்று உரைக்கும் பேர் பெற்று இருந்தது - சீர்திருந் தின மேன்மைக்குணமுடையவர்களால் வாசுதேவனென்றுகூறப்படும் பெயரைப் பெற்றிருந்தமைதம், இ வண்ணம் - இவ்வாறாதும், என்று- என்று, எனக்கு உணர்வித்தது ஆம் - அடியேனுக்கு அறிவித்தவாறாதும்; (எ-று.) ()

கஅ.—(இ - ள்.) உண்மையால் நாடின் - மெய்ம்மையாக ஆலோ சித்துப் பார்த்தால், நினக்கு உரு இலை-(பரம்பொருளாகிய) உனக்கு வடிவ மில்லை; உரைக்கின் - கூறப்புகுந்தால், பொய்க்கும் பெண்மை ஆம் மாயையா லே - அழியுந்தன்மையுள்ள பெண்பாற்பகுதியாகிய மாயையினாலே, நல் உரு பெருகும் - உனக்கு நல்ல வடிவம் உண்டாகி வளரும், என்றாலும்- என்றுசொன்னாலும், திண்மை சேர் நின்னை அன்றி திகழ் செகம் இன்றேல்- உறுதி பொருந்தின உன்னையேயல்லாமல் விளங்குகிற உலகமென்பதொ ன்று இல்லையாமென்றால், வண்மையால் வழுத்துவார் யார் - அழகாகஉன் னைத் துதிப்பவர் யாவர்? வழுத்திடப் படுவோர் யாரே - துதிக்கப்படுபவர் யாவர்? [எல்லாம் உனது சொரூபமேயென்றபடி]: என்னே - (இது) என்ன ஆச்சரியம்? (எ - று.) (கஅ)

ககூ.—(இ - ள்.) என்று - என்றுகூறித் துதித்து, இரு கங்கை மைந் தன் - சிறந்த கங்கையின் குமாரனான பீஷ்மர், இயற்றும் நல தவத்தின் தன் முன் நின்ற எம் இறைவன் கோலம் நெஞ்சினில் தெரிய நாடி - தாம் செய்துள்ள சிறந்த தவத்தினாலே தமது எதிரிலே எழுந்தருளிநின்ற எம் பெருமானது வடிவத்தை மனத்திலே விளங்கும்படி தியானித்துக்கொண்டு, துன்றிய கூட்டை நீத்த உன் உவந்து எழு பறவை போல - (தன்னோடுகூ டப்)பொருந்திய முட்டையை விட்டு அதனுள்ளிடத்தினின்று மகிழ்ந்து பற ந்தெழுந்து செல்கிற பட்சிபோல, அன்று உடல சுமை நீத்து - அப்பொழுது

தமது உடம்பாகிய பாரத்தை யொழித்து, ஓல்கா அழிவு இல் வீடு அடைந்தான்-குறைவில்லாத அழிதலற்ற முத்தியுலகத்தைச் சேர்ந்தார்; (எ-று.)

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே, யுடம்போ டுயிரிடை நட்பு" என்றார் திருவள்ளுவனாரும். உவமையணி. உடம்புக்கு முட்டையும், உயிர்க்குப் பறவையுந் தகுந்த உவமையாம். இனி, குடம்பையென்பதற்குக் கூடென்று உரைப்பது சிறவாது. (நகூ)

சய.—(இ-ள்.) அடைதரு வேலை - (வீட்டுமன் வீட்டுலகத்தை) அடையும் பொழுது, வானோர் - தேவர்கள், அலர் மழை சொரிந்திட்டு - பூமாரியை மிகுதியாகப் பெய்து, ஆர்த்தார்-ஆரவாரித்தார்கள்; (உடனே), உடைதிரை உகளும் கங்கை உயிர்த்தவன்தனக்கு-கரையை யுடைக்கின்ற அலைகள் புரளுதற்கிடமான கங்காதேவியினாற் பெறப்பட்ட வீட்டுமனுக்கு, ஈமத்தின் நடை தரு கருமம் எல்லாம் - மயானத்திலே நடத்தல் பொருந்தின அந்திமக்கிரியைகளெல்லாவற்றையும், தருமன் - தருமபுத்திரன், நாடினன் செய்தான்- விரும்பிச்செய்தான்;மிடைதரு முனிவர்-(அங்கு)நெருங்கிய முனிவர்கள் பலரும்,மாலை மெய் மனம் நிறுவி- கண்ணபிரானது வடிவத்தைத் தமது உடம்பினகத்திலுள்ள உள்ளத்திலே நிலைநிற்கச்செய்து [தியானம்பண்ணிக்கொண்டு], போனார் - சென்றார்கள்; (எ-று.) (சய)

சக.—(இ-ள்.) மலைதரு - போர்செய்கின்ற, திவவி-பருத்த, தோள்-தோள்களையுடைய, மன்னர் - பகையரசர்களது, மணி முடி - இரத்தினங்களைப்பதித்த கிரீடங்கள், துகளது ஆக - பொடியாய்விடும்படி, சிலை குழைத்த - தனது வில்லைக் கோடிகளை வளைத்திட்ட, பார்த்தன்- அருச்சுனனது, செழு மணி தட தேர் - சிறந்த இரத்தினங்களைப் பதித்த பெரிய தேரைச் செலுத்துகிற, பாகன் - சாரதியான கண்ணபிரான், பலர் புகழ் தருமன்தன்னை - உலகத்தவர்பலராலும் புகழப்படுகிற தருமபுத்திரனை, பகர் பெரு தாதை சொல்லால்- சிறப்பித்துக் கூறப்படுகிற (அவனது) பெரியதந்தையான திருதராட்டிரமகாராசனது வார்த்தையின்படி, அலர் தலை அவனி காப்ப- விளங்குகின்ற இடத்தையுடைய பூமிமுழுவதையுங் காக்கும்படி, அரிஅணைஇருத்தினான்- சிங்காசனத்தில்வீற்றிருக்கச்செய்துமுடிசூட்டினான்.

சஉ.—(இ-ள்.) நாம வேலினான் - (பகைவர்க்கு) அச்சத்தை விளைக்கின்ற வேலாயுதத்தையுடைய யுதிட்டிரன், மண்ணிய மணி முடி மன்னரை செகுத்து - சுத்தஞ்செய்யப்பட்ட இரத்தினங்களைப் பதித்த கிரீடத்தையுடைய அரசர்கள் பலரையும் அழித்தபின், எண்ணிய விருப்பொடும் இசைந்திலான் அலன்- (தான் அரசாளுதற்குக்) கருதின விருப்பத்துடனே உடன்பட்டானல்லன்; கண்ணன் உள் கருத்தினை கடக்க அஞ்சியே-கிருஷ்ணபகவானதுதிருவுள்ளக்கருத்தை மீறுதற்குப் பயந்தே, அரசுஇயல் நண்ணினன் - அரசாட்சிநிலையைப் பொருந்தினான்; (எ-று.) (சஉ)

சங.—(இ-ள்.) தருமன் - தருமபுத்திரன், தழை புகழொடு - செழித்த கீர்த்தியுடனே, புவி - பூலோகத்தை, காக்க - அரசாளுகையில், மழை வளம் சிறந்திட-(எங்கும்) மழையின் வளப்பம் மிக, வளங்கள் மிக்கன-(நீர்வளம் நிலவளம் முதலிய)எல்லாவளங்களும் மிகுந்தன; குழைவொடு- மனத்துன்பங்களும், பிணிகளும் - நோய்களும், குலைந்து சாய்ந்தன - (எங்கும்) நிலைகெட்டு ஒழிந்தன; நல் அறம்- சிறந்த தருமங்களாகிய மரங்கள், விழைவொடு - மகிழ்ச்சியுடனே, வேர் படைத்தன - (உலகத்தில்) வேரூன்றி நிலைத்தன; (எ-று.) (சங)

சச.—(இ-ள்.) புகழ் தருமன் - கீர்த்தியை யுடைய யுதிட்டிரன், பால் நிறம் மதி குடை நிழற்றி - பால்போல் வெண்ணிறமான பூர்ணசந்திரன்போன்ற (தனது ஒற்றைவெண்கொற்றக்) குடையால் (உலகமெங்கும்)

நிழலைச்செய்து, பார்மகள் தான் உவப்பு உற - பூமிதேவிதான் மகிழ்ச்சி மிகும்படி, காக்க - அரசாளுகையில், நானிலத்தவர்களும் - நால்வகை நிலங்களையுடைய பூலோகத்தி லுள்ள மனிதர்கள்யாவரும், நவையின் நீங்கினர் - எல்லாத்துன்பங்களினின்றும் ஒழிந்தார்கள்; வானகத்து அமரரும் - தேவலோகத்தினிடத்திலுள்ள தேவர்கள்யாவரும், மகிழ்வின் ஓங்கினார் - மகிழ்ச்சியாற் பூரித்தார்கள்; (எ - று.)

தேவர்களைநோக்கிச் செய்யவேண்டிய கடமைகள்யாவும் அக்காலத்திற் குறைவின்றிநடந்தன வென்க. (௪௪)

௪௫.—(இ - ள்.) மணி முடி வேந்தர் வேந்தன் - இரத்தினகிரீடத்தையுடைய அரசர்களுக் கரசனான யுதிட்டிரன், வாய்தலின் - தனது அரண்மனைவாயிலிலே, அடையலர் - பகைவர்கள், சுடர் தரு நிதி திறை சொரிந்து - விளங்குகின்ற பொருட்குவியல்களாகிற திறைப்பொருள்களைக் கொணர்ந்து பெய்து, அடி தொழ - தனது பாதங்களை வணங்கவும், இடி உறழ் படை உடை இளைஞர் - இடியை யொத்த [பயங்கரமாய்க் கொல்லுகிற] ஆயுதங்களையுடைய தனது தம்பிமார் நால்வரும், தன் அடி மிடைதர - தனது பாதங்களிலே பொருந்தவும், அவனி காத்தனன் - நிலவுலகத்தைக் காத்தருளினான்; (எ - று.)

அடையலர் - சேராதவர். வாய்தல் - வாயில். (௪௫)

தன்மபுத்திரன் அரசியலடைந்தஅத்தியாயம் முற்றிற்று.

நான்காவது

கண்ணபிரான்துவரையடைந்தஅத்தியாயம்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் (அஸ்திநாபுரியினின்று மீண்டு) த்வாரகாபுரியைச் சேர்ந்த செய்தியைக் கூறும் பாகம். துவரை - த்வாரகா என்னும் வடமொழித் திரிபு.

௧.—(இ - ள்.) உரவு - பெருமையை யுடைய, நீர் - பாற்கடலில் தோன்றிய, அமுதின் - அமிர்தம் போன்ற, சாயல் - மென்மையையுடைய, உத்தரை - உத்தரையும், ஒளிறு வெள் வேல் துருபதன் பாவை - விளங்குகின்ற வெண்ணிறமான வேலாயுதத்தை யுடைய துருபதமகாராசனது அழகிய மகளான திரௌபதியும், காதல் சுபத்திரை - (அருச்சுனனிடத்து) அன்பையுடைய சுபத்திரையும், குந்திதம்மோடு - குந்தியும் ஆகிய இவர்களுடனே, அரசர் ஓர் ஐவர் - ஒப்பற்ற அரசர்களாகிய பஞ்ச பாண்டவர், வேண்ட - பிரார்த்திக்க, அரு மறை முதல்வன் - அறிதற்கருமையான வேதங்களிற் கூறப்பட்ட முதற்பரம்பொருளாகிய கண்ணபிரான், வேழம் திரு நகர் சிறப்ப - யானைகளை மிகுதியாகவுடைய காரணத்தாற் பெயர் பெற்ற அழகிய அத்திநாபுரி சிறப்பை யடையும்படி, திங்கள் சில - சில மாதகாலம், மகிழ்ந்து உறைந்தனன் - மகிழ்ச்சியோடு (அங்குத்) தங்கியிருந்தான்.

சிந்தாமணியில் "அமிர்தன்னசாயல்" என்றவிடத்து 'அமிர்தம் கட்கினிதாகிய மென்மையும், தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராமல் தடுக்கும் மென்மையு முடைமையின், 'அமிர்தன்னமென்மை' என்றார்: "சாயல் மென்மை" என்றும்பொதிப்படச்சூத்திரஞ்செய்தது, ஐம்பொறியால் நுகரும்மென்மையெல்லாம் அடங்குதற்கு; "மயிலன்ன சாயல்", "சாயன் மார்பு' என ஒளிக்கும் ஊற்றிற்கும் வந்தன: பிறவுங்காண்க' என்ற நச்சினார்க்கினியருரையை இங்கே உணர்க. சுபத்திரை - கண்ணனது தங்கை; அருச்சுனனது மனைவி: அபிமன்யுவினது தாய். யானைமிகுதியுடைமையாலும், ஹஸ்தி என்னும் அசர

னால் ஏற்படுத்தப்பட்டதனாலும், ஹஸ்திநாபுரியென்று பெயர்: ஹஸ்தி - யானை; ஹஸ்தம் - கை, துதிக்கை: அதனையுடையது; "சுடர்தொடர் குருதிக் கோட்டுக் குஞ்சர நகரம்" என்றார் சிந்தாமணியாரும். திங்கள் - சாந்திரமானரீதியாய் மாசத்துக்கு வந்த பெயர். (க)

உ.—(இ - ள்.) 'அடைந்த - (நம்மிடம்)வந்துசேர்ந்துள்ள,எம் ஆவி ஆய - நமக்கு உயிரை யொத்த, பிரசம் நாறு உநவம் பைந்தார் பெருந்தகை- தேனோடுகூடிப் பரிமளிக்கின்ற அழகிய குளிர்ந்த பூமாலையையுடைய பெருமைக்குணமுள்ள கண்ணபிரான், அரசு இயல் அடைந்த ஆற்றால்-அரசாட்சி முறைமையை (நாம்)அடைந்துவிட்ட தன்மையினால், பிரிவான்-(இனி விரைவில் நம்மைவிட்டுப்)பிரிந்து நீங்குவான்', என்னா- என்று கருதி, உரை செறி புகழ் சால் ஐவர் - சொற்கள் நிறைந்த கீர்த்தி மிக்க பாண்டவர்கள்,உளம் குழைந்து உருகும் வேலை - மனந்தளர்ந்து கரையும் பொழுதில், (ஒருநாள்), முரசொடு முழவம் விம்ம - பேரிகைகளும் மிருதங்கங்களு மொலிக்க, முகில் என - மேகம்போல, கண்ணன் - கிருஷ்ணபகவான், எழுந்தான்- (தனது ஊருக்குப்) புறப்பட்டருளினான்; (எ - று.)—'முகிலெனவெழுந்தான்' என மூலபாடத்தைத் திருத்திக்கொள்க. (உ)

ந.—(இ - ள்.) உலகு காத்து அளிக்கும் - உலகத்தைக் காத்தருளுகிற, கற்றை கதிர் மதி - தொகுதியான ஒளியை யுடைய பூர்ணசந்திரன் போன்ற, கவிகை-(ஒற்றைவெண்கொற்றக்) குடையையுடைய, பார்த்தன்- அருச்சுனன், அன்புடன் - அன்புடனே, பற்றி- பிடித்து, நிழற்ற - நிழலைச்செய்யவும், பகரும் முன்னவன்தனோடு - சிறப்பித்துக் கூறப்படுகிற (அவனது) முன்பிறந்தவனான வீமனும், சாத்தகி- சாத்தகியும், சாமரை - சாமரங்களை, தட கை ஏந்தி - பெரிய கைகளிலே பிடித்து, இரட்ட - வீசவும், மிக்க வேந்து அவை - மிகுந்த அரசர்களின் கூட்டம், தொடர்ந்து செல்ல-பின்தொடர்ந்து வரவும், வீதிவாய் ஏகலுற்றான் - (கண்ணன் அத்தினபுரத்து) இராச வீதியிலே போகத்தொடங்கினான்; (எ - று.) (ந)

ச.—(இ - ள்.) வண்ணம் வீதிவாய் -அழகிய அவ்வீதியிலே,நண்ணும்- பொருந்தின, நல்ல தேர் - சிறந்த தேரின்மேல், கண்ணன் - கிருஷ்ணபகவான், கார் கொல் என்று எண்ண-(கண்டவர் யாவருந் தன்னைக்)காளமேகமோ என்று கருதும்படி, ஏறினான்—; (எ - று.) (ச)

ரு.—(இ - ள்.) அலகு இல் - அளவில்லாத, ஆனை - யானைகளும், ஆள் வலவர் - வல்லவரான காலாட்படைகளும், வாசிகள் - குதிரைகளும், இலகு தேர்கள்- விளங்குகிற தேர்களும், (ஆகக் கண்ணனுடன் புறப்பட்ட சதுரங்க சேனைகள்), ஏழ் நிலம் நிறைந்த- ஏழுதீவுகளாகிய பூமி முழுவதும் நிரம்பியுள்ளன; (எ - று.)—வாஜி - வடசொல். வாள்வலவரும்பாடம்.(ரு)

சு.—(இ - ள்.) ஏகன் - ஒப்பற்றவனான அக்கண்ணனது,தேர் துகள்- தேரினாலெழுப்பப்பட்ட புழுதியானது, மா கம் மன்னல் - பெரிய ஆகாயத்தை யளாவி முன்செல்லுதல், மோகன் ஏக - தனக்குக் காமமயக்கத்தை விளைக்குங் கண்ணனாகிய கணவன் செல்ல, பார்- பூமிதேவி,முன்போகல்-அவனுக்கு முன் செல்லுதலை,போலும்-ஒக்கும்; (எ - று.)—ஏகன்-அத்விதீயன். 'ஏகுமுன்' என்றும் பாடம். (சு)

எ.—(இ - ள்.) கோது இல்-குற்றமில்லாத, தேர்-(அக்கண்ணனது) இரதத்தினது, கொடி - துவசதண்டமானது, மீது மேவல் - ஆகாயத்தின் மேற் சென்றுபொருந்துதல், மால்- திருமாலினது, பாதம் பங்கயம் போது- (மேலுலகத்தை யளவிடத்தாவிய) திருவடித் தாமரைமலரை, போலும்- ஒக்கும்; (எ - று.) எ)

அ.—(இ - ள்.) வெற்றி மேவு இயம் - ஜயத்தந்த (அடையாளமாகப்) பொருந்தின வாத்தியங்கள், பெற்ற - (அப்பொழுது) அடைந்த, பேர் ஒலி - பெரிய ஓசைகள், உற்று - சென்று, பொற்ற பூ அண்டம் - பொன்போலரு மையான அழகிய அண்டகோளங்களையெல்லாம், உடைத்த - (மிக்க அதிர்ச்சியால்) உடையச்செய்தன; (எ - று.) (அ)

கூ.—(இ - ள்.) வெள் துகில் பதாகை - வெண்ணிறமான சீலையையுடைய கொடியானது, மேல் கொண்ட தேரின் கூம்பினுல் - உயர்ச்சியைக் கொண்ட இரதத்தினது மேல்முகடு படுதலால், அண்டகோளம் - உலகவுருண்டை விண்டு - (மேல்முகடு) பிளந்து, அறல் மண்டி வீழ்தல் - (வெளியிலுள்ள பெரும்புறக்கடலின்) நீர் (அத்துளை வழியாய்ப்) பொருந்தி உள்விழுதலை, மானும் - ஒக்கும்; (எ - று.)

இது, தேர்க்கொடியின் உயர்ச்சி மிகுதியை அதிசயோக்திவகையாற் கூறினது. மானும், மான்பகுதி. (கூ)

க0.—(இ - ள்.) கை கிரி - துதிக்கையையுடைய மலைகள்போன்ற யானைகள், காரை ஒத்த - மேகங்களை யொத்தன; வெம் பரி - வேகத்தையுடைய குதிரைக்கூட்டங்கள், வாரி ஒத்த - கடல்களை யொத்தன; தேர்கள் - இரதங்கள், பாரில் மொய்த்த பைங் கிரி சிரை ஒத்த - நிலவுலகத்தில்நெருங்கின பசுமையான மலைகளின் தன்மையை யொத்தன; (எ - று.) (க0)

கக.—(இ - ள்.) வேளை ஒத்த வீரர் - (அழகிலும் வலிமையிலுஞ் சிறந்த) மன்மதனை அல்லது [முருகக் கடவுளைப்] போன்ற போர்வீரர்கள், தோளை உற்ற - தமது தோளிற் பொருந்தின, தூணி - அம்புப்புட்டிலும், வில் - வில்லும், வாளை உற்ற வாளொடு - வாளைமீனைப்போன்ற வாளாயுதங்களும் ஆகிய இவற்றுடனே, அரி ஒத்து - சிங்கத்தைப் போன்று, அங்கு - அச்சேனையிலே, அடைந்தனர் - சேர்ந்தன்னார்; (எ - று.)

"வலி நடத்திய வாளென வாளைகள் பாய" என்றார் கம்பரும். (கக)

கஉ.—(இ - ள்.) அந்தரத்தின் - ஆகாசமார்க்கத்திலே, ஆசையால் வந்து மொய்த்த - (கண்ணபிரானிடத்துப்)பக்தியுடனே வந்து நெருங்கின, வானவர் - தேவர்கள், சுந்தரத்தனை தொழா - அழகிய திருவடிவமுடைய கண்ணபிரானை வணங்கி, பொன் தே மலர் சிந்தினர் - தேனையுடைய பொன்மயமான கற்பகமலர்களைப் பொழிந்தார்கள்;(எ-று.) (கஉ)

கங.—(இ - ள்.) விண்ணின் மன் - தேவலோகத்தரசனான இந்திரன், கண்ணன் செவ்வி கண்டு - கண்ணனது அழகைப் பார்த்து, 'எண்ணின் - ஆலோசிக்குமிடத்து, இன்னம் ஆயிரம் கண் நண்ணின் - (எனக்கு) இன்னுமொரு ஆயிரங் கண் பொருந்தினால், நன்று நன்று - மிக நல்லதாம்,' எனு - என்று, விளம்பினன் - கூறினன்; (எ - று.)

ஆயிரங்கண்ணையுடையனாதலால், 'இன்னமாயிரங்கண்' என்றான். (கங)

கச.—(இ - ள்.) உற்று நோக்கும் உம்பர் - (கண்ணனழகை) ஊன்றிப் பார்க்கிற தேவர்கள், நம் வெற்றி வேந்து போல் விழி பெற்றிலம் என - வெற்றியையுடைய நமதரசனான இந்திரன்போல (ஆயிரங்)கண்களை (நாம்) பெற்றோமில்லையே யென்று, பெரு சுற்றமோடு சொல்லுவார் - சிறந்த தமது இனத்தாருடனே கூடி இரங்குவாரானார்கள்; (எ - று.)

பெற்றிலம்மென, மகரமெய் - விரித்தல். (கச)

கரு.—(இ - ள்.) தண்ணெ - குளிர்ச்சியையுடைய, செய்ய - செந்நிறமுடைய, தாமரை - தாமரைமலரில் வாழ்கிற, பெண்ணின் - பெண்களிற் சிறந்த திருமகள்போல, நல்ல - சிறந்த அழகையுடைய, பேதையர் - (அந்நகரத்து) இளம்பெண்கள், வண்ணம் மாடம் மன்னி - அழகிய தமது மாளி

கைகளின் முன்னிடத்தை அடைந்து, கண்ணன் செவ்வி கண்டனர் - கண்ணனது அழகைப் பார்த்தார்கள்; (எ - று.) (கரு)

கசு.—(இ - ள்.) (அப்பொழுது), வேள்-மன்மதன், வீரம் வாளி தூவ- வீரத்தன்மையையுடைய அம்புகளை மேற்பொழிவதனால்,சோரும் - உடம்பு மெலிகிற, மாதர் - மகளிர்கள், செம் கையின் சேரும் ஆழி தூவி நின்று - சிவந்த தமது கைகளிலே பொருந்தின மோதிரங்களைக் கீழே பெய்து நின்று, ஆர்வமோடு- காமநோயுடனே, அழுங்குவார்-வருந்துவார்கள்; (எ-று.)

கஎ.—(இ - ள்.) (அந்நகரத்து மகளிர்), நாடும் நல்ல சாளரத்தூடு - ஊன்றிப்பார்த்தற்குரிய அழகிய பலகணிகளின் வழியாய், செவ்வி கண்டு - (கண்ணனது) அழகைப் பார்த்து, வந்து - மீண்டுவந்து, ஆடல் மாரன் அம்பினால்- வலிமையையுடைய மன்மதனது பாணங்களினால், மாடம் மீது- அம்மாளிகைகளின் உபரிகைகளின்மேல், மாழ்குவார் - வருந்துவார்கள்.

கண்டு உவந்து எனவும் பிரிக்க இடமுண்டு. மாரன்-(துணையொடுகூடாதாரை) மரணவேதனைப்படுத்துகிறவன். (கஎ)

கஅ.—(இ - ள்.) எண் இலாத ஏழைமார் - அளவில்லாத இளம்பெண்கள், கண்ணன் செவ்வி - கண்ணனது அழகை, கண்களால் உண்ண - தமது கண்களால் நோக்கி யுட்கொள்ளுகையில், நண்ணு வாடை - பொருந்தின இளங்காற்றானது, நாடி - சமயம்பார்த்து, ஆவி உண்ணும் - அவர்களுயிரைக் கவர்ந்து உட்கொள்ளும்; (எ - று.)—ஆல்- ஈற்றசை.

மந்தமாருதம்விரகிகளைவேதனைப்படுத்துந்தன்மைஇதில்விளக்கப்பட்டது ()

கக.—(இ - ள்.) குல்லை வேய்ந்த - திருத்துழாய்மாலையைச் சூடிய, கொண்டலே - நீர்கொண்டமேகம்போன்றவனே! இன்று - இப்பொழுது, மெல்ல வந்து-(நீ)மெதுவாய் (அருகில்)வந்து,வெம் முலை-விரும்பப்படுந்தன்மையுள்ள (எங்கள்) தனங்களை, புல்லி- ஆலிங்கனஞ்செய்து, போகு - போவாய், என - என்று, சொல்லி நின்று - வாயாற் கூறிநின்று, சோர்குவார் - உடம்புதளர்வார்கள் (மகளிர்); (எ - று.)

குல்லை - இரண்டாம்வேற்றுமைத்தொகை. சோர்குவார், கு - சாரியை. ()

உ0.—(இ - ள்.) கண்ண - கண்ணனே!, கண்ண - கருத்தாக, எம் இதழ் உண்ண வா - எங்கள் அதரத்தைப் பானஞ்செய்தற்கு வருவாய், என்று ஓதி - என்று வாய்விட்டுக் கூறி, வண்ணம் மேவு கை வளை - அழகு பொருந்தின தங்கள் கைவளையல்களையும், சுண்ணமோடு - வாசனைப் பொடிகளையும், தூவுவார் - கீழேசொரிவார்கள் (மகளிர்); (எ - று.)

கண்ண என்னுஞ் சொல்இரண்டனுள், முந்தினது-விளி; பிந்தினது-கண் என்னும் வினைப்பகுதியி னடியாகப் பிறந்த செயவெனெச்சம்: இனி, இரண்டையும் அன்புபற்றிவந்த விளியடுக் கெனவுங் கொள்ளலாம்; இனி, கண்ண- விரைய என்றுமாம்: உலகவழக்கு. சுண்ணம்-சூர்ணமென்னும் வடமொழித் திரிபு. (உ0)

உக.—(இ - ள்.) பண்டு-முன்னே [இளமையில்],வெண்ணெய் பாலொடும்- வெண்ணெய்பால் இவற்றுடனே, அண்டர் மாதரார் நலம்-இடைப்பெண்களது இன்பத்தையும், உண்ட - நுகர்ந்தருளின, கார்-காளமேகம், எம் உள் நிறை கொண்டது-(இப்பொழுது) எமதுமனத்திலுள்ள அடக்கமாகிய உறுதிக்குணத்தைக் கொள்ளைகொண்டுவிட்டது, என்று கூறுவார் - என்று சொல்லுவார்கள் மகளிர்; (எ - று.)—வெண்ணெய் - உருக்காநெய். (உக)

உஉ.—(இ - ள்.) மஞ்சு போலும் வண்ணனை - மேகம்போலுந் திருநிறமுடைய கண்ணனை, நெஞ்சினோடு நேர்கலா - தமது உள்ளக்கருத்தோடு இணங்கி உடனேவந்து தழுவப்பெறாத, அம் சொலார் - அழகிய சொற்

களையுடைய மகளிர், அருசுதை - பெறுதற்கரிய அமிர்தத்தை, நஞ்சுபோல நாடுவார் - விஷம்போலக் கருதுபவரானார்கள்; (எ - று.)

இயற்கையில் இன்பஞ்செய்யும் பொருள்கள்யாவும் விரகிகளுக்குத் துன்பஞ்செய்வனவாகத்தோன்றும். (௨௨)

௨௩.—(இ - ள்.) நாகம்மேல் நடித்தவன் - (காளியனென்னும்) பாம்பின்மேற் கூத்தாடியருளின கண்ணன் விஷயமாக, மோகம்வாரி மூழ்கினோர் - ஆசைக்கடலிலே மூழ்கினவர்கள், கோகிலங்கள் கூவலால் - (காமத்தை வளர்ப்பனவான) குயில்கள் கூவுதலால், (அந்தஇன்னொலியைக்கேட்டுஇரங்கி), சோகம்வாரிதன்னுவார் - துன்பமாகியகடலில்மூழ்குவார்கள்.

௨௪.—(இ - ள்.) அண்டர் தோகைமார் - தேவமாதர்கள், துன்னி - வந்துநெருங்கி, மன்னு கொண்டல் வண் புகழ் - பொருந்தினகாளமேகம் போன்ற கண்ணபிரானது சிறந்த கீர்த்தியை, இன் நரம்பின் யாழ் கொடு - இனிமையான நரம்புகளையுடைய வீணையைக் (கையிலே) கொண்டு, பன்னி நின்று பாடுவார் - துதித்து நின்று பாடுபவரானார்கள்; (எ - று.)

தோகைமார் - தோகையையுடையமயில்போலுஞ்சாயலையுடையமகளிர். ()

௨௫.—(இ - ள்.) ஆண் அவாவுவான் எழில் - (மகளிரால்மாத்திரமேயன்றி) ஆடவர்களாலும் விரும்பப்படுபவனான கண்ணனது அழகை, காண - பார்ப்பதற்கு, நூறு கோடி கண் - அநேகங் கோடி கண்களை, வாணி மன் ஆவான் - சரச்சுவதிக்குத் தலைவனாகிற பிரமதேவன், பாணியால் - தனது கைகளால், படைத்திலன் - (நமக்கு) உண்டாக்கியருளினானில்லை, என்பார் - என்று (மகளிர்) இரங்குவார்கள்; (எ - று.)

"ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்" என்றார் கம்பரும். (௨௫)

௨௬.—(இ - ள்.) மாதர் - மகளிர்கள், ஈறு இலா - எல்லையில்லாத இத்திறமான வார்த்தைகளை, இ காதலால் - இப்படிப்பட்ட ஆசையினால், கூற - சொல்ல, மாறு இலாத மாயன் - ஒப்பில்லாத கண்ணபிரான், தேர் கொடு - தனது தேரை நடத்திக்கொண்டு, வேறு ஓர் வீதி மேவினான் - வேறொரு வீதியை அடைந்தருளினான்; (எ - று.)—இலா - பெயர். (௨௬)

௨௭.—(இ - ள்.) மாதர்கள் - (அந்நகரத்து) மகளிர்கள், வீதி எய்தி - வீதியை யடைந்து, 'இ போது அணி மார்பன்தன்னால் - பூமாலையைத் தரித்த மார்பையுடைய இக்கண்ணனால், மது வனம் - மதுவென்னும் அசுரனது காடு, மதுரை ஆய் - இனிப்பான மதுரை யென்னும் பட்டணமாய், சால பொலிந்தது - மிக விளங்கிற்று,' என்பார் - என்று கூறுவார்கள்; 'காதல் செய் துவரை - (தன்னிடம் வருவார்க்கு) விருப்பத்தைச் செய்கிற துவாரகாபுரி, எங்கள் கண்ணனால் சிறந்தது - நமது கண்ணபிரானாற் சிறப்புற்றது.' என்பார் - என்பார்கள்; 'ஓதும் இ பிறவி - சொல்லப்படுகிற இந்தப் பிறப்பிலே, தவத்தால் - (முற்பிறப்பிற் செய்த) தவத்தினால், அங்கே உதித்திலம் - அவ்விடங்களில் [மதுரையிலாயினும் துவரையிலாயினும்] (நாம் கண்ணனை எப்பொழுதும் நன்குகாணுமாறு) பிறந்தோமில்லையே;' என்பார் - என்றுகூறி இரங்குவார்கள்; (எ - று.) (௨௭)

௨௮.—(இ - ள்.) (முன்காலத்திலே), மது குலத்துடன் - மதுவென்னும் அசுரனது கூட்டத்துடனே, இலங்கை மன்னவன் - இலங்காநகரத்து அரசனாகிய இராவணனும், மலங்க - நிலைகலங்கி அழியும்படி, வென்றோன் - (அவர்களைச் சயித்திட்டவனான கண்ணபிரான், விதுகுலத்துஅரசர்போற்ற - (தருமன் முதலிய) சந்திரகுலத்தரசர்கள் கொண்டாட, வீதிவாய் வருதல் - (அத்தினபுரத்து) வீதியிலே வருதலை, நோக்கி - பார்த்து, 'இந்த முதல்வன் வந்ததனால் - இந்தச் சிறப்புடையவன் வந்து பிறந்ததனால், எது குலம் ஆயது - எதுவென்னும் அரசனது வமிசமானது, ஈறு இன்று எத்துற

குலங்கட்கு எல்லாம் - எல்லையில்லாமற் புகழப்படுகிற மற்றை யரசகுலங்க ளனைத்திற்கும், மூது குலம் ஆயது - சிறந்த குலமாய் விட்டது,' என்பார்- என்று சொல்லுவார்கள் (மகளிர்); (எ - று.)

இலங்கை - லங்கா என்னும் வடமொழித் திரிபு; நீர் சூழ்ந்த பூமியெ ன்று பொருள். இராவணனைக்கொன்றது இராமாவதாரத்தில்; மதுவைக் கொன்றது ஆதிகாலத்தில். மதுகுலம் என்றது, அவனுடன் பிறந்தவனுன கைடபனை. எது - சந்திரவமிசத்துப் பிரசித்தி பெற்ற ஓரரசன்; யயாதி யின் மகன்: பூருவி னுடன்பிறந்தவன்; இவனே கிருஷ்ணன்பிறந்தகுலத் துக்கு ஆதிபுருஷன். (உ அ)

உக.—(இ - ள்.) தெள்ளு-(இரத்தினங்களைக்) கொழிக்கின்ற, தெள்- தெளிவான, திரை - அலைகளையுடைய கடலினால், சுலாம் - சூழப்பட்ட, இ- இந்த, செழு - செழிப்பான, புவி - பூலோகம், முதல் - முதலாகவுள்ள, உலோகத்து - உலகங்களிலே, உள்ளவர் - உள்ள பிராணிகளது, மனங் கள்தோறும் - மனங்களிலெல்லாம், ஒழிவு இலாது - எப்பொழுதும் நீங்கு தலில்லாமல், உறைவான் அன்றே - வசிப்பவனன்றோ (இவன்); (இவனே), மெள்ள - மெதுவாக [எவர்க்குந்தெரியாமலென்றபடி], விழி வழி - கண்க ளின் வழியாய், எம் உள்ளத்து ஊடே - எமது மனத்தினுள்ளே, புகுந்து - பிரவேசித்து, மேவும் - அங்குப் பொருந்திய, கள்ளன் - வஞ்சனையுடையவ னுவன், என்று—, உரைப்ப - சொல்ல, புந்தி - மனம், சிறிதும் கருதில - சிறிதுந் துணிந்து நினைக்கிறதில்லை, என்பார்-என்றுசொல்லுவார்கள்;(எ-று.)

சுலாம்-சுலாவும் என்பதன் விகாரம் புந்தி-புத்தி; வடசொற்றிரிபு. சொல் பவர் பலராதலால், 'கருதில' எனப் பன்மைவந்தது; இதனைக் கருதிலதுஎன் னும் ஒருமைமுற்றின் ஈறுதொகுத்தலாகவுங் கொள்ளலாம். யாவர்மனத் திலும் எப்பொழுதுந் தங்குகிறவனை எங்கள் மனத்தில் வஞ்சனையாகப் புகுந்தவனென்று சொல்லத் துணிகிறோமில்லை யென்றார். (உக)

கூ0.—(இ - ள்.) பொன் இயல் பழுத்து - பொன்மயமானதாய் மிகுந் து, வானின் பொலிதரு - தேவலோகத்தையளாவி விளங்குகிற, மாடம் - மாளிகைகளையுடைய, வீதி - வீதிகளிலே, சூழ்ந்து - (கண்ணனைச்) சுற்றி லுமிருந்து, துன்னிய சாதகம் போல்- பொருந்தின சாதகமென்னும்பறவை கள்போல, நோக்குநர்கட்கு எல்லாம் - பார்க்கின்ற மகளிர்யாவர்க்கும், கன்னி அம் துழாய் மிலைந்த கரு முகில் - இளமையான அழகிய திருத்து ழாய்மாலையைச் சூடிய கண்ணபிரானுகிய காளமேகம், கடைகண் நோக் கால்-தனது கடைக்கண் பார்வையினால், மன்னிய கருணைவெள்ளம் மழை- நிலைபெற்ற அருள்வெள்ளமாகிய மழையை, நனி வழங்கும் - மிகுதியாகப் பெய்யும், என்பார் - என்று கூறுவார்கள்; (எ - று.)

சாதகம் - மேகத்தின் மழையையே யெதிர்பார்த்து அந்நீர்த்துளியை யேஉணவாகக்கொண்டுஉய்வதொருபறவை; இதனை வானம்பாடியென்பர்.

கூக.—(இ - ள்.) தாமம் நல் மறுகில் செல்வான் - இடம்பரந்த நல்ல வீதியிலே செல்பவனுகிய கண்ணனது, தாமரை போலும் கண்கள் - தாம ரைமலர்போன்ற திருக்கண்கள், உளத்து ஏமமொடு காண்பார்க்கு - மன த்தில் மகிழ்ச்சியுடனே தம்மைக் காண்பவரெல்லோர்க்கும், இடர் எலாம் ஒழிக்கும் - துன்பங்களெல்லாவற்றையுந் தீர்த்தருளும், என்ப - என்று நூ லோர்கூறுவர்; (அப்படிப்... கண்ணன்கண்கள்),காதலோடு இனிது கண் ட வாமம் மேகலையார்க்கு - வேட்கையுடனே இனிமையாகப் பார்த்த அழ கிய மேகலாபரணத்தையுடைய மகளிர்க்கு; காமனால் வரும் அன்பத்தை வளர்க்குதல் - மன்மதனுல் வருந் துன்பத்தை விருத்தியடையச்செய்தல்,

புதுமைத்து - புதுமைபாயுள்ளது; என்னோ - இது என்னகாரணத்தாலோ? என்பார் - என்று (மகளிர், கூறுவார்கள்; (எ - று) (௩௧)

௩௨.—(இ - ள்.) வண்ணம் மா முகில் போல் - அழகிய சிறந்த மேகம்போல, வீதி வருபவன்தன்னை - வீதியிலேவருபவனான கண்ணபிரானை, நோக்கி-(மகளிர்கள)பார்த்து,'கருத்து உற நாடின்-மனம்பொருந்தஆலோசித்துப்பார்த்தால், எண்ணிடின் எழ் இரண்டு ஆய் இயம்பு பேர் உலகத்தோடே - எண்ணிப்பார்க்குமிடத்துக் கீழேழும் மேலேழு மாகப்பதினான்காய்ச் சொல்லப்படுகிற பெரிய உலகங்களுடனே, தண் நறு மலரோன்தன்னை - குளிர்ச்சியான வாசனைவீசுகிற தாமரைமலரில் வாழ்கிற பிரமதேவனையும், தந்து - படைத்து, இனிது அளிக்கும் - இனிமையாகக் காத்தருளுகிற, செய்ய கண்ணன் - சிவந்த திருக்கண்களையுடைய திருமால், இ கண்ணனே ஆம் - இந்தக்கண்ணபிரானேயாவன்,' என்பார் - என்று கூறுவார்கள்.

௩௩.—(இ - ள்.) காடு - வனத்திலே வாழ்கிற, வாரணம் - யானையாகிய கஜேந்திராழ்வான், முன் - முன்னே, சொல்ல -(ஆதிமூலமே யென்று) சொல்லிக் கூப்பிட, காத்து-(அதனைக்) காத்தருளி, வெம் கஞ்சன் வாய்தல் - கொடிய கம்சனது வாயிலிலே நிறுத்தப்பட்ட, கோடு வாரணத்தை - தந்தங்களையுடைய (குவலயாபீடமென்னும்) யானையை, கொன்ற - வதைத்த, குரிசில் - வீரனான கண்ணனை, வீதி நோக்கி - வீதியிலே பார்த்து, 'நான் மலரில் தோன்றும் விரிஞ்சனும் வேட்டு காணா வண்ணம் - புதுமையான திருநாபித்தாமரைமலரிலே யுதித்த பிரமதேவனும் காணவிரும்பிக் காணவொண்ணாதபடி [அவனுக்கும் அரியனாய்],சுட்டு நாக அணையில் துஞ்சும் - உச்சிக்கொண்டையையுடைய ஆதிசேஷனாகிய சயனத்திலே பள்ளிகொண்டருளுகிற, தோன்றல் - பெருமையிற் சிறந்த கடவுள், இ தோன்றல் - இந்தத் தலைமகனேயாவன்,' என்பார்-என்று (மகளிர்) கூறுவார்கள்.

கஞ்சன் - வடசொற்றிரிபு: இவன், கண்ணனுக்கு மாமன்; தேவகியினுடன்பிறந்தவன்; வசுதேவன்மைத்துனன். (௩௩)

௩௪.—(இ - ள்.) கண்கள் - (நமது) கண்கள், கண்ணனை கண்டு களிப்பு உற - ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைத் தரிசித்துக் களிப்புமிக, மனங்கள் - (நமது) உள்ளங்கள், கரு கார் போலும் வண்ணனை நீங்கா வண்ணம் ஆய் மகிழ்தலானே - காளமேகம்போன்ற திருநிறத்தையுடைய திருமாலை நீங்காதவிதமாய் மகிழ்ச்சிபெறுதலாலே, நண்ணிய யோகத்தால் இக் கண்ணனை காணும் மேலோர் எண் இல் ஆனந்தம் ஆகி இருப்பது இன்று அறிந்தோம் - பொருந்திய யோகாப்பியாசவழியால் இந்தக்கண்ணபிரானைத் தியானித்துத்தரிசிக்கிற மேன்மையுடையவர்கள் அளவில்லாத ஆனந்தமயமா யிருக்குந்தன்மையை இன்றைக்கு நாம் நேரில் அறிந்தோம், என்பார் - என்று சொல்வார்கள்; (மகளிர்); எ - று.) (௩௪)

௩௫.—(இ - ள்.) அசோதை -(உன்னைவளர்த்ததாயான) யசோதையானவள், சுரும்பு இமிர் கூந்தல் சோர-வண்டுகள் ஒலித்தற்கிடமான (தனது) கூந்தல் தளர்ந்தவிழ, தொடர்ந்தனள் - பின்தொடர்ந்துவந்து, வீக்க - (உன்னைக் கயிற்றால் இடையிலே பிணித்து உரலிற்) கட்டிவிட, உரலோடும் - அவ்வுரலுடனே, விரும்பினை போய் - விரும்பிச்சென்று, வேரொடு மருதம் சாய்த்தாய் - வேருடனேமருதமரங்களைத்தள்ளி, அன்று - அக்காலத்தில், பெரு பணை தணித்தாய் - (அம்மருதமரத்தின்) பெரிய கிளைகளை முறித்திட்ட நீ, (இப்பொழுது), பெண் பழி கொள்ளும் வேள்தன் கரும்பினை முறிக்கிலாய் - பெண்களாகிய எங்களை வருத்தி அப்பழியைக் கொள்ளுகிற மன்மதனது (வில்லாகிய) கரும்பை முறிக்கமாட்டாய்; (இதென்னே!), என-என்று, கழறி-சொல்லி, சோர்வார்-தளர்வார்,சிலர்-சிலமகளிர்;' எ-று.)

கண்ணன் குழந்தையாயிருக்குங்காலத்தில் துன்பப்படுத்துகின்ற பல விளையாடல்களைச் செய்யக் கண்டு கோபித்தயசோதை ஒருநாள் கிருஷ்ண னைத் திருவயிற்றிற் கயிற்றினாற்கட்டி ஒருரலிலே பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலை இழுத்துக்கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டைமருதமரத்தி ன் நடுவே எழுந்தருளியபொழுது, அவ்வுரல் குறுக்காய்நின்று இழுக்கப் பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்துவிழுந்தவளவில், முன் நார தர்சாபத்தால் அம்மரங்களாய்க்கிடந்த நளகூபரன் மணிக்கிரீவன் என்னுங் குபேரபுத்திரர் இருவரும் சாபந்தீர்ந்து சென்றனர் என்பது கதை. பெரும் பணைதுணித்தாய் என்றது - குருந்தமரத்தை ஒசித்ததையாகவுமாம். யசோ தை - இடையர்தலைவரான நந்தகோபரது மனைவி. (ருரு)

ருசு.—(இ - ள்.) கண்ண - ஸ்ரீகிருஷ்ணனே! புலவோர் - (இந்தி ரன் முதலிய) தேவர்கள், எழு நாள் - ஏழுநாள், தார் மாரி தர - (இடை விடாமல்) ஒழுங்கான மழையைப் பொழிய, கார் மாரி - அந்த மேகவருஷ த்தை, விலக்கினை - (நீ எளிதில்) நீக்கியருளினாய்; (இப்பொழுது), மதன் போர் மாரி மலர் கணை போக - மன்மதனது போர்செய்கின்ற புஷ்பபாண வருஷம் ஒழியும்படி, விழி நீர் மாரி நிறுத்திலை - (எங்கள்) கண்ணீர்மழை யை விலக்குகிறாயில்லை; (இது என்ன நீதி!) என்பர் - என்று கூறுவார்கள், சிலர் - சில மகளிர்கள்; (எ - று.)

திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாருங் கூடி மழையின்பொருட்டாக இந்திரனையாராதித்தற்கென்று சமைத்த சோற்றைக் கண்ணன் அவனுக் கிடாதபடிவிலக்கிக் கோவர்த்தனமலைக்கு இடச்சொல்லித் தானே ஒருதே வதாருபமாய் அமுதுசெய்தருள, அவ்விந்திரன் பசிக்கோபத்தாலே புஷ் கலாவர்த்தகம் முதலிய மேகங்களை யேவிக் கண்ணன்விரும்பிமேய்க்கிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடையருக் கும் இடைச்சியர்க்குந் தீங்குதரும்படி கன்மழையை யேழுநாள் விடாது பெய்வித்தபொழுது கண்ணன் கோவர்த்தனமென்னும் மலையை யெடுத்துக் குடையாகப்பிடித்து மழையைத்தடுத்து எல்லாவுயிர்களையும் இடையூறு சிறிதுமின்றிக் காத்தருளின னென்பது கதை. புலவர் - புலவோர் என ஈற்றயல்அகரம் ஓவாயிற்று. (ருசு)

ருஎ.—(இ - ள்.) கண்ண - கண்ணனே! பழி கூறு - பழிமொழியைச் சொல்லத்தக்க, அவை - சபையின் மத்தியிலே, நின்று - (துச்சாதனன்) நின்று, பறிக்குதலும் - (திரௌபதியின் துகிலை) உரியத்தொடங்கின பொ ழுது, கழியாமல் - காலதாமதஞ் செய்யாமல், துகில் - (அவளது) அவ்வா டை, அழியாமல் - நீங்காதபடி, உவந்து - விரும்பி, அளித்தனை - அருள்செய் தாய்; (இப்பொழுது), அறுவை நெகிழ்ந்து ஒழியாமல் - (எங்கள்) ஆடை தள ர்ந்து அவிழாதபடி, உகந்திலை - விரும்பி (எங்களை)ச்சேர்கிறாயில்லை, என் பர் - என்றுகூறுவார்கள், சிலர் - சிலமகளிர்; (எ - று.) (ருஎ)

ருஅ.—(இ - ள்.) வண்ணம் திகழ் வாய் அமுது ஊறல் உண - அழ குவிளங்குகிற (உனது)அதரத்தி னூறுகிற அமிர்தம்போலினிய இரசத்தைப் பருகும்படி, தண் அம் குழை வைத்தனை - குளிர்ச்சியான அழகிய வேய்ங் குழலை(த்திருவாயில்) வைத்தருளினாய்;(இப்பொழுது), சாரும் எமை- (உன் னைச்) சரணமாக அடைகிற எங்களை, உண்ணும்படி - (உனது அதரத்தைப்) பானஞ்செய்யும்படி, உறவிலை - விரும்பியருள்கிறாயில்லை; என்று தினம் எண்ணும்படி வைத்தனை - என்று இவ்வாறு நாள்தோறுங் கருதும்படி (எ ங்களை) உபேட்சித்துவைத்திட்டாய், என்பர் - என்றுகூறுவர், சிலர் - சில மகளிர்; (எ - று.) (ருஅ)

௩௯.—(இ - ள்.) வளை ஆழி தரித்து - சங்கசக்கரங்களை (த்திருக்கைகளிலே, ஏந்தி, வளை யாழின் நரம்பு உறழ் சொல் மலராள் அணிவாய்-நுனி வளைந்த வீணையினது நரம்பினிசையை யொத்த இன்சொற்களை யுடைய தாமரைமலரில்வாழுந்திருமகளைத் (திருமார்பில்) தரிப்பவனே! (நீ இப்பொழுது), விழியால் - (உனது) திருக்கண்ணோக்கத்தால், வளை ஆழி வளைந்தவளுக்கு-வட்டவடிவமானகடல்சூழ்ந்த பூதேவிக்கு, எளியேம் வளை ஆழி வழங்கல்- எளியவர்களான எங்களது கைவளைகளையும் மோதிரங்களையுங் கவர்ந்துகொடுத்தல், என் - என்ன நீதி? என்பர் - என்று கூறுவர், சிலர் - சிலமகளிர்; (எ - று.)

வளையாழிவளைந்தவளுக்கு விழியால் எளியேம்வளையாழிவழங்கல் என்றது-கண்ணன் காதல்தோன்ற இம்மகளிரைக் கடைக்கண்ணால் நோக்கியருளினமாத்திரத்தில் இவர்களுடம்பு காமவேதனையால் மிகமெலிந்து இவர்கள்கைவளைகளும் மோதிரங்களும் கழன்று தரையில்விழுதலை. மலராள் வளையாழிதரித்தணிவாய் என்றதில், திருமகளுக்கு வளைகளையும் மோதிரங்களையும் அணிந்தருள்பவனே என ஒருபொருளுந் தொனிவகையால் தோன்றும். மலராள் வளையாழி தரித்து - சங்கசக்கரங்களைப்போலத் திருமகளையும் ஒருபரிகாரமாகத்தரித்து என்று முரைக்கலாம். நரம்பு - அதனொலிக்கு ஆகுபெயர். இச்செய்யுளில் நான்கு அடியிலும் முதல் நான்கு எழுத்துக்கள் ஒன்றுபட்டுவந்தது, யமகமென்னுஞ் சொல்லணி; இது, தமிழில் மடக்கெனப்படும். (௩௯)

௪0.—(இ - ள்.) (முன்னே நீ), உறி வெண்ணெய் விழைவோடு நுகர்ந்தது என - உறியிலேவைக்கப்பட்டுள்ள வெண்ணெயை விருப்பத்துடனே அமுதுசெய்ததுபோல, உழை மேவிய கான் அழல் உண்டனை- அருகிற் பொருந்தின காட்டுத்தீயை உட்கொண்டருளினாய்; (இப்பொழுது நீ எங்களுக்கு), நிழல் மேவிய நித்திலம் மாலையை குளிர்ச்சிபொருந்தின முத்தாரத்தை, அழல்போல அமைத்தனை- நெருப்புப்போலெரிக்கும்படி செய்தருளினாய்; என் - (இது) என்ன நீதி? என்பர் - என்று கூறுவர், சிலர்-சிலமகளிர்; (எ-று.)

பிருந்தாவனத்தில் முஞ்சாரணியத்திற் பிரவேசித்தபொழுது தைவிகமாகத்தோன்றித் தங்களைச்சூழ்ந்த பெருங்காட்டுத்தீயில் அகப்பட்டுக்கொண்டு கோபாலர்களுங் கோக்களும் முறையிட்டுப் பலவாறு துதிக்கக் கேட்டு ஸ்ரீகிருஷ்ணன் 'நீங்கள்யாவரும் பயப்படாமல் உங்கள் நேத்திரங்களை மூடிக்கொள்ளுங்கள்' என்று நியமித்தருளித் தமது விராட்ஸ்வரூபத்தை வகித்து அவ்வக்கினியைச் சுவாஹாபோடும் பானஞ்செய்து அவ்வாயர்களையும் ஆநிரையையும் பாண்டீரமெனப்பட்ட ஆலமரத்தடியில் தமதுமாயையினாற் கொண்டுவந்துசேர்த்துக் காத்தனனென்பது கதை. உழைமேவிய கான் என இயைத்து- மான்கள் பொருந்தின காடு என்றுமாம். நிழல - ஒளியுமாம். இயற்கையிற் குளிர்ச்சியான முத்துமாலை விரகிகளுக்கு வெப்பஞ்செய்யும். ()

௪௧.—(இ - ள்.) கடிவாது - (பிராணிகளை வாய்ப்பல்லினாற்) கடியாமலே, கொல் - கொல்லுகிற, காளியன் - காளியன் என்னும் பாம்பினது, வெவ்விடமும் - கொடியவிஷத்தையும், படிமீது - பூமியின்மேல், தவிர்த்தல் செய் - நீக்குதல் செய்தருளின, பைம் புயலே- பசிய காளமேகம் போன்றவனே! நீ—, (இப்பொழுது), மெல்லிய தென்றலினால் - மந்தகதியான இளந்தென்றற்காற்றினால், விடம் ஆம் என - விஷத்தினாற்போல, இடர் செயல் - (எங்களை) வருத்துதல், எவ்வகை-எவ்வாறுபொருந்தும்? என்பர் - என்று கூறுவர், சிலர் - சிலமகளிர்; (எ - று.)

யமுநாநதியில் நீர்மடுவி லிருந்துகொண்டு அந்நதிமுழுவதையும் தன் விஷாக்கினியினாற் கொதிப்படைந்த நீருள்ளதாய்ப் பானயோக்கியமாகாத

படி செய்த காளியனென்னுந் துஷ்டநாகத்தைக் கிருஷ்ணன் தண்டிக்கவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி, அம்மடுவிற்குச் சமீபத்திலுள்ளதொரு கடம்பமரத்தின்மேலேறி அம்மடுவிற்குதித்து, கொடிய அந்நாகத்தின் படங்களின்மேலேறித் துவைத்து நர்த்தனஞ்செய்து நசுக்கி வலியடக்கி, மாங்கலியபிட்சையிட்டருளவேண்டுமென்று தம்மை வணங்கிப் பிரார்த்தித்த அவன்மனைவிகளான நாககன்னிகைகளின் விண்ணப்பத்தின்படி உயிரோடு கடலிற் சென்று வாழுமாறு அந்தக் காளியனை விட்டருளினன் என்பதாம். (௪௧)

௪௨.—(இ - ள்.) புள்ளின் பகு வாய் அது போல - (நீ முன்னே) ஒரு பறவையின் திறந்தவாயைக் கிழித்ததுபோல, நனி விள்ளும் குயில் வெவ்விய வாய் கிழியாய் - நன்றாகத் திறந்துகூவுகின்ற குயிலினது கொடிய வாயை (இப்பொழுது) கிழித்திடாமல், மொழியால் தள்ளும் தரமானது - (எங்கள்) வாய்ப்பேச்சால் (தோற்கச்செய்து) விலக்குதற்கேற்ற தன்மையுள்ள அக்குயில், (மொழியால்) எள்ளும் தரம் - தனது இன்குரலால் (எங்களை) அழிவடையச்செய்யும்படி, வைத்தனை - வைத்திட்டாய், என்பர் - என்று கூறுவர், சிலர் - சிலமகளிர்; (எ - று.)

கம்சனது ஏவலாற் கண்ணனைக் கொல்லும்படி கொக்குவடிவமாய் வந்த பகாசுரனைக் கண்ணபிரான் வாய்கிழித்து வதைத்தருளினார் என்பது கதை. குயிலின் குரல் காமோத்தீபகப் பொருள்களுளொன்று. (௪௨)

௪௩.—(இ - ள்.) முன்னம் தழல் அள்ளி அயின்றதை - (நீ) முன்னே [இளமையிலே] நெருப்பை வாரியெடுத்து அமுதுசெய்ததை, இன்று - இப்பொழுது, எம் உள்ளத்தினின் உமிழ்ந்தனைகொல் - எங்கள்மனத்தில் உமிழ்ந்துவிட்டாயோ? சுட நெஞ்சு துள்ளி துடிக்கும் - நெருப்புப்பட்டதனாற் போல (க்காமதாபத்தால் எங்கள்) மனம் பதைத்துத் துடிக்கும், என - என்று, வள்ளை குழை மங்கையர் சிலர் - வள்ளையிலைபோன்ற குழையென்னும் அணிகளையுடைய காதுகளையுடைய சிலமகளிர், சொல்வர் - சொல்வார்.

இன்றும், உம்மை - இசைநிறை. குழை - ஆகுபெயர். (௪௩)

௪௪.—(இ - ள்.) களியொடு எதிர் கண்டவர் கண்களை - களிப்புடனே (உன்னை ஒருகால்) எதிரிற்பார்த்தவரது கண்களை, நீ அளியோடு மறித்தும் விடாய் - (உருவெளித்தோற்றத்தால்) நீ அன்புடனே மீண்டும் நீங்குகிறாயில்லை; அதனால் - ஆதலால், கண்ணன் என ஒளி சேர் பெயர் உற்றனை - கண்ணனென்று பிரசித்திபொருந்தினபெயரைப் பெற்றாய்; எளியேம் அது அறிந்தனம் - எளியவர்களாகிய நாங்கள் அவ்வுண்மையை அறிந்துவிட்டோம், என்பர் - என்று கூறுவர், சிலர் - சிலமகளிர்; (எ - று.)

கிருஷ்ணனென்னும் வடமொழிச் சிதைவான கண்ணனென்னும்பெயருக்குவேறுகாரணம்கற்பித்துக்கூறினமையால், ஏதுத்தற்குறிப்பேற்றவணி.

௪௫.—(இ - ள்.) மன்றல் செழு மா மதுரை பதியில் - நெடுந்தெருக்களையுடைய அழகிய பெரிய மதுரைப்பட்டணத்திலே, தனு வீறு குன்ற அடு கொற்றவன் நீ - (கம்சனால் வைக்கப்பட்ட) பெரியதொரு வில்லினது வலிமையை யொழியும்படி யழித்திட்ட வெற்றியையுடையவனாகிய நீ, இன்றைக்கு ஒன்றி தனு நாளை ஒழித்திடுதல் - இன்றைத்தினத்தில் (இங்கே) பொருந்தி (எங்கள்) தனுவின் நாளை யொழியச்செய்தல், அரிதோ - (உனக்கு) அரியதொருகாரியமோ? [அன்றென்றபடி]; புகல் - கூறுவாய், என்பர் - என்று கூறுவர், சிலர் - சிலமகளிர்; (எ - று.)

கம்சன் வில்விழாஎன்கிறவியாஜம்வைத்துக் கொன்றுவிடும்பொருட்டுக் கிருஷ்ணபலராமர்களை வரவழைக்க, கண்ணபிரான் தமையனுந்தானுமாய் மதுரைக்குவந்து வில்லின்சாலைக்கு எழுந்தருளி அங்குள்ள பெரியவலியவில்லையெடுத்துவளைத்து நாணேற்றிமுறித்திட்டனனென்பது கதை. தனுநாளை

யொழித்திடுதல் என்பதற்கு-வில்லினது நாணியை யொழியச்செய்த லென்றும், உடம்பிலுள்ள நாணத்தை யழித்தலென்றும் சிலேடையால் இருபொருள்கொள்க. மன்றல் - பெருவிதி. தநு - வில்லென்னும்பொருளில், தநுஸ் என்னும் வடமொழித் திரிபு; உடம்பென்னும்பொருளில், தநு என்னும் வடமொழித் திரிப. (சரு)

சசு.—(இ - ள்.) வாலனின் முன் - சிறுபிள்ளையான (ருக்குமி யென்னும்) ராசகுமாரனது முன்னிலையிலே, ஒரு மங்கையை- (ருக்குமிணி யென்னும்) ஒருமகளை, வழியோடு - முறைமையாய், ஒழியா உடலோடும் எடுத்து ஒழிவாய்-உயிர்நீங்காத உடம்புடனே (மணஞ்செய்துகொள்ளும்பொருட்டு) எடுத்துக்கொண்டு அவ்விடம்விட்டு நீங்கிவந்தவனே! மொழிவேம் உயிர் முற்றும் எடுத்து ஒழிதல் - (இங்ஙனம்) எடுத்துக்கூறுகிற எங்கள் உயிர்களையெல்லாம் எடுத்துக்கொண்டு நீக்குதல், எழில் சேரும் உனக்கு எளிது - அழகுபொருந்தின உனக்கு எளிமையானதேயாம், என்பர்- என்றுகூறுவர், சிலர் - சிலமகளிர்; (எ - று.)

வாலன்- பாலனென்னும் வடமொழித் திரிபு; இவன், ருக்குமிணியின் முன்பிறந்தவன்: இவனை உபேக்ஷித்துக் கண்ணன் ருக்குமிணியைத் தனது தேரின்மேலேற்றிக்கொண்டுவந்து விவாகம்புரிந்துகொண்டார். வாலன் - சிசுபாலனுமாம்; அவன் ஏமாறியிருக்கவன்றோ கண்ணன் இவளை எடுத்து வந்தது. (சசு)

சஎ.—(இ - ள்.) மை கார் நிகர்வோய் - கருமையான மேகத்தை யொத்தவனே! (நீ), இடை மாதர் துகில் - இடைப்பெண்களது சேலைகளை, அக்காலம் - இளமைப்பிராயத்தில், அகற்று - கவர்ந்துபோன, பயிற்சிகொலோ - பழக்கத்தினுலோ, புக்கேம் அணி பொன் துகில் - (இங்கு) வந்து சேர்ந்த நாங்கள் தரித்துள்ள அழகிய ஆடையை, இக்காலம்-இப்பொழுது, பார்வையினுல் அகற்றின- (உனது) திருக்கண்நோக்கமாத்திரத்தால் நெகிழ்ந்தொழியச்செய்தருளினுய், என்பர் - என்று கூறுவர், சிலர் - சிலமகளிர்.

இடைமாதர் - மருதநிலத்துக்குங் குறிஞ்சிநிலத்துக்கு மிடையிலுள்ள முல்லைநிலத்தி லுள்ள மகளிர்; இடைச்சியர், பொதுவியர் என்பவற்றிற்குங் காரண மிதுவே. (சஎ)

சஅ.—(இ - ள்.) அன்று - அக்காலத்திலே [இளமையிலே], ஓடி - விரைந்துசென்று, சென்று ஓடிய தீயவன் ஆகிய கன்று - ஓடிவந்த கொடுந்தன்மையுடைய ஒரு அசுரனுகிய கன்றை, எறிந்தனை-(விளாமரத்தின்மேல்) வீசியடித்துக்கொன்றுய்; இன்று - இப்பொழுது, அடியோம் - (உனது) அடியவரான எங்களது, கன்றோடு - கைவளைகளுடனே, அணி ஆழி - அழகியமோதிரங்களும், கழன்று ஓட - கைவிட்டுநெகிழ்ந்து ஓடிவிடும்படி, ஆசு இல் விழி - குற்றமில்லாத உனது திருக்கண்பார்வையை, எறிந்தனை - (எங்கள்மேல்) வீசினுய், என்பர் - என்றுகூறுவர், சிலர் - சில மகளிர்; (எ - று.)

கம்சனுலேவப்பட்ட கபித்தாசுரன் விளாமரத்தின் வடிவமாய்க் கண்ணன்தன்கீழ்வரும்பொழுதுமேல்விழுந்துகொல்வதாக எண்ணி வந்துநிற்க, அதறிந்த கிருஷ்ணபகவான் அவ்வாறே தன்னைக்கொல்லும்பொருட்டுக் கன்றின்வடிவங்கொண்டுவந்த வத்ஸாசுரனைப் பின்னிரண்டுகால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி விளாமரத்தின்மேலெறிய, இருவரும் இறந்து தமது அசுரவடிவத்துடனே விழுந்தன ரென்பது கதை. கன்று - கைவளை. (சஅ)

சகூ.—(இ - ள்.) தகை கொண்டு உற - வலிமையைக்கொண்டுபொருந்தின, தானவன் ஆகும் - ஓர் அசுரனுகிய, அழல் உகுகின்று அடர் குறை- நெருப்பைச்சிந்திநெருங்குகிற பெருஞ்சுழல்காற்றை, ஒழித்தனை -(நீ) ஒழியச் செய்தருளினுய்; புகும் எம் உடல் நெஞ்சு புழுங்க - (உன்னைச்சரணமாக)

அடைகிற எங்களது உடம்பும் மனமும் தவிக்கும்படி, அழன்று இகல் - வெப்பம்விசிப்போர்செய்கிற, தென்றல் - தென்றற்காற்றை, ஒழித்திலை - நீக்குகிறாயில்லை, என்பர் - என்றுகூறிஇரங்குவர், சிலர் - சிலமகளிர்; (எ-று.)

தானவன் - தநுவின்மகன். உருகின்று - நிகழ்காலவினையெச்சம். கம்சனாலேவப்பட்ட காலியன் என்னும் அசுரன் பெருங்கடுஞ்சுழல்காற்றின் வடிவங்கொண்டுவந்து மிகவும் வேகமாய் யுகாந்தகாலத்துக்காற்றுப்போல வீசியடித்துப் புழுதிகளைமேலேபொழிந்து குழந்தைப்பருவமுடையகண்ணனை ஆகாயமார்க்கத்திலெடுத்துச்செல்ல, கண்ணபிரான் தமது திருமேனியில் மிகுந்தபாரத்தையுண்டாக்கி அவ்வசுரனைக் கீழே தள்ளிக் கழுத்தை வளைத்து நெரித்துக் கொன்றனரென்பது கதை. ஆல் - அசை. (சுகு)

நு0.—(இ - ள்.) துதி சேர் விசயன் துயரா வகை - புகழ்பொருந்தின அருச்சுனன் துன்பமடையாதபடி, வெம் கதிரோனை மறைத்தல் செய் காவல - வெவ்விய கிரணங்களையுடைய சூரியனை மறைத்திட்ட அரசனே! நல் பதி ஆக எம்பால் அணையாய் எனினும் - நல்லகணவனாக எங்களிடம் வந்துதழுவாமற்போவாயாயினும், மதி போக மறைத்திலை - சந்திரனை யொழியும்படி மறைத்தருளுகிறாயில்லை, என்பர் - என்று கூறுவர், சிலர் - சில மகளிர்; (எ - று.)

பாரதயுத்தத்திலே பதின்மூன்றுநாளில் தன்மகனான அபிமன்னியுவைக் கொன்ற ஜயத்திரதனை மறுநாள் சூரியாஸ்தமனத்திற்குமுன்னே கொல்வதாகவும் கொல்லமுடியாமற்போனால் அக்கினிப்பிரவேசஞ்செய்து இறப்பதாகவும் பிரதிஜ்ஞைசெய்த அருச்சுனனது சபதத்தை நிறைவேற்றியருளும் பொருட்டுக் கண்ணன் பதினான்காநாட்போரிற் பகலிலே சூரியனைச் சக்கரத்தால் மறைத்துவைக்க, அதுவரையிலிருந்தவிடந்தெரியாதபடியொளித்திருந்த அச்சைந்தவன் அப்பொழுது அஸ்தமித்துவிட்டதென்றுஎண்ணி வெளியில்வர, அதுபொழுது கண்ணன் திருவாழியை வாங்கியருள, அருச்சுனன் அச்சயத்திரதனைக் கொன்றனனென்பது கதை.

"புள்ளின்வாய் கிழித்தார் மருதிடந் தழித்தார் பூதனை யாருயிர் கழித்தார், புறஞ்சுழல் காற்றுண் டுதிரமொண் டிறைத்தார் புரவியொ டிரவியை மறைத்தார், திள்ளிய குயிலைப் பூத்ததே மாவைத் தூற்றுமன் னலையச்சிறு காற்றைச்சுடுமதி கோர மதியினை விடுத்தார் தோன்றிய மதியையென் சொல்வேன், * * * சோலைப்பொருப்பலங்காரர் பிறர்க்குபகாரமொன்றிலரே" என்னும்அழகர்கலம்பகச்செய்யுளிலும்இக்கருத்துக்கள்விளங்குதல் காண்க.

நுக.—(இ - ள்.) புலவோர் - தேவர்கள், மன்னி - நிலையாகவந்து பொருந்தி, பொழி - சொரிகின்ற, மா மலர் - சிறந்த பூக்கள், சூழ் - சூழ்ந்துள்ள, உன்னை - நின்னை, புகழ்வோர் - துதிக்கும் அடியார்கள், உனை நேர்வது - (சாரூப்யத்தால்) உன்னை ஒப்பது, மெய் - உண்மையாகும்; (ஏனெனில் உன்னைப்புகழும் அடியவராகிய நாங்கள்), வேள் துன்னி பொழி மலர் சூழ்தலின் - மன்மதன் வந்து நெருங்கிச்சொரிகின்ற புஷ்பபாணங்கள் மேற்சூழ்தலால், இவண் - இவ்விடத்தில் [இப்பொழுது], நீ என்ன பொலிவேம் - (தேவர்கள்பெய்யும்பூமாரிசூழ்ந்த) நீ போல விளங்குவோம், என்பர் - என்றுகூறுவர், சிலர் - சிலமகளிர்; (எ - று.) (நுக)

நுஉ.—(இ - ள்.) தேர் ஆம் வரை மீதும் - (ஏறிச்செல்லுகிற) தேராகிய மலையின்மேலும், எம் சிந்தை எனும் நீர் ஆர் மலர் மீதும் - எங்கள் மனமாகிய நீரில்தோன்றுந் தாமரைமலர்மேலும், நெடு கண் எனும் ஆர் ஆர்கலி மீதும் - நீண்ட (எங்கள்) கண்களாகிய நிறைந்த கடலின்மேலும், அ மூவர் என - (முறையே சிவன் பிரமன் திருமால் என்னும்) அந்தத்திரி

மூர்த்தியர்போல, ஏர் ஆக இருந்தனை - அழகாக எழுந்தருளியிருந்தாய், என்பர் - என்றுகூறுவர், சிலர் - சிலமகளிர்; (எ - று.)

திரிமூர்த்திகளுள் சிவன் கைலாசகிரியிலும், பிரமன் தாமரைமலரிலும், திருமால் திருப்பாற்கடலிலும் உறைபவராவர். ஆர்கலி - நிறைந்த ஓசையையுடையது; வினைத்தொகையன்மொழி. நீரார்மலர் - அம்புஜம். மூவர்- தொகைக்குறிப்பு. அ - உலகறிசுட்டு. (௫௨)

௫௩.—(இ - ள்.) மை வண்ணம் - அஞ்சனத்தின் நிறத்தையுடைய, மலர் குழல் - பூக்களைமுடித்த கூந்தலையுடைய, மாதர் எலாம் - (அத்தினபுரத்து) மகளிர்களெல்லோரும், காமன் - மன்மதனது, கை - கைகளால் எய்யப்படுகிற, வண்ணம் - அழகிய, மலர் கணை - புஷ்பபாணங்களாலும், வில்லால் - கருப்புவில்லினாலும், நை வண்ணம் - தாங்கள் வருந்துந் தன்மையை, மனத்தொடு - மனத்தினால், நாடினர் ஆய் - நினைத்துப்பார்த்தவர்களாய், இவ் வண்ணம் இரங்கிட - இவ்வாறு விசனப்படும்படி, ஏகினன் - (கண்ணபிரான்) சென்றருளினான்; (எ - று.) (௫௩)

௫௪.—(இ - ள்.) தூண்டு வாம் புரவி மேலும் - செலுத்தப்படுகிற தாவிப்பாயுந்தன்மையுள்ள குதிரையின் மேலும், துளி முகில் அகடு கீண்டு நீண்ட பொன் கொடி தேர் மேலும் - மழைநீர்த்துளியையுடைய மேகத்தின் நடுவிடத்தைப் பிளந்து நீட்சிபெற்ற துவசத்தையுடைய பொன்மயமான தேரின்மேலும், நிழல் பொரு களிற்றின் மேலும் - (வேறுயானையென்றெண்ணித்) தன்நிழலுடனே தான்போர்செய்கிற மதயானையின்மேலும், பாண்டவர் - பாண்டுகுமாரர்கள், குரு நாடு எல்லாம் படர்ந்தனர் - குருநாட்டின் எல்லையுள்ளளவும் உடன்சென்று (கண்ணனைவழிவிட்டு), பரிவின் புல்லி - அன்புடனே (அவ்வெம்பெருமானைத்) தழுவி, வாடும் நெஞ்சம் மீள்இலா தொடர - (அவரைப்பிரிதலால்) வாடுகிற தமது மனம் (அவரைவிட்டு) மீளாமல் (அவர்பின்னே) தொடர்ந்துசெல்ல, மீண்டனர் - தாம் திரும்பினார்கள்; (எ - று.)—மாதோ - ஈற்றசை. (௫௪)

௫௫.—(இ - ள்.) விண் அகம் வணக்கும் ஆற்றல் - சுவர்க்கலோகத்தினிடத்திலுள்ள தேவர்யாவரையுந் தம்மைவணங்கச்செய்யும் வல்லமையையுடைய, வெம் திறல் அவுணர் - கொடியபலத்தையுடைய அசுரர்களை, தேய்த்து - அழித்து, கண் அகல் ஞாலம் காக்கும் - இடம் விசாலமான நிலவுலகத்துயிர்களனைத்தையுங் காத்தருளுகிற, காவலன் தன்னை - காத்தல்தொழிற்குரிய கடவுளாகிய கண்ணபிரானை, காக்க - (வழியிலே) காக்கும்படி, அண்ணல் வேல் தருமன் விட்ட - பெருந்தன்மையையுடைய வேலாயுதத்தையுடைய தருமபுத்திரன் கூடஅனுப்பின, அடல் அம் தானை வெள்ளம் - வெற்றியையுடைய அழகிய சேனைக் கூட்டம், டண் அகம பசு பொன் திண் தேர் படையொடு - அலங்காரமமைந்த பசும்பொன்மயமான வலிய தேர்களின் தொகுதியுடனே, நடந்தது - (கண்ணபிரானோடுகூடச்) சென்றது; (எ - று.)— அன்றே - ஈற்றசை; அப்பொழுதென்றுமாம். (௫௫)

௫௬.—(இ - ள்.) (கண்ணபிரான்), வளம் கொள் பாஞ்சாலம் நாடும் - எல்லாவளங்களையுங்கொண்ட பாஞ்சாலதேசத்தையும், மலர் புனல் யமுனை நாடும் - தாமரைமுதலிய பூக்களையுடைய நீரினையுடைய யமுனாநதிபாயும் மருநாட்டையும், தெளிந்த வெள் முத்தம் சிந்தும் தீம் புனல் சிந்து நாடும் - தெளிவான வெண்ணிறமான முத்துக்களைக் கொழிக்கின்ற இனிமையான நீர்வளத்தையுடைய சிந்துதேசத்தையும், இள களி யானை மன்னர் எதிர்கொள - இளமையான மதக்களிப்பையுடைய யானைச்சேனையையுடைய அந்தந்தநாட்டரசர்கள் தன்னையெதிர்கொண்டுவந்து உபசரிக்க, இறந்து - சென்றுசேர்ந்துநீங்கிக்கடந்து, மா நீர் விளிம்பு அடுத்து உயர் ஆனர்த்தம் -

மிகுந்த நீரினால் எல்லாப்பக்கத்துஞ் சூழப்பட்டுச்சிறந்தயூனர்த்தமென்னும் பெயரையுடைய துவரைநாட்டை, மெல்லென சென்று சேர்ந்தான் - மெது வாகப் போயடைந்தான்; (எ - று.)
யமுனை - யமுநா என்னும் வடமொழித் திரிபு; யமனுடன்பிறந்தநதி. (௫௬)

௫௭.—(இ - ள்.) அதிர் கடல் வேலி மூதூர் - ஒலிக்கின்றகடலாகிய நீரரணைச் சுற்றிலுமுடைய பழமையானதுவாரகாபுரி, அணித்து என - சமீபத்திலுள்ளதாக, குறுகி - போய்ச்சேர்ந்து, அண்ணல் - பெருந்தன்மையுடைய கண்ணபிரான், இதழ் ஒளி முகத்தினூடே எறித்தலின் - அதரத்தின் ஒளியையுடைய தனது திருமுகமண்டலத்திலே (வைக்கப்பட்டு) விளங்குதலால், செவ் வாய் அன்னம் மது விரி முளரி சேர்ந்த வண்ணம் ஒத்து இலங்கு - சிவந்தவாயையுடைய அரசவன்னமொன்று தேனோடுமலர்ந்த தாமரைமலரிற் பொருந்தினவிதத்தை யொத்துவிளங்குகிற, கற்றை கதிர் வளை - தொகுதியான ஒளியையுடைய (ஸ்ரீபாஞ்சசன்னியமென்னுந்தனது) சங்கத்தை, துவர் வாய் வைத்து -சிவந்த தனதுவாயிலே வைத்திட்டு, கல் என முழக்கினான் - கல்லென்னுமொலியுண்டாம்படி ஊதிமுழங்கச்செய்தான்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

'இதழொளி முகத்தினூடே' என மூலத்தைத்திருத்துக. சங்கத்துக்கு அன்னமும், திருமுகத்துக்குத் தாமரைமலரும் உவமை. (௫௭)

௫௮.—(இ - ள்.) வெள் வேல் யாதவர் - வெண்ணிறமாய் விளங்குகின்றவேலாயுதத்தையுடைய யதுகுலத்தரசர்கள், குடம் வளை முழக்கம் கேட்டு - குடம்போலத் திரண்டுள்ள திருமால்சங்கத்தினது தொனியைச் செவியுற்று, கொற்றவன் வந்தான் என்னா - வெற்றியையுடைய கண்ணபிரான் வந்தருளினானென்று அறிந்து, கடல் உடைத்து எழுந்தது என்ன - கடல் கரையையுடைத்து மேலெழுந்து புரண்டுவந்தாற்போல [பெருந்திரளாக], கடாம் பொழி களிற்றினோடும் - மதஜலத்தைப்பொழிகின்ற யானைச்சேனையுடனே, விடு கணை விசைய ஆய வெம் பரி வெள்ளம் ஈண்ட - எய்யப்படுகிற அம்பினது வேகத்தை யுடையனவான (பகைவர்க்குப்) பயங்கரமான குதிரைச்சேனைகளும்நெருங்க, முரசு இடி இயம்ப-பேரிகைகள் இடியோசைபோல முழங்க, எதிர் சென்று உற்றார் - (கண்ணனையெதிர்கொள்ளுதற்கு) முன்னேபோய்ச்சேர்ந்தார்கள்; (எ-று.)— யாதவர் - தத்திதாந்தநாமம். (௫௮)

இதுவும், மேற்கவியும் - குளகம்.

௫௯.—(இ-ள்.) மண்ணவர்க்கு அளப்பு இல் காலம் - பூலோகத்திலுள்ளமனிதர்களுக்கு அளவிறந்தகாலமாகவுள்ளது, வைகுந்தம் மருவினோருக்கு - ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு, எண்ணிடின் கணம் ஆம் போல - நினைத்துப்பார்க்குமிடத்துக் கணப்பொழுதாய்விடுவதுபோல, கண்ண - ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியே! நின் கலந்து வைகின் - உன்னை நாங்கள் கூடிவாழ்ந்தால், அளப்பு இல் காலம் எங்களுக்கு கணம் - அளவிறந்த காலம் எங்களுக்குக்கணப்பொழுதாம்; அண்ணல் - தலைவனே! நின் பிரியின் - உன்னை (நாங்கள்) விட்டுப்பிரிந்திருந்தால், அரை கணமே எனும் - அரைக்கணப்பொழுதேயானாலும், ஆயிரம் உகம் ஆம் - (எங்களுக்கு) ஆயிரம் யுகமாகவிருக்கும், என்னோ - இது என்னவியப்பு! என்று - என்றுகூறி, (எ - று.)—வாழ்த்த, தாழ, இறைஞ்ச என மேற்கவியோடு இயையும்.

வைகுந்தம் - வடமொழித்திரிபு; பரமபதம். கணம் - க்ஷணம், உகம் - யுகம்; இவையும் வடசொற்றிரிபுகள். (௫௯)

௬௦.—(இ-ள்.) நான்மறையாளர் - நான்குவேதங்கட்குமுரிய அந்தணர்கள், வாழ்த்த - ஆசீர்வதிக்கவும், நகு முடி அரசர் தாழ - விளங்குகிற

கிரீடத்தையுடைய அரசர்கள் வணங்கவும், மீன் உயர் கொடியோன் ஆதி - மீனின்வடிவத்தைபெழுதிய உயர்ந்தத்வசத்தையுடைய (மன்மதனாகிய அவதாரமான) பிரத்யும்னன் முதலிய, வெம் திறல் குமரர் எல்லாம் - கொடிய வலிமையையுடைய (கண்ணனது) குமாரர்களெல்லோரும், தாயையோடு இறைஞ்சா நிற்ப - தந்தம்சேனையுடனேவந்து வணங்கிநிற்க, தாமரைமலரின் வாழும் தேன் அவாம் தெரியல் மார்பன் - செந்தாமரைப்பூவில்வாழ்கிற தேன்போலினியதிருமகள் விரும்பிவாழ்தற்கிடமான விளங்கும்வனமாலையையணிந்த திருமார்பையுடைய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, திரு நகர் சென்று புக்கான் - அழகிய தனதுதுவாரகாபுரியைப் போய் அடைந்தான்; (எ - று.) —தேன் - உவமவாகுபெயர். (கூ0)

"நிரைவிலைபமுதபெற்றச்சிறந்தகையன்றிச்செம்பொன்
வரையுமின்னமுதபெற்றவயக்கியவண்ணந்தோன்ற
வெரிமணிமாடந்தோறுமின்னிசைமாதரீண்டிக்
கருமுகில்வண்ணன்செவ்விகண்களிற்பருகினரே"

என ஒருபாட்டு இச்செய்யுளின்பின் ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகிறது.

கூக.—(இ - ள்.) (துவாரகாபுரியிற் கண்ணன்செல்லும் வீதிகளில்), பெண் அமுது அனைய நல்லார் - பெண்வடிவமெடுத்ததொரு அமிர்தத்தைத் தனித்தனியொக்கின்ற அழகிய மகளிர், கண்ணினாலும் - தங்கள் கண்களாலும், காதல் செய மனத்தினாலும் - விரும்புதலைச்செய்கிற தங்கள் மனத்தாலும், மழலை தீம் சொல் தண் நறு குமுதம் வாயால் சாற்றிய கிளவியாலும் - இனிப்பான மழலைச்சொற்களையுடைய குளிர்ந்த வாசனைவீசுகிற செவ்வாம்பல் மலர்போன்ற தமதுவாயாற் சொல்லுகிற சொற்களினாலும், கண்ணனை - ஸ்ரீகிருஷ்ணனை, உள் அன்பினாலே நெகிழ்ந்து உருகுற - தங்கள்மனம் அன்பினாற் கனிந்துஉருக, பெட்பொடு - விருப்பத்துடனே, தழீஇக்கொண்டார் - ஆலிங்கனஞ்செய்துகொண்டார்கள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

கண்ணினால் தழுவிக்கொள்ளுதல் - பார்த்தல். மனத்தினால் தழுவிக்கொள்ளுதல் - கருதுதல். சொல்லினால் தழுவிக்கொள்ளுதல் - அவ்விஷயமாகப்பேசுதல். பெண்ணமுது - இல்பொருளுவமை. பெட்பு - தொழிற்பெயர்; பெண் - பகுதி. (கூக)

கூஉ.—(இ - ள்.) எதில் வளர் செம் பொன் மார்பன் - அழகுமிகுந்த சிவந்தபொன்னுருபானலக்ஷ்மியணிந்த திருமார்பினையுடைய கண்ணன், தொழுவார்தம்மை - தன்னைவந்துவணங்குபவர்களை, இறைஞ்சியும் - எதிரில் வணங்கியும், தழுவியும் - ஆலிங்கனஞ்செய்துகொண்டும், தட கை தொட்டும் - பெரிய கைகளாற் பரிசித்தும், தண் நகை முகிழ்த்தும் - குளிர்ந்த புன்சிரிப்பைச் செய்தும், நோக்கி இனிது மொழி உரைத்தும் - குளிரப்பார்த்து இன்சொற்களைக்கூறியும், செவ்வி முகம் மலர்ந்து உவகை பொங்க - அழகையுடைய தனதுதிருமுகம் மலர்ச்சிபெற்றுக்களிப்புமிக, செழுநகர் மாந்தர்க்கு எல்லாம் - சிறந்த அந்தத்துவாரகாபுரியில் வசிக்கிற மனிதர்களெல்லோருக்கும், சிறப்பு செய்தனன் - (அவரவர்தகுதிக்கேற்பச்) சிறப்புக்களைச்செய்தருளினான்; (எ-று.)—மாதோ - ஈற்றசை.

செம் பொன் மார்பு - சிவந்ததிருமகளைத் தரிக்கும் மார்புமாம். 'இறைஞ்சியுந்தொழுது மேற்ப' என்றும், 'நகைத்தும் பார்த்தும்' என்றும்பாடம்.

கூஙு.—(இ - ள்.) கோத்த அழல் ஆழியான் - திரளான நெருப்பை விசுதன்மையுள்ள சக்கராயுதத்தையுடைய கண்ணன், தந்தை தாள் தொழுது - தனதுபிதாவான வசுதேவரது திருவடிகளை வணங்கி, தாயர் தளிர் அடி சென்னி சூடி - தனதுதாய்மாரது தளிர்போல்மென்மையான திருவடி

களைத் தனதுசிரசின்மேல் தரித்து [சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு], சிந்து அரி மழை கண் செவ்வாய் தேவியர் - சிதறியுள்ள சில சிவந்தரேகைகளையுடைய குளிர்ந்தகண்களையும் சிவந்தவாயையுமுடைய தனது மனைவிமார், இவலெ சிந்தி வந்து எழு கரு கார் கண்ட மட மயில் குழாத்தின் - நீர்த்துளிகளைப்பெய்துகொண்டு வானத்திலெழுந்துவருகிற கரியகாளமேகத்தை யருகிற்பார்த்த இளமையானமயில்களின்கூட்டம்போல (த்தன்னைக் கண்டுமகிழ்ந்து), மொய்ப்ப - சுற்றிலும்வந்துநெருங்க, தன் குரு மணி கோயில் புக்கான் - பெரியஇரத்தினங்களைப்பதித்துள்ள தனது அரண்மனையை யடைந்தான்; (எ-று) (கூ௩)

கூ௪.—(இ - ள்.) பண் என - இசைப்பாட்டுப்போல, பழுத்த - சுவைமிகுந்துள்ள, தீம் சொல் - இனிப்பான சொற்களைச்சொல்லுகிற, பவளம் வாய் - பவழம்போற்சிவந்த வாயையுடைய, முளரி பாவை - தாமரைமலரில்வாழுந்திருமகளாது, கண் என - கண்களின்வடிவாய், கிடந்த - பொருந்தின, நீலம் கடலினும் - கருங்கடலிலும், கறங்கு தெள் நீர் - ஒலிக்கின்ற தெளிவான கடல்நீர் சூழ்ந்த, மண் அகம் மடந்தை - நிலவுலகத்திலிடத்துக்குத் தலைவியான பூதேவியினது, கொங்கை - தனங்களாகிய, வரையினும் - மலைகளின்மேலும், உறைந்த - வசிக்குந்தன்மையுள்ள, மாயன் - கண்ணபிரான், விண்ணோர் பரவ - தேவர்கள் துதித்துவணங்க, விண் என - பரமபதத்திலேபோல, திகழ்ந்து வீற்றிருந்தான் - (அத்துவாரகாபுரியிலே) விளங்கி வேறொருவர்க்கில்லாத சிறப்புடன்எழுந்தருளியிருந்தான்; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

'உறைந்து' என்ற பாடத்துக்கு - ஸ்ரீதேவி பூதேவிகளின் அம்சமானருக்குமிணிசத்தியபாமைஎன்னுந்தேவியரோடு கூடிவசித்து என்றுபொருள்.

கண்ணபிரான்துவரையடைந்தஅத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது

பரிட்சித்துவின்றோற்றமுரைத்த அத்தியாயம்.

அபிமன்னியுகுமாரனான பரிட்சித்திமகாராசனது பிறப்பைக் கூறும் பாகம். பரீக்ஷித் என்னும் வடமொழிப்பெயர்க்குக் காரணம் இவ்வத்தியாயத்தின் பன்னிரண்டாஞ்செய்யுளில் விளங்கும். தோற்றம் - உற்பத்தி.

க.—(இ - ள்.) என்னலும் - என்று (சூதமுனிவர்) கதைசொன்னவளவிலே, முனிவர் - (கேட்டுவரும்) சௌனகாதிமுனிவர்கள், 'இகல் பரித்தாமா எய் கணை - வலிமையையுடைய அசுவத்தாமன் பிரயோகித்த அபாண்டவாஸ்திரம், உத்தரை வயிற்றின் மன்னிய குழவி செகுக்கலா வண்ணம் - உத்தரையினது கருப்பத்திலே பொருந்தின குழந்தையை அழித்திடாதபடி, மாயவன் காத்தனன் - திருமால்காத்தருளினன், என்றாய் - என்று கூறினாய்; கன்னி அம் துளவோன் - இளமையான அழகிய திருத்துழாய் மாலையையுடைய கண்ணபிரான், காத்ததும் - (அக்குழந்தையைக்)காத்தருளினவிதந்தையும், பிறந்து - (அக்குழந்தை) பிறந்து, கமல லோசனன் கதை கேட்ட தன்மையும் - தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடைய திருமாலினதுதிவ்யசரித்திரத்தை(ச்சுகமுனிவரிடம்)கேட்டதன்மையையும், புகலவேண்டும் - (எங்களுக்கு நீ சொல்லியருளவேண்டும்,' என்று உரைப்ப - என்று சொல்ல, சூத மா முனிவன் - சூதமகாமுனிவர், சாற்றினன் - (அவ்வரலாறுகளைச் சொல்பவரானார்; (எ - று.)—அவை மேற் காண்க. (க)

உ.—(இ - ள்.) ஆழியான் - சக்கரபாணியான திருமால், சூழ்தரு பொலம் தன் முடியினன் - தான்அணிந்துள்ள பொன்னினாலாகிய குளிர்ந்த [கண்ணுக்கினிய] கிரீடத்தையுடையவனும், வயிரம் தொடியினன் - வச்சிரரத்தினங்களைப்பதித்த தொடியென்னுங்கையணியை யுடையவனும், இலங்கு பொன் துகிலோன் - விளங்குகின்ற பொன்மயமான பீதாம்பரமென்னும் பட்டாடையையுடையவனும், தாழ் மணி குழையன் - தாழ்ந்துதொங்குகிற இரத்தினகுண்டலங்களையுடையவனும், கடு கதை சுழற்றும் தாமரை கரத்தினன் - கொடியகதாயுதத்தைச்சுழற்றுகிற செந்தாமரைமலர் போன்ற திருக்கையையுடையவனும், ஆகி - ஆய், ஊழி வெம் தீ போல் உறுகணை உத்தரை வயிற்றின் குழவி மேல் உறுமல் - வெவ்வியயுகாந்தகாலத்து அக்கினிபோல [மிகப்பயங்கரமாக] வருகிற அபாண்டவாஸ்திரம் உத்தரையினது கருப்பத்திலே பொருந்தின குழந்தையின்மேற் படவொண்ணாதபடி, ஆங்கு - அவ்விடத்து, ஓர் பெரு விரல் அளவை ஆயது ஓர் உரு கொடு - ஒருபெருவிரலளவானதொரு ஒப்பற்ற சிறுவடிவத்தைத் தான் எடுத்துக்கொண்டு, புரந்தான் - காத்தருளினான்; (எ - று.)—பெருவிரல் - அங்குஷ்டம். பொலந்தார்முடியினன் என்றும் பாடம். (உ)

ந.—(இ - ள்.) ஒசியும் நுண் இடை - (கொங்கை முதலிய பாரத்தால்) தளர்கின்ற சிறுத்த இடையையும், வரு முலை - மேன்மேல்வளர்கிற தனங்களையு முடைய, உத்தரை - உத்தரையானவள், திங்கள் ஓர் பத்தும் சென்றபின் - (கருமுதிர்தற்கு உரிய) பத்துமாதகாலமுங் கழிந்தபின்பு, ஒரு இள திங்கள் அம் குழவி போன்ம் என உரு வளர் குழவியை - நிறத்தையுடைய இளமையான அழகிய பிறைச்சந்திரனை யொக்கு மென்னும்படி அழகிய வடிவம் வளர்ந்த குழந்தையை, பரிவினின் - அன்புடனே, வயிறு வாய்த்தனள் - பெற்றாள்; (எ - று.)

வயிறுவாய்த்தல் - வயிற்றிலிருந்து வெளிப்படுத்தல்; பிரசவித்தல். திங்களங்குழவி - பாலசந்திரன். (ந)

ச.—(இ - ள்.) போற்றிடு - (யாவராலுஞ்) சிறப்பித்துத்துதித்துக் கூறப்படுகிற, தவுமியன் முதல - (பாண்டவபுரோகிதரான) தௌமியர் முதலானவர்கள், புங்கவர் - சிறந்த அந்தணர், தோற்றிய புதல்வனை சூழ்ந்து - பிறந்த அக்குமாரனை வந்துசூழ்ந்து, நால் மறை சாற்றிய விதி முறை - நான்குவேதங்களிற்கூறிய விதிப்படியே, புவி மிசை அறம் களிப்ப - பூலோகத்திலே தருமதேவதை களிப்படையும்படி, சாதம் நல் வினை ஆற்றினார் - ஜாதகருமம் என்னும் நல்லதொழிலைச் செய்வித்திட்டார்கள்; (எ - று.)

தவுமியன் - போலி. புங்கவர் - காளைபோன்றவர். சாதகருமம் - குழந்தைபிறந்தபொழுது செய்வதொரு வைதிகச்சடங்கு. (ச)

ரு.—(இ - ள்.) மழை வளம் சிறந்திட - மழையின் வளஞ் சிறக்க, மலர்ந்த - குளிர்ச்சியாய் விளங்குகிற, பார் எலாம் - நிலவுலகத்தினிடம் முழுவதிலும், நிழல் மதி தனி குடை நிழற்று - ஒளியையுடைய பூர்ணசந்திரன் போன்ற ஒப்பற்ற வெண்கொற்றக்குடையால் நிழலைச் செய்கின்ற, காவலன் - காத்தற்றொழில்வல்ல யுதிட்டிரமகாராசன், (அப்பொழுது), முழு மறை அந்தணர் முகந்து கொள்ள - பூர்ணமான வேதத்தை யறிந்த பிராமணர்கள் மிகுதியாகப்பெறும்படி, பொருவு இல் பொன் மழை - ஒப்பில்லாத சுவர்ணவருஷத்தை, பொழிவு உற புரிந்தனன் - மிகுதியாகச்சொரிதலைச்செய்தான்; (எ - று.) (ரு)

இதுமுதல் ஏழுகவிகள் - சாதகம்நோக்கியும் தமது ஞானக்கண்ணினாலும் வருவது கூறும் அந்தணரது வார்த்தை.

சு.—(இ - ள்.) இவன் - இவ்விராசகுமாரன், தள் அரு கொடையிஞல் - விலக்குதலில்லாததானத்தால், சார்ந்த அம் சிறை புள்ளினுக்கு உயர் தலை புக்க வேந்து - தன்னைச்சரணமடைந்த அழகிய இறகுகளையுடைய ஒருபறவையைக் காக்கும்பொருட்டு உயர்ந்ததராசுத்தட்டையடைந்த சிபிச்சக்கரவர்த்தியாவன்; எள்ளல் இல் அன்பினுல் - இகழ்ச்சியில்லாத (திருமாலிடத்துள்ள) பக்தியினால், எறிந்த தூண் எழு வள் உகிர் மடங்கலை வழுத்து தோன்றலே - அடிக்கப்பட்ட தூணினின்று அவதரித்த கூர்மையான நகங்களையுடைய நரசிங்கமூர்த்தியைத் துதித்த பிரகலாதகுமாரனேயாவன்; (எ - று.) (சு)

எ.—(இ - ள்.) இவன் - இந்த அரசிளங்குமரன், மெய்ம்மையால் - சத்தியத்தினுல், மே தகு தயரதராமன் - மேன்மைபொருந்தின தசரதசக்கரவர்த்தியினது குமாரனான ஸ்ரீராமபிரான்போல்வான்; வெம் சிலையினுல்- (பகைவர்க்குப்) பயங்கரமான வில்லின்தொழிலால், தீது அகல் விசயன் - குற்றமற்ற அருச்சுனன்போல்வான்; ஏதம் இல் பொறுமையால் - குற்றமில்லாத பொறுமையினுல்,இனிய பார்மகள்-இனிமையான பூதேவிபோல்வான்; உலகு உயிர் புரத்தலான் - உலகத்திலுள்ள எல்லாவுயிர்களையுந் தன்னுயிர் போலக்காத்தலால், ஓதிய தாய் - (எல்லாவுயிர்க்குஞ்) சிறப்பித்துக்கூறப் படுகிற தாயைப் போல்வான்; (எ - று.) (எ)

அ.—(இ - ள்.) இவன் - இவ்விளமகன், காட்சியால் - சிறந்ததோற்றத்தால், இந்திரன் - தேவேந்திரன்போல்வான்; கனகம் ஈட்டும் நல் மாட்சியால் - செல்வத்தைச் சேர்க்கின்ற நல்லபெருங்குணத்தால், வட திசை தலைவன் - வடக்குத்திக்குக்குத்தலைவனான குபேரன் போல்வான்; மா தவத்து ஆட்சியால் - மிக்கதவத்தைச் செய்யுந் தன்மையினுல், அரு புகழ் அரச மா முனி - அருமையான கீர்த்தியையுடைய சிறந்த இராசவிருடியாவான்; பொற்பினுல் - அழகினுல், பூட்சியோடு உறை மதன் - (அநங்கனுந்தன்மையின்றி) உடம்போடு பொருந்தும் மன்மதனுவான்; (எ - று.)

பூட்சி - உடல். ஆட்சி - தொழிற்பெயர்; ஆள் - பகுதி. (அ)

கூ.—(இ - ள்.) இடை விடாமலே - நடுவிலே விட்டொழியாமலே, இரு பொழுதும் - (பகல் இரா என்னும்) இரண்டுகாலத்திலும், திகழ்ந்து - விளங்கி, மருவு - பொருந்துகிற, இள மதி என - இளஞ்சந்திரனென்று உண்டாயின் அதுபோல, வயங்கு - விளங்குகிற, சீரினுன் - சிறப்புடையவனான இக்குமாரன், இன் மகன் செயும் பண்பினுல் - இனிமையான யாகங்களைச் செய்யுந் தன்மையால், பரதன்- (தன்குலத்து முன்னரசர்களுட் சிறந்த) பரதன்போல்வான்; இகல் செரு இடை பகைஞரை செகுக்கும் சிங்கம் - உக்கிரமாகச்செய்கின்றபோரிலே பகைவர்களை அழிக்குந்தன்மையில் அப்படிப்பட்ட சிங்கம் போல்வான்; (எ - று.)

மகன் - மகமென்னும் வடமொழியின் இறுதிப்போலி. இருபொழுதுந் திகழ்ந்து இடைவிடாமலே மருவு இளமதி - இல்பொருளுவமை. 'மகம்' என்றும் பாடம். பரதன்-துஷ்யந்தமகாராசனுக்குச் சகுந்தலையினிடம் பிறந்தவன். (கூ)

கo.—(இ - ள்.) (இவன்), கார்தும் மீன் விழி கலி கடிந்து - (கோபக் கொடுமையால்) எரிகின்ற நீண்டகண்களையுடைய கலியுகபுருஷனை (த்தனது ஆளுகையில் வாராதபடி) விலக்கி, தின் புயத்து ஏந்து பார் முழுவதும் - வலிய தனது தோள்களிலே பரிக்கப்படுகிற பூலோகமுழுவதையும், இனிதின் ஆண்டபின் - இனிமையாக அரசாட்சிசெய்தபின்பு, சார்ந்தர் மா தவரொடு சார்ந்து - பொறுமைக்குணமுள்ள பெருந்தவமுடைய முனிவர்களுடனே (சிலநாள்) கலந்திருந்து, கங்கையின் - கங்காநதியினிடத்திலே, பாந்த

னால் உடல் விழ - பாம்புகடித்ததனால் தன்னுடம்பு இறந்துவிழ, (அதனை நீத்து), பரத்தில நண்ணுவான் - (எல்லாப்பதவிகளினுஞ்) சிறந்த பரமபதத்திலே போய்ச்சேர்வான்; (எ - று.) (க0)

கக.—(இ - ள்.) கோது அகல் - குற்றமில்லாத, கணிதம் நூல் சோதிடசாஸ்திரம், குறித்த ஆறு - கூறிய விதம், இ வகை - இவ்வாறும், எனு - என்று, மாதவர் - பெருந்தவமுடைய முனிவர்கள், அரசன் முன் - அரசனாகிய யுதிட்டிரனது முன்னிலையிலே, வழங்கி - கூறி, ஆங்கு - அப்பொழுது, தாழ் தட கை வெம் போதகம் என வளர் புதல்வற்கு - நீண்டுதொங்குகிற பெரிய கையையுடைய வெவ்விய யானைக்குட்டிபோல வளர்கிற அக்குமாரனுக்கு, சாதகம் எழுதினர் - ஜாதகம் குணித்து எழுதினார்கள்; (எ - று.) —அரோ - ஈற்றசை.

சாதகமெழுதல்-பிறந்தகாலத்துஉள்ளகிரகநிலையைப்பலத்துடன்எழுதுதல்

கஉ.—(இ - ள்.) (அக்குமாரன்), தீ திரள் உமிழும் இந்த சினம் படை - நெருப்புக்கூட்டத்தைச் சொரிகின்ற கோபத்தையுடைய இந்த அஸ்திரம், அடாது - (நம்மைக்) கொல்லாதபடி, நம்மை காத்து உறை - நம்மைக் காத்தல்செய்துகொண்டு வசிக்கின்ற, இவன் - இந்தத்தலைவன், யார் என்று - யாவனோவென்று, கருவினில் - (உத்தரையினது) கருப்பத்திலிருந்துகொண்டே, கண்ணன்தன்னை பார்த்தலின் - ஸ்ரீகிருஷ்ணபகவானை ஆராய்ந்து நோக்கினதனால், பரிட்சித்து என்றும் - பரீக்ஷித் என்றும், பரம்சுடர் நல்கலாலே - எல்லா ஒளிகளிலும் மேம்பட்ட ஒளிவடிவமான திருமாலாற் காத்தருளப்பட்டதனால், எந்த சீர் விண்டுராதன் என்றும் - (யாவராலும்) புகழப்படுகிற சிறப்பையுடைய விஷ்ணுராதனென்றும், நல் நாமம் உற்றனன் - சிறந்த பெயரை யடைந்தான்; (எ - று.)

பரீக்ஷித் - ஆராய்ந்துபார்ப்பவன். விண்டுராதன் - திருமாலாற் அருளப்பட்டவன். (கஉ)

கங.—(இ - ள்.) செவ் வாய் கோமகன் - சிவந்த வாயினையுடைய அவ்வீரகுமாரன், மறம் மலி - பராக்கிரமம் மிகுந்த, நெடு வேல் - நீண்டவேலாயுதத்தையுடைய, மன்னன், யுதிட்டிரராஜனது, மணி குறங்கு - அழகிய மடியின்மேல், இருந்தும்—, வீமன் - பீமசேனனது, தரு மலர் அலங்கல் மாலை - அடர்ந்தபூக்களாலாகிய அசையுந்தன்மையதான மாலையையுடைய, தோளின்மேல் - தோள்களின்மேல், தவழ்ந்தும்—, பார்த்தன் - அருச்சுனனது, எறி கதிர் பரிதி அன்ன ஏற்ற எழில் ஆரம் மார்பின் - வீசுகிற ஒளியையுடைய சூரியமண்டலத்தைப் போன்ற சிறந்த அழகிய இரத்தினமாலையையணிந்த மார்பிலே, குறுகுறு நடந்தும் - விரைவாக நடந்தும், வளர்கின்றான் - வளர்கிறவனானான்; (எ - று.)

வீமன் - பயங்கரமானவன்; வடசொற்றிரிபு. குறங்கு - தொடை. (கங)

கச.—(இ - ள்.) (அக்குமாரன்), தள்ளு வாம் புரவி ஊர்ந்து - குதித்தலைத் தாவுதலுமாகிய தன்மையையுடைய குதிரையின்மேலேறி நடத்தி, கொழித்த வெள் முத்தம் சிந்தும் வெள்ளி வெள் திரையில் தோன்றும் விரி கதிர் திங்கள் காட்டும் - கொழிக்கப்பெற்ற வெண்ணிறமான முத்துக்களைச் சொரிகின்ற வெண்ணிறமான பாற்கடலின் அலையின்மேல் உதித்து விளங்குகிற வெண்மையான பரவிய ஒளியையுடைய சந்திரனது தன்மையைத் தன்னிடம் காண்பிப்பான [துப்பானென்றபடி], கொள்ளை மா மதத்த நால் வாய் குஞ்சரம் இவர்ந்து - மிகுதியான பெரிய மதஜலத்தையுடைய தொங்குகின்ற வாயையுடைய யானையின்மேலேறி, பொன் கோடு ஒள் ஒளி நீலம் குன்றத்து உதித்த செம்கதிரை வெல்லும் - பொன்னிறமான சிகரத்தையும் விளங்குகிற ஒளியையுமுடைய நீலரத்தினமயமானதொரு மலையின்மீது

தோன்றிய சிவந்த ஒளியையுடைய சூரியனைச் சயித்திடுவான் [அவனினும் மேம்பட்டு விளங்குவானென்றபடி]; (எ - று.)

முன்னிரண்டடியிற் குதிரைக்கு வெண்டிரையும்,பரீக்ஷித்திற்குச்சந்திரனும்,பின்னிரண்டடியில் யானைக்கு நீலக்குன்றும் பரீக்ஷித்துக்குச் சூரியனும் உவமை. நால்வாய் - வினைத்தொகை. (கசு)

கரு.—(இ - ள்.) (அக்குமாரன்), அலை கடல் பவளம் செவ்வாய் அம் சிறை அன்னமேபோல் - அலைகளையுடைய கடலில் தோன்றுகிற பவழம் போல விளங்குகிற சிவந்தவாயையும் அழகிய இறகுகளையுமுடைய அன்னப்பறவைபோல, கலை கடல் வடித்து பெற்ற - சாஸ்திரங்களாகியகடல்களை ஆராய்ந்து தேடி யடைந்த, காட்சியால் - தத்துவஞானத்தால், மாரி காக்க மலை குடைஎடுத்துநின்ற மௌவல் அம் தொடையினானே இலக்கம் அற்று உயர்ந்த சோதி என்று உணர் இளங்கோ ஏய்க்கும்-மழையைத்தடுக்கும்பொருட்டுக் கோவர்த்தனகிரியைக் குடையாக எடுத்துப் பிடித்துநின்ற அழகிய முல்லைப்பூமாலையையுடைய கண்ணபிரான்தானே தனக்குமேம்பட்டுவிளங்கும்பொருளொன்றில்லாதபடி உயர்ச்சிபெற்ற பரஞ்சோதிவடிவமென்று பரமார்த்தமறிந்த (பாண்டவரைவருள்)இளையவரசனான சகதேவனைப் போல்வான்; (எ - று.)

அன்னம் பாலையும் நீரையும் வேறுபிரித்து நீரை நீக்கிப் பாலையுட்கொள்ளுதல்போல இவன் நூல்களுள் சார அசாரங்களைப் பகுத்து அசாரத்தை நீக்கிச் சாரத்தை யுட்கொள்ளுதலா லுவமை. சகதேவன் தத்துவஞானமுடையவனாதலை"மாயவனு மன்பன் மனமறிவான் கட்டுகவென்,றுாயவடிவுபதினாயிரங்கொண்டான்,தூயவனுமூலமாந்தோற்றமுணர்ந்தெய்வுலகுந்,தாயவடியிணைக டன்கருத்தினாற் பிணித்தான்" என்னும் மகாபாரதத்தாலும் அறிக. (கரு)

கசு.—(இ - ள்.) (அக்குமாரன்), நடைநவில்பரிக்கு - பலவகைநடைகளைப்பழகுகிற குதிரையேற்றத்தில், தங்கள் நகுலனை கடக்கும்-தனது சிறியமூதாதையான நகுலனை யொப்பான்;கூர் வாள் படையினுக்கு-கூர்மையான-வாளாயுதப்பயிற்சியில், உலகம் எல்லாம் பழிச்சும் நல் தாதை நேரும் - எல்லாவுலகத்தவராலும்புகழப்படுகிற சிறந்த தனது தந்தையான அபிமன்னியுவை ஒப்பான்; உடல் குழை வரி வில் ஆண்மைக்கு- பகைவருடல் வாடுதற்குக் காரணமான கட்டமைந்த வில்லின்திறத்தில், ஓங்கு எழில் விசயன் ஒக்கும் - மிக்க அழகையுடைய அருச்சுனனைப் போல்வான்; கொடையினுக்கு - ஈகையில், இருள் கால் சீக்கும் கோழ் சுடர் மகனை எள்ளும் - இருளையொழிக்கின்ற மிக்கஒளியையுடைய சூரியனது குமாரனான கர்ணனை இகழ்வான் [கர்ணனினும் மேம்பட்டிருப்பான் என்றபடி]; (எ - று.)

நகுலன் குதிரைத்தொழிலிற் சிறந்தவனாதலை அஜ்ஞாதவாசகாலத்தில் அவன் தாமக்கிரந்தியென்னுங் குதிரைத்தலைவனானதனாலும், அபிமன்னியு வாட்போரிற்சிறந்தவனாதலைப் பதின்மூன்றாநாட்போரில் அவன் தேரும் வில்லும் ஒழிந்தபின்பு வாளையும் பரிசையையு மேந்திச் செய்த தொழிலின் றிறத்தாலும், அருச்சுனன் விற்போரிற் சிறந்தவனாதலை அவன் விற்றிறத்தால் தேவரையும் அசுரரையுந் தனித்தனிவென்றதனாலும் கர்ணன் கொடையிற்சிறந்தவனாதலை அவன் பூர்வதசையில் தனது கவசகுண்டலங்களை இந்திரனுக்கும அந்திமதசையில் தனதுபுண்ணியங்களைக் கண்ணனுக்குந் தானஞ்செய்ததனாலு மறிக. (கசு)

கஎ.—(இ - ள்.) (அக்குமாரன்), முழு வலிக்கு - பூர்ணமான தேகபலத்தில், எழு குன்றேறு முனிந்த தோள் வீமன் மாறும் - வளர்கிறமலையுட

னே கோபிக்கின்ற [மலையினும் மேம்பட்ட] தோள்களையுடைய வீமசேனனைப் போல்வான்; தழையும் நல் அளிக்கு - செழிப்பான நல்ல கருணையில், தண் தார் தருமனை பொருவும் - குளிர்ச்சியான பூமாலையையுடைய தருமபுத்திரனை ஒப்பான்; தாழா அழகினுக்கு - குறைவில்லாத அழகில், அழகு வாய்ந்த அம்புயம் மடந்தை புல்லும் குழகன் முன் உயிர்த்த செல்வம் கோ இளகுமரன் போலும் - அழகு நிறைந்த செந்தாமரைமலரில் வாழுந் திருமகளைத் தழுவுகிற என்றுமிளையவனான கண்ணபிரானால் முன்பு பெறப்பட்ட எல்லா ஐசுவரியங்களையும் மேன்மையையு முடைய குமாரனாகிய (மன்மதனது அம்சமான) பிரத்தியும்னனை யொப்பான்; (எ - று.) (௧௭)

௧௮.—(இ - ள்.) மஞ்சல் தோய் - மேகம்வந்து பொருந்தப்பெற்ற, பசும்பொன்கோடு - பசுமையான பொன்னையுடைய சிகரத்தையுடைய, மால் வரை அனைத்தும் - பெரியமலைகளெல்லாவற்றையும், தாங்கும் - தரிக்கின்ற, துங்கம வெள் திரை பார் - உயர்ச்சியானவெண்ணிறமானஅலைகளையுடைய கடலாற்சூழப்பட்ட பூமிமுழுவதையும், தாமே சுமந்திட - தாமேதரிக்கும்படி, பணைத்து வீங்கும் - பருத்து உயர்ந்த, குங்குமம் குவவு திண் தோள் - குங்குமக்குழம்பையணிந்த திரண்டவலியதோள்களையுடைய, குமரன் - அபிமன்னியுகுமாரனான பரீக்ஷித்தினது, நல் வனப்பு - சிறந்த அழகை, நோக்கி - பார்த்து, திங்கள் அம் கவிகை மன்னன் - பூர்ணசந்திரன்போன்ற அழகிய குடையையுடைய யுதிட்டிரமகாராஜன், செருக்கினன் - மகிழ்ச்சிகொண்டவனாய், தருக்கில் மிக்கான் - களிப்பினால் மிகுந்தான்; (எ - று.)

௧௯.—(இ - ள்.) தண் அளி தளிர்த்து - குளிர்ந்த அருளாகிய தளிர்கள் தளிர்க்கப்பெற்று, பொன் அம் தரு என திகழும் - பொன்மயமானஅழகியகற்பகவிருட்சம்போலவிளங்குகின்ற, நீரான் - தன்மையையுடையயுதிட்டிரன், கண்ணனை அழைத்து - கிருஷ்ணமூர்த்தியைவரவழைத்து, கண்ணன் காத்திட - அக்கண்ணபிரான் காத்தருளவும், கறங்கு தெள் நீர் மண் அகம் புரக்கும் ஆற்றல் மன்னவர் திறை கொடு உய்ப்ப - ஒலிக்கின்ற தெளிவான கடல்நீர் சூழ்ந்த பூமியினிடத்தைக் காக்கின்ற வலிமையையுடைய அரசர்கள் அரசிறைப்பொருள்களைக் கொண்டுசெலுத்தவும், அண்ணல் அம் புரவி வேள்வி ஒரு மூன்று - பெருமையையுடைய அழகிய மூன்று அசுவமேத யாகங்களை, ஆற்றினன் - செய்திட்டான், என்ப - என்றுகூறுவர் (பெரியோர்); (எ - று.) —என்ப - அசையுமாம். (௧௯)

௨௦.—(இ - ள்.) வண்டு கொப்புளித்து மாந்த - வண்டுகள் தெவிட்டுதலையடைந்து பருகும்படி, மதம் கலுழ் - மதநீர் பெருகுதற்கு இடமான, களி - களிப்பையுடைய, நல் - சிறந்த, யானை - (குவலயாபீடமென்னும்) யானையினது, ஒள் திறல் விளங்கு கூர் கோடு - சிறந்த வலிமை விளங்குகிற கூர்மையான தந்தத்தை, ஒசித்தவன் - ஒடித்திட்டவனான கண்ணபிரான், எண் திசைகடந்த தோளான் இயற்றிய வேள்வி காத்து - எட்டுத்திக்குகளையும் வென்ற தோள்களையுடைய யுதிட்டிரன் செய்த யாகங்களைக் காத்தருளி, (பின்பு), விசயனொடு - அருச்சுனனுடனே, வெள் தலை புணரி வேலி வயல் நகர் - வெண்மையான அலைகளினிடத்தையுடைய கடல்நீர் சூழ்ந்த பெரிய துவாரகாநகரத்தை, எய்தினான் - அடைந்தருளினான்; (எ - று.)

திசை - திசையிலுள்ளார்க்கு இடவாகுபெயர். கொப்புளித்துமாந்த - மாந்திக்கொப்புளிக்க என மாறதுமாம். புணரி - (நதிகளோடு) புணருவது.

பரிட்சித்துவின்றோற்றமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

பாகவதம்.

செய்யுளிலக்கணம்.

பாகவதத்தில் முதலாவது மாயவனம்சாவதாரமுரைத்தவத்தியாயத்தில் உள்ள சக - கவிகளும், இரண்டாவது நாரதர்தோற்றமுரைத்தவத்தியாயத்தில் முதல் அ - கவிகளும்-"சுழித்துநல்லமுது" என்னும் நான்மாண்புச்செய்யுள்போன்ற கலிநிலைத்துறைகள்.

அவ்வத்தியாயத்தில் க - முதல் எ - கவிகள் - பெரும்பாலும் முதல் மூன்று ஐந்து ஆறுஞ்சீர்கள் விளச்சீர்களும் மற்றைமூன்றும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரியவிருத்தங்கள்.

மூன்றாவது தன்மபுத்திரன் அரசியலடைந்தவத்தியாயத்தில் க-முதல் கo - கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும் மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள்.

கக - முதல் கசு - கவிகள் - பெரும்பாலும் முதற்சீர் மாச்சீரும் ஈற்றுச்சீர் மாங்காய்ச்சீரும் மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள்.

உஎ - முதல் கடு - கவிகள் -அவ்வத்தியாயத்தில் முதற்கவிபோன்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள்.

சஉ - முதல் ச - கவிகள்- "உறைபடுமங்குல்" என்னும் அவையடக்கச் செய்யுள் போன்ற கலிவிருத்தங்கள்.

நான்காவது கண்ணபிரான் துவரையடைந்தவத்தியாயத்தில் முதல் ங - கவிகள் - மூன்றுமத்தியாயத்தில் முதற்கவிபோன்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள்.

ச - முதல் ரு-கவிகள்-பெரும்பாலும் முதற்சீர் மாச்சீரும் இரண்டாஞ்சீர் விளச்சீருமாகிய குறளடி நான்கு கொண்டு வந்த வஞ்சித்துறைகள்.

சு - முதல் கஅ - கவிகள்- பெரும்பாலும் முதலிரண்டுசீரும் மாச்சீர்களும், மூன்றாவது விளச்சீருமாகிய சிந்தடி நான்கு கொண்டு வந்த வஞ்சி விருத்தங்கள்.

உஎ - முதல் கூ - கவிகள் - மூன்றுமத்தியாயத்தில் முதற்கவிபோன்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள்.

ஙசு - முதல் கஅ -கவிகள்-பெரும்பாலும் நாற்சீரும்மாச்சீராகிய அளவடி நான்கு கொண்டு வந்த கலிவிருத்தங்கள்.

ருஅ - முதல் கக - கவிகள்- மூன்றுமத்தியாயத்தில் முதற்கவிபோன்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள்.

ஐந்தாவது பரிட்சித்துவின்றோற்றமுரைத்தவத்தியாயத்தில் முதலிரண்டுகவிகள்-இரண்டாமத்தியாயத்திலொன்பதாங்கவிபோன்ற எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தங்கள்.

ங - முதல் கூ - கவிகள் - மூன்றுமத்தியாயத்தில் சஉ - ஆங்கவிபோன்ற கலிவிருத்தங்கள்.

கஉ - முதல் கூ - கவிகள் - மூன்றுமத்தியாயத்தில் முதற்கவிபோன்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள்.

பிரகடனம்.

இதனடியிற் கண்டிருக்கும் புத்தகங்களை வேண்டியவர்கள், (சென்னை இராஜதானி வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர்) பு-மா-ஸ்ரீநிவாஸாசாரியரிடத்திலும், திருவல்லிக்கேணி தெளிசிங்கப்பெருமாள்கோயில்வீதி ௭௪-வது கதவிலக்கமுள்ள கிருகத்தில் (சென்னைச் சர்ச் ஆப் ஸ்காட்லண்ட் மிஷன் காலெஜ் தமிழ்ப்பிரதமபண்டிதர்) வை-மு-சடகோபராமாநுஜாசாரியரிடத்திலும், (இராயபேட்டைவெஸ்லியன்மிஷன்காலெஜ்தமிழ்ப்பண்டிதர்) சே-கிருஷ்ணமாசாரியரிடத்திலும் கீழே குறித்த விலைப்படி வாங்கிக்கொள்ளலாம்.

	ரூ.	அ.
நன்னூற்காண்டிகை	௧	0
அபயப்பிரதானஸாரம் (ஸ்ரீ வால்மீகிராமாயணம் யுத்தகாண்டத்தில் விபீஷணாபயப்ரதானச்லோகங்களுக்கு வியாக்கியானமாகப் பெரியவாச்சான்பிள்ளை யென்கிற பூர்வாசாரியர் ஸம்ஸ்கிருதமுந் தமிழுங் கலந்த மணிப்பிரவாளநடையில் ஸலபமாக அருளிச்செய்தது.) இது, ஸ்ரீராமாயணகாலக்ஷேபஞ்செய்வதற்கு உரியவர் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கி வாசிக்கத்தக்கது....	0	௮
திருவரங்கக்கலம்பகம் மூலமும் உரையும்	0	௮
திருவேங்கடக்கலம்பகம் மூலமும் உரையும்	௧	0
அழகர்கலம்பகம் மூலமும் உரையும்	0	௮
மதுரைக்கலம்பகம் மூலமும் உரையும்	0	௮
திருக்குருவைப்பதிற்றுப்பத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	௬
திருக்குருவைவெண்பாவந்தாதி மூலமும் உரையும்	0	௪
சீவகசிந்தாமணி கோவிந்தையாரிலம்பகம் மூலமும், நச்சினார்க்கினியருரையைத்தழுவிய உரையும்	0	௬
சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் மூலமும், நச்சினார்க்கினியருரையைத்தழுவிய உரையும் ...	௧	௮
கம்பராமாயணம் பாலகாண்டம் மூன்றாம்படலம்முதல் பதினோராம்படலம்வரையில் மூலமும் உரையும்	௨	0
பாலகாண்டம் பதினெட்டாம்படலம்முதல் இருபத்திரண்டாம்படலம்வரையில் மூலமும் உரையும்	௧	௬
அயோத்தியாகாண்டம் முதல்நான்குபடலம் மூலமும் உரையும்	௧	௧௨
அயோத்தியாகாண்டம் இறுதி யிரண்டு படலம் மூலமும் உரையும்	0	௮
ஆரணியகாண்டம் முதல்நான்குபடலம் மூலமும் உரையும்	0	௧௪
கிஷ்கிந்தாகாண்டம் முதல் ஐந்துபடலம் மூலமும் உரையும்	0	௧௨
பாகவதம் முதல் ஐந்து அத்தியாயம் மூலமும் உரையும் ...	0	௮
சிலப்பதிகாரம் காடுகாண்காதை உரைகளுடன்	0	௮
வில்லிபுத்தூரார்பாரதம் நிரைமீட்சிச்சருக்கம் மூலமும் உரையும்	0	௮
வில்லிபுத்தூரார்பாரதம் கர்ணபருவம் மூலமும் உரையும்	௧	0
சூளாமணி முதல்மூன்றுசருக்கத்திற்குத் தெளிவான உரை ...	0	௬
